
NCBH
பட்டிமண்டப வரலாறு
கவிக்கோ கோவை இளஞ்சேரன்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பட்டி மண்டப வரலாறு

(கி . மு . 1500 முதல் இன்று வரை)

கவிஞர்கோ **கோவை. இளஞ்சேரன்**

எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டுச் சிறப்பு வெளியீடு

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41 - பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை - 600 098.

**Pattimandaba Varalaru**

*by*

*Kovai Elancheran*

முதல் பதிப்பு : ஜனவரி, 1995

© ஆசிரியர்

**Code No. :** A 827

**I S B N** : 81 - 234 - 0388 - 7

விலை : ரூ. **50 . 00**

---

ஒளி அச்சு : ஈசுவர் லேசர், சென்னை - 18.

அச்சிட்டோர் : M/S உதயம் ஆப்செட்ஸ்,
சென்னை - 2

# பதிப்புரை

சொற்போர் வடமொழி இலக்கியங்களில் வாத வித்தை, தர்க்க வித்தை எனப்படுகிறது. வாதம் புரிவதற்கு ஏற்ற அமைப்பு 'பரிஷத்' எனப்பட்டது. மனுதர்ம சாஸ்திரம், மகாபாரதம், ஸ்கந்தபுராணம், கவுதம தர்ம சூத்திரம், ராமாயணம், யாக்ஞவல்கிய சம்ஹிதை என்பன வற்றில் வாதவிதிகள் பேசப்படுகின்றன. 'ஆன்விட்சிகி' என்பதும் வாதத்தின் பாற்படும் எனலாம்.

'பவுத்த விநய பிடகத்திலும் 'லங்காவதார சூத்திரத்திலும்' சொற்போர் பற்றிய இலக்கணம் வகுக்கப் பட்டுள்ளது. இதிலிருந்தே பவுத்த தருக்க இயல் இணைத்து எழுந்தது என்பர். திக்நாகர் தலைசிறந்த பவுத்த தர்க்க வல்லுநர். ஜைன சமயத்தில் 'பகவதிசூத்திரம்' 'ஸ்தானாங்க சூத்திரம்' 'பிரக்ஞாபனா சூத்திரம்' ஆகியவற்றில் வாதவிதிகள் தொகுக்கப்பட்டுள்ளன. உமாஸ்வாதி, சித்த சேன திவாகரர், ஜீனபத்திரர், சமந்த பத்திரர், அகளங்கர் ஆகியோர் ஜைனத்தின் ஈடிணையற்ற வாத வல்லுநர்கள். இதிலிருந்து வாதக்கலை நெடுங்காலமாக இந்தியாவில் பயிலப்பட்டு வந்துள்ளது என்று தெரிகிறது. மகமகோ பாத்தியாயசதீஷ் சந்திரவித்யா பூஷணா என்பார் 'இந்திய நாட்டுத் தருக்கவியல் வரலாறு' என்னும் நூலில் வாதம்

பற்றி அறிய வேண்டிய நாற்பத்தினான்கு விதிகளைத் தொகுத்துத் தந்துள்ளார் (பக். 31-35).

வாதத்தை கிரேக்கர்கள் 'டயலகோ' 'டையலெக்டிக்' என்றனர். இதிலிருந்துதான் 'டயலெக்டிக்ஸ்' என்ற சொல்லை ஹெகலும் மார்க்சும் வடித்தெடுத்தனர்.

வடமொழி இலக்கியம், கிரேக்க இலக்கியம் தரும் செய்திகளோடு தமிழகத்தில் சங்க காலம் முதல் இக்காலம் வரை இலக்கியங்கள் தரும் செய்திகளை ஒப்பிட்டுப் பார்க்குமளவில் தமிழகத்தில் சொற்போர் ஒரு கலைத் திறனாக, அறிவுக்கருவியாக வளர்ந்து வந்துள்ளது என்பதனை நூலாசிரியர் கவிஞர்கோ கோவை இளஞ்சேரன் நிறுவியுள்ளார். மன்றம், அவை, களம், அரங்கு, பட்டி என்னும் சொற்கள் பெறும், தரும் பொருளை வகைப் படுத்திப் பட்டி மன்றம் படிப்படியாக எவ்வாறு வளர்ந்து இன்றைய நிலையை அடைந்துள்ளது என்பதனைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறார். தமிழர் வரலாற்றில் நடைபெற்ற சமயச் சொற்போர்களையும் சமயம் சாராச் சொற்போர்களையும் எடுத்துக்காட்டியுள்ளார். அவை, பட்டி, தருக்கம் என்னும் சொற்கள் தமிழ்ச்சொற்களே என்று நிலை நாட்டுவது பாராட்டுக்குரியது. அருட்பா - மருட்பா போர், கம்பராமாயணம், பெரியபுராணம் எரிக்க வேண்டும் வேண்டாம் என்ற சொற்போர், வடமொழிக்கலப்பால் தமிழ்கெடுமா கெடாதா என்பது பற்றிய சொற்போர் நடை பெற்ற வரலாற்றை நடுநிலையிலிருந்து, புறநோக்குடன் எடுத்துக் காட்டுகிறார். சில பத்தாண்டுகளுக்கு முன்

பேச்சுக்கலை பற்றித், தெய்வசிகாமணி ஆச்சாரியார் 'மேடைத் தமிழ்' என்னும் அரியதொரு நூலெழுதினார். அது எல்லாருடைய பாராட்டுதலையும் பெற்றது. இளஞ்சேரன் நூல் ஓர் ஆய்வு நூல். நல்ல தெள்ளு தமிழில் மொழியியலார்க்கே உரித்தான சொல்லாராய்ச்சி, இலக்கண உசாவல் தொடங்கி இலக்கியச் சான்றுகள் தந்து வரலாற்று நெறிப்படி நூலமைத்துள்ளார். இன்று வானொலியிலும் தொலைக்காட்சியிலும் நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் சொல்லாடு மன்றங்கள் இயங்கி வருகின்றன. இவையெல்லாம் பாமர மக்களுக்கு இலக்கியச் சுவையூட்டுவதோடு தமிழ் வளர்த்து வருகின்றன. இப்பின்புலத்தில் இத்தகைய நூல் காலத்தின் தேவை. பாமரர் முதல் ஆராய்ச்சி மாணவர் - அறிஞர் வரை ஆழ்ந்து படித்து அறியத்தக்க நூல். இதுகாறும் இத்தகைய நூல் தமிழில் வெளிவந்ததில்லை எனலாம். இத்தகைய சிறந்த நூலைத் தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தருவதில் எமது நிறுவனம் பெருமைப்படுகிறது.

இந்நூலை ஆழ்ந்து பரிசீலித்துச் செப்பனிட்டு ஆசிரியர் ஒப்புதலுடன் சில திருத்தங்கள் செய்து நூல் சிறப்பாக வெளி வரத்துணை செய்த திரு. ஆர். பார்த்தசாரதி (ஆர். பி. எஸ்.) அவர்களுக்கு எமது இதயம் கனிந்த நன்றி.

பதிப்பகத்தார்.

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி - 623 206
ப . மு . தே . மாவட்டம்
தொலைபேசி : குன்றக்குடி - 9227

# அணிந்துரை

"கவிஞர்கோ" கோவை இளஞ்சேரன் நல்ல தமிழறிஞர்; ஆய்வாளர். அவர் ஆய்வு செய்து எழுதிய "பட்டி மண்டப வரலாறு" என்ற நூலைப் படிக்கும் இனிய வாய்ப்புக் கிடைத்தது. பட்டி மண்டபம் தோன்றி வளர்ந்த வரலாற்றைத் தெளிவாக, அருமையாக எழுதியுள்ளார். வழக்கம் போல அவருக்கேயுரிய இனிய, எளிய, ஆற்றொழுக்கான தூய தமிழ் நடை நூலுக்குரிய மதிப்பைக் கூட்டியிருக்கிறது. பலப்பல நூல்களைப் படித்தும், நாட்டின் நடப்புக்களை அறிந்தும் நூலை எழுதியுள்ளமை, நூலாசிரியரின் கடின உழைப்பைப் புலப்படுத்துகிறது. தமிழார்வலர் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய நூல்.

நூலாசிரியர் 'பட்டிமண்டபம்' என்ற பெயர் பட்டிமன்றம் நடக்கும் இடத்தையும் 'பட்டிமன்றம்' என்பது விவாதம் நடக்கும் அவையையும் குறிக்கும் என்று துறைபோக ஆய்வு செய்து நிலை நாட்டியுள்ளது அருமையிலும் அருமை. இவ்விரண்டிற்குமுள்ள வேறுபாடு புரியாமலே இதுவரையில் இருந்து வந்தது. சங்ககாலப் பட்டி மண்பங்களில் பெருமை, பெருந்தன்மை, கருத்து, நோக்கம், பண்பாடு இருந்தன. சமயப் பட்டிமண்டபங்களில் இவையனைத்தும் சிதைந்தன என்று ஆசிரியர் கூறுவது சிந்தனைக்குரியது. பழைய பட்டி மண்டபங்களுக்கு ஆக்கல் உள்ளீடு வரவர மாறியபின் பிற்காலப் பட்டி மன்றம் சிதைத்தல் உள்ளீடு கொண்டதாயிற்று" என்ற நூலாசிரியர் கருத்து நூற்றுக்கு நூறு உண்மை.

'சொற்பொழிவு' - என்ற பகுதியில் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பலவற்றை எழுதியுள்ளார். சொற்பொழிவுத்துறை தமிழ் நாட்டிற்குரியது மட்டுமல்ல. பழைய மரபினது என்றும் விளக்கி எழுதியுள்ள பகுதிகள் படித்துணரத்தக்கன. சொற்பொழிவு எப்படி அமைய வேண்டும் என்பது குறித்தும், சொற்பொழிவின் பயன் குறித்தும் மேலைநாட்டு மேற்கோள்களையும் திருக்குறளையும் இணைத்து அற்புதமாக, சொற்பொழிவாளர்களுக்கு அறிவுரை கூறுவது போன்று எழுதியுள்ளார்.

"சொற்பொழிவில் மூன்று தகுதிகள் இருக்க வேண்டும். ஒன்று, விளக்கமாக கருத்துச் சொற்கள் (தகை - தக்க சொல்): இரண்டு, கேட்கும் மக்களது மனத்தைத் தொட்டு இழுத்தல் (பிணித்தல்); மூன்று மக்களுக்கு ஆர்வத்தை ஊட்ட வேண்டும். (வேட்ப மொழிதல்) என்று கிரேக்க நாட்டு அறிஞர் கியும்டிலியின் கூறியுள்ளதனை

"கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்"

என்ற திருக்குறளோடு ஒப்பு நோக்கி எழுதியுள்ள பகுதி ஆசிரியரின் நுண்மாண் நுழைபுலத்திற்கு எடுத்துக் காட்டு :

"எது செயலைத் தூண்டுகிறதோ, அது சிறந்த பேச்சு!"
"நாம் சொற்களால் மக்களை ஆள்கின்றோம்!"

என்ற எடுத்துக் காட்டுக்கள் இன்றைய சொற்பொழிவாளர்களுக்கு மிகவும் தேவையான அறிவுரை

பட்டி மண்டபம் என்பது தமிழ்ச் சொல். தமிழுக்கே உரிய சொல் என்ற முடிவு வரவேற்கத் தக்கதே!

இந்நூலில் சங்க காலம் முதல் இன்று வரை நடந்து வந்துள்ள பட்டி மன்றங்களின் வரலாறு கால நியதிப்படி முறையாக எழுதப் பெற்றுள்ளது. காரைக்குடி கம்பன் விழாப் பட்டி மன்றம், தமிழுக்கே

அணிசெய்தது என்ற நூலாசிரியர் கருத்து நூற்றுக்கு நூறு உண்மை. பட்டி மன்றம், கவிதைப் பட்டி மன்றம், எழுத்துப் பட்டி மன்றம் என்று வளர்ந்த வரலாறும் நூலில் இடம் பெற்றுள்ளது . தமிழ் நாட்டின் வரலாற்றில் கால் நூற்றாண்டுக்கும் மேலாக இடம் பெற்றவர் நூலாசிரியர் கவிஞர்கோ இளஞ்சேரனார் . அதனால் இந்த நூல் பட்டி மன்ற வரலாறாக மட்டும் இல்லாமல் தமிழக வரலாறாகவும் விளங்கு கிறது . பட்டி மன்றத்தில் கலந்து கொண்ட , கலந்து கொள்ளக் கூடிய அறிஞர்களையும் தக்கவாறு அறிமுகப்படுத்தியுள்ளார் . நூலாசிரியர் தமிழகப் பட்டி மன்றங்களில் பங்கேற்றுச் சிறப்பிக்கும் மகளிர் பலரையும் நூலாசிரியர் பட்டியலிட்டு அறிமுகப்படுத்தியுள்ளார்.

'கவிஞர்கோ' கோவை . இளஞ்சேரன் அவர்கள் எழுதியுள்ள பட்டி மண்டப வரலாறு கி . மு . 1500 முதல் இன்றுவரை என்ற இந்த நூல் கருத்துக் களஞ்சியம் . தமிழ் நாட்டு வரலாற்றில் கருத்து வளர்ச்சியில் நடந்த முறைகள் விவரிக்கப்பட்டுள்ளன . நூலாசிரியர் கவிஞர்கோ கோவை . இளஞ்சேரன் நல்ல கவிஞர்; சொற்பொழிவாளர்; சொற்போராளர்; 'திறனாய்வாளர்; படைப்பாளர்; தனித் தமிழ் ஆர்வலர்; தமிழ் இனப்பற்றாளர்; எல்லாவற்றிற்கும் மேலாக அவர் ஒரு தமிழியக்கம் . அதனால் நூல் மிகவும் பயனுடைய வகையில் அமைந் திருக்கிறது . 'பட்டி மண்டப விளைச்சல்' என்று நூலாசிரியர் குறிப்பிடுவதைப்போல இந்நூலின் விளைச்சல் நன்றாக அமையும் .

இன்றும் இனியும் நடைபெறவிருக்கும் பட்டி மன்றங்களில் நூலாசிரியரின் விருப்பத்திற்கு ஏற்ப, பெருந்தன்மையும் கருத்துச் செறிவும் இருக்கும் என்ற நம்பிக்கை நமக்கு மிகுதியும் இருக்கிறது.

மூளைப் புயலுக்குக் கருவியாக அமைய வேண்டிய பட்டி மன்றங்கள் வேடிக்கை , பொழுது போக்குப் பட்டி மன்றங்களாக எங்கோ திசைமாறிப் போவதைத் தடுத்துத் திரும்பவும் பழைய மரபு வழிப் பட்டி மன்றங்கள்பால் இந்த நூல் அழைத்துச் செல்லும் . இது உறுதி .

காலத்தின் தேவையான, பயனுள்ள ஒருநூலை, பட்டி மண்டப வரலாற்றை எழுதியுதவிய 'கவிஞர்கோ' கோவை . இளஞ்சேரன் அவர்களுக்குத் தமிழகம் கடமைப்பட்டுள்ளது.

மக்களுக்குப் பயன்படும் நூல்களை வெளியிடுவதையே நோக்கமாகக் கொண்ட நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இந்தப் பட்டி மண்டப வரலாற்று நூலை அச்சிட முன் வந்தது வியப்பன்று .

'கவிஞர்கோ' கோவை . இளஞ்சேரன் அவர்கள் இன்னும் பல அரிய படைப்புக்களைக் கொண்டு வருவாராக .

இன்ப அன்பு.

அடிகளார் .

14 . 12 . 94
குன்றக்குடி

திருவண்ணாமலை
சைவத்திருமடத்துத் தலைவர்
தவத்திரு தெய்வ சிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய அடிகளார் .

# முன்னுரை

## வரலாற்றின் வரலாறு

கவிஞர்கோ கோவை இளஞ்சேரன்

வணங்கி மகிழ்கின்றேன்.

"தொடக்க உரையைக் குறிப்பெடுத்துள்ளேன். பட்டி மன்றம் பற்றிய அரிய ஆய்வுரை இது. இக் குறிப்புக் கருத்துக்களில் 90 விழுக்காடு எனக்குத் தெரியாதவை என்கிறேன். இவ்வுரையை இவர் கட்டுரையாகவோ நூலாகவோ எழுதித் தர வேண்டுமென்று வேண்டுகின்றேன்"

- இக்கருத்து முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் உரைக்கப்பெற்றது. தஞ்சை மாவட்டத்திலுள்ள செம்பியன் மாதேவி என்னும் ஊரில் நிகழ்ந்த ஒரு பட்டிமண்டப நடுவர் உரையின் முன்னுரை இது. நடுவர் உரையாற்றியவர் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர், முனைவர் ந. சஞ்சீவி அவர்கள். தொடக்க உரையாற்றியவர் அன்று உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர். இன்று இந் நூலாசிரியர்.

---

முன்னைத் துணை இயக்குநர், பதிப்புத் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

பட்டி மண்டபத் தொடர்பில் மட்டும் இதனை ஆசிரிய முன்னுரையின் முதலுரையாக எழுதவில்லை. முனைவர் ந. சஞ்சீவி அவர்கள் தமிழில் ஆய்விற்கு இலக்கணம் வகுத்தவர். பல்கலைக்கழகப் பேராசிரியர். அத்தகு பெருந் தகை ஓர் எளிய தமிழாசிரியனைப் பாராட்டி வேண்டுகோள் படைத்தார். அப்பெருந்தகவைக் குறிப்பதே என் நோக்கம். ஆய்வு வளாகத்தில் அவர் தாயுள்ளம் கொண்டவர். இக் காலத்தே "சின்னதோர் கடுகு போல் உள்ளங் கொண் டோரை"க் காணும்போது இப்பாராட்டுரை பொன்னுரை யாக மிளிர்கின்றது. இச்செய்தியை இந்நூலின் முன்னுரை யில் குறிக்காது விட்டால் என் உள்ளத்தின் ஒரு மூலை ஊடல் கொள்ளும்.

பேராசிரியரின் வேண்டுகோள் என் அறிவை உந்த இரண்டு கட்டுரைகளைத் 'தமிழரசு' இதழில் எழுதினேன். என்னைச் சூழ்ந்துகொண்ட பணிகளும், நான் சூழ வைத்துக்கொண்ட பொதுப்பணிகளும் ஓர் ஆய்வு நூலாக வடிக்க வழிவிடவில்லை. முனைவர் ந. சஞ்சீவி அவர்கள் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் ஓர் ஆய்வு அறக் கட்டளையை நிறுவினார். மூன்று தொடர் பொழிவுகளாக ஆய்வுரை அமைய விதித்தார். இவ்வறக்கட்டளையில் ஆய்வுரையாற்ற வேண்டப்பட்டேன்; இசைந்தேன். முனைவர் பெருமகனாரின் நினைவுப் போற்றிக்கு இதனை ஒரு வாய்ப்பாகக் கருதிப் "பட்டி மண்டப வரலாறு" என்னும் பொருளை அறிவித்தேன்.

அவ்வப்போது பொதிய வைத்திருந்த கருத்துக்களை மறு ஆய்வு செய்து பிற வேலைகளைப் புறந்தள்ளி மிகு உழைப்பில் ஆய்வுரையை ஒரு நூலாகும் வகையில் எழுத்துருவாக்கினேன். அறக்கட்டளை நிகழ்ச்சி தள்ளிக் கொண்டே போனதால் உலகத் தமிழ் மாநாட்டின் போது இது பதிப்பாகி வெளிவர வேண்டுமென்று விரும்பினேன். பல்கலைக்கழகப் பொழிவிற்குச் சிலப்பதிகார ஆய்வுப் பொருளை அறிவித்து இதனைப் பதிப்பாக்கக் கருதினேன்; விரும்பினேன். என் விருப்பத்தை நியூ செஞ்சுரி புக் அவுசினர் நிறைவேற்றியுள்ளனர். உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்பு வெளியீடாகவே மலர்த்துகின்றனர். பதிப்பு வளாகத்தில் 'நியூ செஞ்சுரி' நிறுவனம் நிலைத்த முழு நிலவு; களங்கமற்ற முழு நிலவு. உரிய, அரிய நூல்களைப் பதிக்கும் பாங்குள்ளது. இதன் பதிப்பாக வெளிவருவது என் விருப்பத்தை மகிழ்ச்சியாக்கியுள்ளது. நிறுவனத்தாரை என் நெஞ்சில் அமரவைத்துப் பாராட்டி நன்றி கூறுகின்றேன்; வாழ்த்துகின்றேன்.

'பட்டி மண்டப வரலாறு' ஒரு மாலை அணிவிக்கப் பெற வேண்டுமென்றால், அணிவிக்கும் கைகளுக்கு உரிய பொருத்தம் வேண்டும். அக்கைகள் திருக்கைகளானால் மேலும் ஒரு தகுதி. அத்திருக்கையினர் பட்டி மண்டபத்திற்குரிய அறிவுப் பாங்கும், பட்டறிவுப் பங்கும் பெற்றவராயின் நூல் தனிப்பொலிவு பெறும். பட்டி மண்டபத்தின்

பிற்கால விளைச்சலுக்குக் கால்கோள் நாட்டி மூச்சேற்றி விட்ட அருஞ்சான்றோர் தவத்திரு குன்றக்குடி அடிகளார். தெளிந்த நினைவோட்டமும் தேர்ந்த மொழிவாற்றலும், ஆர்ந்த கருத்தூற்றமும் நிறைந்தவர்கள் தவத்திரு அடிகளார். என்பால் நாற்பது ஆண்டுகளாகத் தலைநாள்போன்று அருளன்பைப் பெய்கின்றவர்கள். இதனால் மட்டுமன்றி நூலின் கருத்தூற்றம் கருதியும் அணிந்துரை அருளி யுள்ளார்கள்.

அணிந்துரை நூலோட்ட உயிரோட்டத்தின் இழை யோட்டமாகத் திகழ்கின்றது. பெருந்தகவின் வைரமுடியாக விளங்கும் தவத்திரு அடிகளாரைப் போற்றி வணங்கி நன்றி படைக்கின்றேன்.

அணிந்துரை நூலிற் புகுவோரைக் கொண்டு செலுத்தும்.

நூலின் ஆசிரிய முன்னுரை நூற்கருத்துக்களின் முன்னோடியாக வேண்டும். அதனைக் கருதி ஆய்வின் மாணிக்கச் சுருக்கமான கால மும்முனைக் கண்ணாடியாக மூன்றைக் குறிக்கலாம்:

> "கல்வி பயில் களம் பட்டி மண்டபம்" - இது முற்காலப் பாங்கு நிலை.
>
> "பட்டி மண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின்;

செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்"
இது பாங்கு தழுவினாலும்,

சினமும் கலாமும் செருகிய இடைக்கால் நிலை.

"வார்த்தை குத்தும் வாதியர் மன்றனைத்தும் வறிதே"
- இது இக்கால நிலை.

வடிப்பாளர்கள் இலக்கியத் தென்றலைத் தழுவலாம்;

ஆய்வாளர் நோட்டமிடலாம்.

இந்த 'வரலாற்றின் வரலாறு' அனைவரையும் வரவேற்று மண்டபத்துள் அமர அழைக்கின்றது.

கலைக்குடில்
58, எழில் நகர்,
தஞ்சாவூர் - 613 007.

கோவை. இளஞ்சேரன்

# போற்றி வைத்தேன்

தம்பி, உன் பகுத்தறிவுத் தமிழ்க்கவிதை
தங்கமடா! 'சக்தி'யிலே பதிப்பிப் பேன், பார்!
உன்பெயராம் மெய்கண்ட சிவனிருக்க
உரைத்திடுஓர் புனைபெயரை என்றீரன்றோ?
என்பெயராய் 'இளஞ்சேரன்' என்றிட்டேன்;
ஏற்றதனை இனிதென்றீர் . எளிய மக்கள்
தெம்புக்காம் தனித்தலைவா! 'சீவா'*என்
இன்னுயிரே! உமக்கிந்நூல் போற்றி வைத்தே

இளவல்

கோவை . இளஞ்சேர

---

ப . சீவானந்தம், தொழிலாளர் உலகச் செம்மல்

# பொருள் அடங்கல்


| | பக்கம் |
|---|---|
| 1. சங்கப் பாங்கும் சமயப் பங்கும் | 1 - 111 |
| அ) சங்கப் பாங்கு | 1 |
| ஆ) சமயப் பங்கு | 62 |
| கொண்டு காட்டி | 108 |
| 2. பட்டி – சொல், பெயர் ஆய்வு | 112 - 206 |
| அ) வாயும் சொல்லும் | 112 |
| ஆ) வாய் - பெருமை, சிறுமை | 119 |
| இ) பட்டிகள் | 132 |
| ஈ) பட்டி - சொல் வரலாறு | 144 |
| உ) சொல் - சொற்போர் | 161 |
| ஊ) பட்டி மண்டபம் - பெயர் | 188 |
| கொண்டு காட்டி | 204 |

| | | |
|---|---|---|
| 3. | கால ஆட்சியில் பட்டி மண்டப விளைச்சல் | 207 - 294 |
| அ) | காலமும் விளைச்சலும் | 207 |
| ஆ) | பிற்கால விளைச்சல் | 210 |
| இ) | கருத்து விளைச்சல் | 220 |
| ஈ) | பிற்காலத்தின் பொற்காலம் | 254 |
| உ) | பொற்காலப் படைப்பாளர் | 265 |
| ஊ) | கதிர் விளைச்சலில் பதர் கிளைத்தது | 280 |
| எ) | பட்டிமண்டப வரலாற்றுப் பதிவுகள் | 287 |
| | கொண்டு காட்டி | 293 |
| | ஆய்வுப் பதிவுகளின் தொகுப்பு | 295 - 301 |
| | சான்று நூல்கள் - குறுக்கங்கள் | 299 |

# 1. சங்கப் பாங்கும் சமயப் பங்கும்

## அ . சங்கப் பாங்கு

### கருத்தை நாட்டக் கொடி நாட்டல்

பூம்புகார் - சோழ நாட்டின் தலைநகர்.

அந்நகர்ப் பெருங் கடைத்தெரு ஆரவாரம் மிகுந்து காணப்படுகின்றது.

விழாக் கொடிகள்,

விளம்பரக் கொடிகள்,

மனைமங்கலக் கொடிகள்

- எனப் பலவகைக் கொடிகள் வானளாவிப் பறக்கின்றன.

ஒரு கொடி;

அது பட்டுக் கொடி;

ஆளுயரக் கொடி

அதனை ஊன்றிப் பிடித்தவாறு ஒரு தலைப் பாகைக்காரர் நிற்கிறார்.

அனைவரும் அவரை விழித்துப் பார்க்கின்றனர், அப்பார்வையில் பணிவும் தென்படுகின்றன. அதனைக்

கையில் பிடித்து நிற்பவர் ஒரு புலவர். மிடுக்குடன் நிற்கிறார். வருவோர், போவோர் பலரும் அவரைப் பணிந்து செல்கின்றனர். புலவர் கோலத்தில் வருவோர் மட்டும் அணுகி அக்கொடியில் பொறிக்கப்பட்டுள்ள கருத்துத் தொடரைப் படிக்கின்றனர். அன்னோர் முகத்தில் ஓர் அச்சக்குறி பளிச்சிடுகின்றது.

*அக்கொடி ஓர் அறைகூவல் கொடி.*

*அதனைப் பறக்கவிட்டு நிற்பவர் பெரும் புலவர். பலதுறைக் கருத்துக்களைக் கற்றுத் துறைபோனவர்;*

*கேள்வியறிவில் நிறைவு பெற்றவர்;*

*அவ்வறிவுப் பெருமையால் நெடுங்காலப் புகழ் பெற்றவர்;*

*எக்கருத்தையும் வரையறுத்து முத்திரையாக ஆணையிடும் சிறந்த ஆசிரியர்;*

*இன்று ஒரு கருத்தை நிலைநாட்ட அக்கருத்தைக் கொடியில் எழுதி உயர்த்தியுள்ளார்;*

*கருத்துப்போர் குறித்து உயர்த்தப்பட்ட கொடி, அது;*

*அக்கருத்தின் வன்மையை எண்ணி அதனை மறுக்க ஆற்றலில்லாதவர்க்கு அச்சத்தைத் தரும் கொடியாக அக்கொடி பறக்கிறது.*

இவ்வாறு ஒரு காட்சியாக அமைப்பதற்கு உருத்திரங் கண்ணனார் எழுதிய பட்டினப்பாலையின் மூன்று அடிகள் இடந்தந்துள்ளன.

"பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ்குறித் தெடுத்த உருகெழு கொடியும்"[1]

இவ்வடிகள் தாம் அவை.

இவற்றுள் முன்னிரண்டு அடிகள் கருத்துப் போர்ப் புலவரின் அறிவுத்திறத்தையும், புலமைத் திறத்தையும் குறிக்கின்றன. மூன்றாவது அடியில் "உறழ்குறித்து" என்பது (உறழ் - உறழ்ச்சி = மாறுபாடு) கருத்து மாறுபாட்டைக் குறித்து எழுந்ததைக் குறிக்கிறது. "உருகெழு" என்பது (உரு = அச்சம்) மிகுந்த அச்சம் தருவதைக் குறிக்கிறது. இதற்கு,

"வாது செய்யக் கருதிக் கட்டிய
அச்சம் பொருந்திய கொடி"

என்று நச்சினார்க்கினியர் பொருள் விரித்தார்.

## பட்டி மண்டபத்தார்

அக்காலத்து அரசுத் தலைநகர்களிலும், பெரு நகர்களிலும் பொது விழாக்களின்போது பல நிகழ்ச்சிகள் அமையும். பொழுதுபோக்கிற்கு அன்றி அறிவுச் சூழலாகவும் சில இடம்பெறும்.

மதுரை மாநகரில் விழா நிகழ இருப்பதை அறிவிக்கும் முரசு அறைவோன் பல நிகழ்ச்சியாளரை அழைக்கும் முகமாகப் பின்வருமாறு அறிவித்து முரசறைந்தான் :

"பெருஞ்செய் ஆடவர் தம்பின்; பிறரும்
யாவரும் வருக ! ஏனோரும் தம்"[2]

என்று அழைத்தான். இது பத்துப்பாட்டில் ஒன்றாகிய மதுரைக்காஞ்சி தரும் செய்தி.

இதில் "ஏனோரும் தம்" என்பதற்கு நச்சினார்க்கினியர்

"மண்டபத்தாரையும் அறங்கூறவையத்
தாரையும் கொணர்க"

என்று எழுதினார்.

அவர் 'மண்டபத்தார்' என்றது பட்டிமண்டபத்தாரைக் குறிக்கும். 'மண்டபத்தார்' என்றால் அது பட்டி மண்டபத்தாரைக் குறிக்கும் வழக்காக இருந்துள்ளது. இதற்குக் குறிப்புரை எழுதிய உ. வே. சா. அவர்களும் "இங்கே மண்டபத்தார் என்றது பட்டி மண்டபத்தாரைப் போலும்" என்று குறித்தார்.

எனவே, இம்மதுரைக் காஞ்சியில் பட்டிமண்டபத்தார் குறிப்பாகத்தான் சுட்டப்பட்டுள்ளனர். முன் கண்ட பட்டினப்பாலை "உறழ் குறித்து" என்பது கருத்து மாறுபாட்டுச் செய்தியைச் சற்று வெளிப்படையாகத் தந்துள்ளது. ஆனால், இக்கருத்துக்கள் கருத்துப்போர் நிகழ்ச்சிகள்தாம் என்பதை இந்நூல்களுக்கு முற்பட்ட நூல்களின் பாடல்களிலிருந்தும், பாடற்குறிப்புகளி

லிருந்தும் உணரமுடிகின்றது. பத்துப்பாட்டிற்கு முன்னர் முழுநூல்களாக இலக்கிய நூல்கள் கிடைக்கவில்லை. சிதறலாகச் சில, பலவே கிடைத்துள்ளன. அவற்றில் இங்குக் கண்ட பட்டிமண்டபக் கருத்துப்போர் நிகழ்ச்சிக்குப் பக்கச்சான்றாகப் பல செய்திகள் கிடைத்துள்ளன. அச் செய்திகள் கருத்துப்போருக்குரிய நெறிகளாக அமைந் துள்ளன. அவற்றைப் பின்னர் 'நெறிகளை' ஆயும்போது காணலாம்.

## உரையாசிரியர் சான்றா?

கண்ட இரு நூல்களிலும் 'பட்டி மண்டபம்' என்னும் சொல்லே இல்லை. உரையாசிரியர்கள்தாம் கையாண் டுள்ளனர். நிகழ்ச்சிகளையும் உரையாசிரியர்கள் எழுத்தைக் கொண்டே அறிய முடிகின்றது.

இவ்வுரைகள் மூல நூல்களின் காலத்தை நோக்க மிகப் பிற்பட்டவை.

இவ்வுரைகளைத் தந்த நச்சினார்க்கினியர் கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பட்டினப்பாலையும், மதுரைக்காஞ்சியும் கி. பி. முதல் நூற்றாண்டில் எழுந்தவை. ஏறத்தாழ 1200 ஆண்டுகளுக்குப் பின்னர் எழுதப்பட்டவை உரைகள். அத்துணை முற்காலத்துக் கருத்துக்களை உரை கள் அப்படியே வெளிப்படுத்தியனவாகக் கொள்ளலாமா? அவற்றை மூலத்தின் உண்மை விரிப்புகளாகக் கொள்ள லாமா? கொள்ளலாம்.

உரையாசிரியர் தேர்ந்த அறிவினர். பல நூல்களைப் பயின்றவர். நுண்ணறிவால் உய்த்தறியும் திறன் கொண்டவர்., தம் பட்டறிவில் அவற்றை ஒத்துப் பார்ப்பவர். இவற்றுடன் தாம் வாழும் காலத்து நடைமுறைகளிலும், சொல் வழக்குகளிலும் மூலக் கருத்திற்கு இயைந்து வரும் கருத்துக்களையே சான்றாகக் காட்டுவர். இன்றேல் "இது அக்கால வழக்குப் போலும்" என்றும் குறிப்பர்.

இது அனைத்து உரையாசிரியர்க்கும் பொருந்தும்.

## கருத்துப்போர் முதற்கல்

எனவே, உரையாசிரியர் விரித்த கருத்தைக் கொண்டு சங்க காலக் கருத்துப்போர் - பட்டி மண்டபத்திற்குக் கீழ் வருமாறு அமைப்புச் சட்டகமாக அமைக்கலாம்.

சங்க காலத்தில்,

* புலமைச் சான்றோர் தாம் கண்ட கருத்தை நிலைநாட்ட முற்படுவர்;
* அக்கருத்தை மற்றையோர்க்கு அறிவித்து, தடை கூறின் விடையளித்து நிலைநாட்ட அறைகூவல் விடுப்பர்;
* அறைகூவலின் அறிகுறியாகப் பொது இடத்திலோ, புலவர் கூடும் அவையிலோ ஒரு கொடியில் அக்கருத்தை எழுதிப்பிடித்து நிற்பர்;

* அக்கருத்து 'உறழ்' கருத்து.

* அறை கூவலை ஏற்போருடன் சான்றோர் அவையிலோ ஆய்வு அரங்கிலோ மன்னன் முன்னரோ கருத்துப்போர் செய்வர்.

* வென்றவர் கருத்து மற்றவரால் ஏற்கப்படும்.

இது சங்கப் பாங்கு

இது பட்டி மண்டப வரலாற்றுப் பாதையில் முதற்கல்.

* * * *

## அடுத்த கல்

பட்டி மண்டப வரலாற்றின் அடுத்தடுத்த கற்களாக இரண்டு கருத்துக்களை ஆய்ந்து காணலாம்.

ஒன்று :

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப "[3]

- என்பது தொல்காப்பிய நூற்பா. இதற்குப் பேராசிரியர் எழுதிய உரையின் கருத்தாவது :

'நிறைந்த பொருளுள்ள சொற்களைச் சொல்லும் சான்றோர், முந்தையச் சான்றோர் மேல் ஆணை

யிட்டு ஒன்றைச் சொன்னால், அது தான் மந்திரம். அம்மந்திரம், சொன்னவர் எண்ணத்தைத் தவறாமல் நிகழ வைக்கும்' - என்பதாகும்.

இக்கருத்துள்ள உரையை விளக்கிய பேராசிரியர்,

"தெற்கண் வாய்திறவாத பட்டி மண்டபத்தார்
பொருட்டு, நக்கீரன் ஒருவனைச்
சாவவும் வாழவும் பாடிய மந்திரம்"

என்றார். இதில் 'பட்டி மண்டபம்' என்பதை அறிமுகப் படுத்தினார்.

இம்மந்திரத்திற்கும் அதனால் நிகழ்ந்தவற்றிற்கும் எடுத்துக்காட்டாக இரண்டு வெண்பாக்களைக் காட்டினார்.

சாவப் பாடிய மந்திர வெண்பா :

"ஆரியம் நன்று தமிழ்தீது எனவுரைத்த
காரியத்தால் காலக்கோட் பட்டானை - சீரிய
அந்தண் பொதியில் அகத்தியன் ஆணையால்
செந்தமிழே தீர்க்கசு வாகா"

வாழப் பாடிய மந்திர வெண்பா :

"முரணில் பொதியில் முதற்புத்தேள் (அகத்தியர்) வாழி!
பரண கபிலரும் வாழி! - அரணியல்
ஆனந்த வேட்கையான், வேட்கோக் குயக்கோடன்
ஆனந்தம் சேர்க்கசு வாகா"

## மந்திரம்

இவ்விரு வெண்பாக்களில் முதல் வெண்பாவில் "நிறைமொழி மாந்தர்" என்னும் நூற்பாவின் சொற்றொடராகிய "ஆணையிற் கிளந்த" என்றதற்கேற்ப "ஆணை" யிடல் உள்ளது. இரண்டாவது வெண்பாவில் மற்றொரு சொல்லாகிய 'மந்திரம்' என்றதற்குச் 'சுவாகா' என்னும் சொல் உள்ளது. வாழப் பாடியதால் 'வாழி, வாழி' சொல் உள்ளது.

'சுவாகா' என்னும் மந்திரம் வடமொழியாகுமோ என்னும் ஐயத்திற்குரியது. ஆனால், பேராசிரியர் இச் சொல்லைத் தமிழ் என்றே கொண்டுள்ளார். எவ்வாறெனில் அவரே,

"மறைமொழி தானே என்று பிரித்தான் (தொல்காப் பியர்) இவை தமிழ் மந்திரம் என்றற்கும்" என்று எழுதினார். அவரே இவ்வெண்பாக்களை ஏற்று எடுத்துக்காட்டியுள்ளமையால், அவர் கொண்டபடி 'சுவாகா' என்பது தமிழ்ச் சொல்லாகிறது. மேலும் இதற்கொரு பக்கச் சான்றாக ஒரு கருத்தையும் வைத்துள்ளார். அஃதாவது (சுவாகா) வேத மொழியாகிய 'வடமொழித் தொடர்புடையதன்று' என்று காட்டுவார் போல அந்நூற்பாவில் உள்ள 'மறைமொழி' என்பதை வடவேதமாகிய நான்மறை என்று கொள்ளவில்லை.

"புறத்தார்க்குப் புலனாகாமல்
மறைத்துச் சொல்லும்
சொற்றொடரெல்லாம்
மந்திரம் எனப்படும்"

- என்று எழுதினார். இது போன்றே இவர்க்கு முந்திய வரான இளம்பூரணர் என்னும் உரையாசிரியரும்

"மறைந்த மொழி" என்றார்.

எனவே, பேராசிரியர் தமிழ் உணர்வுடனும், கருத்துட னுமே எழுதியுள்ளார். உரையாசிரியர் வேற்றுமொழிச் சொல்லாயின் "இது வடசொல்" என்றும், 'வடசொல்லின் திரிபு' என்னும், 'இங்குப் பிறமொழிக்கு ஆராய்ச்சியில்லை' என்றும் எழுதுவர்.

இத்தொடர்பில் 'மந்திரம்' என்னும் சொல்லும் தமிழ்ச்சொல்லே என்று கொள்ளல் அமையும். மன் + திறம் (திரம்) 'மந்திரம்' என்றாகும். இது மொழி ஞாயிறு பாவாணர்தம் குறிப்பு.

இது நிற்க, 'நிறைமொழி மாந்தர்' நூற்பா விளக்க மாகப் பேராசிரியர் உரைபோன்று மற்றொன்று உண்டு. அதில்

"மதுரைப் பட்டி மண்டபம் புகுந்து
குயக்கொண்டான் 'ஆரியம் நன்று
தமிழ்தீது என்றான்" என்றுள்ளது.

இவ்விரண்டு உரைகளையும், உரைவிளக்கங்களையும் கொண்டு பின்வருமாறு பட்டி மண்டப வரலாற்றுக் கருத்தின் இரண்டாவது கல்லாகப் பின்வருமாறு அமைப்புச் சட்டகம் அமைக்கலாம்.

## இரண்டாவது கல் சட்டகம்

* மதுரையில் பட்டி மண்டபம் இருந்தது;
* அஃதும் நடைமுறையில் இருந்தது;
* ஒருவன் ஒரு மாறுபட்ட கருத்தைப் பட்டி மண்டபத்தில் சொல்வதுண்டு;
* சொன்னவன் பட்டி மண்டபத்தில் தானே வலியப் புகுந்து சொல்வதுண்டு போலும்;
* பட்டிமண்டபத்தில் அறைகூவல் விடுக்கப்படும்;
* அது ஏற்கப்படும் வரை பட்டி மண்டபத்து வாயில் கதவு அடைக்கப்படும்;
* மண்டபத்தார் திறமை வாய்ந்த புலவரை அறை கூவலை ஏற்றுத் தீர்த்து வைக்குமாறு வேண்டுவர்;
* மண்டபத்தாருக்காக ஒரு பெரும்புலவர் முன்வந்து கருத்துப் போரிடுவார்;
* கட்டுப்படாமல் விடாப்பிடியாகப் பேசப்பட்டதுண்டு;

* பெருந்தடையாக விடாமல் சாவம் (சாவித்தல்) பாடுவதுண்டு;

* அருளும் காட்டிடப்படுவதுண்டு.

இவற்றில்,

1. புகுந்து வல்லடி வழக்கு செய்தல்;
2. உயிராகப் போற்றும் இடத்தில் அதனையே பழி கூறல்;
3. சாவும் அளவு வளர்தல்.
4. மந்திரத்தால் சாவடிக்கலாம்

ஆகிய நான்கும் சங்கப் பாங்கைவிட்டு விலகிய நடவடிக்கைகள்.

எனவே, இவற்றால் பட்டிமண்டபப் பாங்குகள் சில அறிவிக்கப்படினும், வேண்டப்படாத நான்கால் இவ்விரண்டாம்படி 'சாவம்' புகுந்த சங்கப்பாங்கு.

## கற்பனைக் கட்டடம்

பட்டிமண்டப வரலாற்றில் அடுத்த கல்லாகக் கிடைப்பது உண்மை பொதிந்த சங்கப் பாடலை வைத்துக் கொண்டு அதன் மேலே போலிக் கட்டடம் கட்டியது ஆகும்.

குறுந்தொகையின் இரண்டாவது பாட்டாக "கொங்கு தேர் வாழ்க்கை" என்று தொடங்கும் பாடல் உள்ளது. இப்பாடலின் கருத்து,

'என் காதலியின் கூந்தல் மணத்தைப் போன்ற மிகு மணமுடைய மலரை நீ அறிவாயோ' என்பது. இவ்வாறு காதலன் வண்டை வினவுவதாக 'இறையனார்' என்னும் புலவர் எழுதினார். இது கொண்டு எழுந்ததாக ஒரு நிகழ்ச்சி புலவர்களால் பேசப்பட்டது. அது கதையாக உருவாகி 'தருமி என்னும் எளியவனுக்கு உதவ இறைவனாம் சிவனே அப்பாடலை எழுதி விடுத்ததாகவும், அரசவையில் இப் பாடல் படிக்கப்பட அவையிலிருந்த நக்கீரர் என்னும் புலவர் 'மகளிர் கூந்தலுக்கு இயற்கை மணம் இல்லை' என்று மறுக்க, இறைவனாம் சிவனே அரசவையில் தோன்றி வாதிட்டதாகவும் கதை எழுந்தது. வாதம் முற்றிய நிலையில்,

"கற்றைவார் சடையார் நெற்றிக் கண்ணினைச் சிறிதே காட்ட" நக்கீரர், 'இந்திரனைப்போல உடம்பெல்லாம் கண்ணைக் காட்டினாலும் - "மொழிந்தனும் பாடற்குற்றம் குற்றமே"[4] என்று அடித்துச் சொன்னார்.

தம் கருத்தை நக்கீரர் எதிர்த்து அடித்துப் பேசியதைச் சிவன் பொறாதவராக, தம் தீப்பிழம்பால் நக்கீரர்க்கு வெப்பு நோயை உண்டாக்கி ஒறுத்ததாகவும் கதை நீண்டது. இவ்வாறு திருவிளையாடற்புராணத்தில் 'தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம்' என்றொரு கதைப்பகுதியே அமைந்தது.

இவ்வாறு புராணத்தில் பதியப்பட்டிருப்பினும் சங்க காலத்தில் இவ்வாறே ஒரு நிகழ்ச்சி அமைந்ததற்கு வேறு

சான்று இல்லை. ஆனால், இக்கதைத் தொடர்பில் வெப்புநோய் பெற்ற நக்கீரர் முருகன் மேல் திருமுருகாற்றுப்படை பாடி நலம் பெற்றதாக ஒரு கருத்து உலவ விடப்பட்டது.

இக்கால மேலைநாட்டுத் தருக்கக் கலை ஆய்வு, 'தருக்கமுறைப் புலக்கொள்கை' (Logive poritorism) எனப் படுகின்றது. இது 1928இல் தான் தோன்றியது. ஆயினும் ஆய்வில் உண்மை கொள்ளப்பட்டதால் எக்காலத்திற்கும் பொருந்தும். இதன்படி நிகழ்வுகள்தாம் சொற்றொடர்ப் பொருள்களை உண்மையாக்குபவை ; நிகழ்வுகளுடன் பொருந்தாத சொற்றொடர்கள் உண்மையானவை அல்ல' என்பது தருக்கக் கோட்பாடு.

தொன்மைத் தமிழ்ச் சங்கநூற் பாடல் சொற்றொடர்கள் உண்மைகளின் பதிவுகள். எனவே, முதல் விளக்கம் பொருந்தும். உண்மை நிகழ்வற்ற புராணக் கதைகள் நிகழ்வுகளின் பதிவல்ல. ஆகவே, உண்மையற்ற கற்பனைகளே.

எனவே, நக்கீரர் - தருமி கதையும் இறையனார் - இறைவனார் கதையும் கற்பனையில் எழுந்த கட்டங்களாகும். கற்பனை என்பதற்கு இறையனாரை இறைவனாராகக் கொண்டதே சான்றாகும். இறையனாரை இறைவனாராக - அஃதாவது மதுரைக் கடவுள் சொக்கநாதராகக் கொண்டு 'அவர் பாடிய பாடல்' "கொங்குதேர்" பாடல் என்றனர்.

## இறைவனும் இறையனும்

இறைவனார், இறையனார் இரண்டும் ஒரே பகுதியில் அமைந்த வெவ்வேறு பொருள்தரும் சொற்கள்.

இறை + வ் + அன்: இறைவன்; இதில் இடையில் உள்ள 'வ்' எழுத்துப்பேறு.

இறை + ய் + அன்: இறையன்; இதில் இடையில் உள்ள 'ய்' உடம்படுமெய்.

'இறைவன்' என்றால் கடவுள் தன்மையால் ஆன்மாக்களின் மூலத்தலைவன் என்னும் தகுதிக்கு உரியவன்.

'இறையன்' என்றால் மாந்தன் என்னும் தகுதியில் உள்ளவன். தலைமையல்லாத இடம் பெற்று வாழ்பவன்.

துறைவன், துறையன் என இரண்டு சொற்கள் உள்ளன. கடல் துறையின் தலைவன் துறைவன். கடல் துறையில் வாழ்பவன் துறையன். இவைபோன்றே இறைவனாரும், இறையனாரும்,

இறைவன் - கடவுட்பெயர்

இறையனார் - புலவர் பெயர்

இப்புலவர் பெயரைப் போன்று மற்றொரு சங்கப் புலவர் பெயர் நல்லிறையனார். இவர் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் காலத்தில் வாழ்ந்து அவனைப்

பாடியவர். இப்பெயரையும் 'நல்லருள்புரியும் இறைவன்' என்று கடவுளாகக் கொள்ளவில்லை. இவர் புலவர் பட்டியலைவிட்டு நகர்த்தப்படவில்லை.

எனவே, இறையனாரை இறைவனாராக - கடவுளாகக் கொண்டமை வேண்டுமென்றே செய்யப்பெற்ற மயக்கச் செயலேயாகும்.

இதுபோன்றே 'இறையனார் களவியல்' என்னும் நூல் பற்றிய கதையுமாகும். இதன் நூற்பாக்கள் மதுரைச் சொக்கநாதக் கடவுளால் பாண்டிய மன்னனது கவலை தீர்க்கப் பாடப்பட்டுப் பீடத்தின்கீழ் இடப்பட்டனவாகக் கதை கட்டப்பட்டது. இறையனார் என்னும் சொல் லமைப்பு கொண்டு களவியலும் ஒரு புலவரால் பாடப் பெற்றதேயாகும். அதற்கொரு தனிப்பெருமை ஏற்ற, கதை உருவாகியுள்ளது.

மற்றொருபெயர் 'பேராலவாயர்' என்பது. 'ஆலவாய்' என்றால் மதுரை. 'பேராலவாயர்' என்பது 'பேரருள் கொண்ட மதுரைக் கடவுள்' என்னும் அடிப்படையில் திருவிளையாடற் புராணத்தில் மதுரைக் கடவுள் 'பேராலவாயர்' என்று பெயர் குறிக்கப்பட்டுள்ளார். இப் பெயரில் ஒரு புலவர் இருந்தார். இவரும் சங்கப்புலவர். ஏழு வள்ளல்களில் ஒருவனாகிய பேகன் காலத்தில் வாழ்ந்து அவனைப் பாடியுள்ளார். இவர் பெயரையும் கடவுளாகவே கொண்டு 'பேகனுக்கும் அவனைப் பிரித்திருந்த கண்ணகிக்

கும் ஒற்றுமை ஏற்படுத்த மதுரைக் கடவுள் வந்து பாடினார்' என்றொரு கதை எழாமற்போன வரை நலமே . கடவுள் தொடர்பில் அவர் காட்டப்பெறவில்லை.

ஆனால், புலவர் இறையனார் பாடல் ஒருகற்பனைக்கு மூலமாக கொள்ளப்பட்டது ஏன்? ஏன் இப்படி ஒரு கற்பனை? இவ்வாறு உயர்வுநவிற்சியாகவும், மிகை உயர்வு நவிற்சியாகவும் தொடங்கப்பட்டனவே புராணங்கள் ஆயின. இதன் நோக்கம் சமய நோக்கமே. சமயக் கடவுளரை வைத்து அவர் திறமையும், பெருமையும், பேரருளும் நலம் தரும் என்று மக்களுக்குக் காட்டவே இவ்வாறு செய்யப்பெற்றது . அதற்கு மக்கள் விரும்பிப் படிக்கும் அளவிற்கு ஆர்வமூட்டும் நோக்கத்தில் கவர்ச்சிகளும், கடவுள் அருளிப்பாடுகளும் முடிவில் கடவுள் உலகத்தை அடையலாம் என்பனவும் அமைக்கப்பெற்றன.

மேலே காணப்பெற்ற நக்கீரன், தருமி கதைக்கு முந்தையப் பாடல்களிலும், நூல்களிலும் எந்தச் சான்றும் இல்லை; ஒரு குறிப்பும் இல்லை என்பதையும் கருத வேண்டும்.

## சார்வுச் சட்டகம்

இத்தொடர்பில் பட்டி மண்டப வரலாற்றிற்கு இந் நிகழ்ச்சி கொண்டு இவ்வாறு கருத்துக்களை வரிசைப் படுத்தலாம்.

* அரசவையில் ஒரு கருத்து எழுப்புதல்;
* அதில் குற்றம் கூறுதல்
* அதன் தொடர்பில் கருத்துப்போர் நிகழ்தல்
* கருத்துப் போராளர் விடாப்பிடியாகப் பேசுதல்
* முடிவில் குற்றங்கூறி மறுத்தவரை ஒறுத்தல் (தண்டித்தல்)

நக்கீரர் குயக்கோடன் கருத்துப்போரில் புதிதாகக் காணப்பட்ட விடாப்பிடியும், ஒறுத்தலும் இங்கும் இடம் பெற்றன . இரண்டுமே கடுமையான ஒருதலைச்சார்பாகச் சாகடிக்கும் ஒறுத்தலே. இரண்டிலும் அருளும் இடம் பெற்றது . நக்கீரன் தருமி கதையின் பட்டிமண்டப நடை முறைகொண்டு பார்த்தால் புராண வழிப்புகுந்ததொரு தடையால் பட்டிமண்டப வரலாற்றின் இரண்டாவது கல்லுக்கு சார்பானதாகின்றது.

மற்றொன்றையும் கருத வேண்டும்.

மூலமாக, உண்மையில் ஒருவர் பாடிய பாடலை வைத்து எழுந்த கற்பனைக் கதை கொண்டு அதில் வந்த உண்மையற்ற நிகழ்ச்சிகளைப் பட்டி மண்டப வரலாற் றிற்குச் சான்றாகக் கொள்ளலாமா? உண்மை நிகழ்வல்லாக் கற்பனைக் கதைகளைச் சான்றாகக் கொள்ள முடியாது; கூடாது . ஆனால் அவற்றில் கதையன்றிக் கூறப்படும்

கருத்து, உண்மை நிகழ்வுக்கு ஈடாகுமானால் சான்றாகக் கொள்ளலாம்; கொள்ள வேண்டும்.

## பட்டி மண்டப ஊற்றுக் கண்

இதன்படி கற்பனைக் கதையாயினும் நிகழ்ச்சி அமைப்புக் கருத்துக்கள் முற்கால நடைமுறைக்கும், இயல்பான - அறிவுக்கு ஒத்தும் இருப்பவைகளைப் பக்கச் சான்றுகளாகக் கொள்ளலாம்.

பத்துப்பாட்டும், தொல்காப்பியமும் குறிப்பாகக் காட்டியவற்றிற்கு உரையாசிரியர் விளக்கம் கொண்டு கண்ட பட்டிமண்டப வரலாற்றின் முதற்கல்லும், அடுத்து சங்கப்பாடல் மூலத்தில் வழங்கப்பெற்றதும், புராணம் தழுவியதும் ஆகிய இரண்டாவது கல்லும் பட்டிமண்டப வரலாற்றின் நாற்றங்கால்களேயாகும்; ஊற்றுக்கண் ஆகா.

அவ்வாறானால்,

ஊற்றுக் கண் எது?

எக்காலத்தது? இவ்விரண்டும் பட்டிமண்டபத்தின் மூலத் தோற்றத்தைக் காண எழவேண்டிய வினாக்களாகின்றன.

விடைகளைக் காண்போம்.

தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் என்னும் தொல்காப்பியரின் உடன் மாணாக்கர் பாயிரம் எழுதினார். இவர் தொல்காப்பியர் காலத்தவர். இவர் தனியாக எழுதிய

இலக்கணம் அவர் பெயரால் 'பனம்பாரம்' எனப்பட்டது. அந்நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. உரையாசிரியர்கள் காட்டியனவாகச் சில நூற்பாக்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்று : 'எத்துணை சிறந்த திறமை வாய்ந்த செயல் செய்தாலும் தான் தன்னைப் புகழக் கூடாது' என்று சொல்கிறது.

"தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்றற் புகழ்தல் தகுதி யன்றே"[5]

என்னும் நூற்பா. இத்தற்புகழ்ச்சிக்கு இடங்களைக் குறிக்கிறது. அந்நூற்பா இது :

"மன்னுடை மன்றத்து ஓலைத் தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு போதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தடும்புல வோர்க்கே[6]

(இந்நூற்பா பனம்பாரம் என்னும் இலக்கண நூலில் உள்ளது - மயிலைநாதர்)

இந்நூற்பாவில் நாம் அடிக்கோடிட்டது,

"மன்னிய அவையிடை வெல்லுறு போதினும்" என்பதை, அறிவுடைச் சான்றோர் பொருந்திய அவையில் அந்த அவை அரசவையாக இருப்பினும், புலவர் அவையாக இருப்பினும் கருத்து மாறுபாடு ஏற்பட்டு மறுப்பு,

நிறுப்புகளால் கருத்துப்போர் நேரும்போது, தான் தன்னைப் புகழலாம் என்று அவ்வடி காட்டுகிறது.

இது கொண்டு,

**மன்னிய அவையில்**

சொற்போரிட்டு 'வெல்லும் நிகழ்ச்சி' அக்காலச் சூழலில் இருந்தது என்று காண்கிறோம். 'வெல்லுறும்' இக்கருத்துப்போர் நமக்குக் கிடைக்கும் அளவில் பட்டிமண்டபத்தின் ஊற்றுக்கண் ஆகிறது. ஆயினும், இது தான் மூல ஊற்றுக்கண் என்று அறுதிசெய்ய இயலாது.

தலைக்காவிரி என்பது காவிரிக்கு மூலமாயினும், தலைக்காவிரிக்குரிய ஊற்றுக்கண்கள் இழையோட்டமாக ஊறிவரும் - நுண்ணியவாய் ஊறிவரும் பல ஊற்றுக் கண்களே. அதுபோன்று அவையிடை வெல்லுதற்கு முன்னும் சில பல சான்றுகள் இருந்து நம் கைக்குக் கிடைக்காமற் போயிருக்கும்.

கிடைத்துள்ள அளவில் பனம்பாரனார் வாய் மொழியே பட்டிமண்டபத்தின் ஊற்றுக்கண் ஆகிறது. இவ் வூற்றுக்கண்ணின் காலத்தைத் தொல்காப்பியர் காலம் கொண்டு கணிக்கலாம்.

ஊற்றுக் கண்ணின் காலம்

தொல்காப்பியர் காலத்திற்கு நச்சினார்க்கினியர் உரை விளக்கம் முதல் சான்றாகக் கிடைக்கிறது. அவர் தொல்காப்பியப் பாயிர உரையில்,

"நான்மறை என்பன, தயித்திரியம், தலவகாரம், பௌடிகம், சாமம் . இனி இருக்கும் எசிரும் சாமமும் அதர்வணமும் என்பாரும் உளர். அது பொருந்ாது. இவர் (தொல்காப்பியர்) இந்நூல் (தொல்காப்பியம்) செய்த பின்னர் வேதவியாசர் சில்வாழ்நாட் பல்பிணிச்சிற்றறி வினோர் உணர்தற்கு நான்கு கூறாகச் செய்தார்"[7] என்று எழுதினார்.

வடமொழியிலும் வல்லுநரும், வடமொழி நான் மறைகளை அறிந்தவரும் பாரத்துவாசகோத்திரத்து ஆரிய இனத்தவருமாகிய நச்சினார்க்கினியர் கருத்து இது.

இதன்படி தொல்காப்பியம் வடமொழி நான் மறைக்கு முந்தியது. எனவே, வடமொழி நான்மறைகளின் காலத்தைக் கொண்டும் தொல்காப்பியக் காலத்தைக் கணிக்கலாம்.

## நான்மறையும், தொல்காப்பியமும்

'நான்மறை அநாதி . அஃதாவது அந் ஆதி - ஆதி யில்லாதது தோன்றிய காலம் என்று ஒன்று காண முடியாதது' என்றனர் . அது பொருந்தாத கதையாகிப் போயிற்று. வடமொழி வல்லுநர்களும், வரலாற்று வல்லுநர் களும், மொழியறிஞர்களும் நான்மறைக் காலத்தைக் கணித் துள்ளனர்.

நான்மறை ஒருவரால் கூறப்பட்டதன்று . முனிவர் களால் கூறப்பட்டுத் தொகையானது . பல நூறு ஆண்டு

களாக முனிவர்கள் பலரால் அவ்வப்போது பாடிப் பாடிச் சேர்க்கப்பட்டது. வரலாற்று வல்லுநர்கள் நான்மறைக் காலத்தின் மேல் முன் எல்லையாக 'கி. மு. 2500 முதல் கி. மு. 1500-இற்கு உட்பட்ட காலத்தது' என்று கணித்துள்ளனர்.

வடமொழி இலக்கண நூலாசிரியரான பாணினி 'அட்டாத்தியாயி' என்றொரு நூலை எழுதினார். அதற்குப் பதஞ்சலி முனிவர் அகல உரை எழுதியுள்ளார். பதஞ்சலியின் காலம் கி. மு. 150 என்று வரலாற்றாசிரியர்கள் கணித்துள்ளனர். அக்கணிப்பு கொண்டு பாணினி பதஞ்சலிக்கு 900 ஆண்டுகள் முந்தியவர் என்பதும் காணப்பட்டது. பாணினிக்கு 400 ஆண்டுகள் முற்பட்டவர் தொல்காப்பியர் என்பது மொழியறிஞர்கள் கணிப்பு. மறைமலையடிகளாரும் இதன்படி தொல்காப்பியர் காலம் கி. மு. 1500 என்றார். பாவாணரும் இக்கருத்தே தந்தார்.

எனவே, தொல்காப்பியம் இன்றைக்கு (1994) ஏறத்தாழ 3500 ஆண்டுகளுக்கு முற்பட்டது. அதற்குப் பாயிரம் தந்த பனம்பாரனாரும் அக்காலத்தவர். எனவே பனம்பாரனம் அக்காலத்தது.

'மன்னிய அவையிடை வெல்லுதல்' என்னும் கருத்துப்போர் பட்டிமண்டபக் கருத்து 3500 ஆண்டுகட்கு முற்பட்டது. எனவே, 3500 ஆண்டுக்கு முன்னரே பட்டிமண்டப வரலாற்றின் ஊற்றுக்கண் திறந்துவிட்டது என்றாகும்.

## பனம்பாரனாரை வழிமொழியும் திருவள்ளுவர்

'மன்னிய அவையிடை வெல்லுறும்" என்னும் பனம்பாரனார் கருத்தை வழிமொழிவது போன்று திருவள்ளுவர்,

"அவை அஞ்சா மாற்றம் கொடுத்தல்" - என்றார் அவையில் ஒரு கருத்து வைக்கப்பெற்று அதனை மற்றவர் மறுக்கும்போது அதற்கு மாற்றம் கொடுக்கவேண்டும் . இவ்வாறு மாறி மாறி மறுப்பும் மாற்றமும் கூறுவது தானே பட்டிமண்டபப் பாங்கு? அது தான் 'அவையஞ்சா மாற்றம்'. அவ்வாறு மாற்றம் கொடுக்க முன்னெச்சரிக்கையாகக் கொள்ள வேண்டியதைத் திருவள்ளுவர்,

"ஆற்றின் அளவு அறிந்து கற்க"8 என்றார் . இதில் 'அளவு' என்றது அளவை நூலை . 'அளவை நூல்' என்பது பிற்காலத்தே 'தருக்க நூல்' எனப்பட்டது . அளவையை ஆங்கிலம் 'LOGIC' என்றும், தமிழில் முற்காலத்திலேயே கருத்துப் போருக்குரிய இலக்கணத்தை விதிக்கும் நூல் 'அளவை நூலாக' இருந்தது என்று உணரலாம்.

## வள்ளுவர் காட்டும் வெல்லும் நெறி

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான், அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"[9]

என்னும் குறளில் "இகல்வெல்லல்" என்பது கருத்து மாறுபாட்டால் ஏற்படும் இகலில் - மோதலில் போரில்

வெல்லுதலைக் குறிக்கிறது . இஃதும் கருத்துப்போரின் அடையாளமே.

சொல்லும் சொல்லுக்குப் பல அடைமொழிகளைக் கொடுக்கும் திருவள்ளுவர்,

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல், அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"[10]

என்று "வெல்லுஞ் சொல்" அமைத்தார் . வெல்லும் இந்தச் சொல் பட்டிமண்டபச் சொற்போரில் வெற்றிபெறுதலையும் குறிக்கிறது .

## போர்களில் சொற்போர்

'இகல்வெல்லல்' என்பதைப் பொதுவில் நோக்கினால் 'போரில் வெற்றி பெறல்' என்று குறிக்கும் . இது சொல் வன்மை அதிகாரத்தில் அமைந்துள்ளமையால் சொற்போர் வெற்றியைக் குறிக்கும்.

போரில் பலவகை உண்டு. அவற்றில் வெற்றி பெறுதலைத் தொல்காப்பியம் புறப்பொருள் இலக்கணத்தால் 'வாகை' என்றது . வாகைத் திணையைப் பாகுபடுத்தும் தொல்காப்பியர்,

"பால் அறிமரபின் பொருநர்க் கண்ணும்"[11]

என்றொரு வகைப்பாட்டைக் குறித்தார். இதற்கு உரை விரித்த நச்சர்,

"தாந்தாம் அறியும் இலக்கணங்களிலே போர் செய்வாரிடத்துக் (வெற்றிக்) கூறுபாடு" - என்று எழுதி அதனை விளக்குபவர்,

"சொல்லானும் பாட்டானும் கூத்தானும், மல்லானும், சூதானும் பிறவற்றானும் வேறலாம்"[12] (வெற்றிகொள்ள லாம்) என்றார்.

இதில் "சொல்லானும் . . . . . . . வேறலாம்" என்றது. சொற்போரில் வெற்றியைக் குறிக்கிறது. 'சொல்லானும்' என்பதை முதலில் வைத்து அதன் அருமையைப் புலப் படுத்தியுள்ளார். இப்பொருளை அடக்கித் தொல்காப்பியம் சொற்போரைக் குறிப்பிடுவது போன்று திருவள்ளுவர் 'வாள், வில் ஏந்திப் போர் செய்பவரும் வீரரே; சொல் லேந்திச் சொற்போர் செய்பவரும் 'வீரரே' என்றும், 'வில் வீரர் எதிர்ப்பைவிடச் சொல்வீரர் எதிர்ப்பு வலிமை யானது' என்றும்

"வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை"[13]

என்று உழவராக உருவகப்படுத்தியுள்ளார். மேலும் அவரே, போரின்,

"பகையகத்துச் சாவார் எளியர்" - என்றும்
அவையகத்து அஞ்சாதவர் அரியர்" -[14] என்றும்

அவையகப் போரின் அருமையைக் குறித்தார்.

இத்தொடர்பிலேயே

'நூலைக் கற்றவன் அவையில் சொற்போரிட அஞ்சினால் அவன் கற்ற நூலறிவுக்குப் போர்க் களத்தில் பேடியின் கையிலுள்ள வாளை'[15] உவமையாக்கினார்.

இவற்றையெல்லாம் கொண்டு சங்க காலத்தில் சொற்போரும் அதற்குரிய பட்டிமண்டபமும் இருந்தன என்று கொள்ள வேண்டும்.

## நாவலம்

'நாநலம்' என்னும் சொல்லைத் திருவள்ளுவர் வழங்கியமைபோன்று 'நாவலம்' என்னும் சொல்லை இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்தில் வழங்கி யுள்ளார். இதன் பொருள் 'நாவன்மை' அத்துடன் 'வலம்' என்னும் சொல் வெற்றியையும் குறிக்குமாதலால் 'நாவால் பெறும் வெற்றி' என்றும் பொருள் பெறும். இளங்கோ வடிகள் கையாண்டுள்ள 'நாவலம்' என்னும் சொல் தொடர்பில் ஒரு நிகழ்ச்சி அறிமுகமாகிறது. அந்நிகழ்ச்சி தொல்காப்பியம் வகுத்த இலக்கணம் ஒன்றையும் நினைவுபடுத்துகிறது. வாகை வகைகளில் 'பார்ப்பன வாகை' என்பது ஒரு துறை. பார்ப்பன அறிஞன் தன் நான்மறைக் கருத்தை நிலைநாட்டி வென்றால் அவ்வெற்றி 'பார்ப்பன வாகை' யாகும்.

## பராசரன் பங்கு

புகார் நகரில்,

"வலவைப் பார்ப்பான் பராசரன் என்போன்" வாழ்ந்தனன். அவன் நான்மறைக் கோட்பாட்டில் தேர்ந்தவன். நாவன்மை மிக்கவன். அந்த வல்லமையை 'வலவை' என்னும் சொல் குறிக்கின்றது. இக்காலத்திலும் பார்ப்பார் அகங்களில் திறமையாகப் பேசும் சிறுவரைச் 'சமத்து' என்று வழங்குவதைக் கேட்கின்றோம். அது 'சமர்த்து' என்பதன் திரிபு. சமர் + து என்றும் 'சமர்த்து' (சமர் - போர்) போரிடும் வல்லமையைக் குறிக்கும். தமிழ்த் தாத்தா உ. வே. சா. அவர்களும் இந்த 'வலவை' என்பதற்குச் 'சமத்து' என்று அடிக்குறிப்பு எழுதினார்.

இச் சமர்த்துப் பார்ப்பனனாகிய பராசரன் சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் "குலவுவேற் சேரன் கொடைத்திறம் கேட்டு" அவனிடம் பரிசும் வரிசையும் பெறச் சேரநாட்டிற்குப் புறப்பட்டான். காடும் நாடும் ஊரும் மலையும் கடந்து சேரநாட்டை அடைந்தான். அங்குள்ளோரைச் சொற்போருக்கு அறைகூவி அழைத்தான். மன்னன் அவையில்,

"நாவலம் கொண்டு நண்ணார் ஓட்டிப்
பார்ப்பன வாகை சூடி"னான் 16

இவ்வாறு பார்ப்பன வாகை சூடிய பராசரன் சேர மன்னனிடம் பரிசும் வரிசையும் பெற்றுத் திரும்பினான். இதனை இளங்கோவடிகள் மதுராபதித் தெய்வம் கூறுவதாக அமைத்துள்ளார்.

"நாவலம் கொண்டு நண்ணார் ஓட்டி" என்னும் அடி 'தன் கருத்தோடு நண்ணிவராத மாற்றுக் கருத்துடையவரை நண்ணார் - (மாற்றார்) என்று குறிக்கின்றது. கருத்து மாற்றாரை நாவலமாம் சொல்வன்மை கொண்டு தோற்கடித்து ஓட்டினான். இவற்றால் நான்மறைக் கருத்துச் சொற்போர் நிகழ்ந்தது குறிக்கப்பெறுகிறது.

## பராசரனுக்கு வடபுல முன்னோடி

சொற்போர் வரலாற்றில் இங்கொரு புதுச்சேர்க்கை இணைகிறது. கருத்தை நிலைநாட்டச் சொற்போர் நிகழ்ந்த நிகழ்ச்சியுடன் பரிசும் வரிசையும் கருதிச் சொற்போரை அதற்குக் கருவியாகக் கொண்டு முனைந்ததை இச்செய்தி தருகின்றது. இது கருத்துப் பயன் இன்றி, பரிசுப் பயன் கருதிய தன்னலப் பாங்குடையது. கருத்துப் பயனுடைய சங்கப் பாங்குடன் இத்தன்னலப் பாங்கு வடவர் மரபால் புகுந்ததாகும். ஆம்! இவ்வாறு தன்னலம் நாடிப் போவதை, கி. மு. 700 இல் வடபுலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியால், அறிய முடிகின்றது.

நான்மறை வித்தகனாகிய சத்திரிய பிரவாகன் என்பான் 'பிரமவாதம்' என்றொரு புதுக்கோட்பாட்டை

வடித்தான். இதில் பார்ப்பனராம் பிராமணர் தேர்ந்தனர். குருகுலத்து 'யக்ஞவல்கியன்' என்பான் இவ்வாதத்தில் வல்லவன் ஆனான். வடபுல விதேக நாட்டுப் பெருமன்னன் சனகன் மறைக்கலைகளில் தேர்ந்தவன். தன் அவையில் இந்தப் பிரமவாத அவையைக் கூட்டினான். இந்த அவையில், யக்ஞவல்கியனும் பிரமவாதி கார்க்கி என்னும் பெண்ணும் வாதிட்டனர். கார்க்கி தோற்கடிக்கப்பட்டாள். வென்ற யக்ஞவல்கியனுக்குச் சனகன் 1000 கணக்கில் ஆவினம், குதிரைகளைப் பரிசாக வழங்கினான். பொன்னும் பொருளும் வழங்கினான், அவற்றுடன் அடிமைப் பெண்களையும் வழங்கினான். பெற்ற வல்கியன் 1000 கணக்கில் கிடைத்த விலங்குப் பரிசினைப் பல கல் தொலைவிலிருந்து தன் பாஞ்சால நாட்டிற்குக் கொண்டுவர இயலாமல் அங்கிருந்த பார்ப்பனருக்கு வழங்கிவிட்டான். ஆனால், பொன்னையும், அணிமணிகளையும் கொணர்ந்தான். அவற்றுடன் இளங்கன்னியராகிய அடிமைப் பெண்களை ஒருவர் விடாமல் அரவணைத்துக் கொண்டு வந்தான். 'வல்கியன் அடிமைப்பெண்களைக் காம விளையாட்டில் பயன்கொள்வதில் பேரார்வமுடையவன்' என்று பெயர் பெற்றவன்.

இந்நிகழ்ச்சி கொண்டு, கருத்தை நிலைநாட்ட எழுந்த கருத்துப்போர் பரிசையும் பெண்களையும் பெற நாடிப் பயணம் கொள்ளும் நல்ல குறிக்கோளற்ற நோக்கத்திற்குக் கருவியானதை உணரலாம். அவ்வழி வந்த 'வலவைப் பார்ப்பான் பராசரன்' தமிழ் நிலத்தில் இதற்கு முன்னரே அதனைக் கையாண்டான்.

யக்ஞவல்கீயன் வாதம் செய்த நிகழ்ச்சியில் மற்றொன்றையும் அறிய வேண்டியுள்ளது. அவன் கார்க்கி யைக் கருத்து வன்மையால் வெல்லவில்லை. கார்க்கி விடுத்த அடுக்கடுக்கான வினாக்களுக்கு விடை சொல்ல முடியாமல் விழித்தான். யக்ஞவல்கீயன் தடுமாறினாலும் தன்மூப்பை விடாமல் சொன்னான் :

"இனி அடுத்தொரு வினா கேட்பாயானால் உன் தலை அறுபடும்" என்றான். கேட்ட கார்க்கி நிலைமையைப் புரிந்துகொண்டாள். 'தலை அறுந்துவிழும்' என்றது, அவன் விடையால் அன்று; வல்கீயனின் தவ வலிமையாலும் அன்று. எப்போதும் தலையை அறுக்கும் சிறு படைபோல அவனுடன் ஒரு குழு சென்றதேயாகும். எனவே, அச்சுறுத்தி வென்றான். தலைபோகும் தண்டனைக்கு அஞ்சி, கார்க்கி வாய்மூடித் திரும்பினாள்.

இதனால் சொற்போரில் தோற்றவர் கடும் தண்டனைக்கு ஆளாக நேர்ந்ததும் புரிகிறது. (வாதிடுவதில் இத் 'தலை அறுப்பு' நிகழ்ச்சியை நினைவிற் கொள்ளவேண்டும். பின்னரும் பொருந்தும் இடம் வரும்)

இங்கே வட நான்மறை பற்றி மனுநூல் குறித்த ஒன்றைக் குறித்துக்காட்டவேண்டும்.

"தருக்க வாதங்களால் அறுதி செய்ய முடியாதது வேதம் அது தானே தோன்றியது"

- என்கிறது மனு நூல். வேதமே சுருதி, (அறத்தின் துணிவு தான்); சுமிருதி இவற்றை வாதிட்டுச் சோதித்து அறிய முயலக்கூடாது" (-மறு 2-7). இவற்றைக் கல்வி நூலறிவாலும் வாதத் திறமையாலும் சோதித்து அவமதிப்பவன் எவனா யினும் அவன் நாத்திகனாவான் (-மறு 2 - 8). இவற்றையும் மீறி நான்மறையை ஒதுக்கிய செயலாம் பிரமவாதம் நான் மறையாளன் யக்ஞவல்கீயனால் நிகழ்த்தப்பட்டது. இவ் வாறான வல்லடி வழக்கு தமிழ் மண்ணில் புகுந்தது.

இது தமிழகப் பட்டி மண்டப வரலாற்றிலே, மூன்றாவது அளவுக்கல்.

## மூன்று கற்கள்

* கருத்தை நாட்ட எழுந்து கருத்தை நாட்டியதும், தோற்றவர் அக்கருத்தை ஏற்றதும் பெருந்தன்மைப் பாங்கு. இதுதான் சங்கப் பாங்கு. இப்பெருந்தன்மைச் சங்கப்பாங்குபட்டிமண்டப வரலாற்றில் முதற்கல்.

* நக்கீரர், தருமி, குயக்கொண்டான் தொடர்பில் அமைந்தவை நிகழாத கற்பனையாக அமையினும் கருத்துப்போர் நிகழ்ச்சி நடப்புகளில் இருந்தவற்றை இக்கதையமைப்பில் ஏற்றிக் கூறியதாகக் கொள்ள லாம். தோற்றவர்க்குக் கடுந்தண்டனை தந்தமை. பெருந்தன்மையை நழுவவிட்ட செயல். இது பட்டி மண்டப வரலாற்றில் இரண்டாவது கல். இதனால் சங்கப் பாங்கு ஓர் அசைவு பெற்றதாயிற்று.

* மேற்கண்ட மூன்றாவது கல் சங்கப் பாங்கைத் தகர்த்த அடாவடிக் கல். இதனால் சங்கப் பாங்கு ஒரு கரும்புள்ளி குத்தப்பெற்றதாயிற்று.

## பட்டி மண்டபப் பத்துக் கட்டளைகள்

இவ்வாறு அமைந்த பட்டி மண்டபச் சங்கப் பாங்கிற்குரிய கருத்துக்களாகப் பலவற்றை இலக்கிய, இலக்கண நூல்கள் சுட்டுகின்றன. அவை ஒரு தொகுப்பாகவோ, தனி நூலாகவோ இல்லாது போயினும் பரவலாகவும், சிதறலாகவும் பல்வேறு நூல்களில் உள்ளன. அள்ளித் தெளிக்கப்பட்டன போன்ற அவற்றைப் பட்டி மண்டப இலக்கண நெறிகள் என்று கொள்ளலாம்.

சங்க இலக்கியம், அவற்றிற்கு முந்தியவை, ஒத்தவை, கீழ்க்கணக்கு நூல்கள், இவற்றை ஒட்டிப் பின் எழுந்த இரட்டைக் காப்பியங்கள் முதலியவற்றில் உள்ளவை பட்டி மண்டப வரலாற்றிற்கு உரம் ஊட்டுபவை. அவற்றை, விளக்கப் பதிவுகள் என்றும் கொள்ளலாம்.

அந்த இலக்கண நெறிகளைப் பின்வரும் வகையில் நிகழ்ச்சி நிரலாகக் கொண்டு முறையே பட்டியலிடலாம்.

1. பட்டி மண்டபக் களம்
2. அவை - அவையோர்
3. அவை நெறி

4. தலைவர் / நடுவர்
5. கருத்தை வைப்போர் - அறைகூவல்
6. மறுப்போர் - மாறி மாறிக் கருத்துப்போர்
7. கருத்துப்போர்க்குத் தகுதி கொள்ளல்
8. அவையோர் கருத்து
9. முடிவு / தீர்ப்பு
10. பின் விளைவு

இவை பத்தையும் பட்டிமண்டப நிகழ்ச்சியின் பத்துக் கட்டளைக் கற்கள் எனலாம்.

## (1) பட்டிமண்டபக் களம்

பட்டிமண்டப நிகழ்ச்சி நிகழும் இடமே இங்கு 'களம்' எனப்படுகின்றது. பட்டி மண்டபமாம் பட்டிமத்தைப் பிங்கல நிகண்டு "கழகம் பட்டிமம் கல்விபயில் களம்" என்று களமாகக் குறித்துள்ளது.

மன்னன் காலையில் அரசவைக்கு வந்து அறிவுசான்ற பல்வகை நிகழ்ச்சிகளைக் காண்பான்; அவன் தலைமையில் சான்றோர் பங்குபெறுவர். இது 'நாள் ஓலக்கம்' எனப்படும். இது நிகழும் மண்டபம் 'நாளோலக்க மண்டபம்' என்று வழங்கப்பட்டது. இதனைப் "பெருநாள் இருக்கை" என்றும் வழங்கினர்.

மதுரை நகரில் கடைவீதியின் ஆரவாரத்தை மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியில் விவரித்தார். இந்த ஆரவாரத்திற்கு உவமையாக, சேரமான் கோக்கோதை மார்பனுடைய ஆரவாரம் மிக்க அறிவால் அரசவையைக் கீழ்வருமாறு பாடினார் :

சேர மன்னருடைய,

"பெருநாள் இருக்கை விழுமியோர் குழீஇ
விழைவு கொள் கம்பலை"[17]

இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர்,

"பெரிய நாளோலக்க இருப்பிலே
எல்லாக் கலைகளையும் உணர்ந்த
சீரியோர் திரண்டு அவன் (சேர மன்னன்)
கேட்ப, தருக்கங்களைக் கூறி விரும்புதல்
கொண்ட ஆரவாரம்" என்றார்.

இதன்படி அரசவை, கருத்துப்போர் (தருக்கம்) நிகழும் களமாகவும் அமைந்ததை அறியலாம்.

நச்சினார்க்கினியர் இந்த உரைக்கு மேலும் ஒரு விளக்கம் தந்தார் :

"பல சமயத்தோரும் தம்மிற்றாம்
மாறுபட்டுக் கூறுந் தருக்கத்தைச்
சேரக் கூறக்கேட்டிருக்கின்ற
கம்பலை ஆரவாரம்"

இதில் "மாறுபட்டுக் கூறும்" என்றிருப்பதும் பட்டி மண்டபத்தைக் குறிக்கிறது.

ஆனால், இதில் "பல சமயத்தோரும்" என்றிருப்பது நோட்டமிடற்கு உரியது. சங்ககால நூல்களில் சமயச் சொற்போர் பற்றிய குறிப்பு இல்லை. இருந்ததாக நச்சினார்க்கினியர் ஏதும் கண்டிருக்க வேண்டும். அல்லது பின்னர் சிலம்புக்கால அளவில் எழுந்த சமயப்பட்டிமண்டபத்தைக் கொண்டு எழுதியிருக்கவேண்டும்.

எவ்வாறாயினும் அரசன் வீற்றிருக்கும் அவை பட்டி மண்டப நிகழ்ச்சிக் களமாகவும் இருந்தது என்பது உண்மை. இதனை முன்னர் கண்ட "மன்னிய அவையிடை வெல்லுறு போதினும்" என்றதும் வலியுறுத்தும்.

மற்றும் திருமாவளவனுக்குத் தோற்ற வச்சிரம், அவந்தி, மகதநாட்டு மூன்று மன்னர்களும் தம் திறைப் பொருளாக முறையே முத்துப்பந்தர், தோரணவாயில், பட்டிமண்டபம் ஆகிய மூன்றை வழங்கினர். இவை மூன்றும் அவனது அரசவைச் சித்திர மண்டபத்தில் இடம் பெற்றிருந்தன.

இம்மூன்றும் அதனதன் படிமங்களாக - பொம்மைகளாக வழங்கப்பட்டவை என்று ஒருமுறை கவியோகி சுத்தானந்த பாரதியார் என்னிடம் கூறினார். கவியோகி கூறக் காரணம் ஒரு பெரிய மண்டபத்தையும், தோரண வாயிலையும் (ARCH) அரசவையில் அமைத்துத்தர முடியாது

என்று கருதியமையேயாகும். அப்பொழுது யான் கூறிய ஒன்றை இங்குக் குறிக்கலாம் :

'மன்னர் திறை கொடுப்பதென்பது வெறும் அடையாளம் அன்று; பெறுவோனது பெருமைக்கேற்பப் பெருமதிப்புடைய பொருளை வழங்குவது. மற்றும், இவை மூன்றும் இருந்த மண்டபம் அரசன் அமரும் சித்திர மண்டபமாக - திருவோலக்க மண்டபமாகக் கூறப்பட்டுள்ளன. மண்டபம் பெரிய பரந்த மண்டபம். அதில் நுழைவாயிலில் கலைச் சிறப்புடைய தோரணவாயிலும்; மன்னன் செவிகொள்வதற்கேற்பப் புலவர் அமரும் மண்டபமும், மன்னன் அமரும் ஆட்சிக் கட்டிலின் மேல் - வெண்கொற்றக்குடைக்கு மேலே முத்தாலாகிய பந்தலும் அமைதல் கூடியதே. அதுதான் அவன் வெற்றியைக் காட்டவும் உரியதாகும்.'

எனவே, அரசவையிலேயே பட்டிமண்டப நிகழ்ச்சி நிகழ்ந்தது; அது நிகழ்ச்சிக் களமாக இருந்தது.

அரசவை மட்டுமன்றிப் புலவர்கள் குழுமி நூல்களை ஆராயும் அல்லது அரங்கேற்றும் தனி அவைகளும் பட்டிமண்டபக் களங்களாகும். "கல்வி பயில்களம் பட்டிமண்டபம்" என்று பிங்கலம் (663) இனங்காட்டுகிறது. "கல்விபயில்" என்றது கொள்ளத்தக்கது. கல்விபயில் களம் என்று அவைக்களமாகக் குறிக்கப்பட்டதும் ஒரு பதிவு ஆகும்.

அரசவை மண்டபத்திலன்றித் தனியாகப் பட்டி மண்டபக் களம் இருந்ததை முன்கண்ட குயக்கோடன் நிகழ்ச்சியாலும் அறியலாம் . அவன் 'புகுந்தான்' என்று கண்டோம்: அரசவைக் களமாயின் அவ்வாறு புகுந்துவிட முடியாது . மேலும் அவன் புகுந்ததும் 'தெற்கு வாயில்' அடைக்கப்பட்டது . அரசவையில் இவ்வாறு வாயிலை அடைக்க முடியாது.

எனவே, புலவர் ஆராயும் இடமும் களமாகும் . முதல், இடை, கடைச் சங்கங்களில் அச்சங்க இடங்களும் பட்டி மண்டபக் களமாக இருந்திருக்கும் . (நான்காம் சங்கமாக மதுரையில் இக்காலத்தே தோன்றிய மதுரைத்தமிழ்ச் சங்கத்திலும் பட்டிமண்டப நிகழ்ச்சி நடந்தது.)

எனவே, அரசவை, புலவர் கூடும் அவை, சங்க அவை எனும் மூன்றும் அக்காலப் பட்டிமண்டபக் களங்களாகும் . எக்களத்தில் அமைந்தாலும் பட்டிமண்டபத்திற்கு உரியோர் புலமைச் சான்றோர்களேயாவர் .

## (2) அவை - அவையோர்

'அவை' என்றால் கற்றோரும் சான்றோரும் மற்றோரும் கூடுவது; ஒரு தலைவரைக் கொண்டது; உரைப்போரையும் கேட்போரையும் கொண்டது; அவையோர் இன்றி அவை இல்லை; அவை என்றாலே அவையோரையே குறிக்கும் .

அவையின் நடைமுறை ஒழுங்குகளையும், அவையோரின் அறிவுத்திறனையும், பண்பு நலன்களையும் கொண்டே அது சிறப்படையும்; நேரும் குறைகளால் சிறப்படையாது; தாழ்வையே பெறும்.

அவையின் இலக்கணத்தைப் பண்டைய நூல்கள் காட்டின. அவற்றுள் அவையோரின் அறிவும் பண்பும் தழுவிய குணங்கள் காட்டப்பட்டன. அவ்வாறு காட்டப் பட்டவற்றுள் கருத்து, மறுப்பு, தடைவிடை, வெற்றி தோல்வி என்பன தனித்தனியாகவும் இணைத்தும் பேசப் பட்டுள்ளன. இவற்றால் அவை பற்றிய இலக்கணத்தில் பட்டிமண்டபக் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன.

"எட்டு வகை நுதலிய அவை"[18] என்று தொல்காப்பியம் கூறியுள்ளது. எண்வகைக் குணங்கள் கருதிய அவையத்தாரது நிலைமையானும்" என்று இளம் பூரணர் பொருள் விரித்தார். அவரே எட்டுவகைக் குணங் களை விரித்து,

"குடிப்பிறப்பு (1), கல்வி (2), ஒழுக்கம் (3), வாய்மை (4), தூய்மை (5), நடுவுநிலைமை (6), அழுக்காறின்மை (7), அவாவின்மை (8), என்பன" என்றார். இதற்குச் சான்றாகப் பழைய நூலாகிய ஆசிரியமாலைப் பாடல் ஒன்றைக் காட்டினார்; பேராசிரியரும் காட்டினார். இவ்வெட்டையும் காட்டிய ஆசிரியமாலை,

"தோலா நாவின் மேலோர் பேரவை"[19] என்று பாடியது . இதில் 'தோல்வியுறாத நாவன்மை' சுட்டப் பட்டது . இது பட்டிமண்டபக் கருத்தையும் உள்ளடக்கிய தாகும்.

## நல்லவை

திருவள்ளுவர் "நல்லவையுள் நன்கு செலச்சொல் லாதார்"[20] என்று 'நல்லவை' என்று அடைமொழியிட்டார். முன்றுறையரையரும் "நல்லவையுள் புக்கிருந்து" (24) என்றும் "நல்லவை கண்டக்கால்" (25) என்றும் கூறினார். இது என்ன நல்லவை? இதற்கு விடை கூறுவது போன்று யாப்பருங்கலவிருத்தியில் ஒரு மேற்கோள் பாடல் உள்ளது.

"நல்லவை என்பது நாடுங்காலை"

என்று தொடங்கும் அது,

"எத்துறை யாயினும் இருவரும் இயம்பும்
அத்துறை வல்லோர் அதனொடு புணர்ந்தோர்"

என்று தொடர்ந்து

"செற்றமும் சினமும் சேரா மனத்தோர்,
முனிவொன் றிப்போர், மூர்க்கர் அல்லோர்,
இனிய முகத்தோர், இருந்துரை கேட்போர்
வேந்தன் ஒருவர்க்கா வாரம்
(ஒதுதலைச் சார்பு ஆதல்) படினும்
தாந்தாம் ஒருவர்கண் பாங்கு படாதோர்"

என்றெல்லாம் கருத்துப்போர்க் குறிப்புகளைத் தந்துள்ளது . அக்குறிப்புக்களின் நிறைவாக, 'கருத்துப் போரிடுவோர் முன்னர் பேசும்போது கூறியவற்றில் ஏதும் அடிப் பட்டுப் போகும் கருத்து இருந்தாலும் அவை குறிப்பிடப் படாமல் விடுக்கப்படும்' என்று கூறி,

"வெல்லு மாயினும் மிகச்சிறப் புடைத்தே" என்று வெற்றியைக் குறித்துக் காட்டி நிறைவேற்றியுள்ளது . இப் பாடலில் கீழ்க்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளவை பட்டி மண்டப நல்லவையை அடையாளங் காட்டுகின்றன.

## புல்லவை - தீயவை - குறையவை

மேலே குறிக்கப்பட்ட பாடலிலுள்ள "செற்றமும் சினமும் முனிவும் மூர்க்கமும்" உள்ளோர் அவையில் இருந்தால் அந்த அவை நல்லவை அன்று; அதனைத் திருவள்ளுவர் "புல்லவை (யுள் பொச்சாந்தும் சொல்லற்க 719) என்றார் . முன்னுறையரையரும் "புல்லவையுள் தம்மைப் புகழ்ந்துரைத்து" என்றார் .

யாப்பருங்கலம் "அவையின் அமைதி" என்று குறித்ததற்கு விளக்கமாக அதன் விருத்தியுரைகாரர்,

'அவையினது அமைதியும்' என்பது அவையோரது தன்மை என்றவாறு. அவை தாம் நான்கு வகைப்படும் என்று எழுதி இதற்கொரு பழைய பாடல் ஒன்றான

"நல்லவை, தீயவை, குறைநிறை அவையெனச்
சொல்லுப என்ப தொல்லை யோரே[21]

(தொன்மறச்சான்றோரே)

என்பதனைக் காட்டினார்.

தொடர்ந்து, இவ்வவைகளை விளக்கும் பழம்பாடல்களைக் காட்டினார்.

'தகாதவற்றையும் வேண்டாதவற்றையும் நாய் போல் குரைத்துச் சொன்னவன் கருத்தையும் எடுத்துச் சொல்லி ஒருதலைச்சார்பாக இயங்குவது' தீயவை எனப்பட்டது.

'நிறைவில்லாத சொற்களை நினைத்தபடி எல்லாம் சொல்லுதல்' குறையவை என்று காட்டப் பட்டுள்ளது.

**நிறையவை**

"நிறையவை என்பது நினையுங் காலை
எல்லாப் பொருளையும் தன்னகத்தடக்கி
எதிர்வரு மொழிகளை எடுத்துரைப்பதுவே"[22]

என்னும் நிறையவை பற்றிய பாடலும் அத்தொடர்பில் உள்ளது. இதில் 'எதிர்வரு மொழிகள்' என்றமை நாம் கொள்ளவேண்டிய குறிப்பாகும். இவ்வாறு காட்டப்பெற்ற அவை பற்றிய பாடல்கள் எந்த நூலில் உள்ளவை (?)

பாடியவர் யார் (?) என்பன அறியக்கூடவில்லை. ஆனால் மிகத் தொன்மைச்சான்றோர் கூறிய கருத்துக்கள் என்று கூறப்பட்டுள்ளது.

## அவையோர்

தொல்காப்பியர்,

"நிலப்பெயர் குடிப்பெயர், குழுவின் பெயர்"23 என்றார். 'குழுவின்' என்றதை உரையாசிரியர் சேனா வரையர் 'அவையத்தார்' என்றார். அவையோர் எவரா யினும் அவையத்தார் எனப்பட்டனர்.

புறப்பொருள் வெண்பாமாலை என்னும் புறப் பொருள் இலக்கண நூல்,

"அவைய முல்லை" - என்றொரு துறையை வகுத்துள்ளது. அதன் 'கொளு' என்னும் முன்னோட்ட நூற்பா,

"நவைநீங்க நடுவு கூறும்"

அவை மாந்தர் இயல்புரைத்தன்று" - என்று குறித்து அதன் விரிவாக எழுதப்பட்ட வெண்பா,

"தொடைவிடை" என்று வினாவையும், விடையும் சொல்லித் தொடங்கி எட்டுவகையாக விரித்துள்ளது. எட்டும் பட்டிமண்டப நிகழ்ச்சிகளாக உள்ளன. இதன் இறுதி அடி

"வழிபட வல்லது அவை" 24 என்று 'அவைய முல்லை'யை நிறைவேற்றியுள்ளது. நிறைந்த இந்த அவை யோர் வழிபடத்தக்கவர் என்றது பெருமைக்குரியதாகும்.

வழிபடத்தக்கவராம் இவ்வவைச் சான்றோர் பெருந் தன்மைக்கு இருப்பிடமானவர். புலமைத் திறத்தில் தன் முனைப்போ தற்புகழ்ச்சியோ கொள்ளாதவர். தாம் கடுஞ்சொற்களால் தாக்கப்படினும் தகவை இழக்காதவர்.

அவையோர் சான்றோர். சில இடையூறுகளைக் கருத்தில் கொள்ளாதவர். பெருந்தன்மையின் பிறப்பிட மானவர். ஓர் எடுத்துக்காட்டு :

"எய்தி இருந்த அவைக்கண் சென்றுஎள்ளி
வைதான் ஒருவன் ஒருவனை - வைய
வயப்பட்டான் வாளா இருப்பனேல், வைதான்
வியத்தக்கான் வாழும் எனில்"[25]

என்னும் நாலடிப்பாட்டு ஏச்சில் அகப்பட்டவன் பெருந்தன்மையுடன் வாளா இருப்பதைச் சுட்டுகிறது. இப் பெருந்தன்மையைக் கண்டும் ஏசியவன் உயிர் துறந்திருக்க வேண்டும் என்றது. இதன்மூலம் ஏசியவனின் நல்லுணர்வு இன்மையையும் காட்டியது.

பொதுவாக இவ்வாறெல்லாம் கூறப்பட்ட அவை இலக்கணங்கள் பட்டிமண்டப அவைத்தன்மைகளை உள் ளடக்கியனவாகும்.

## (3) அவை நெறி

'அவிநயம்' என்பது ஒரு பழைய நூல். அதனை எழுதியவர் அவிநயனார். அது அவையில் புகும் நெறிகளைச் சொல்லியுள்ளது. அவையில் புகுதற்கும் பேச எழுவதற்கும் நெறிகளை வகுத்துள்ளது. இந்நெறிகள் 'ஆராய்ந்து காணப் பட்டவை' என்கிறது அந்நூல்.

"அவைபுகு நெறியே ஆயுங் காலை" என்று தொடங்கும் அந்த நூற்பா,

* அவையில் கூறவேண்டியவற்றை அவையில் புகும் முன்னரே ஓர் ஒழுங்கு வரிசைப்படுத்திக்கொள்ள வேண்டும்.
* பேச எழும்போது இருவரும் ஒன்றாக எழக்கூடாது.
* புகுந்தவன் கருத்து தோல்வியுறுதலும் உண்டு. இந்த உண்மையையும் எதிர்பார்த்தே புகவேண்டும்.
* "இருவரும் கூடி உடம்பட்டு" நிறைவு பெற வேண்டும். இதனையும் முன் எண்ணமாகக் கொள்ள வேண்டும்.

இந்நான்கு கருத்துக்களை,

"தெரிவுடன் உணர்ந்தோர் செப்பினர்"[26]

என்று நிறைவேற்றுகிறது, இந்த நூற்பா.

அவையில் பேசுவோர் அவைக்கு அடங்கி வணக்கம் சொல்லுதல் வேண்டும் . இது 'அவையடக்கியல்' எனப் பட்டது . தொல்காப்பியர் வகுத்த இந்த 'அவையடக்கிய' லுக்கு உரையாசிரியர் நச்சர்,

"(யான்) 'அறியாதன சொல்லினும் (அவையோர்)
பாகுபடுத்திக்கோடல் வேண்டும்' என (அவையிலுள்ள)
எல்லா மாந்தர்க்கும் தாழ்ந்து கூறல்"[27] என்றார் .

இவற்றுடன் ஆங்காங்குச் சிதறலாகக் கிடைக்கும் நெறிக் குறிப்புகள் உள்ளன.

பேசுவோர் எழுந்து நின்று பேசுதல் (சிலம்பு .)
ஒருவர் பேசும்போது மற்றவர் பேசாமை (நாலடி )
இகல் இல்லாதவராக எஃகு போன்ற கருத்து உறுதி கொள்ளுதல் (நாலடி .)
அதிரப் பேசாமை (ஆசா.)
கொச்சைச் சொல்லுக்கு மாற்றாக 'அவையல் கிளவி' சொல்லுதல் (தொல் .)
அவைக்கேற்ற வரையறை கொள்ளுதல் (பழ .)
முடிவுக்கு வந்த கருத்தை ஏற்றுக்கொள்ளல் (அவிநயம்)
தலைமைக்குக் கட்டுப்படல் (நாலடி .)
மகிழ்ச்சியான ஆரவாரக் குறிப்புகள் (மது .)
பாராட்டல் (பழ .)
நன்றி கூறல் (திருக்குறள்)

இவையும் பட்டி மண்டப அவை நெறிப் பண்புகளாகும்.

## (4) தலைவர் / நடுவர்

அவையை நெறியாக நடத்திச் செல்லும் சான்றோராக அமைபவர் தலைவர் ஆவார். பண்டை இலக்கியங்களிலோ, இலக்கணங்களிலோ தலைவர் என்னும் சொல் அவைத் தலைவரைக் குறிப்பதாக இல்லை. தலைமைக் கடவுளர் மூவரைக் குறிக்கவும், அரசவைத் தலைமை கொண்ட அரசனையும், காதல் தலைவனையும் குறிக்கவுமே ஆளப் பட்டுள்ளது. அவைத்தலைவர் பிற்காலத்தில் தோன்றியது.

இதுபோன்று 'நடுவர்' என்பதும்; இஃதும் இருவர் கூறும் 'வழக்குகளைக் கேட்டுக் குற்றத்திற்கு உரிய தீர்ப்பு கூறுபவரையே குறிப்பதாகப் பிற்காலத்தில் தோன்றியது. இச்சொல்லமைப்பும் இலக்கிய ஆட்சியில் இல்லை. 'நடுவணன்' என்றொரு சொல் தாய்க்கும் தந்தைக்கும் இடையில் நின்ற குழந்தையைக் குறிப்பதாகவே (ஐங். 401) உள்ளது. இச்சொல் நின்ற இடத்தால் அமைந்தது.

இரண்டு கருத்துக்களுக்கு நடுவே நின்றவரை "நடுவு நின்றார்" என்று திருமூலர் பாடினார். நடுவர் என்னும் சொல்லமைப்பு இல்லை. ஆயினும் நடுவர்க்குரிய நடுவு நிலைமை கொண்டு நடுவு + அர் = நடுவர் என்னும் சொல் அமைந்தது.

நடுவுநிலைமை கொள்ளும் நடுவர், சான்றோர் ஆவர். "ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி" என்ற திருவள்ளுவர் நடுவராக அமர்வதன் முன்னர் இரு கருத்துக்

களையும் எண்ணாத ஓர் அமைவைப் பெறவேண்டும் என்பதை

"சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல் அமைந்து"[28]

என்று அமைவதைக் குறித்தார்.

அச்சான்றோர் எத்துணை கற்றிருப்பினும்

"நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவுநிலைமையால்
கல்வி அழகே அழகு"[29]

என்றபடி நடுவுநிலைமை இன்றேல் கல்வி அழகு பெறாதவர் எனப்பட்டார். இதனைத் திருமூலரும்

"நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை"[30] என்றார்.

முன்னர் அவைச்சிறப்பில் சொல்லப்பட்ட கருத்துக்களில் பல, நடுவர் பண்புகளையும், நெறிகளையும் குறிப்பன.

நடுவராக ஒருவரேயன்றி, சான்றோர் குழுவும் அமையும்.

அறிவுடைய ஒருவர் தாம் கற்றவற்றை நாவிடத்தே நன்கு பயின்றிருப்பார். ஆனாலும், சான்றோர் திரண்ட அவைக்களத்தில் தாம் கற்றவற்றைக் கேட்போரின் மனங் கொள்ளுமாறு சொல்லமாட்டாதவராகவும் அமையலாம். அவற்றைச் செவிமடுக்கும் சான்றோர் அவரால் அவ்வாறு

கூறமாட்டாமல் போன குறையைச் சொல்லமாட்டார். அதை மறைத்து அவர் சொல்லக்கருதிய பொருளை விளங்கச் சொல்லிக் காட்டுவார்; எல்லார் மனமும் கொள்ளும்படி அறிவிப்பார். இவ்வாறு அவையை நன்றாக நடத்தும் சான்றோர் குழுவும் அவைக்கள நடுவராக அமையும்.

இத்தகைய குழு நன்னன்சேய் நன்னன் அரச அவையில் இருந்ததை மலைபடுகடாம் விளக்கியுள்ளது. இதன் நிறைவாக,

"நல்லிதின் இயக்கும் அவன் சுற்றத்து ஒழுக்கமும்"[31]

என்று இயக்குவதையும் அதனை ஓர் ஒழுக்கமாகவும் குறித்தது. இவ்விளக்கம் பட்டிமண்டப நடுவர்க்கும் மிகப் பொருந்துவதாகின்றது.

## (5) கருத்தாளர் - அறைகூவல்

பட்டிமண்டப நிகழ்ச்சிக்கு ஒரு கருத்து அவைமுன் வைக்கப்பெற வேண்டும். முன்வைக்கும் கருத்தாளர் வேண்டும். இரண்டும் இல்லாமல் பட்டி மண்டப நிகழ்ச்சி இல்லை.

வைக்கப்படும் கருத்து, நூல் பற்றியதாகவோ இலக்கண, இலக்கியம் பற்றியதாகவோ அமையும். குயக் கொண்டான் நிகழ்ச்சியில் தமிழ் மொழிக்குப் பகையான கருத்து முன்வைக்கப்பட்டது. சமயக்கருத்துக்கள் பின்

புகுந்தன. "சமயத்து உறுபொருள்" வைப்பதை மணிமேகலை காட்டியது.

கருத்தை முன்மொழிவோர் அக்கருத்தைப் புலமை அவையிலும், அரசவையிலும், பொது இடத்திலும் முன் மொழிந்தனர். பொது இடத்தில் முன்மொழியும் அறிகுறி யாகக் கொடி நடப்பட்டது. முன்னரும் "உறழ் குறித்து எடுத்த உருகெழு கொடி" என்று கண்டோம்.

மாங்குடி மருதனாரும்

"நன் பல
பல்வேறு குழூஉக்கொடி பதாகை நிலைஇ"[32]

என்று கொடியுடன் பதாகையும் (பானர்) எழுந்து நின்றதைப் பாடினார். இப்பல்வேறு கொடிகளில் கல்விக் கொடியாகிய பட்டிமண்டபக் கொடியும் அடங்கும் என்பதை நச்சினார்க்கினியர்,

"நன்பல என்றார், கல்வி, கொடை, தவம் முதலிய வற்றை" என்று காட்டினார்.

அறைகூவலாகக் கொடி நடுவது எவ்வகைப் போருக் கும் உரியது. சூதாட்டப் போருக்கும் கொடி பிடித்து அறை கூவியதை நளன் கதை காட்டுகிறது.

புகழேந்திப் புலவர்,

"அடற்கதிவேல் மன்னன் (நளன்)
அவன் (புட்கரன்) ஏற்றின் முன்போய்

எடுத்த கொடி என்ன கொடி என்ன - 'மிடற்குது
வெல்லுங் கொடி[33] என்றான்"

என்று பாடி எருதின்மேல் ஏறிப் புட்கரன் என்ற மன்னன் அறைகூவலாகக் கொடி பிடித்து வந்ததைப் பாடினார். அதிவீரராமபாண்டியரும் தம் நைடதத்தில் 34 இவ்வாறே பாடினார்.

இவ்வாறெல்லாம் பட்டிமண்டப அறைகூவல், குரல் மூலமாகவும் கொடி மூலமாகவும் நிகழ்ந்தது.

## (6) மறுப்பு - மாறிமாறிப் பேசுதல் (வாதம்)

கருத்தை முன்வைத்தல் - மறுப்புரைத்தல் - இருவரும் மாறி மாறிக் கருத்துப் போரிடல் பட்டிமண்டப நிகழ்ச்சியின் உயிரோட்டமாகும். இவ்வாறு இருவர் இடம்பெறு தலை முன்றுறையரையனார் தம் பழமொழியில்,

"துள்ளி இருவர் தொடங்கிய மாற்றத்தில்"[35] என்று இருவர் அவையில் பொருந்தி மாறுபட்டுப் பேசுவதைக் குறித்தார்.

இதற்கு முந்திய அவிநய நூல்,

"இருவரும் புகார் ஒருவர் முன்புகில்" இருவர் அவையில் புகுவதனைக் குறித்துள்ளது.

இதுபோன்று 'மாறுபட்டுக் கருத்துப்போரிடுவோர் இருவருள் ஒவ்வொருவராகப் பேசவேண்டும். இருவரும்

ஒரே நேரத்தில் ஒரே கருத்தைப் பேசுதல் 'ஒரு நாயைக் கொண்டு இருவர் வேட்டையாடுவதை ஒக்கும்' என்று பழமொழி (19) காட்டிற்று.

முன்கண்ட 'அவைய முல்லை' விளக்கத்தில் 'தொடை விடை - வினா விடை' முறையாக, "தொடை விடைதுள்ளி" என்று மீண்டும் மீண்டும் வினாவும் விடையுமாகப் பேசுவதைக் குறிக்கப்படுகிறது. எனவே, ஒரு கருத்தை முன்வைக்க, அதை மற்றவர் மறுக்க, மறுத்து வினவ, முன்வைத்தவர் விடை சொல்ல இவ்வாறு மாறி மாறிக் கருத்துப் போரிட்டதை அறியலாம்.

இவ்வாறு மாறுபட்டுப் பேசுவதைக் குறிக்க 'வாதம்' என்னும் சொல் தமிழில் புகுந்தது. இவ்வாதத்தை முன்வைப்பவன் 'வாதி' எனப்பட்டான்.

'வாதி' என்னும் சொல் சங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. கருத்துப் போரிடுபவன் பேசும் போது கையை உயர்த்தி நான்கு விரல்களை இரண்டிரண்டாக ஒட்டிவைத்து நிமிர்த்திப் பேசியுள்ளான். இந்த நிமிர்ந்த இருவிரல் காட்சியை வரகுக்கதிர்க்கு உவமையாக்கினார் பெருங்கௌசிகனார் என்னும் புலவர்.

"வாதி கையன்ன கவைக்கதிர் இறைஞ்சி"[36] என்றார். இதனை விளக்கும் நச்சர்,

"தருக்கம் கூறுகின்றவன் கையிடத்து இணைந்த விரல்களை யொத்த இரட்டித்த கதிர்கள்" என்றார்.

இது வாதிடுபவன் உணர்ச்சியில் நின்று பேசியதைக் குறிக்கிறது. உணர்ச்சிக்குறியாக மட்டும் அன்றி அவன் வெற்றிபெறும் குறியாகவும் அமைந்தது.

இக்காலத்து வெற்றிக்குறி 'V' என்னும் ஆங்கில எழுத்துப்போல இரண்டு விரல்களை உயர்த்துவதாக உள்ளது. இதனை V for Victory என்கின்றனர். சங்க இலக்கியக் கருத்தின் தொடர்ச்சி இவ்வாறு ஆகியமை போன்றுள்ளமை தமிழுக்கு ஒரு பெருமையேயாகும்.

இவ்வாறு கருத்தை அறைகூவித் தொடங்குகின்றவன் 'வாதி' என்றும் மறுப்பவன் 'பிரதிவாதி' என்றும் இன்றும் அறமன்றப் பெயர்களாக நிலவுகின்றன.

இங்கு 'வாதி' என்னும் சொல் பற்றி அறிதல் வேண்டும். உரையாசிரியர் நச்சர்

"வடவெழுத்தான் இயன்ற வடசொல்
இதைந்து வரினும்" என்றும்,

"வாதியன்ன - சான்றோர் செய்யுட்கள்
சிதைந்த வந்தன" என்றும் வடசொல்லாகக் காட்டினார்.

'வாதி' என்பது தமிழ்ச் சொல் என்பதற்கு ஒருவழியில் கரணியம் உண்டு.

"வாதத்தான் வந்த வளிக்குதிரை"[37]

என்று கலித்தொகையில் வரும் 'வாதம்' மாறுபாடு என்னும் பொருள் கொண்டது.

மற்றும்,

இதே பாடலில் வாதத்தான் வந்த வளிக்குதிரை மேல் ஏறிச் செலுத்துபவன் "வாதுவன்" எனப்பட்டான்.

"காழோர் வாதுவர் கடுந்தேர் ஊருநர்"[38]

என்று இளங்கோவடிகளும் பாடினார். குதிரைமேல் ஏறிச் செலுத்துவது போல் கருத்தை வைத்து அதில் நின்று அக்கருத்தைச் செலுத்துபவனும் "வாதுவன்" ஆவான். இவ் வகையில் 'வாதி' என்று தமிழ்ச்சொல் பிறந்திருக்கலாம். ஆயினும், இதற்கு உரிய வேர்மூலம் காண இயலவில்லை யாதலால் 'வாதி' என்பதை வடசொல்லாகவே கொள்ள வேண்டும்.

இவ்வடசொல் தமிழில் புகுந்தது. வடசொல் புகுவ தால் தமிழ் மரபுகள் மாறும், திரியும், முரண்படும் என்பது உண்மையாகிற்று. இவ்வுண்மை, கருத்துப் போரிலும் அமைந்தது. அமைந்து, சங்கப்பாங்கான கருத்துப்போரை - பட்டிமண்டபத்தைத் திசைதிருப்பிற்று.

இதற்குப்பின் 'வாதி' என்னும் சொல்லும் 'வாதம்' என்னும் சொல்லுமே இலக்கிய வழக்கிலும் உலக வழக்கிலும் நின்றன; நிற்கின்றன. நின்று எத்திசையில் திருப்பியுள்ளன?

புலமையாளரை நான்கு பெயர்களில் பிங்கலம் பின்வருமாறு காட்டியுள்ளது.

"கவியே கமகன் வாதி வாக்கி யென்று
இவையொரு நான்கு புலமைக் கியல்பே"[39] என்றது.

தமிழ்ப் புலமையாளனாலும் வடசொல்லாம் வாதிப் பெயர் பெற்றான்.

சிறுபஞ்சமூலம் என்னும் பதினெண்கீழ்க்கணக்கு நூல் தமிழ்ப் புலமையோர் சிறப்பாக எது எதைப் பெறுவர் என்பதை,

"பொன்பெறும் கற்றான்; பொருள்பெறும் நற்கவி
என்பெறும் வாதி? இசைபெறும்"[40]

என்று வாதி புகழ்பெறவே கருத்துப்போரிடுவான் என்று காட்டியது.

ஆனால் சிலம்பு காட்டிய பராசரன் பொன்னும் பொருளும் பெறவே வாதிட்டான்.

வடசொல் புகுந்த இடமெல்லாம் புகுந்த இடத்து மரபுகள் குலையும். இது வடமொழியாளர் திட்டமிட்டுச் செய்ததாகும். 'வாதி' என்னும் வடசொல் தமிழில் புகுந்து ஆட்சி பெற்றதால் முன்னிருந்து பட்டிமண்டபச் சொல் மறைந்தது. இருந்த நெறியார்ந்த பண்புகளும் மரபுகளும் மாறின. பட்டிமண்டபம் சங்கப் பாங்கில் பயனுடையதாக

இருந்தமைபோய் அதனையொட்டி, பதினெண்கீழ்க் கணக்குக் காலத்திலேயே தீமை பயப்பதாகவும் 'உவக்கத் தக்க ஒன்றன்று' என்பதாகவும் ஆயிற்று. இதனை 'வாதி' என்னும் சொல்லை அமைத்து ஏலாதி,

"யார்திறத்தும் வாதுஉவவான்"[41]

என்று ஒதுக்கத்தக்க ஒன்றாக வாதத்தைக் கூறியது. இவ்வொதுக்கல் தொடர்ந்தது.

இது நிற்க,

பட்டி மண்டபத்தில் மறுப்பும், மாறி மாறிப் பேசுவதும் இன்றியமையாமல் இடம் பெற்றமை கொள்ள வேண்டியனவாகும்.

## (7) கருத்துப்போர்க்குத் தகுதி கொள்ளல்

"எண்ணித் துணிக கருமம்" என்னும் வள்ளுவ அறிவுரை இங்குக் கருதத்தக்கது. ஒரு செயலில் இறங்கும் முன் அச்செயலில் எவை எவற்றை எதிர்கொள்ள நேரும் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். அவற்றிற்கு ஏற்றபடி தன்னை அச்செயலுக்குத் தகுதியாக்கிக் கொள்ள வேண்டும். பட்டி மண்டபக் கருத்துப்போருக்கும் இஃது இன்றியமையாதது.

அவையறிதல் என்ற அதிகாரத்தைத் திருவள்ளுவரும் நாலடியாரும் முன்றுறையறையனாரும் அமைத்தனர். அவற்றுள் இத்தகுதிகள் நிறைவாக உள்ளன.

அவையறிந்து ஆராய்ந்து சொல்லவேண்டும். (711)

அவையஞ்சா மாற்றம் கொடுப்பதற்கு
அளவை நூல்களைக் கற்கவேண்டும் (725)

செய்வனவற்றை இடைதெரிந்து சொல்லத் தெரிய வேண்டும் (712)

சான்றோர் சொல்லும்போது அவர்க்கு முந்திக் கொண்டு சொல்லக் கூடாது (715)

அறிவுசான்ற ஆன்றோர் முன் அறிவுஒளியுடன் பேச வேண்டும் (714)

அறிவற்றவர்முன் அவர்போன்றே நடந்துகொள்ள வேண்டும் (714)

அவையில் புல்லரும் இருப்பர். அந்த அவையில் மறந்தும் உயர் கருத்தை வைக்கக் கூடாது (719)

தம் கருத்தை ஒட்டிப் பேசும் திறன் அற்றவரைத் துணைப்பேச்சாளராகக் கொள்ளக்கூடாது (720)

அவைக்கு அஞ்சக்கூடாது.

- இவையாவும் திருவள்ளுவர் அறிவுரை.

பின்னர் உரைக்க வேண்டிய நிலையில் முன்னர் உரைத்தால் மறுப்போர் வினா அறியாததால் உரிய விடை தெரியாமல் பேச நேரும். அது முழங்கால் முறிவிற்கு மூக்கி கட்டுப்போடுவது போன்றதாகும். (பழ-23)

கேட்போரை உணர்ந்து, அறிந்து அவர் விருப்போடு கொள்வதற்கு ஏற்ற வகையில் உரைத்தல் ஓர் "உரை வித்தகம்" ஆகும். இவ்வித்தகம் தெரிந்தவர் "தோற்பன கொண்டுபுகார் அவை" (பழ-18)

செல்லுபடியாகும்படி சொல்லவேண்டும். அந்த வழியறியாமல் பல உரைத்தால் தோற்கவேண்டி நேரும். (நாலடி-313)

தோற்பன தொடரக்கூடாது (ஆ. சூடி. 64)

உரிய கருத்தின்றி வெற்றி ஒன்றையே கருதி விலங்கு உணர்வால் சிலர் குதறிப் பேசுவர். உண்மையை ஏற்க மாட்டார் :

> "கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோடு - ஒன்றி உரைவித்தகம் எழுவார் காண்பவே, கையுள் சுரை வித்துப் போலும் பல்". ஆம், முகத்தில் தாக்கிப் பல்லையும் சுரைக்காய் விதைபோலக் கையில் பெறச் செய்துவிடுவர் (நாலடி-315)

இவ்வகை யாவும் கருத்துப்போருக்கு - பட்டி மண்டபத்திற்குக் கொள்ளவேண்டிய தகுதிகள். இவற்றைக் கொள்ளவேண்டும்.

## (8) அவையோர் கருத்து

பட்டிமண்டபத்தில் அமைந்த சான்றோர் நடுவரோ, தலைவரோ தீர்ப்புச் சொல்லும் முன் அவையோர் கருத்து

கேட்கப்படும் . அப்போது நடுவனாகிய மன்னன் தனக்கு வேண்டியவர் பக்கம் சாயலாம்; அஃதாவது 'வாரம்' படலாம்.

"வேந்தன் ஒருவர்க்கு வாரம் படினும்
தாம் தாம் ஒருவர்கண் பாங்கு படாமல்"[42]

அரசனென்று பாராமல் கருத்தைக் கூறினர். அவ்வாறு சான்றோர் அவையை நேர்மையாக்கினர். எனவே, பட்டிமண்டபத் தீர்ப்பிற்கு அவையோர் கருத்தும் இடம் பெற்றதை அறியலாம்.

## (9) முடிவு / தீர்ப்பு

பட்டி மண்டபத்தின் நிறைவும் பயனும் முடிவாகச் சொல்லப்படும் தீர்ப்பால்தான் அமையும் . அது நடுவு நிலையாக அமையவேண்டும் . தீர்ப்புக் கூறும் ஆய்வாக ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலையில் 'அவையமுல்லை' என்றமைத்து விளக்கியன இங்கும் கருதத்தக்கன.

"நவை நீங்க நடுவு கூறவேண்டும்" அதற்குக் கருத்துப் போராளர் கூறிக்கொண்ட தடைகள் விடைகள் எனும் இவற்றை முறையாக ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

தடைகள் விடைகள் அடிபட்டுப் போகாமல் கருத்தில் கொள்ளப்படவேண்டும் . அவற்றிலும் தடைக் கருத்துக்கள் அடிபட்டுப் போகும்படி 'அழிமுறை' கொள்ளக்கூடாது.

இவ்வாறு கருத்துகளின் வழிப்பட்டுத் தீர்ப்புக் கூறுவதே வல்லமையான பட்டிமண்டபத் தீர்ப்பு ஆகும்.[43]

இக்கருத்து பழம்பாடற் கருத்து.

## (10) பின் விளைவு

பட்டி மண்டபத்தின் காலத் தொடக்கமாக "மன்னிய அவையிடை வெல்லுறு"தல் பட்டி மண்டப நிகழ்ச்சியின் ஊற்றுக்கண் எனப்பட்டது.

இவ்வூற்றுக் கண்ணின் நாற்றங்காலாய்ச் சங்க இலக்கிய, தொல்காப்பியக் குறிப்புகள் அமைந்தன.

இந்நாற்றங்காலில் பயிராகி விளைந்த விளைச்சல் தான் இங்குப் பின் விளைவு எனப்படுகின்றது.

சங்கப் பாங்கின்படி,

பட்டி மண்டபத் தீர்ப்பில் உறுதியான கருத்தை - கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை"[44] என்றபடி எதிர்த்துப் போரிட்டவர் ஏற்கும் பெருந்தன்மை முதல் விளைச்சல்.

தீர்ப்பில் முடிவான கருத்து, புலவர் வழக்காதல், முதல் விளைச்சலின் அறுவடை.

அறுவடையாம் புலவர் வழக்கு, நூல்களில் ஆளப்பட்டு நூல் வழக்காதல் மணிக்கதிர்.

விளைச்சலின்போது சூறைக்காற்றும் வீசுவதுண்டு. அதுபோல் பட்டிமண்டபத்தில் வடபுல வழக்காம் சூறைக் காற்று அடித்தது. இக்காற்றால் கதிர்ப்பிடிப்பில் சூறை விழுந்து பொருள் அற்ற 'பதர்' தோன்றியது. இதுதான் கரும்புள்ளிபெற்ற சங்கப்பாங்கு எனப்பட்டது.

பதர் பெருகினாலும்
முற்றி விளைந்த
மணிக்கதிர் மணிக்கதிர்தான்;
சங்கப் பாங்கு சங்கப்பாங்குதான்.

# ஆ) பட்டி மண்டபத்தில் சமயப் பங்கு

## *பிணங்கும் சமயங்கள்*

*"வணங்கும் துறைகள் பலபல ஆக்கி மதிவிகற்பால்*
*பிணங்கும் சமயம் பலபல ஆக்கி"*[45]

- என்கிறது நம்மாழ்வாரின் திருவிருத்தம். இதில் 'சமயம் பிணக்கம் கொள்வது; அப்பிணக்கம் அறிவுத்திரிபால் நேரும்' என்றது ஒரு சமயச் சான்றோரின் வாய்மொழி. அறிவு திரிந்த பிணக்கத்தால் சமயங்கள் தமக்குள் பலவகைகளில் மோதிக்கொள்ளும். அம்மோதல்களில் வலுவான மோதல் பட்டிமண்டபச் சொற்போர். 'வாதம், வாதி' என்னும் வடசொற்கள் தமிழில் புகுந்து முன்னிருந்த பட்டிமண்டபத்தைக் குறிக்கும் தமிழ்ச் சொல்லைத் தடந்தெரியாமற் செய்து முழு ஆட்சி பெற்றுள்ளன.

இவ்வாறு பிணக்கால் சமயச் சொற்போரிடும் சமயங்களையும் நம்மாழ்வாரே,

*"இலிங்கத் திட்ட புராணத்தீரும் (சைவரும்)*
*சமணரும் சாக்கியரும் (புத்தரும்)*
*வலிந்து வாது செய் வீர்களும்"*[46]

- என்று மூன்று சமயமாகிய சமயத்தாரைக் குறித்தார். நம்மாழ்வாரின் சமயமாகிய திருமாலியமும் (வைணவமும்)

இதிலிருந்து விடுபட்டதன்று. திருமாலியப் பெரியார் இராமானுசரும்

"வாதில் வென்றான் எம் இராமானுசன்"[47] என்று போற்றப்படும் அளவு வாதம் செய்தவர்.

சமணர்க்குத் "தருக்கச் (வாதச்) சமணர்" என்றே அடைமொழி உண்டு. புத்த சமயக் குண்டலகேசி வரலாறே வாத வரலாறுதான். சைவச் சான்றோர் திருஞானசம்பந்தர் "வாது செய்யத் திருவுள்ளமோ" என்று சிவனையே வேண்டி இசைவு பெற்று வாது செய்தவர்.

எனவே, தமிழ் மண்ணில் நால்வகைச் சமயத்தாரும் பிணக்க வாத வரலாற்றிற்குள் அடங்கியவர்கள் ஆயினர்.

சங்க காலத்தில் இச்சமய வாதப்போர் துவங்கி இருக்கலாம் என்று நச்சர் உரை கொண்டு முன்னர் காணப்பட்டது.

அதில்,

"எல்லாக் கலைகளையும் உணர்ந்த சீரியோர்" என்றும்
"தருக்கங்களைக் கூறி" - என்றும்
"பல சமயத்தாரோடு தம்மிற்றாம் மாறுபட்டுக் கூறும் தருக்கத்தை"

என்றும் கூறப்பட்டுள்ளமையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் முற்காலச் சமயப் பட்டிமண்டபம்

மாறுபட்டுப் (பிணங்கி) பேசப்பட்டாலும் சான்றாண்மை யுடனும் மகிழ்ச்சி ஆரவாரத்துடனும் நிகழ்ந்துள்ளது. இது பட்டிமண்டபத்தில் சமயங்கொண்ட பங்கில் 'சங்கப்பாங்கு' இருந்தமையைக் காட்டுகிறது.

இதற்குப் பின்னர், மணிமேகலையில்,

"ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின்"[18]

என்று அறிவிக்கப்பட்டமை கருதப்பட வேண்டியதாகின் றது. "ஒட்டிய சமயம்" என்றதும் ஒரு குறிப்பாகும். "பாங்கு அறிந்து" என்றது சமயப் பட்டிமண்டப நிகழ்ச்சியில் பாங்கு குறையத் தொடங்கியதால் இஃது ஓர் எச்சரிக்கையாக அமைந்தது. இஃது எச்சரிக்கை என்பதை அடுத்து வரும்.

"செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்" என்னும் அடி உறுதி செய்கிறது. ஆக, சமயப் பட்டிமண்டபத்தில் ஓரளவில் பேசுவோரும் பெருமளவில் கேட்போரும் செற்றம் (சினம்) கொண்டு கலவரம் செய்துள்ளமை புலப்படுகிறது. இவ்வாறு நிகழ்ந்துள்ளமையை முன்னர்க் கண்ட ஆசிரிய மாலை காட்டிய நல்லவையில்

"செற்றமும் சினமும் சேரா மனத்தோர்
முனிவொன்று இல்லோர் மூர்க்கர் அல்லோர்"

என்று எதிர்மறையில் குறிக்கப்பட்டமை இங்கு கொள்ளப் பட்டு இவர்கள் இல்லாத நல்லவை பின்னர் இவர்கள் இடம்

பெறும் வாய்ப்பில் அமைந்ததாகக் கொள்ளவேண்டியுள்ளது. சமய வாதங்களில் செற்றமும் சினமும் தொடர்ந்தன.

இவ்வாறு பட்டிமண்டபக் கருத்துப்போர் வாதமாகி, வாதம் சமயத்திற்கு உரிமையாகி, சமயவாதம் பெருகியது. கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பையப்பைய இது வளர்ந்து பட்டிமண்டபம் என்றால் 'சமய வாதம்' என்று நிலைத்து, பட்டிமண்டபத்தில் 'சமயப் பங்கு' ஆட்சி செய்யலாயிற்று.

'வேதம் வாதத்திற்கு அப்பாற்பட்டது' என்று கூறினாலும் வேத வழியறிந்த கண்ணபெருமான் தன் 'பகவத்கீதை'யில்,

'தருக்கிற்பவர்க்கு யான் வாதமாகிறேன்'[49]

என்று கண்ணபிரானே வாதமாகும் அளவிற்கு 'வாதம்' இடம் பெற்றது.

இச் சமய வாத ஆட்சி உறுப்புக்கள் இவை :

1. மணிமேகலை, சமயக் கணக்கர்தம் திறம் கேட்டதைச் செங்கோலாகப் பிடித்தது;

2. சைவ - சமண வாதம் என்னும் அரசு கட்டில் ஏறியது;

3. சைவ - புத்த வாதம் என்னும் வெண்கொற்றக் குடை பிடித்தது;

4. சமண - புத்த வாதம் என்னும் கூர்வாள் உருவியது;
5. திருமாலிய - வேத - பிரம வாதம் என்னும் கேடயம் பற்றியது;
6. திருமாலிய சைவ வாதம் என்னும் கவரி வீசப்பெற்றது;
7. கடவுளர் வாதம் என்னும் அரச உரிமை முத்திரை குத்துப்பெற்றது;
8. ஒரு சமயத்தின் உள்வாதம் என்னும் அமைச்சு பெற்றது;
9. தனியார் வாதங்கள் என்னும் நாற்படையினரையும் காவலரையும் பெற்றது;
10. இசை, கூத்து வாதம் என்னும் பல்லாண்டு பாடப்பெற்றுக் கலைகண்டு மகிழ்ந்தது.

இவ்வாட்சி கி. பி. ஆறாம் நூற்றாண்டில் தொடங்கியது. 18ஆம் நூற்றாண்டு வரை 1200 ஆண்டுகளாக ஆட்சிக்காலம் கொண்டது.

மேற்குறிக்கப்பட்ட பத்தாக, பட்டிமண்டபச் சமயப் பங்கைக் காணவேண்டும்.

## (1) மணிமேகலை பங்கு

கோவலன் - மாதவி மகள் மணிமேகலை இளமைத் துறவு பூண்டாள்; புத்தத் துறவினியானாள். பலவாறு

வளர்ந்து வஞ்சிமாநகர் புகுந்தாள்; ஆண் துறவிக் கோலத்தில் புகுந்தாள். அங்கிருந்த சமயக்கணக்கராம் வாதிகளை அணுகினாள். அளவை வாதி, சைவ வாதி, பிரமவாதி, திருமாலிய வாதி, வேத வாதி, ஆசீவகவாதி, நிகண்ட வாதி, சாங்கிய வாதி, வைசேடிகவாதி, பூதவாதி என்று பத்து வகை வாதிகளை உசாவி அவரவர் கோட்பாடுகளை அறிந்தாள். இவர்கட்கு மாற்றமாக ஏதும் கூறவில்லை. எனவே, இது வாதம் ஆகாது என்பதற்கில்லை. மாற்றம் செய்யாத மணிமேகலை பெருஞ்சமயங்களில் ஒன்றாகிய புத்தசமய வாதியை உசாவவில்லை. பிறர் கோட்பாடுகளால் தன் புத்த சமயப் பிடிப்பைத் தளர்த்திக் கொள்ளவில்லை. இறுதியில் பூதவாதியின் கோட்பாட்டைக் கேட்டு மாற்றம் கூறினாள். கூறிய கோட்பாட்டை மறுத்தாள்; அளவைநூல் விதியில் இவ்வாறு ஏற்காமலும் மாற்றம் தராமலும் விடுதலும், இன்றியமையாத மறுப்புக் கோட்பாட்டை மறுப்பதும் உள்ளன. ஆகையால், மணிமேகலையும் புத்த வாதியாக வாதப்பட்டியலில் அமைந்தவளே.

எனவே, பட்டிமண்டபச் சமயப் பங்கில் மணிமேகலையின் பங்கும் அமைந்தது.

## (2) சைவ - சமணவாதப் பங்கு

சமயப் பட்டி மண்டபத்தில் மணிமேகலையின் பங்கு நூற்றுக்கு நூறு உண்மை பொதிந்ததன்று. இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை சங்க

அண்மைக்காலப் புலவர் சாத்தனாரால் எழுதப்பட்டாலும் அவர் புத்தக் கோட்பாட்டிற்காக அதனை எழுதினார். எனவே, மணிமேகலை வரலாற்றின் உண்மைப் பொதிவு களைவிட சமயக் கற்பனைகள் செறிந்துள்ளன.

ஆனால், முதலில் நடந்ததாக நமக்குக் கிடைக்கும் சைவ - சமய வாதம் சைவக்குரவர் ஆளுடையபிள்ளையாம் ஞானசம்பந்தருக்கும் சமணத்துறவியர்க்கும் நிகழ்ந்தது. இந்நிகழ்ச்சி ஞானசம்பந்தர் தாமே பாடிய பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளது. அவர் மதுரையில் தொடர்பு கொண்ட பாண்டிய மன்னன் அரிகேசரி என்னும் நின்ற சீர் நெடுமாறன் வரலாற்றிலும், வேள்விக்குடிச் செப் பேட்டிலும் குறிக்கப்படுபவன. எனவே, இவ்வாதம் சற்று அழுத்தம் பெறுவதாகும்.

ஞானசம்பந்தர் மதுரைக்குள் புகுந்தார். பாண்டிய மன்னனது வெப்புநோயைத் தீர்ப்பதில் ஒரு போட்டி இவருக்கும் சமணத் துறவியர்க்கும் நேர்ந்தது. ஞானசம்பந்தர் திருநீறு வழங்கி வென்றார். தொடர்ந்து ஞானசம்பந்தர் பாடலும், சமணரின் 'அத்திநாத்தி' என்னும் மந்திரமும் எழுதப்பட்ட ஓலைகள் தீயில் இடப்பட்டன. சம்பந்தர் ஓலை எரியாது வென்றது. இது 'அனல்வாதம்' எனப் பட்டது. மூன்றாம் முறையாக இருவர் பாடலும், கோட் பாடும் எழுதப்பட்ட ஓலைகள் ஆற்றில் விடப்பட்டன. சம்பந்தர் ஓலை நீரில் எதிர்த்தேறி வென்றது. ஏறிய ஏட்டை எடுத்த இடம் 'ஏடகம்' என்று வழங்கப்படுகின்றது. சமணர்,

இட்ட ஓலை ஆற்றோடு போயிற்று . இது 'புனல் வாதம்' எனப்பட்டது.

மும்முறை தோற்றதால் சமணர் தாம் விதித்துக் கொண்டவாறு கழுவில் ஏறினராம். ஆனைமலை முதலாக எட்டுக் குன்றங்களிலிருந்து வந்த எட்டு ஆயிரம் பேர் கழுவில் ஏறி மடிந்தனர் என்பது ஐயப்பாட்டுடன் நோட்டமிட வேண்டியதாகின்றது . எரியாத ஏடு, எதிர்த் தேறிய ஏடு என்பனவும் வியப்பான கவர்ச்சிகளாகும் என்று கருதலாம்.

சம்பந்தர் தம் பாடலில் சமணத் துறவியர் பெயர் களாக,

'சந்துசேனன், இந்துசேனன், தருமசேனன்,
கந்துசேனன், கனகசேனன்'[50]

எனப் பாடியுள்ளார்.

கடவுளை வாதப்பொருளாக ஆக்கவிரும்பாதவர் சம்பந்தர்,

"ஏதுக்க ளானும் எடுத்த மொழியானும் மிக்குச்
சோதிக்க வேண்டா! சுடர்விட்டுளன் எங்கள் சோதி"[51]

என்று பாடினார் . இதில் வரும் 'ஏதுக்கள்', 'எடுத்தமொழி' என்பன சமய வாத நெறிகள் . இக்கருத்துடையவர் சமணருடன் மோதலில் இறங்கச் சிவனிடம் கோயிலில்,

"வாது செய்யத் திருவுள்ளமே"[52]

என்று பத்துப்பாடல்கள் பாடினார். கடவுளின் இசைவைப் பெற்றதாகக் கொண்டு வேறு பத்துப்பாடல்கள்[53] பாடினார்.

சம்பந்தர் பாடல்களைச் சார்ந்து பெரிய புராணமும், திருவிளையாடற் புராணமும் நிகழ்ச்சிகளை அமைத்துப் பாடியுள்ளன. அவற்றிலிருந்து சில சமய வாத நெறிகளை அறிய முடிகின்றது.

ஞானசம்பந்தர் தம் வாய்மொழியாகவே "பைய வாது செய்ய, ஒட்டி வாது செய்ய, சீறி வாது செய்ய, காக்க வாது செய்ய, சால வாது செய்ய", என்றெல்லாம் வாதமாகவே பாடியுள்ளார். இவற்றையெல்லாம் நோக்க இச்சைவ சமண வாதம் பிற சொற்போராக அன்றி சமயச்சொற்போராக நிகழ்ந்துள்ளது. இருப்பினும் அளவை நூல் முறையில் இஃதும் வாதச் சுற்றுக்குள் அடங்கும்.

இந்தச் சைவ - சமண வாதம் பட்டி மண்டபம் சமயப் பங்கில் ஓர் அழுத்தமான பங்கு கொண்டது.

## (3) சைவ - புத்த வாதப் பங்கு

இவ்வாதமும் ஞானசம்பந்தர் தொடர்புடையது. பாண்டிநாட்டிலிருந்து சோழ நாடடைந்து திருத்தெளிச்சேரிக்குள் ஞானசம்பந்தர் புகுந்தார். பாண்டிநாட்டில்

பெற்ற வாத வெற்றிச்சின்னமாம் கொடி, குடை முதலிய விருதுகளுடன் புகுந்தார் . அவ்வூரின் அண்மையிலுள்ள புத்தமங்கைப் புத்தர்கள், புத்தநந்தி என்னும் தலைவனுடன் எதிர்த்தனர் . 'எம்மை வாதில் வென்றே வெற்றிச் சின்னத்துடன் புகவேண்டும்' என்றனர்.

சம்பந்தர் பாடல்களை ஏட்டில் எழுதிவரும் 'சம்பந்த சரணாலயர்' என்னும் அவர் மாமன் வாதிட முன்வந்தார் . வாதம் நிகழவில்லை. ஒறுத்தல் தான் நேர்ந்தது. சம்பந்தரின்,

"புத்தர் சமண் கழுக்கையர்" என்று தொடங்கி அத்திர மாவது (பகைமாய்க்கு படையாவது) அஞ்செழுத்துமே (நமசிவாய) என்ற பாடலைப் பாட,

"உரும் (இடி) இடித்துவிழ . . . . . தலையும் மெய்யும்
அற்றுவிழ அத்திர வாக்கதனால் அறுத்ததுவும்"[54]

என புத்தநந்தி தலை அறுபட்டு மடிந்தான்.

இங்கு முன்கண்ட ஒன்றைப் பொருத்திக் காண வேண்டும். வடபுலத்தில் யக்ஞவல்கியன் தன்னை எதிர்த்து வாதிட்ட கார்க்கிக்கு 'அடுத்து வினவினால் தலையறுந்து வீழ்வாய்' என்றானே அதைப் போன்ற ஒறுத்தல் இது . அவள் மந்திரத்தால் அன்று, உடன் வரும் அடாவடிகளால் 'தலைஅறும்' என்றதைக் கண்டோம் . இஃது எப்படி அறுந்ததோ? இங்குத் தலை அறுந்து விழும் வாத ஒறுத்தல் நெறி ஒத்து வருகின்றது .

தொடர்ந்து அவ்வூரிலேயே மீண்டும் புத்தர் சாரி புத்தன் தலைமையில் வாதிட வந்தனர் . இவனுடனும் சம்பந்த சரணாலயரே வாதிட்டார். முறைப்படி

*"உன் தலைவனும் பொருளும் உரை;*
*உன் தலைவன் காட்டும் முத்தி எது?;*
*வழிபாடு செய்வோர் யார்?"*[55]

என்றெலாம் வினவ, சாரிபுத்தன் விளக்க, இறுதியில் சாரிபுத்தன் தோற்று, சம்பந்தரை வணங்கிச் சைவன் ஆனான் .

இவற்றைத் திருத்தொண்டர் புராணந்தான் காட்டு கின்றது; ஞானசம்பந்தர் பாடல் இல்லை . ஒன்றைக் குறிப்பாகக் கொள்ளலாம். தெளிச்சேரி ஊராரை விளித்து

*"சாக்கிய ரோடு சமணர்கள்*
*தம் திறத்தன நீக்குவித்தீர் ஓர் சதுரரே"*[56]

என்று வாத எதிர்ப்பை நீக்கியதைப் பாராட்டினார் .

சைவ புத்த வாதத்தில் மாணிக்கவாசகர் ஈடு பட்டதாகத் 'திருவாதவூரர் புராணம்' பாடியுள்ளது . 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கடவுள் மாமுனிவர் என்பார் இப்புராணத்தைப் பாடினார் . இதில் 'புத்தரை வாதில் வென்ற சருக்கம்' உள்ளது .

சைவ முனிவர் ஒருவர் (?) இலங்கை சென்று இலங்கை மன்னன் (?) அவையில் தில்லையின் திருவம்பலத்தில்

சிவபெருமான் "சமயக் கடவுளரில் யானே வல்லேன்" என்று அறைகூவிக் கொடி நாட்டியுள்ளார் என்றார். அதனால், 'நீரும் திருநீறுபூசுக' என்றார்.

அவையிலிருந்த புத்தத் தலைவர் 'யான் தில்லை சென்று சிவன் அறைகூவலை ஏற்று,

"நீறும் கொடியும் ஈங்கறுப்பேன்"[57]

என்று கூறித் தில்லை வந்தான். பொன்னம்பலக் கோயில் புகுந்து தில்லை வாழ் அந்தணரிடம் அறைகூவலை ஏற்ப தாகச் சொல்லி,

"மிக்க திறல் மன்னவரும் மெய்வுணர்வி ளோரும்
தொக்க சபை முன்னர் நம தர்க்கவுரை" சொல்வோம்.

"தீர்ப்பால் வென்று பொன்னம்பலத்தில் புத்தர் சிலையை நிறுவுவேன்' என்றான்.

தில்லைவாழ் அந்தணர் சோழ மன்னருக்கு (?) அறிவித்து வரச் செய்தனர். இலங்கை மன்னனும் தன் மகனின் ஊமைத்தன்மையை வெல்வாரைக் கொண்டு தீர்த்துக்கொள்ள வந்தான்.

சிவபெருமான் தில்லைவாழ் அந்தணர் கனவில் தோன்றி 'ஊருக்கு வெளியே உள்ள மாணிக்கவாசகரைக் கொண்டு வாதிடச் செய்யுமாறு பணித்தார்.

மாணிக்கவாசகரும்,

"பொருந்திய தர்க்க நூலால் புத்தரை வெல்வேன்"[58]

என்றார்.

அவை கூடியது. சோழமன்னன் நடுவணன் ஆனான். சான்று கூறச் சான்றோர் அமர்ந்தனர். இலங்கை மன்னனும் அமர்ந்தான். சோழ மன்னன் மாணிக்கவாசகரை வணங்கித் தங்கள் கடமை

"சைவ ஞான நிலைமையை நிறுத்தல்"[59] பின்னர் என் கடன் 'புத்தரைக் கொன்று ஒறுத்தல்' என்றான்.

தருக்கம் தொடங்கியது. கடவுள் யார்? கொள்கை என்ன? என்று தொடங்கிக் கருத்து கருத்தாக மாறி மாறிப் பேசாமல் புத்தர் கருத்துக்களைத் தொகுத்துச் சொல்ல மாணிக்கவாசகர் மறுப்பைத் தொகுப்பாகவே சொன்னார். இதுபோன்றே புத்தனும் சொன்னான்.

மாணிக்கவாசகர் இலங்கை மன்னனின் ஊமை மகளைப் புத்தனுக்கு விடை சொல்லுமாறு பணித்தார். ஊமைப்பெண் பேசி விடையளித்தாள். புத்தர்கள் சைவக் கருத்தை ஏற்றுச் சைவராகப் பொன்னம்பலத்திலேயே தங்கினர்.

இப்புராணத்தில் இலங்கை சென்ற முனிவர் பெயரோ, தில்லை வந்த புத்தத் தலைவன் பெயரோ, இலங்கை மன்னன் பெயரோ, சோழமன்னன் பெயரோ குறிக்கப்படவில்லை.

ஆனால் மாணிக்கவாசகர்,

"கட்ட றுத்தெனை ஆண்டுகண் ணாரநீ று
இட்ட அன்பரோ டியாவரும் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை, ஏற்றினை
எட்டி னோடிரண் டும்அறி யேனையே"

என்று தம் திருச்சதகத்தில் (49) பாடியுள்ளமை ஒரு சான்றாகின்றது . இப்பாட்டில் காணப்படும் நீறு இட்ட அன்பரோடு யாவரும் காணவே என்பதும் 'பட்டிமண்டபம் ஏற்றினை' என்பதும் கதை நிகழ்ச்சியைச் சுட்டுவனவாக உள்ளன .

ஆயினும், கடவுளே அறைகூவிக் கொடி பிடித்ததும், பொன்னம்பலத்தில் புத்தர்சிலை வைப்பதாகக் கூறியதும், அடுத்தடுத்து மாறி மாறிப் பேசாமல் தொகுப்பாக உரைத்தமையும், ஒறுத்தலாகப் 'புத்தரைக் கொல்வேன்' என்று மன்னன் உரைத்தமையும், சான்று கூற வந்தோர் அவையில் அமர்ந்தமையும் சமயப் பங்கில் சில புதுத் தோற்றங்களாக கொள்ளப்பட்வேண்டியவை .

இதில் 'தர்க்கம்' எனும் சொல்லே மிகுதியாகக் கையாளப்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும் இவ்வாதமும் சைவ - புத்தவாதத்தால் சமயப் பங்காகிறது.

## (4) சமண - புத்த வாதப் பங்கு

பட்டி மண்டபச் சமயப் பங்கில் சமணம் முதன்மை யாகவும் புத்தம் அதற்கீடாகவும் ஈடுபாடு காட்டியவை. குண்டலகேசி புத்த சமய வாதிகளில் தனி முடி சூடியவள். நீலகேசி இணைமுடி சூடியவள். இருவர்க்கும் இரண்டு தமிழ்க் காப்பியங்கள் அவரவர் பெயரால் உள்ளன. குண்டலகேசிக் காப்பியம் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. நீலகேசிக் காப்பியம் ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று. இரண்டும் நூற்றுக்கு நூறு சமய வாதத்திலேயே நிறைந்த காப்பியங்கள். முன்னது ஆறாம் நூற்றாண்டிலும் பின்னது ஏழாம் நூற்றாண்டிலும் தோன்றின. இரண்டின் ஆசிரியர் பெயர்களும் அறியப்படவில்லை. இருவர் கதைகளும் கற்பனைகளே. குண்டலகேசியும் கணவனைப் பழிவாங்கியவள்; நீலகேசியும் அவ்வாறே.

குண்டலகேசிக் காப்பியப் பாடல்களாக 19 செய்யுள் ளே கிடைத்துள்ளன. அவற்றில் அவளைப் பற்றிய கதைக் ற்றிப்பு ஒன்றும் இல்லை. அப்புத்த நூலை மறுக்க வாதக் காப்பியமாகத் தோன்றியதே நீலகேசிக் காப்பியம். இக் காப்பியந்தான் குண்டலகேசியின் கதையைக் கூறியது.

காதில் அணியும் குண்டலம் போன்று சுருண்ட கூந்தலை (கேசத்தை) உடைமையால் இப்பெயர் பெற்றாள். தன்னைப் பழிவாங்க எண்ணிய கணவனைப் பழிவாங்கித் "தற்கொல்லியை முற்கொல்லி" என்று பெயர் பெற்றவள்.

பின் புத்தத் துறவினி ஆனாள். வடபுல 'ஆவணம்' என்னும் நகரத்தில் சமணநாத குப்தனாரை வென்றாள். வாத அறை கூவலுக்கு நாவல் மரக்கொம்பைத் தழையுடன் பொது இடத்தில் நடும் முறை கொண்டவள். (இம்முறை பின்னர் விளக்கப்படும்)

காம்பிலி நகரில் அரண்மனை முன் வளாகத்தில் நாவல் கொம்பை நட்டு அறை கூவினாள். இது மன்னனுக்கு அறிவிக்கப்பட்டுக் கோட்டை வாயில்கள் அடைக்கப் பட்டன. போக்குவரத்தெல்லாம் நின்றன.

அங்கு வந்த நீலகேசி அறைகூவலை ஏற்பதன் அறிகுறியாக நட்ட நாவல் கொம்பைப் பிடுங்கி எறிந்தாள். அறிந்த மன்னன் இருவரையும் அவையில் எதிர் எதிராக அமரச்செய்து வாதமிடச் சொன்னான்.

குண்டலகேசி இரண்டு விதிப்பைச் சொன்னாள்.

"வென்றார்க்கோர் விழுப்பொருளும்
தோற்றார்க்கோர் பெருந்துயரும் ஒன்றாக"[60]

உரைக்க வேண்டும் என்றான். அரசன் இசைந்தான்.

வாதமுறைப்படி சமயத் தலைவன் யார்? நூல் யாது? நூற்பொருள் எவை? பொருள் நடைமுறை என்ன? என்னும் நான்கு அடிப்படை வினாக்களை வைத்து வாதம் நடந்தது. இவை பற்றிய கருத்து விளக்கங்களுள் இடையிடையே பழிப்பதும், சாடுவதும், செற்றம் காட்டுவதும் இடம் பெற்றன.

ஒரு நிலையில் குண்டலகேசி விடை சொல்லத் தயங்கினாள். மன்னன் இதனை உணர்ந்து,

"புயலிரும் (நீல) கூந்தலி (கேசி)
பொருந்தச் சொல்லினாள்"

என்று அவையோர்க்கு அறிவித்தாள் அவையோரும் ஏற்றனர். வென்ற நீலகேசிக்குச் சிறப்புச் செய்தான்; தோன்ற குண்டலகேசியை,

"வட்டி கொள் பறைகொட்டி
வழுவுரை பலகூறி
வாரல்"

என்று பெட்டன (துன்பம்) பல செய்து பெருநகர் வாயிலை"[61] விட்டுத் துரத்தச் செய்தான். நீலகேசி பரிசும் விருதும் பெற்றாள்.

வென்ற நீலகேசி குண்டலகேசியின் ஆசானான அருக்கசந்திரனுடனும், அவன் ஆசானான மொக்கல னுடனும், அவன் ஆசானான புத்தசமய மூலவரான புத்தருடனும் தொடர்ந்து வாதிட்டு அவரெல்லாரையும் சமணராக்கினாள். பூதவாதியுடனும் வாதிட்டாள். பராசரன் என்னும் முதியவனுடனும் வாதிட்டதாக உள்ளது. இவன் அத்ரைபுரத்தவன். சாங்கியவாதி. இவர் களையும் சமணராக்கினாள். இவ்வாறு நீலகேசி பாடிற்று. அம்மதத்திற்காகத் தோன்றிய நூல் வேறெப்படிப் பாடும்?

நீலகேசி ஆசிரியர் தாம் கனவில் கண்ட பெண்ணை வைத்துக் காப்பியம் இயற்ற முனைந்தவர். தமிழ்நாட்டுப் பெண் ஒருத்தியின் பதிவாகவே நீலகேசியை அமைத்தார்.

தமிழ்நாட்டில் 'பழையனூர் நீலி' யென்பாள் கணவனைப் பழிவாங்கப் பேயாகத் திரிந்தாள். அவள் போன்றே நீலகேசியைப் படைத்துப் 'பேய்நீலகேசி' என்றே பாடினார்.

நீலகேசி போன்று பிங்கலகேசி, அஞ்சனகேசி, சாலகேசி எனப் பல கேசிகள் வாதம் செய்தனராம். இப் பெயரில் வாத நூல்கள் இருந்து மறைந்தன.

எனவே சமய வாத உலகில் சமணரே முனைந்து நின்றதால் அவர் 'தருக்கச் சமணர்' எனப்பட்டனர்.

இது சமண புத்தப் பங்கு.

## (5) திருமாலிய இராமானுசர் வாதப் பங்கு

சைவரைப் போன்றே திருமாலியரும் வாத முறையை விரும்பாதவரே. அவருள் இராமானுசர் முற்போக்கானவர்.

"இத்தமிழ் நாடுதன் இருந்தவப் பயனாய்
இராமா னுசனை ஈன்ற தன்றோ"[62]

என்று பாவேந்தர் பாரதிதாசனாரால் போற்றப்பட்டவர். இவர் வாதத் துறையில் ஈடுபட்டுச் சிறந்தார். இவர் ஏதும் பாடவில்லை என்றாலும் இவரைப் போற்றி 'இராமானுச

நூற்றந்தாதி' என்னும் நூல் எழுந்தது . ஆழ்வார் பன்னிருவரோடு பதின்மூன்றாமவராகப் போற்றப்பட்ட வர் . எனவே, ஞானசம்பந்தர் வாதம் போல் இவர் வாதமும் உண்மை அழுத்தம் கொண்டது.

இவர் அனைத்துச் சமயத்தவருடனும் வாதாடினார்; வென்றார் என்றறிய முடிகின்றது.

> 'இராமானுசர் வாதச் செயலில் புகுந்தபின் தருக்கச் சமணர், புத்தர், சைவர், சூனியர், நான்மறையோர் எனும் அனைவரும் ஒழிந்தனர்'[63]

என்றது இராமானுச நூற்றந்தாதி.

> 'வேதப்பொருளே சிறந்தது' என்றும், 'பிரமம் நன்று' என்றும்
> "சொல்லும்அவ் அல்லல் எல்லாம்
> வாதில் வென்றான்எம் இராமானுசனே"[64] என்று புகழப்பட்டார்.

> "பாரில்
> வாதியர்க்கு இடங்கொடா இராமானுசம்"[65]

என்று இராமானுசர் கோட்பாட்டை "இரு சமய விளக்கம்" என்னும் நூல் பாடியது.

> "வாதக் கதலிகள் மாய்த்த பிரான்"[66]

> "வலிமிக்க சீயம் இராமானுசன் மறை வாதியராம்
> புலிமிக்க தென்றுஇப் புவனத்தில்

வந்தமை போற்றுவனே"[67] என்றெல்லாம் இவரது வாத வென்றி குறிக்கப்பட்டது.

"இராமானுசன் தந்த ஞானத்திலே"

'வாதியர்க்கு வாழ்வற்றது; கோட்பாட்டு நூல் கூழ் அற்றது; குற்றம் பதித்தவர்க்கு நாழ் (அகந்தை) அற்றது'68 என்று இராமானுசர் வாத உலகில் நிமிர்ந்து நின்றார்.

திருமாலியச் சமய வாதப் பங்கு திறமாகவே இராமானுசரால் அமைந்தது எனலாம்.

## (6) திருமாலிய - சைவ இருவல்லியர் வாதப் பங்கு

மெல்லியராம் இரு வல்லியரை ஆரண (நான்மறை) வல்லி, ஆகம (சைவ) வல்லி என்னும் பெயரில் வைத்து 'இருசமய (திருமாலியம், சைவம்) விளக்கம்' என்றொரு நூல் எழுந்தது. பிற்காலத்தவரான 'அரிதாதர்' என்பார் இதனை வடித்தார். இஃதொரு கற்பனை.

ஆற்றில் நீராட வந்த இரு சமய வல்லியரும் கரையேறி ஒப்பனைகள் முடித்து வாதம் செய்யத் துவங்கினர். நீராடிச் சோலையில் இருந்த பல சமயத் துறவியரையும் நடுவராக இருக்க வேண்டினர். அவர்களும் இசையவே சமயச் சான்றோர் அவையே நடுவர் நிலைபெற்றது.

"அப்பெரு நூல்களில் அச்சமயங்களில்
ஆகிய தெய்வீகமும்

செப்பிட வேபெருமைச்சிறுமைச் செயல்
தெரிதரும்"[69] என்று பேசி

இருவரும் சைவப்பெருமை, திருமாலியப் பெருமை சொல்லி வாதிட்டனர். கடும் மோதல் இல்லை. தாக்குதல் இடம்பெறவில்லை. மாற்றுக்கருத்தைத் தாழ்வாக்கிப் பேசும் போக்கும் இல்லை. 'கேளடி, சொல்லடி' என்னும் 'அடி' போடுதல் மட்டும் இருந்தது. பெருமளவில் பாங்காகவே நிகழ்ந்தது.

சைவவல்லி திருமாலிய வல்லியின் கருத்தை ஏற்றாள். பல சமயத் துறவியராம் அவையோரும் கேட்டு வியந்து வாழ்த்தினர்.

## (7) கடவுளர் வாதப் பங்கு

### ஆண் கடவுளர் பங்கு

கந்த புராணம் ஓர் உயர்ந்த பட்டி மண்டபக் காட்சியைத் தந்துள்ளது. உலகில் உயர்ந்த இடமாகிய இமயமலையின் முகட்டில் உயர்ந்த கடவுளர் மூவர் பங்கு கொண்ட பட்டி மண்டபம் இது. மன்றத்து அவையோர் மண்ணில் உயர்ந்த முனிவரும், விண்ணில் உயர்ந்த தேவருமாயினர். ஏறத்தாழ நடுவராகச் சிவபெருமான் ஆனார்.

அவையோரே தொடக்க உரையாற்றி வாதப் பொருளைப் பின்வருமாறு முன்வைத்தனர் :

"மூவரில் முதலா னோரும் முதல்இடை முடிவும் இல்லாத் தேவரும், எவையும் நல்கும் செல்வரும் பரம்மேல் ஆகி ஓவரும் புவனத் துள்ள உயிர்க்குயி ராய்நின்றோரும் ஏவர் (?) என்றெங்களுக்கு வல்லே இருவரும் (திருமால், பிரமன்) இசைத்திர்"[70] என்றனர்.

முப்பெருங்கடவுளரில் எவர் முதல்வர் என்று கூறுமாறு இருபெருங்கடவுளரை மோதவிட்டனர். அக் காலத்தில் பிரமனுக்கு ஐந்து முகமாக ஐந்து தலைகள் இருந்தன. இந்த ஐந்தலைப் பிரமனார் 'அனைத்தையும் படைக்கும் யானே முதற் கடவுள்' என்று அறைகூவலை முன் வைத்தார். திருமால் அறைகூவலை ஏற்று, 'படைக்கும் உன்னை என் கொப்பூழ்த்தாமரையால் படைத்த யானே முதல்வன்' என்றார். வாதம் வளர்ந்தது; நாளும் வளர்ந்தது; ஆண்டுக்கணக்கில் வளர்ந்தது. வாதத்தில் கடுமையும் வளர்ந்தது.

தூண்டிவிட்டோர் 'நாம் தூண்டியதால் நமக்குத் துன்பம் நேருமோ' என்று அஞ்சி நழுவி விட்டனர். இருவரும் கொண்ட பகை (செற்றம்) மூழுகிறது. பொறுக்காத நான் மறையும், 'ஓம்' என்னும் மந்திரமும் வேறு வேறு உருவங் கொண்டு இடைக்கால நடுவர்களாகத் தோன்றின.

தோன்றி,

"வாதமது இயற்றல் (இயற்றவேண்டாம்)" என்றும்

மன்னுயிர்க் குயிராய் ஆர்க்கும்
தாதையாம் சிவனே வாய்மைத் தற்பவன்
(அனைத்துமான முதல்வன்)"[71]

என்றும் ஓர் இடைக்காலத் தீர்ப்பு கூறின.

முடுகிய வாதம் முடியவில்லை; கடுகியது.

பொறுக்க முடியாத நிலையில் சிவபெருமான் தன் முதன்மையை வெளிப்படுத்த, பெரும் பேரொளியாய்த் தோன்றினார் . கண்ட திருமால் உண்மையை உணர்ந்து 'சிவனே தம்மினும் உயர்ந்தவர்' என்பதை ஏற்று வாதத் திலிருந்த ஒதுங்கினார் . வாதி ஒருவர் பின்வாங்கினாலும் வாதம் தொடர்ந்தது. பிரமனார் பிடிவாதமாகப் பேசினார்.

சிவனார் தாங்க முடியாமல் சற்றே வெறுப்பில் அரும்பினார். புன்முறுவலால் புரங்களை எரித்தவர் உதட்டின் ஓரத்தில் முறுவலின் துளி ஒன்றைக் காட்டினார். உடன் பெரும் வீரனான வீரபத்திரன் தோன்றினான். அவனைத் தன் நகமாக ஏவினார். அதனால் பிரம்மரின் மேல் நோக்கிய முகம் கொண்ட தலை கிள்ளப்பட்டது. தீர்ப்பை ஏற்காததால் ஒறுக்கப்பட்டார் . ஐந்து முகத்தில் ஒரு முகம் போக 'நான்முகன்' ஆனார் . பட்டி மண்டப ஒறுத்தலால் அது முதல் நான்முகமாக நிலைத்துவிட்டது.

தீர்ப்பு சொல்லப்படாமல் செயலில் 'சிவனே முதல்வன்' என்று முடிந்தது.

இது கதையே என்றாலும் அதிலும் கந்தபுராணக் கற்பனையே என்றாலும் வெளிப்படும் பட்டிமண்டப அவைக் களம், அவையோர், நடுவர், வாதமிடுவோர், வாதக்கருத்தை வைத்தல், அறைகூவல், ஏற்றல், கடவுளரே வாதமிடல், இடைக்காலத் தீர்ப்பு, ஒரு கருத்து ஒதுங்கல், வாதத்தில் பிடிவாதம், நடுவர் செயலால் ஒறுத்துத் தீர்ப்பளித்தல், ஒறுப்பு காலங்காலமாய் நிலைத்தல் என்பன சமயப் பட்டி மண்டபப் பங்கைக் காண முடிகிறது.

இது மும்முனைப் பட்டி மண்டபம்.

## பெண் கடவுளர் பங்கு

வாத உலகில் ஆண்பாற் கடவுளர் பங்குக்குப் பெண்பாற்கடவுளர் பங்கு இளைத்ததா என்ன? அஃதும் கிடைக்கிறது. 'திரு - வாணி வாது' என்றொரு நூல். ஆசிரியர் பெயர் கிடைக்கவில்லை.

திரு - திருமகளும், வாணி - கலைமகளும் வாதம் புரிந்ததாகக் கூறும் நூல். முழு வாதச் சிறுநூல். 'கல்வி சிறந்ததா? செல்வம் சிறந்ததா?' என்பது வாதப் பொருள்.

இந்நூலின் பாட்டுடைத் தலைவர் உண்மையில் வாழ்ந்த கங்காதர செழியன்.

இத்தலைவன் ஒரு மண்டபம் எழுப்பி அதில் பொன் பரப்பீசரையும், பெரியநாயகி அம்மையையும் எழுந்தருளச்

செய்தான் . வழிபடக் கலைமகளும் திருமகளும் வந்தனர் . வாதிட்டனர் . நடுவர் பெரியநாயகி அம்மை . வாழ்த்துனர் பொன்பரப்பீசர் . இதில் போராளர் திருமகளும், கலை மகளும்.

இதன் ஆசிரியர்,

"மருவியே வாது செய்த
வளத்தினை வழாது சொல்வேன்"[72]

என்றே நூலைத் தொடங்கினார் . நாலடியார் , திருக்குறள் முதலிய நூற்பாடல்களைச் சான்று காட்டி இருவரும் வாதிட்டனர் . இடையில் கடவுளர் இருவர் பழிக்கப் பட்டாலும் பிற தகவாகவே நிகழ்ந்தன . அறைகூவியவள் கலைமகள் . மாறிமாறிப் பேசினர். முடிவில் நடுவர் பெரிய நாயகி அம்மை,

"முந்துறும் அழுக்காற்றினால்
இவையெலாம் மொழிந்தனிர்" [73]

என்று கூறி,

"செல்வமும் கல்வி தானும்
செழும்புவி தனக்கு வேண்டும்"[74]

என்று தீர்ப்புரை கூறினார் . பொன்பரப்பீசர் "செழிய னுடன் பொருந்தி வாழ்க" என்று வாழ்த்தினார் .

இதில் கருத்தளவில் (கதையை விடுத்து) மகளிர் வாதத்துடன் பெண் நடுவர் அமைந்தமையும் இருவரையும்

கண்டித்தமையும், இரண்டும் சிறந்தனவே என்று பொதுத்தீர்ப்பு, சொன்னமையும் ஒரு புதுப்பங்கு.

## (8) ஒரு சமயத்தில் உள்வாதப் பங்கு

ஒரு சமயம் மற்றொரு சமயத்துடன் பிணங்கி வாதிட்டவற்றைக் கண்டோம் . ஒரே சமயத்திற்குள் சில கோட்பாடு, நடைமுறை வேறுபாட்டால் அவர்கட்குள் செய்து கொண்ட வாதமும் உண்டு.

சமண சமயத்துள் ஆசீவகம், நிகண்டம் எனப் பிரிவுகள் உள்ளன . இரண்டு பிரிவிற்கும் கடவுளர் வெவ் வேறானவர் . நூலும் பொருளும் வெவ்வேறானவை . புத்தத் தில் தலைவனும் நூலும் ஒன்றே . நடைமுறைக்கோட் பாட்டில் மகாயானம், ஈனயானம் என்னும் பிரிவுகள் உள்ளன . இவ்விரு சமயத்தாரும் பிணங்காமல் கருத்து வேறு பட்டு வாதிட்டுள்ளனர் .

இவ்வாறு சைவத்துள்ளும் நடந்தது . ஒன்றை விளக்குவது மற்றவற்றிற்கும் சான்று ஆகும்.

உமாபதி தேவர் என்னும் சைவ சித்தாந்தி 'சங்கற்ப நிராகரணம்' என்றொரு நூல் எழுதினார் . இச்சிறு நூல் ஒரு உள்வாத நூல் .

கி . பி . 1373இல் ஆனித் திங்களில் பொற்றோர்க் கோயிலின் ஆறாம் நாள் விழாவில் இவ்வாதம் நிகழ்ந்ததாக இந்நூல் குறித்தது.

மணிமேகலை 'சமயக் கணக்கர் தம் திறம் கேட்டது' போன்று உமாபதி தேவர் உள்வகையான பேச்சில் பத்து வாதிகளுடன் உரையாடிய வாதம் இது. மணிமேலை எதிர் வாதம் செய்யாமல் தன் புத்தகத்தில் நின்று பிறர் கருத்தை அறிந்தான். இங்கு சைவசித்தாந்தி பல சைவக் கோட்பாடுகளையும் கேட்டு அவற்றை மறுத்து வாதம் செய்தார். உள்வகையார் ஒவ்வொருவர் கொண்ட கோட்பாடு உறுதியை - சங்கற்பத்தைச் சொல்ல அதற்கு மறுப்பு - நிரா கரணம் சொல்வதாக இஃது அமைந்தது. பதின்மருள் மாயாவாதி தவிர மற்றவர்க்குச் சிவபெருமானே கடவுள். மற்றவர்,

1) ஐக்கிய வாதி
2) பாடாண வாதி
3) பேதவாதி
4) சிவசம வாதி
5) சங்கிராந்தவாதி
6) சிவஅவிகார வாதி
7) நிமித்தகாரண படிமுறை வளர்ச்சி வாதி
8) சைவ வாதி
9) சைவ முடிந்த முடிவு (சித்தாந்த)வாதி - எனப்பட்டனர்.

கோட்பாட்டு அறிவிப்பாகவும், மறுப்பாகவும் நிகழ்ச்சியைக் கொண்ட சிறுவாத நூல். இஃது உண்மை நிகழ்ச்சி அன்று என்றாலும் வாதக் கோட்பாடு கொண்டது.

அங்கிருந்த சைவ அருளாளர், அவையோர், அன்னோர் சைவ சித்தாந்தி ஒன்பது பேருக்குச் சொன்ன அமைதியைப் பாராட்டி,

"அழகிது
நீங்கள் சங்கற்பம் நிராகரித்தமை"[75]

என்று முடிவை - தீர்ப்பை வழிமொழிந்தனர்.

தொடக்க உரையாக உமாபதி தேவர்

"அருள்சேர் மாந்தர் (அவையினர்) வெருள
செய்யாமல் தற்கமும், விடையமும் கற்க,
நற்கவி மாந்தர் நக (மகிழ) நவிற்றுவனே" [76] என்றார்.

இவ்வகையில் சில நூல்களும் பல நூல்களில் தனி விளக்கங்களும் உள்ளன.

இவ்வாறு ஒரே சமயத்து உள்வாதம் ஒரு சமயப் பங்காகியது.

## (9) தனியார் வாதப் பங்கு

சமயத் தொடர்பிலும், தனியார் தம் உணர்ச்சி வயப்பட்ட தொடர்பிலும், புலமைத் திறத்திலும், சிறு சிறு

வாதங்கள், அவ்வப்போது, ஆங்காங்கு நிகழ்ந்தன. சான்றுக்கு ஒன்றிரண்டு கொள்ளலாம்.

நூல் அரங்கேற்றத்தில் தடைவிடை நேர்ந்து அதன் வளர்ச்சிதான் பட்டிமண்டப வாதமாயிற்று என்று கண்டோம். அவ்வகையில் அருணகிரிநாதர் 'கந்தரலங்காரம்' என்னும் நூலை அரங்கேற்றினார். புலவர்பால் குறைகண்டு வென்று அவர்தம் காதை அறுத்து ஒறுக்கும் செயலைச் செய்பவர் வில்லிபுத்தூரார். அவர் அருணகிரியாரின் நூல் அரங்கேற்றத்தில் தடை எழுப்பினார்; விடை கிடைத்தது. இந்நிலையில் அருணகிரியார் கந்தரந்தாதிப் பாடலில் வரும் 'தித்தித்த' என்னும் சொல்லுக்குப் பொருள்கேட்டு அறைகூவ, வில்லியார் இயலாமல் நிற்க அருணகிரியார் ஒறுத்தலாக அவர் காதை அறுக்காமல் 'காது தானம்' பண்ணினார். இஃதொரு குட்டிப் பட்டி மண்டபம்.

திறம் வாய்ந்த புலவர்கள் புகழேந்தியும் ஒட்டக் கூத்தரும் பாண்டிய சோழ மன்னரது பெருமைகளை மாறிமாறிப் பாடிப் புலமை வாதம் புரிந்தனர்.

இவ்வாறு குட்டிப் பட்டி மண்டபங்கள் பல நிகழ்ந்தன. இவையும் ஒரு பங்கே.

## (10) இசை, கூத்து வாதப் பங்கு

தொல்காப்பிய உரை,

"சொல்லாலும் பாட்டாலும் கூத்தாலும் வேறலாம்"

என்றபடி இதுவரை சொல்லால் போரிட்டு வென்ற பட்டி மண்டபங்கள் காட்டப்பட்டன.

'பாட்டாலும்' அஃதாவது இசையாலும், 'கூத்தாலும்' வாதிட்டு வென்றமைக்கும் இலக்கியங்கள் உள்ளன.

## இசைப்பட்டிப் பங்கு

பரஞ்சோதிமுனிவரின் திருவிளையாடற்புராணம் இசைப்பட்டி மண்டபக் காட்சியைத் தந்துள்ளது. அப்பகுதி "இசை வாது வென்ற படலம்" என்று 'வாது' என்னும் சொல்லமைந்த பகுதியாகும்.

மதுரையில் வரகுணபாண்டியன் ஆட்சிக்காலம். தமிழிசைவாணன் பாணபத்திரனுக்கும் வடபுலத்து இசைவாணன் ஏமநாதனுக்கும் இசைப்போட்டி - இசைப் பட்டி மண்டபம் நிகழ இருந்தது. மதுரைச் சொக்கரின் இடைப்பாட்டால் நிகழாது போயிற்று. இதனால் பாண பத்திரனுக்குத் தேட்டமும், ஏமநாதனுக்கு ஓட்டமும் கிடைத்தன.

ஆனால், இப்பாணபத்திரன் மனைவிக்கும், ஈழ நாட்டுப் பாடினி ஒருத்திக்கும் ஓர் இசைப்பட்டி மண்டபம் நிகழ்ந்தது.

வரகுண பாண்டியனுக்குப் பின்னர் ஆட்சியை ஏற்ற இராசராச பாண்டியன் ஈழநாட்டுப் பாடினி ஒருத்தியிடம் பெருவிருப்பம் கொண்டவன். அவள் தமிழ்நாட்டில்

இசையில் வென்று விருது பெற விரும்பினாள். தன் வயப்பட்டிருக்கும் பாண்டிய மன்னனைப் பயன்படுத்த முனைந்து "என்னோடு இசைபாட வல்லவர் உளரோ?" என்று அறை கூவினாள். மதுரையில் தலைசிறந்த பாடினி யாக விளங்கும் பாணபத்திரன் மனைவியுடன் இசைப் போட்டிக்கு மன்னனது துணையைத் தூண்டிவிட்டுப் பெற்றாள். மன்னனும் இசைந்து ஈழநாட்டுப் பாடினிக்குச் சார்பான கருத்துடன் பாணபத்திரன் மனைவியைத் தாழ்த்தும் நோக்கத்தோடு இசைப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்தான்.

பாண்டியன் அரண்மனையில் இயலும் இசையும் அறிந்த சான்றோர் அவை கூடியது. இரண்டு பாடினியரும் இசைப்போட்டிக்கு அமர்ந்தனர். ஈழநாட்டுப் பாடினி பாணபத்திரன் மனைவியைத் தாக்கிப் பேசினாள். மன்னன் விலக்குவான் போன்று இடையிட்டு,

> 'மடந்தையரே! இருவரும் பாடுவீர்! எவர் வெற்றி பெறுவீரோ அவருக்குத் தோற்றவர் அடிமையாக வேண்டும். இஃதே போட்டி முடிவுக்கு விதி'[77]

என்று போட்டிப் பயனை அறிவித்தான். இருவருக்கும் மானமூட்டித் தூண்டினான். இருபாடினியரும் மாறி மாறிப் பாடினர். தமிழ்ப் பாடினி பாடல் மேம்பட்டு விளங்கி..து. சுவைத்த அவையோர் இவள் பாடலைப் பா ராட்டித் தலையசைத்தனர்.

தனது உட்கோள் மாறுவதைக் கண்ட பாண்டியன் ஈழத்துப் பாடினியைப் பாராட்டித் தலையசைத்தான். மன்னவனது விருப்பம் அறிந்த அவையோரில் தலையாட்டிகள் "மன்னன் எவ்வழி அவ்வழி குடிகள்" ஆயினர். இது வேந்தன் ஒருவர்க்கு வாரம் படினும்" என்றமையை நினைவுபடுத்துகின்றது. ஆயினும் தமிழ்ப் பாடினியது இசை மேலோங்கி வருவது புலனாகிக்கொண்டே வந்தது. பொறாத மன்னன் அழிவழக்குப் பேசி இசைப்பட்டி மன்றத்தை மறுநாளில் ஒற்றிவைத்தான். அவையோரும் தலையாட்டிகள் ஆயினர்.

மறுநாள் இசைப்பட்டி மன்றம் கூடியது. இன்றும் நேற்றைய நிலையே நிலவியது. தமிழ்ப்பாடினி எழுந்தாள்; மன்னவனை நோக்கி,

> "மன்னவா! இறைவன் திருமுன் இருவரும் பாடுவோம்; எம் இருவரது பாடலையும் அங்கு நீ கேள். கேட்டு 'இவள் வென்றாள்' என்று தீர்ப்பினைச் சொல். அதனை ஏற்றுக் கொள்வேன்'.[78] என்றாள். மன்னவன் வேறு வழியின்றி இசைந்தான்.

இறைவன் திருமண்டபம் இசைப்பட்டி மண்டபம் ஆகியது. இசைப்போட்டி தொடர்ந்தது. இருவரும் தத்தம் திறங் காட்டிப் பாடினர். பாண்டியன்,

> இறைவன் அருளால் தன் மனத்து அழுக்கை விட்டான்; முரண்பட்ட கருத்தைப் போக்கினான்;

பொதுநிலையில் நடுவனாக அமைந்து நோக்கினான்.

"பாணபத்திரன் மனைவியே வெல்கின்றாள்"[79]

என்று தீர்ப்பளித்தான். அவையோரும் அதனை வழி மொழிந்தனர். அவையில் நாவலராக அமர்ந்திருந்த 'சொக்க'ரும்,

"இது அற்புதம்"[80] -

என்றாராம். போட்டிக்கு விதித்த விதிப்படி தோற்ற இலங்கைப் பாடினி கழுத்தில் வென்ற தமிழ்ப் பாடினியை ஏற்றி அவளை அடிமையாக்கினான். வென்றவளுக்குச் சிறப்பு செய்தான். தோற்றவள் அமைதி பெற வரிசைகள் வழங்கினான்.

இவ்வாறு இசைப்பட்டி வாதப் பங்கு அமைந்தது.

## கூத்துப் பங்கு

திருவாலங்காட்டில் வீற்றிருக்கும் சிவன்பால் சிவை சிறு பூசல் கொண்டாள். சிறுபூசல் சிவையின் கூத்தாக எழுந்தது. இது கூத்து அறைகூவலாயிற்று. சிவனும் அறை கூவலை ஏற்றார்.

கூத்துப்போட்டி துவங்கியது. கூத்திலக்கணம் தவறாமல் இரு கடவுள் மணமக்களும் ஆடினர். ஒரு நிலையில் சிவன் தன் ஒற்றைக் காலைத் தலையை ஒட்டி மேல் உயர்த்தி அடினார். பெண்பால் தன்மை நிறைந்த சிவை அவ்வாறு

உயர்த்துதல் பெண்மையை இழப்பதாகும் என்று தயங்கி னார். தயக்கமே தோல்வியாயிற்று.

சிவன் கூத்தால் வென்றார்.

இது பட்டி மண்டப வாதில் ஒரு கூத்துப் பங்கு.

## சமய வாத நெறிகள்

அறைகூவல்
கொடி நடல்

சங்கப் பாங்கில் அறைகூவலின் அறிகுறியாகக் கொடி நடப்பட்டது. அப்பழக்கம் சமயப்பங்கில் அருகியது. அத்தினபுரத்துச் சாங்கியவாதியாகிய பூரணன்

"ஓங்க ஒரு கொடி நட்டு உரைக்கிற்பவன்
ஆங்கண் எவர்க்கும் 'அளவு' என்று"[81] இருந்தான்.

'எல்லோர்க்கும் அறைகூவலாகச் சொல்' என்று கொடி நட்டான். சிலவே இவ்வாறு அமைந்தன.

ஆனால் வெற்றிபெற்றுப் பிடித்த கொடிகள் பல. ஞானசம்பந்தரையும் "நெடுங்கொடி முழங்க நாட்டிய" நீலகேசியையும் கண்டோம்.

"மதுர கவிராசன் நானென்று வெண்குடை
விருது கொடி தாள மேள தண்டிகை
வரிசையொ டுவரவு மால் அகந்தை தவிர்ந்திடாதோ"[82]

என்று அருணகிரி வெற்றிக் கொடிபிடித்ததைப் பாடினார். சூதாட்ட அறை கூவலாகக் கொடி பிடித்ததைக் கண்டோம். பலவகைக்கும் கொடி ஏற்றுவதைக் 'கொடிப் பாட்டு என்று உமாபதிதேவர் பாடினார்.

"கூழைத்தண் தமிழுக்கேன் கொடியும் காளமுமே" என்று ஒட்டக்கூத்தர் பாடினார்.

இருப்பினும் பையப்பைய இக்கொடி பிடித்தல் குறைந்தது.

## நாவல் கொம்பு நடல்

நீலகேசிக் காப்பியம் குண்டலகேசியின் அறைகூவலில் ஒரு புதுச்செய்தி தந்தது.

"காவலன் கடைமுகத்தோர்
தண்தழைய பொழில் நாவல்
சாகை (கொம்பு, கிளை) நட்டு உரைபெறாக் குண்டலகேசி"[83]

என்று நாவல் மரக்கொம்பைத் தழையுடன் நட்டதைக் காண்கிறோம். நீலகேசியும் இம்முறை கொண்டாள்.

நாவல் மரக்கொம்பு ஏன் அறைகூவலுக்குக் கொள்ளப்பட்டது?

## நாவல் - அறைகூவல் குறி

இந்தியப் பெருநாட்டின் பழங்கால நாட்டு மரம் நாவல் மரமாக இருந்தது. இதனால் இதற்கு "நாவலந் தண்பொழில்" என்று பெயர்.

"நாவல் அம் தண் பொழில்" என்று பெரும் பாணாற்றுப்படை (465) பாட, சிலம்பும் (17-3) மணிமேகலையும் (22 - 29) வழிமொழிந்தன.

"நாவலாம் மரத்தி னாலே
நாமமாய்த் (பெயராக) துலங்கி நின்று

. . . . . . .

நாவந்தீவு நந்தின்
நன்மணி போன்ற தன்றே"[84]

என்று 'உதயணகுமார காவியம்' பெயர்க் காரணத்துடன் 'நாவலந்தீவு' என்றது. தொல்காப்பியர்,

"தண்பொழில் வரைப்பு" (தொல் பொருள் 78)

என்றதற்குப் பேராசிரியர் "நிலத்துக்கு நிழல் செய்யும் நாவல் அம் பொழில் உள்" என்றார்.

நாவல் மரம் "கடவுள் மரம்" என்றார் கம்பர் (மருத்துமலைப் படலம் - 48) பூம்புகார்க் காவல் தெய்வம் 'சம்பா (சம்பு - நாவல்) பதி' எனப்பட்டது.

இவ்வாறு நாவல் மரம் நாட்டுக்கமைய இதன் தொடர்பில் நாட்டு மக்கள் - அவரிலும் உழவர் பெருமக்கள்

ஒரு வழக்கை ஏற்படுத்தினர் . உழவர் பெருமக்களைத் தொழில் செய்ய அழைப்பதற்கு,

"நாவலோ நாவல்" என்று கூவினர் .
"காவல் உழவர் களத்தகத்துப் போர் (வைக்கோல் போர்) ஏறி 'நாவலோ நாவல்' என்று உரைக்கும் நாள் ஓதை"[85]

என்று முத்தொள்ளாயிரம் காட்டியுள்ளது. இதனை விளக்குவது போன்று ஒரு பாடல்.

"நாவலோர்' என விளிப்பத்
தொழுவர் (உழவர்) எலாம் நயந்தெய்தி
வினையின் மூள்வார்" என்று பாடிக் காட்டியது.

'நாவல்' என்னும் சொல்லில் வாதத்திற்குரிய நயமான பொருத்தம் உள்ளது . 'நாவல்' ஒரு சொல்லாய் மரத்தைக் குறிக்கும் . 'நா வல்' என்னும் இரு சொல்லாய் நாவன்மை என்றும் 'நா வலம்' நாவால் பெறும் வெற்றியென்றும் குறிக்கும். இவ்வகையான பொருள்களால்,

'நாவலோ நாவல்' அழைப்பதாகி, அறைகூவல் அழைப்பிற்கு நாவல் மரக் கொம்பு அறிகுறியாய் நடப் பட்டது . இவ்வாறு நாவலத்தால் பேசுவதைத் தொண்டரடிப்பொடியாழ்வார் "நாவலிட்டு உழிதர்கின்றீர் (திரிகின்றீர்)"[86] என்று 'நாவலிட்டு' என்றார் . இதில் திரிவதாகச் சொன்னமை சற்றுத் தாழ்வு காட்டும் குறிப்பாகும்.

எவ்வாறாயினும் நாவல் மரம் நாட்டிற்காகி அழைப்பதற்காகி, அறைகூவலுக்காகிக் கொம்பு நடும் குறியாயிற்று.

நாவல் நடும் முறையைப் புத்தமும், சமணமுமே கொண்டமையால் அவற்றின் சமயப் பங்காயிற்று.

செய்யாறு வட்டத்தில் 'நாவல்' என்னும் பெயர் கொண்ட ஊர் ஒன்று உள்ளது. இங்கு இக்காலத்தும் சமண சமய மடம் இருத்தல் குறிக்கத்தக்கது.

## ஏற்றல்

குண்டலகேசி அறைகூவலாக நட்ட நாவல்கொம்பை நீலகேசி அறைகூவலை ஏற்கும் குறியாக,

"இலை நாவல் இறுத்திட்டாள் (ஒடித்தாள்)"[87] சங்கப் பாங்கில் நட்ட கொடியை அல்லது பிடித்த கொடியை அசைப்பதாக இருந்தது. அது பாங்கு. ஒடிப்பது பாங்கன்று. செற்றம் காட்டும் சமயப் பங்கு.

## சமய வாதக்களம்

சமய வாதம் மணிமேகலை காலத்தில் விழாமேடையிலும் பொதுவிடத்திலும் நிகழ்ந்தது. ஞானசம்பந்தர் காலத்தில் அரசவையிலும், வெளியிலும், ஆற்றங்கரையிலும், மடத்திலும், தொடர்ந்து பிற சோலை, கோயில்களிலும் நிகழ்ந்தன.

எனவே, இடத்தால் ஓர் அமைப்பில்லாமல் மாறியது. அத்துடன் ஒரு வாதத்திற்கே இடமாற்றமும் நேர்ந்தது.

## வாதியின் இலக்கணம்

ஏதும், மேற்கோளும் எடுத்துக்காட்டித்
தன்கோள் நிறீஇப் பிறன்கோள் மறுப்போன்
மன்பதை அறிந்த வாதியாகும்''[88]

என்று பிங்கல நிகண்டு வாதியின் வாத இலக்கணம் காட்டியது. இதனையே, சூடாமணி நிகண்டு, வீரசோழியம், இலக்கண விளக்கம் முதலியனவும், புராணங்களும் கூறின.

சமய வாதத்தின்போது எழுப்பும் வினாக்களாக நான்கு அமைந்தன.

சமயத்தலைவர் / கடவுள் யார்?
சமய நூல் யாது?
நூற்பொருள் யாது?

பொருளின் நடைமுறை என்ன? - எனும் இவை நான்கும் அனைத்துச் சமயத்தாராலும் வினவப்பட்டன. இவ்வாதமும் நால்வகைப் படையுடன் மோதும் களப்போர் போன்றது. கருத்துப்போர், சொற்போர் என்றும் போராகவே அமைந்தன. போருக்கேற்ப

தலைவன் - யானை
நூல் - குதிரை

நூற்பொருள் - தேர்
பொருள் நடைமுறை - காலான் என உருவகம் செய்யப்பட்டன.

இருவர் இரு கருத்துக்களால் மோதிக்கொண்ட இருமுனைவாதமும், மூன்று கருத்துக்கள் மோதிய மும்முனை வாதமும் சமயப் பங்காயிற்று.

ஒரு கருத்து வாதமே மூன்று முறை நிகழ்ந்து மூன்றாம் முறை முடிவிற்கு வந்தது.

## வாதத்தில் பழிப்பு

சமய வாதத்தில் எதிர் வாதியைப் பழித்துப் பேசிக் கொண்டனர். சமயக் கடவுளரையும் பழித்தனர். புத்தனைச் சமணர் இழிவாகவே பழித்தனர். சமயச் சான்றோரைச் சாடினர். செற்றமும் சினமும் கொண்டனர்.

"பற்றா மாக்கள் தம்முட னாயினும்
செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்"[89]

என்ற மணிமேகலை அடிகளில் 'கலாம்' குறிக்கப்பட்டது. இதற்குக் 'கலகம் செய்தல் - கலவரத்தை மூட்டுதல்' என்று பொருள். இக்காலத்தில் 'கலாட்டா' எனப்படுகிறது. வாதக் காட்சியைக் காணவும், வாதத்தைக் கேட்கவும் கூடியோர் இவ்வாறு நிகழ்த்தினர் போலும்.

இஃதும் வாதத்தில் - பட்டி மண்டபத்தில் - வேண்டாத ஒன்றே. இது சமயப் பங்கு.

"சாதி நோக்கியும் தன்மை நோக்கியும்
வாதம் அழித்துரை உரைப்போன் வாது
வென்ற நிலையிலும்
அரசின் சிறப்புச் சிதைவே"[90]

என்று 'செய்யுள் வகைமை' என்னும் நூல் கூறியபடி வாதத்தை அழித்துப் பேசினர். அவ்வழி கொண்டு 'வென்றிப் பொருட்டால் விலங்கை ஒத்தனர்'. இதனால் அரசின் பெருமையும் கெட்டது.

இஃதும் சமயப்பங்கு.

## தீர்ப்பு

பிற்கால வெற்றிவேற்கை என்னும் நூல்

"இருவர்தம் சொல்லையும் ஏழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மறுமுறை நெறியின் வழக்கிறந் தவர்தாம்
மனமுற மறுக்கின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வ தோர் வாள் ஆகும்மே"[91]

என்று கடிந்து கூறியது. இப்பாடலால், சமய வாதத்தில் 'பொருந்தாமல் உரைப்பர்; வழக்கிறந்து பேசுவர்; எதிர்த் தவர் மனம் கலங்கிக் கண்ணீர் விடுவர். இவர்களையும் சிவன், திருமால், நான்முகன் எனும் முப்பெரும் கடவுளரும் அருள் செய்து காக்க முனைவர்.

இச்செயல் அறுக்கும் வாள் போன்றது.

காலங்காலமாக அறுத்துக்கொண்டே இருக்கும்' என்பன எவ்வகையிலும் சமயப் பங்கின் சிறப்பை நிலைநிறுத்தவில்லை.

இவற்றுடன் வேந்தன் ஒருவர்க்கு வாரம் படும் முறைகேடும் நேர்ந்துள்ளது. இவற்றால் தீர்ப்பு ஒருதலை யாகவும் நிகழ்ந்ததை உணரலாம்.

தீர்ப்பிற்கு அவையோர் பல நேரங்களில் நேர்மையாக அமைந்தனர். நேர்மையின்றி மன்னன் வழியில் தலையாட்டி நேர்மையினின்றும் நீங்கினர்.

கச்சியப்பரின் நூல் அரங்கேற்றம்

"வாதமுறு புலவர் குழாம் மகிழ்ந்து போற்ற"[92] நிகழ்ந்தது.

மதுரை இறைவி தடாதகைப் பிராட்டி தன் அரசவையில்

'வாதிகள் வாதம் செய்யும்

கோட்டி (வாதக்குழு) மேல் மகிழ்ச்சி கூர்ந்தும்" நேர்ந்தது.

இவையும் சமயப் பங்கு.

## பின் விளைவு

வாதத்தால் - வாதத் தீர்ப்பால் முடிவு செய்யப்பட்ட கருத்து அவரவர் சமயக் கோட்பாட்டின்படியே அமைந்தது.

அது சிறப்பாக அரசவையிலோ பிற நூல்களிலோ பதிந்து நிலைக்கப்படவில்லை. வென்றார்க்குப் பரிசுகள், வெற்றிச் சின்னங்கள் வழங்கப்பட்டன. வெற்றிக் கொடி பிடித்தனர். "வாதி புகழ் பெறும்" என்றபடி புகழ்பெற்றனர்.

தோற்றவர் வென்ற கருத்தை ஏற்றனர். ஏற்று வென்ற சமயத்திலும் சேர்ந்தனர். ஏற்காமல் தற்கொலை செய்து கொண்டனர். அரசனால் கடுமையாக ஒறுக்கப்பட்டனர். வென்றவர் தோற்றவர் கழுத்தில் ஏற்றப்பட்டார்; பழிக்கப் பட்டனர்; ஊரை விட்டு விரட்டப்பட்டனர். இவ்வாறு கொடுமைகளும் நேர்ந்தன.

இவற்றால் 'தருக்கம்' என்பது பொருத்தமாயிற்று. 'தருக்கு' என்பது செருக்கு; தான் என்னும் மனத்திமிர்.

"தன்னை வியந்து தருக்கல்"[93] என்றார்.

இதிலிருந்து ரகரம் றகரமாகும் இயல்பில் 'தறுகண், தறுகண்மை, தறுகண்ணாளர்' என்னும் சொற்கள் அமைந்தன. 'தறுகண்' என்றாலும் தன்னைத்தான் பெரியவனாக நினைத்தலே.

எனவே, 'தருக்கம்' என்பது தமிழ்ச்சொல். தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களில் இச்சொல் மிக வந்துள்ளது. பாவாணரும் 'இது தமிழ்ச்சொல்' என்றும் 'வடமொழியில் 'தர்க்க' என்று இத்தமிழையே சொல்லினர்' என்றும்

"தமிழ்த் தருக்க நூலையே வடவர்
வைசேடிகம் என்றனர்"[94]

என்றும் காட்டினர். வாதத்தில் இந்தத் தருக்கம் சமய வாதத்தாரால் கையாளப்பட்டது.

"தருக்கச் சமணர்" என்று ஞானசம்பந்தர் குறித்ததும், "தருக்கினால் சமண் (சமணவாதம்) செய்து" என்று பெரியாழ்வார் பாடியதும் இச்சொல்லின் செருக்குப் பொருள் கொண்டேயாகும்.

இத்தருக்க வாதம் சமணத்திற்கும் புத்தத்திற்குமே உரிமையாயிற்று.

இதுவரை கண்ட சமயப் பங்குகள் கொண்டு தமிழ்மண்ணில் இயல்பாய்ப் பாங்குடன் நிகழ்ந்த பட்டி மண்டபத்தைச் சமயப் பங்கு செற்றத்திற்கும் (பகைக்கும்) கலவரத்திற்கும் சற்றுச் சற்றே மாற்றியது.

சங்கப் பாங்கையும் சமயப் பாங்கையும் ஆய்ந்த இப்பகுதி பட்டி மண்டப வரலாற்றில் இரண்டு அதிகாரப் பகுதிகள்.

பாங்கும் பங்கும் இவ்வாறு அமையினும் பட்டி மண்டபம் நிகண்டுகளிலும் இலக்கியங்களிலும் பெருமையுடன் பேசப்பட்டது. அவற்றைக் காண்பது இப் பகுதியை நிறைவு செய்வதாகும்.

பட்டினப் பாலையிலும், மதுரைக் காஞ்சியிலும் குறிப்பாக அமைந்ததை உரையாசிரியர் வெளிப்படுத்தினார்.

இளங்கோவடிகள், சிலப்பதிகாரத்தில்

"பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபம்"[95]

என்றார்.

சாத்தனார்,

"பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்"[96]

என்று பாங்குடன் பாடினார்.

"பாடல் பயில்களம் பட்டி மண்டபம்"[97] என்று பிங்கலர் விளக்கத்துடன் அமைத்தார்.

"பட்டி மண்டபம் ஏற்றினை; ஏற்றினை எட்டினோடிரண்டும் அறியேனையே" என்று மாணிக்கவாசகர் பாடல் உயர்வாகக் காட்டுகிறது.

"பன்ன அரும் கலைதெரி பட்டி மண்டபம்"[98]

"பாடல் வேதிகை பட்டி மண்டபம்"[99]

எனக் கம்பரும் பதிந்தார்.

மாணிக்கவாசகர் பாடலைப் "பாடுங்கால் பழச் சாறும் தேனும் கலந்து ஊனிலும், உயிரிலும் கலந்து உவட்டாமல் இனிப்ப" தாகக் கண்டவர் வள்ளலார் இராமலிங்க அடிகள். பட்டி மண்டபச் சொல்லாட்சியிலும் அவரை அடியொற்றி,

"எட்டிரண்டு அறிவித்து எனைத்தனி ஏற்றிப்
பட்டிமண் டபத்தில் பதித்த மெய்த்தந்தையே"[100]

என்று பாடினார்.

இவற்றுள்,

'பாடல் பயிலிடம் பட்டி மண்டபம்' என்பது முதலில் புலவர் பாடல்களைப் பயில்வதற்கும், நூலை அரங்கேற்று வதற்கும் அமைத்துக் கொண்ட இடம் பட்டிமண்டபம் எனப்பட்டதைக் குறிக்கின்றது. தொடர்ந்து நூல் அரங் கேற்றத்தின்போது நேர்ந்த தடைவிடைகளால் கருத்துப் போர் நேர்ந்து சொற்போரிடும் பட்டிமண்டபமாயிற்று என்னும் வரலாற்றையும் கொள்ள வேண்டும்.

கம்பரும் "பன்ன அரும்" - விளக்க அருமையான, "கலை தெரி" கலைகளை ஆராயும் பட்டி மண்டபம் என்று அவ்வரலாற்றை வழி மொழிந்தார்.

பட்டி மண்டப வரலாற்றில் இவை 'பட்டி மண்டபம்' என்னும் சொல் பெயர்ப் பதிவுகள் ஆயின.

இவ்வரலாறு இதுவரை காணப்பட்டவையோடு நிறைவடையவில்லை. பெயர்ப் பதிவுகளாகக் கண்ட 'பட்டி' என்னும் சொல்லும், 'பட்டி மண்டபம்' என்னும் பெயரும் எவ்வாறு உருவாயின? என்பனவற்றை ஆய்ந்து காண்பதும் நம்மைப் பட்டிமண்டப வரலாற்று நிறைவை அணுக வைக்கும்.

# 1. சங்கப் பாங்கும் சமயப் பங்கும் – கொண்டு காட்டி

| குறிப்பு எண் | ஆசிரியர் | | நூல் - செய்யுள் எண் - அடி எண்: |
|---|---|---|---|
| 1. | உருத்திரங்கண்ணனார் | : | பட் . பா - 167 - 171 |
| 2. | மாங்குடி மருதனார் | : | மது . கா - 746, 747 |
| 3. | தொல்காப்பியர் | : | தொல். பொருள் - 490 (பேராசிரியர்) |
| 4. | பரஞ்சோதி முனிவர் | : | திருவிளை - புரா - தருமிக்குப் பொற்கிழியளித்த படலம் - 106 |
| 5. 6. | பனம்பாரனார் | : | பனம் - . . . . |
| 7. | நச்சினார்க்கினியர் | : | தொல் . பாயிரம் உரை விளக்கம் |
| 8. | திருவள்ளுவர் | : | திரு - 725 |
| 9.10. | ❛ | : | திரு 645; 647 |
| 11. | தொல்காப்பியர் | : | தொல் - பொருள் - புறத் திணையியல் - 75 |
| 12. | நச்சினார்க்கினியர் | : | ❛ ❛ 723 |
| 13,14,15. | திருவள்ளுவர் | : | திரு - 723; 723; 727 |
| 16. | இளங்கோவடிகள் | : | சிலம்பு - 23 - 71, 72 |
| 17. | மனு | : | மனு - 2 - 7, 8 |
| 18. | தொல்காப்பியர் | : | தொல் - பொருள் - புறத் திணையியல் 75 |
| 19. | – – – – – | : | ஆசி. மா : தொல். பொருள் 75 உரை மேற்கோள் |
| 20. | திருவள்ளுவர் | : | திரு - 728 |
| 21,/22. | . . . . . . | : | யாப். விரு - ஒழிபியல் - 3 உரைவிளக்கம்; மேற்கோள் பாடல்கள் |

| | | | |
|---|---|---|---|
| 23. | தொல்காப்பியர் | : | தொல் . சொல் - 165 |
| 24. | ஐயனாரிதனார்: | : | புற. வெ. மா - 173 |
| 25. | நாலடியார் | : | நாலடி - 325 |
| 26. | அவிநயனார் | : | அவி - நவநீதப்பாட்டியல் - 91 உரை மேற்கோள் |
| 27. | நச்சினார்க்கினியர் | : | தொல். பொருள் - 425 உரை |
| 28. | திருவள்ளுவர் | : | திரு - 118 |
| 29. | நாலடியார் | : | நாலடி - 131 |
| 30. | திருமூலர் | : | திருமந் - 320 |
| 31. | பெருங்கௌசிகனார் | : | மலை - 78 - 80 |
| 32. | மாங்குடி மருதனார் | : | மது . கா - 373 |
| 33. | புகழேந்தி | : | நள - 206 |
| 34. | அதிவீரராமபாண்டியர் | : | நைட - பகுதி 2 - பாடல் 16 |
| 35. | முன்றுரையரையனார் | : | பழ - 20 |
| 36. | பெருங்கௌசிகனார் | : | மலை - 112 |
| 37. | மருதன் இளைநாகனார் | : | கலி - 96 - 36 |
| 38. | இளங்கோவடிகள் | : | சிலம்பு 22 - 12 |
| 39. | பிங்கலர் | : | பிங் - 341 |
| 40. | காரியாசான் | : | சிறுபஞ் - 56 |
| 41. | கணிமேதையார் | : | ஏலா - 43 |
| 42. | - - - - - | : | யாப். விரு . மேற்கோள் பாடல் |
| 43. | ஐயனாரிதனார் | : | புற . வெண் . மா - 173 |
| 44. | நாலடியார் | : | நாலடி - 211 |
| 45. | நம்மாழ்வார் | : | நாலா . தி . பிர - திருவிருத்தம் - 66 |
| 46. | • | : | • - திருவாய்மொழி - 10 - 5 |
| 47. | திருவரங்கத்தமுதனார் | : | இராமா . நூற் - 58 - 4 |
| 48. | சாத்தனார் | : | மணி - 2 - 61, 62 |

| | | |
|---|---|---|
| 49. | கண்ணபெருமான் | : பக. கீ . அத்தியாயம் 10 சுலோகம் 32 |
| 50. | ஞானசம்பந்தர் | : தேவரீ - ஆலவாய் - 3 - 4 |
| 51. | " | : " திருப்பாசுரம் - 5 |
| 52,53. | " | : " ஆலவாய் 4; 7 |
| 54,55. | சேக்கிழார் | : திருத். புரா - திருஞான சம்பந்தர் புராணம் 910; 914 |
| 56. | ஞானசம்பந்தர் | : தேவா - தெளிச்சேரி - 10 |
| 57,58,59. | கடவுள் மாமுனிவர் | : திருவாத . புரா - புத்தரை வாதில் வென்ற சருக்கம் - 28; 39 |
| 60,61. | - - - - - | : நீல - 173; 225 - 228. |
| 62. | பாரதிதாசன் | : பார. தா. க - தொகுதி 2 - புது நெறி காட்டிய புலவன் 28, 29. |
| 63,64. | திருவரங்கத்தமுதனார் | : இரா. நூற் - 99; 58 |
| 65. | அரிதாதர் | : இரு . விள - 29 |
| 66. | - - - - - - - | : நா. வ . தி . பி . இயற்சரத்து. 4 - 2. |
| 67,68. | திருவரங்கத்தமுதனார் | : இரா. நூற் - 88; 65 |
| 69. | அரிதாதர் | : இரு . வி - கடாவிடைப்படலம் - 5 |
| 70,71. | கச்சியப்ப சிவாச்சாரியார் | : கந். புரா . ததீசி உத்தரப் படலம் - 155; 158 |
| 72,73,74. | - - - - - - - | : திரு . வா . வா - 1; 89; 92 |
| 75,76. | உமாபதிதேவர் | : சங். நிரா - பாயிரம் 42, 43; 47 - 49 |
| 77. | பரஞ்சோதி முனிவர் | : திருவிளை - இசைவாது வென்ற படலம் - 14 |
| 78,79,80. | " | : " " 26; 39; 40 |
| 81. | - - - - - | : நீல - சாங்கியவாதச் சருக்கம் - 1 |

| | | | |
|---|---|---|---|
| 82. | அருணகிரிநாதர் | : | திருப் . - |
| 83. | - - - - - | : | நீல - குண்டலகேசிச் சருக்கம் - 15 |
| 84. | - - - - - | : | உத. கு . சா - 43 |
| 85. | - - - - - | : | முத்தொள் - 63 |
| 86. | தொண்டரடிப்பொடி யாழ்வார் | : | நாலா. தி . பிர - திருமாலை - 1 |
| 87. | - - - - - | : | நீல - 170 |
| 88. | பிங்கலர் | : | பிங் - 364 |
| 89. | சாத்தனார் | : | மணி - 3 - 62, 63. |
| 90. | - - - - - | : | செய் - வகை - நவநீதப் பாட்டியல் - 91 உரை மேற்கோள் |
| 91. | அதிவீரராம பாண்டியர் | : | வெற். வே - 75 |
| 92. | அபியுக்தர் | : | கந். புரா - சிறப்புப் பாயிரம் |
| 93. | நல்லாதனார் | : | திரிக - 38 |
| 94. | தேவநேயன் ஞா. | : | வட. வர - பக்கம் 173 |
| 95. | இளங்கோவடிகள் | : | சிலம்பு - 5 - 102 |
| 96. | சாத்தனார் | : | மணி - 2 - 61 |
| 97. | பிங்கலர் | | பிங். 663 |
| 98. | மாணிக்கவாசகர் | | திருவா - திருச்சதகம் - 49 |
| 99. | கம்பர் | | க. இரா. நகரப்படலம் - 30; ஊர்தேடு படலம் - 133. |
| 100. | இராமலிங்க அடிகள் | | திருவருள் - அருட்பெருஞ் சோதி அகவல் - 1131, 1132. |

# 2. பட்டி – சொல், பெயர் ஆய்வு

## அ) வாயும் சொல்லும்

### நாநலம்

திருவள்ளுவர் "நாநலம்" என்றொரு சொல்லாக்கந் தந்தார். அதற்கொரு சிறப்பு விளக்கமாக "நலன் உடைமை" என்றார். அதற்கு மேலும்,

"நாநலம் என்னும் நலனுடைமை, அந்நலம்
யாநலத் துள்ளதூஉம் அன்று"[1]

என்று நாநலத்திற்கு ஒரு மணிமுடிச் சிறப்பு வைத்தார். உலகச் சிறப்புக்கள் பலவற்றுள்ளும் ஆய்ந்து பார்த்தாலும் நாநலம் அவற்றிலெல்லாம் அடங்காத தனிச்சிறப்புடையது. இவ்வாறு நாநலத்தைத் தனிநலம் ஆக்கினார்.

நாநலத்தின் வளர்ச்சிதான் 'நாவலம்' ஆகியது. வெற்றி பெற்றதாக நிறைந்தது. நாநலத்திலிருந்து நாவலத்திற்கு வளர்ந்த வரலாற்றைக் கூர்ந்து பார்த்தால் அதற்கு நாவையுடைய வாய்தான் இழையோட்டமாகின்றது.

"வையம் ஈன்றதொன் மக்கள் உளத்தினைக்
கையினால் உரை காலம் இரிந்திடப்
பைய நாவை அசைந்த பழந்தமிழ்"

என்று நம் காலத்துச் சான்றோர் கரந்தைக் கவியரசு வேங்கடாசலனார் பாடினார். 'பைய நாவை அசைத்து' வாயால் பேசச் செய்தமைதான் மாந்தனை மற்ற உயிர்களிலிருந்து உயர்த்தியது . வாய்ப்பேச்சால்தான் மாந்தன் ஆனான்.

## வாயில்லா .....

உயிரினங்கள் அனைத்தும் வாய் உள்ளவை (ஓரறி உயிர் தவிர.) உடலுக்கு அமைந்த வாய் என்னும் அளவில் நோக்கினால் மாந்தன் வாயைவிட ஊர்வன, பறவை, விலங்கு முதலிய உயிரினங்கள் பெரிய அளவான வாய்களையே பெற்றுள்ளன . ஆயினும், அவை 'வாயில்லா உயிரினம்' (பிராணி) எனப்படுகின்றன. ஏன் அவ்வாறு கூறுகின்றோம்? வாய் செய்யும் செயல்கள் இரண்டு. ஒன்று உள்ளே வாங்கும் செயல்; அஃது உணவைக் கொள்ளல். மற்றொன்று வெளியே விடுதல்; அஃது ஒலித்தல் . உணவுகொள்ளுதலின் நோக்கம் உடலைப் பேணுதல்; ஒலித்தலின் நோக்கம் உள்ளத்து உணர்வை வெளிப்படுத்தல் . இவ்விரண்டையும் மாந்தரை அல்லாப் பிற உயிரினங்களும் செய்கின்றன . உயிர்கள் அனைத்திற்கும் உணர்வுகள் உள்ளன . விலங்கினங்களும் பறவைகளும் ஊர்வனவும் தத்தம் உணர்வுகளை ஒலித்து வெளிப்படுத்துகின்றன.

நாய் வாயால் ஒலித்தலைக் குரைத்தல் என்கிறோம். அக்குரைத்தலிலும் பல வகையான மாற்று ஒலிகளால் தனது பலவகை உணர்வுகளை வெளிப்படுத்துகிறது. முனகிக் குரைத்தால் காதல் உணர்வு; உரக்கக் குரைத்தல் பகை உணர்வு; உறுமிக் குரைத்தால் சின உணர்வு; கனைத்துக் குரைத்தால் விட்டுக்கொடுக்கும் உணர்வு; ஊளையிட்டுக் குரைத்தால் அச்ச உணர்வு; அல்லது நோய் உணர்வு. மேலும் நாம் அறிய இயலாமல் ஒன்றுக்கொன்று தன் தன் உணர்வுகளைக் காட்டிக் குரைக்கும் ஒலிகள் பல.

நாய் போன்று உயிரினங்கள் உணர்வுகளை வெளிப் படுத்த வாயால் ஒலிக்கின்றன. ஆனாலும் அவை யாவும் வாயில்லா உயிரினங்களே. வாயிருந்தும், வாயால் ஒலி எழுப்பியும் அவை இப்பெயர் பெற என்ன தீவினை செய்தன? ஒரு தீவினையும் செய்யவில்லை. ஆனால் நல்வினை ஒன்றைச் செய்வதில்லை.

அவை வெளியிடும் ஒலிக்குத் தொண்டைதான் செயற்படுகின்றது. வாய் அதற்கு உதவுகின்றது. தொண்டை யிலிருந்து எழும் ஒலியை வாயின் நா, பற்கள், உதடுகள், அண்ணம் ஆகிய உறுப்புக்களும் மூக்கும் முயன்று தொழிற் பட்டால் அவ்வொலி வெவ்வேறு எழுத்தொலிகளாக வரும். அந்த எழுத்துக் கூட்டல்களே சொல் மொழி - பேச்சு - உரை எனப்படும்.

இதனைப் பிற உயிரினங்கள் செய்வதில்லை . அஃ தாவது வாய் ஒலியை எழுத்தாகப் பலுக்குகின்ற (உச்சரிக்கின்ற) செயலைச் செய்வதில்லை . சொல்லாக - மொழியாகப் பேசுவதில்லை . எனவே, அவை வாயில்லா உயிரினங்கள் எனப்படுகின்றன. கிளியும் மைனாவும் இவை போன்ற பிறவும் பேசும் என்பர் . அவை சொன்னதைச் சொல்லும் . அது கேட்ட ஒலியைக் கேட்டபடி ஒலியாகத் தரும். அவை எழுத்துக்கூட்டல்கள் ஆகா. எனவே, அவையும் வாயில்லாதவைகளே.

## வாயின் சிறப்பு :

வாயின் செயல்கள் இரண்டிலும் பேச்சே சிறந்தது . வாயின் உணவுச்சுவை மட்டும் பெற்றவன் நல்ல வாழ் வுடையவன் ஆகான் . திருவள்ளுவப் பெருந்தகை வாய் உணர்வு மட்டும் பெற்றவரை மக்கள் இனத்தவராகவே கொள்ளவில்லை . விலங்கு போன்றே கொண்டு 'மாக்கள்' எனும் சொல்லால் குறித்தார் . 'சொற்சுவையறியாது உணவுச்சுவையை மட்டும் உணர்ந்தவன் விலங்கு; அவன் வாழ்ந்தால் என்ன? அவிந்தால் என்ன?'[2] என்று வெறுத்துப் பேசினார்.

ஒருவனது குடியின் பெருமையையும், அவன் பண்பை யும் அவன் வாயிலிருந்து வரும் சொல்லே காட்டும் என்பதைத் திருவள்ளுவர்,

"நிலத்திற் கிடந்தமை கால் (முளை) காட்டும்; காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்"[3] என்றார்.

## வாய்ச்சொல்

இதில் 'குலத்திற் பிறந்தார் சொல்' என்று சொல்லை மட்டும் வைத்திருக்க வேண்டியவர் வாய் சேர்த்து 'வாய்ச்சொல்' என்றார். இங்கு 'வாயிலிருந்து வரும் சொல்' என்பது பொருள் அன்று. சொல் வாயிலிருந்துதானே வரும்! பின் ஏன் வாய் சேர்த்தார்? இதற்குப் பரிமேலழகர் விடை தந்தார்.

"வாய் என வேண்டாது கூறினார், தீயன
பயிலா என்பதறிவித்தற்கு"[4] என்றார்.

வாய் சேர்ந்ததால் சொல் நல்லதாயிற்று. சொல் சேராமலே வாய் மட்டும் நின்று சொல்லையும் அதன் கருத்தையும் புலப்படுத்தும்.

"வணங்கிய வாயினர் ஆதல் அரிது"[5] என்பதில் வாயினர் ஏன்பதற்கு வாயை உடையவர் என்பது பொருளன்று. 'சொல்லை உடையவர்' என்று பொருள்; சொல்லுக்காக வாய் மட்டுமே அமைந்தது.

## வாய்விடல்

'வாய்விடல்' என்றொரு தொடர் அமைந்தது. இதற்கு வாய்-சொல்லை; விடல்- சொல்லல் என்று பொருள். கபிலர்,

"வாய்விடூஉம் தானென்ப"[6] என்றதற்கு

"இனிய பல வார்த்தைகளையும் கூறாநிற்கும்" என்று பொருள் எழுதப்பட்டது. இக்கலித்தொகையில் மருதன் இளநாகனார்,

"வாய்விடல் மாலை மகளிரை நோவேமோ"[7] என்று 'சொல்லுதல்' என்னும் பொருளில் அமைத்தார்.

## வாய் - உண்மை

தீயன பயிலாத வாயின் இயல்பு உண்மை பேசுவதாகும். 'வாய் + மை என்பது 'உண்மை' என்று பொருள் தரும். 'வாய்மை' என்பதற்கு 'வாயின் தன்மை' என்று தான் பொருள். அது இங்கு உண்மைத் தன்மையைக் குறிக்கிறது. தன்மையைக் குறிக்கும் பண்பு விகுதியாகிய 'மை' இல்லாமலே வாய் மட்டுமே உண்மையின் குறியீடாய் நிற்கும்.

ஒரு குமரி சோலையில் தன் தோழியுடன் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தாள். அப்பக்கம் வந்த அவளுக்குகந்த குமரன் ஒருவனைப் பார்த்து 'ஊஞ்சலை ஊக்கிவிடு' என்றாள். அவனும் வந்த வாய்ப்பை விடாமல் இசைந்து ஊஞ்சலை ஆட்டினான். அதனை ஒரு வாய்ப்பாக்கிக் கொள்ள விரும்பிய அவள் 'நாணத்தால் அடிபட்டு மயங்கியவள் போன்று ஊஞ்சலிலிருந்து சாய்ந்தாள்; பொய்யாகச் சாய்ந்தாள்; அதிலும் அவன் மார்பில் சாய்ந்

தாள். அவனோ, அவள் மயக்கத்தை "உண்மை என்று நம்பி" இரு கைகளாலும் ஏந்தி அணைத்தான். இதனை அந்தக் குமரியின் வாய்மூலமாகச் சொல்லும் கபிலர், 'உண்மை என்று கருதி' என்பதை "வாயாச் செத்து"8 என்றார். இத் தொடரில் 'செத்து' என்றதற்குக் 'கருதி' என்று பொருள். 'வாயா' என்றதற்கு 'உண்மையாக' என்பது பொருள். இங்கு 'வாய்' மட்டும் 'உண்மை' என்னும் பொருளைக் கொண்டது.

"நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாய் ஆகின்று"9

என்று அவ்வையாரும் உண்மைக்கு 'வாய்' என்றே அமைத்தார்.

## ஆ) வாய் - பெருமை, சிறுமை

### வாய்மொழி

வாயுடன் சொல் சேர்ந்து பெருமை பெற்றது. வாயுடன் 'மொழி' சேர்ந்து உண்மைப்பொருள் பெற்றது. 'வாய்மொழி' என்றால் 'வாய் சொல்லும் மொழி' 'வாயிலிருந்து வந்த மொழி' என்றும் பொருள். 'வாய்மை' என்பதில் 'மை' விகுதி போய் வாய் மட்டும் நின்று மொழியுடன் சேர்ந்து உண்மைப்பொருளை மொழிக்குத் தந்தது.

"வாய்மொழிப் புலவர்"[10] என்னும் தொல்காப்பிய நூற்பா அடி 'உண்மை மொழிகளை மொழியும் புலவர்' என்று பொருள்தந்து மொழிக்கு உண்மை உயிரூட்டியது. மாங்குடி மருதனார் இதனை விளக்கமாக "பொய்யறியா வாய்மொழியால்[11] புகழ் நிறைந்த நன்மாந்தர்" என்றார். 'திருவாய்மொழி' என்பது 'அழகிய மறை (வேதம்) மொழி' என்று பொருள் தந்து மறைச் சிறப்பை மொழிக்கு வழங்குகிறது.

இவ்வாறு சொல்லும் மொழியும் வாய் சேர்ந்து பெருமை பெற்றமைபோன்று, வாயுடன் பிற சொற்கள் வாய்க்குப் பெருமை தந்தன. பெருமை மட்டுமன்று, சிறுமையும் தந்தன. இப்பெருமை, சிறுமை வரலாற்றை

இலக்கியங்கள் கொண்டும் வழக்குகள் கொண்டும் அறிய முடிகின்றது.

இவ்வரலாற்றைக் குறிப்பாகக் காண இடந்தரும் இலக்கிய அடிகளையும், தொடர்களையும் காணும்போது அவற்றின் காலத்தைக் கணக்கில் கொள்ளவேண்டியுள்ளது. இவ்வாறு கொள்வதால் கால ஓட்டத்தில் சொல் கொண்ட பொருள் மாற்றத்தையும், மாறுபாட்டையும், முரண் பாட்டையும்கூட அறிய முடியும். மாந்தரின் உணர்ச்சிப் பாங்கும், உணர்ச்சி வடிகாலும், வழுக்கலும் சொற்களின் பெருமையை நிலைநாட்டியும், நிலைகுலைத்தும் வைத் துள்ளன.

இக்குறிப்புடன் வாய் - சொல் வரலாறு, இங்கு இவ்வாறு தொடர்கின்றது.

## வாய் வாளாமை

வாயால் சொல்லை வழங்க வேண்டாத இடத்தில் வழங்காது வாளா - சும்மா - இருத்தல் நலம்.

"முடிவாய் வாய்வாளேன் நிற்ப"[12]

என்னும் கலித்தொகைத் தொடர் வேண்டாத இடத்தில் பேசாது இருத்தலைக் குறித்தது.

பேச முடியாத நிலையில் உள்ளம் திகைக்கும் போது,

"சித்தம் திகைத்து
வாய்வாளா நின்றான்"[13]

என்று பேசாது நின்றதைப் பரிபாடல் குறித்தது. அதே பாடலில், 'நீ பேசவேண்டா' என்னும் பொருளில்

"முழவின் வருவாய்! நீ வாய்வாளா!"[14]

என்று அமைந்துள்ளது.

இளங்கோவடிகள் 'வாயைச்சும்மா வைத்திருக்க மாட்டாமல்' என்னும் பொருளில்,

"வாய் வாளாமையின் வண்டமிழ் இகழ்ந்த" என்றார்.

தண்டமிழாசான் சாத்தனார் மற்றோர் வகையில் வாய்வாளாமைக்கு விளக்கந் தந்தார். வாதத்தின்போது வந்த வினாவிற்கு விடை சொல்வதைத் துணிந்து சொல்லல், கூறிட்டு மொழிதல், வினாவின் விடுத்தல், வாய்வாளாமை என நான்கு கூறி, அவற்றுள் வாய்வாளாமையை விளக்கினார் :

வாய்வாளாமை : ஆகாயப்பூ
பழைதோ? புதிதோ? என்று புகல்வான்
உரைக்கு மாற்றம் வாளாதிருத்தல்"[16]

என்றார். இவ்விளக்கம் பட்டிமன்ற நெறிக்கும் பொருந்தும். வாய்வாளாது இருக்கவேண்டிய இடத்தில் மீறிப் பேசினால் அது 'வாய் காவாமை' ஆகும்.

## வாய் காவாமை, வாய்ப்பகை

"யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு"[17]

என்றது பொருத்தமான அறிவுரை . இவ்வறிவுரையைப் பொதிந்து,

"காவா தொருவன் வாய் திறந்து சொல்லுஞ்சொல்
ஓவாதே தன்னைச் சுடுதலால்" (நாலடி - 63)

என்று விளக்கம் எழுந்தது . இவ்வெண்பா 'வாய் காவாமை' என்னும் சொல்லமைப்புக்குக் குறிப்பு தருவதாகவும் உள்ளது.

"வாய்காவாது பரந்துபட்ட
வியன்பாசறைக் காப்பாள" (புறம் - 22 - 15)

என்றது 'வாய்காவா' என்றும் சொல்லமைப்பைக் குறித்தது . வாய்காவாத பேச்சால் பகைதான் மூளும்.

"மழவர்
வாய்ப்பகை கூடியும் மண்ணொடு கடுந்திறல்"
(அகம் - 101 - 6)

என்று வாய்ப்பகை கூடிய வேண்டாததைச் சுட்டி அச் சொல்லை அறிமுகப்படுத்தியது.

## வாய்ப்பறை

வாய்ப்பகை வளர்ந்தால் வாய்ப்பேச்சு உரக்க வெளிவரும். அது முழங்கவும் செய்யும். தம்பட்டமடிக்கும் ஒலியாய்ப் படபடக்கும். அப்பேறு வாயே தம்பட்டமாகும்; அஃதாவது பறை ஆகும். அப்பேச்சு 'வாய்ப்பறை'. இந்தப்பறை என்னும் தம்பட்டத்தை அடிக்கும் கோல் நாக்கு; வாய்தான் பறை. இதனை,

"நாக்கடிப்பு (கோல்) ஆக வாய்ப்பறை அறையினும்"

(சிலம்பு - 14 - 29)

"நாக்கடிப்பாக வாய்ப்பறை அறைந்தீர்"

(மணி - 25 - 51)

"வாய்ப்பறை யறைந்து தூற்றி"

(சீவ. சிந்த. 211)

- என 'வாய்ப்பறை' என்னும் சொல் உருவாயிற்று.

## வாய்த்தொட்டி

இவ்வாறு பறையறையக் காரணமான வெறுப்பு, இன்னாச் சொல்லுக்கும், இழிசொல்லுக்கும் காரணமாகும். இழிசொல்லைத் தருவது

"துணை இதழ் வாய்த்தொட்டி"

(பரிபாடல் - 20 - 51)

என்று வாய்த்தொட்டி ஆயிற்று.

## வாய்மதம்

தொட்டியானால் அகன்ற வாயாகித் திமிர் ஏறி மதமாகி

"வண்மையோ வாய்மதமோ வித்தைமதமோ?"

(கு. குறவஞ்சி - 110)

என்று வாய்மதம் பிடித்தது.

"வாய்மதம் பேசிவரும் அநியாயக்காரர்க்கு"

(குமரேச சதகம் - 57)

என்று வழிமொழியப்பட்டது.

## வாய்ப் பந்தல்

மதம்ஏறிவிட்டால் பல்வகை உணர்வும் வெளிப்படும். தற்புகழ்ச்சியாகப் பந்தல்போடுவது போன்று,

"அந்திவண்ண ரென்னும்
வாய்ப்பந்தல் இடுதலன்றி"

(திருவருட்பா - தத்துவமாலை - 10)

என்று வாய்ப்பந்தல் போடப்பட்டதை வள்ளலார் பாடினார்.

### வாயாடி

வாய்ப்பந்தல் போடப்பட்டால் அதில் ஏதும் நிகழ்ச்சி நிகழவேண்டும் . அந்நிகழ்ச்சி ஆடும் ஆட்டமாகவும் அமையும்; வாய் ஆடும் .

"பேயாட உள்ளறியாப் பித்தாட நின்னுடனே
வாயாடு வோர்பால் மருவிநில்லேன்"
(திருவருட்பா - நெஞ்சறி - 631)

என்று 'வாயாடி' பிறந்தது.

### வாய்ப்பட்டி - வாய்வலம்

காலப்போக்கில் 'வாயாடி' நன்மை பட - (உண்டாக) வைத்தது . நன்மை பட - (அழியவும்) வைத்தது . 'பட' வைக்கும் படுவை உடையது. படு + இ பட்டியாகியது.

"வள்ளல் தெரியுமடி வாய்ப்பட்டி என்றுரைத்தாள்" என்று 'வாய்ப்பட்டி'[18] அடித்தது . வாய்ப்பட்டியில் வாய் வன்மை உண்டு; பட்டியால் வெற்றியும் உண்டு . இவ்விரு பொருளையும் தருவதாக,

"தன் வாய்வலத்தால் பாழ்த்துதி செய்து"
(திருநூற்றந்தாதி - 20)

என்று 'வாய்வலம்' தலைதூக்கியது .

## வழக்கில் வாய்

இவ்வாறெல்லாம் இலக்கியங்களில் காணப்படும் வாய்ச்சொற்களன்றி 'வாய்நீளம், வாய்த்துடுக்கு, வாய்ச் சப்பை, வாய்த்திமிர், வாய்க்கொழுப்பு, வாய்மூப்பு, வாய்வாதம், வாய்க்கொத்து' என்றெல்லாம் வழக்கில் சொற்கள் அமைந்தன.

மேலே கண்டவற்றுள் 'வாய்ச்சொல், வாய்மொழி' எனும் முதலிரண்டும் வாய்க்குப் பெருமை தருபவை. முடிவான ' வாய்வலமும் பெருமையையும் சிறப்பையும் தரும்.

பிறசொற்களில் வா.ய்வாளாமை சில இடங்களில் அமைதிக்கும், சில நேரங்களில் கலவரத்திற்கும் பயன் பட்டது.

மற்றைய,

'வாய்காவாமை, வாய்ப்பகை,
வாய்ப்பறை, வாய்த்தொட்டி,
வாய்மதம், வாய்ப்பந்தல்'

ஆகிய இலக்கியச் சொல்லாக்கங்களும் வழக்குச்சொற்களும் வாய்க்குச் சிறுமை தருபவை ஆயின.

இறுதியாக 'வாய்ப்பட்டி' வெற்றி தோல்விகளால் முறையே பெருமையையும் சிறுமையையும் தருவதாயிற்று.

இலக்கிய வழக்கிற்குக் காட்டப்பட்ட இலக்கியங்களை ஒரு முறை நோட்டமிட்டால் காலவாரியாக அமைந்து காலப்போக்கில் இவ்வாறு தாழ்வுக்குச் சென்றதை உணரலாம்.

"தீயன பயிலா என்று அறிவித்தற்கு வாய்
என வேண்டாது கூறினார்"

என்று பெருமை பெற்றுக் காலப்போக்கில் சிறுமை தருவதாய் ஆன வாய் பெரும் சறுக்கலில் வீழ்ந்தது.

## வாய்ப்பட்டியும் பெண்டிரும்

இறுதியாக அமைந்த 'வாய்ப்பட்டி' இக்காலத்தில் பெரும்பாலும் பெண்களையே அறிமுகப்படுத்துகின்றது. இது போன்று வாய்த்தொட்டி, வாயாடி, வாய்நீளம் ஆகியவையும் பெண்களுக்கே பெரும்பாலும் வழங்கப் படுகின்றன.

இந்த நிலை எவ்வாறு வந்தது?

அக்காலப் பெண்கள் அடக்கத்தின் பிறப்பிடம் என்றாலும் அடக்கம் அளவுக்கு மீறி அடங்கிக் கிடப்ப தாகவும் பெண்கள் இயல்பில் இருந்தது.

தவறான வழியில் பிரிந்த கோவலனை நினைந்து வருந்தி அடங்கிக் கிடந்த பெண்ணாகவே கண்ணகியைக் காண்கின்றோம். கண்ணகியின் பெயர் வாய்ந்த வள்ளல்

பேகன் மனைவி கண்ணகியும் கணவன் கைவிட்டமையால் கண்ணீர் விட்டு அடங்கிக் கிடந்ததையே காண்கிறோம். ஆனால், சிலம்புக் கண்ணகி கோவலன் தொடர்பால் அடங்கிக் கிடந்தாலும், தன் கணவனுக்குப் பழிநேர்ந்ததைத் தாங்காது கிளர்ந்தெழுந்தாள் . இல்லத்தைவிட்டுத் தாண்டாத அவள் - 'மண்மகள் அறியாத வண்ணச் சீரடி'யை உடைய அவள் அரசவையில் வீறுற்று நின்றாள் . எத் துணைக்கெத்துணை அடங்கி இருந்தாளோ அத்துணைக்கத் துணை புரட்சியோடு எழுந்தாள் . ஆரியப்படை கடந்த பெருமன்னன் நெடுஞ்செழியனுடன் வாதாடினாள்; வென்றாள் . சிறு சிறு சொற்களாகப் பேச்சுப் பழக வைத்தே இளங்கோவடிகள் சிலம்பில் கண்ணகியைக் காட்டினார் . அவரே, அக்கண்ணகியை வெடிப்பேச்சில் நிறுத்திப் பேச வைத்தார் . பழிவாங்கும் போக்கில் என் "பட்டிமையம் காண்குறுவாய்" என்று சொல்ல வைத்தார்.

இவ்வாறான கண்ணகியின் பேச்சால் மன்னனும் கோப்பெருந்தேவியும் மடிந்தனர் . மதுரை தீக்கிரையா யிற்று . அடங்கிக்கிடந்த கண்ணகியின் 'பட்டிமை' அழி வைத் தந்தது . அழிவானாலும் நெறியான அழிவு; நேர்மைக்காக அழிவு.

பெண்களை அடங்கிக் கிடப்பவர்களாகவே கண்டு வந்த ஆடவர் அவர் கிளர்ந்தெழுந்தால், புரட்சி கொண் டால் அது தகாதது என்று கருதினர் . இது ஆடவரின் தன்முனைப்புக் குணம்.

மணிமேகலை துறவுத்தன்மை வழுவாது வாதிட்டாள். கடுஞ்சொல், பட்டிச்சொல் சொல்லாமல் வாதிட்டாள். சமயக் கருத்துப்போரைப் பெருமிதமாக நடத்தினாள்.

ஆனால், வடபுலக் கற்பனை மகளிரான குண்டலகேசியும், நீலகேசியும் கடுஞ்செயலையும் பகடிச்சொல்லையும் கொண்டு வாதிட்டதாகக் காண்கின்றோம்.

> "மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால்"[19] என்றபடி

பழையனூர் நீலி என்பாள் தன்னை வஞ்சித்துக் கைவிட்ட கணவனைப் பழிவாங்கும் வஞ்சத்துடன் அடக்கமாகவே புரட்சி செய்தாள். அதனால் தன் கணவனையே பழிவாங்கியது மட்டுமன்றி வேளாளச்சான்றோர் எழுபதின்மர் தமக்குத்தாமே தற்கொலையைச் செய்து கொள்ள வைத்தாள். அவள் உள்ளொன்று வைத்துப் புறத்தே வேளாளப் பெருமக்களை நம்பவைக்கக் கண்ணீர் விட்டாள். வஞ்சமாக அவள் கண்ணீர் விட்டதால் வஞ்சமான கண்ணீர் 'நீலிக்கண்ணீர்' என்று பெயர் பெற்றது.

அபிராமி அம்மனைப் பாடிய அபிராமி பட்டர் அவ்வம்மை வஞ்சம் செய்யாது அருள்வதைச் சொல்பவர், 'அபிராமி அம்மை எம்மைக் கைவிடமாட்டாள்' என்பவர்

"நீலி செய்யாள்"[20] என்றார் . இதில் பழையனூர் நீலியின் செயல் நினைவுறுத்துப்படுகிறது.

படிப்படியாக இவ்வாறு பெண்கள் வாய்ச்சொல் வளர்ந்ததை வைத்துப் பொதுவாகப் பெண்களின் பேச்சு தீமையே தரும் என்று பழியை விரித்தனர்.

ஒரு தனிப்பாடல் இது :

"பெண்ணொருத்தி பேசில் பெரும்பூமி தானதிரும்
பெண்ணிருவர் பேசில் விழும் விண்மீன்கள் - பெண்மூவர்
பேசில் அலை சுவறும், பேதையே - பெண்பலர்
பேசில்உல கென்னாமோ பின்"[21] இப்பாடல்

'பெண்பேச்சால் நிலநடுக்கம் வரும், வானத்து விண்மீன்கள் விழும், கடல் அலை வற்றும், உலகமே என்ன ஆகுமோ' என்று கற்பனைக்கும் எட்டாத கடுமைகள் நேரும் என்கின்றது.

மாயூரம் வேதநாயகனார் "நல்ல பெண்ணைப் பார் நீ தூ தா" என்ற இசைப்பாட்டால் நல்ல மணமகளைத் தேடுபவர்,

"அதிகப் பேச்சுக்காரி பெரும் வம்பி
ஆயிரம் ஆனாலும் அவள் வேண்டாம் தம்பி"[22]

என்று வாள்நீட்டிப் பேசுபவளை 'வம்புக்காரி' என்றார்.

இவ்வாறாக 'வாய்ப்பட்டி' என்னும் வசைச்சொல் பெண்கள் மேல் ஏற்றப்பட்டது, காலப்போக்கில்.

'பட்டி' என்னும் சொல்லில் உள்ள 'இ' விகுதி தலைவி, கிழவி, பெண்டாட்டி என்றெல்லாம் பெண்பால் விகுதியாக வரினும் அஃதே ஆண்பாலுக்கும் அமைந்தது. "களி, பிடி, மாணி, காமி, கள்வன்" (நன் - பொதுப்பாயிரம் - 39) என்றும், அறிவிலி, போக்கிலி, துச்சாரி எனும் சொற்கள் ஆண்பாலைக் குறித்தன.

# இ) பட்டிகள்

## பட்டி ஆண்கள்

ஆனால், தொன்மைக் காலத்தில் பெண்கள் இவ்வாறு தாழ்வாகக் குறிக்கப் பெறவில்லை . பரத்தையர் தாழ்வு படுத்தப்பட்டனர் . பொதுவில் பெண்கள் பெருந்தக்க பெருமை உடையவர்களாகவே பேசப்பட்டனர் . மேலும் சற்று விரிவாகக் கண்டால் பெண்களுக்குப் பிற்காலத்தில் பட்டிப் பட்டம் கிடைத்தமை போன்று முற்காலத்திலும் இடைக்காலத்திலும் பெரும்பகுதி ஆண்களுக்கே பட்டிப் பட்டம் அதிகமாகக் கிடைத்தது . அப்பட்டிப் பட்டமும், வாயாடிப் பேச்சுக்காக அன்று; வாய்காவாது பேசும் பேச்சைப்போல, காவலின்றிச் செய்யும் சிறு குறும்பு களுக்கும் பட்டிப் பட்டம் தரப்பட்டது.

## இலக்கியப்பட்டிகள் - சிறுபட்டி

சங்ககாலம் முதலாகச் சில பட்டிகளைக் காண் போம்.

ஒரு காதல் குமரி - தோழி உரையாடல் காட்சி :

குமரி : கேட்டாயோ கதையை!

தோழி : சொன்னால்தானே கதை கேட்பேன்.

குமரி : அன்னையொடு வீட்டிற்குள் இருந்தேன். இருந்தேனா? அவன் பருக நீர் கேட்டு வாயிலில் நின்றான். அன்னை என்னை 'நீர் கொடு' என்றாள். கொண்டுபோய்க் கொடுத்தேன். நீர்க்குவளையை வாங்குவது போன்று என் கையைப் பிடித்துக் கொண்டானடி! என்னை அறியாமல் 'அம்மாவோ' என்று அலறினேன். அன்னை 'என்ன(?)' என்று ஓடி வந்தாள். என்ன சொல்வேன்?

தோழி : 'கையைப் பிடித்தான்' என்று சொல்வாய்...

குமரி : போடி! 'நீர் விக்கிற்று' என்றேன்.

தோழி : ஏன் அப்படிச் சொன்னாய்?

குமரி : அஃது இருக்கட்டும். அன்னை பதறிப்போய் அவன் முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அப்போது அவன் என்னைக் "கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி நகைக் கூட்டம் செய்தான் அக்கள்வன் மகன்"

தோழி : திருட்டுப்பிள்ளைதான் போலும். ஆம், அவன் எவன்?

குமரி : அவன்தான்! அந்தப் 'பட்டி'

தோழி : ஏனடி 'பட்டி' என்கிறாய்?

குமரி : பின் என்ன? நாம் சிறுபிள்ளையில் விளையாடக் கட்டிய மணல் வீட்டைக் காலால் சிதைத்தவனை - பின்னலைப் பின்னின்று இழுத்தவனை - நாம் பாடி ஆடிய பந்தைப் பறித்துக்கொண்டு ஓடியவனை இவ்வாறெல்லாம் நம்மைத் துன்புறுத்திக் குறும்புகள் செய்தவனைப் 'பட்டி' என்று சொல்லாமல் வேறு எவன் என்று சொல்வதடி?

இக்காட்சியைக் கண்டவர்போல் புலன் அழுக்கற்ற அந்தணனாராகிய கபிலர் என்னும் பெரும்புலவர்,

"மணற்சிற்றிற் காலிற் சிதையா,
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி"[23] என்று பாடினார்.

கபிலர் 'சிறுபட்டி' என்றதற்கு உரைவிரித்த நச்சினார்க்கினியர்

"சிறுபட்டி - சிறியனாகிய காவலில்லாதவன்" என்று எழுதினார்.

அந்தச் சிறுபட்டிக்குக் கபிலர் அக்குமரியில் வாயில் வைத்துக் "கள்வன் மகன்" என்று பகடிப்பட்டம் தந்தார். இக்காலத்தும் சிலர் பேச்சு வழக்கில் 'அட! திருட்டுப்பய மகனே' என்று ஏசுவதுண்டு. அன்போடு கொஞ்சுவதும் உண்டு. தம்மை மறந்து 'திருட்டுப்பய மகனே' என்று தமக்கே 'திருட்டுப் பயல்' பட்டம் சூட்டிக் கொள்வதுண்டு. ஒரு

வகையில் இது பொருந்தும் . மேற்பாட்டில் இவ்வாறு அப்பனைத் 'திருட்டுப்பயல் - "கள்வன்" என்றதும் வேண்டியதே . தன் மகனை ஊர் சுற்றாமல் அடக்கி வைக்காமல் - காவல் இல்லாதுவிட்டதால் மகன் செயல் அப்பனுக்கு ஏறலாம்; அது தகும்.

ஓர் அழகுக் குழந்தை தெருவில் விளையாடியது. அவ்வழி வந்த 'ஒருத்தி' மிக ஆர்வத்துடன் அக் குழந்தையைத் தூக்கிக் கொஞ்சினாள் . ஒரு சிறு பொன் கணையாழியை அக்குழந்தைக்கு அணிவித்து மகிழ்ந்து, போய்விட்டாள்.

அவள் இக்குழந்தையின் அப்பனுக்குக் காதல் பரத்தை . தன் காமுகன் மகனைத் தன் மகன் போன்றே கருதிக் கொஞ்சிக் கணையாழி அணிவித்துப் போய் விட்டாள்.

குழந்தை வீட்டிற்குள் வந்தது . தாய் அணைத்துக் கொஞ்சினாள் . கையில் கணையாழி தெரிந்தது . அவனை அதட்ட 'இது ஏதடா' என்றாள் . அவன் மழலையைக் குழைத்து 'அந்த அம்மா' என்றான் . அவள் புரிந்து கொண் டாள் . அவளிடம் கணையாழி பெற்றுவந்த வெறுப்பில் குழந்தையை முறைத்துப் பார்த்து,

'நமக்கு ஒன்றும் உறவல்லாதவள் ஒருத்தி
கையால் எம்மைப் பகடி செய்வது போல்
அணிவித்துள்ளாள்" என்று பதறிப் பேசினாள்

என்று கூறும் பெரும் புலவர்!

"சிறுபட்டி, ஏதிலார் கைஎம்மை எள்ளுபு, நீ தொட்ட
மோதிரம் யாவோ? யாம் காண்கு"[24]

என்று தாயைப் பேச வைத்தார் . இந்தச் சிறுவனும் வீட்டிற்குள் தாய் வைத்த காவலைக் கடந்து தெருவிற் சென்று பிறர் பொருளை ஏற்றதால் 'சிறுபட்டி' ஆனான்.

## கடவுட் பட்டிகள்

இந்தப் பட்டிப் பட்டியலில் கடவுளரும் அகப் படாமல் துப்பவில்லை. சிவபெருமானும் அகப்பட்டார்.

"தன் திருமணத்தைத் தடுத்துத் திருவெண்ணெய் நல்லூர்க்கு இழுத்துச் சென்று, பரவையிடம் கோள் சொல்லி, தன் கண்ணைப் பறித்து, தன்னோடு ஒட்டித் தன்னை ஆட்கொண்டு, ஓடி ஒளிந்து அருட் குறும்பு செய்த சிவபெருமானைச் சுந்தரமூர்த்தி நாயனார்

"ஒட்டி ஆட்கொண்டு போய் ஒளித்திட்ட
உச்சிப் போதனை, நச்சர வார்த்த
பட்டியை"[25] என்று 'பட்டி' யாகப் பாடினார்.

இவ்வாறெல்லாம் சிவபெருமான்பால் பகடிபேசிப் பழக்கப் பட்ட சுந்தரமூர்த்தி சிவனைக் "கிரிபேசித் திரிவீர்" என்றார். கிரிபேசி என்றால் 'பட்டியாகப் பேசி' என்று பொருள்.

பட்டியில் திருமாலும் (கண்ணனாக) அடைக்கப் பட்டார் :

"வெண்ணெய் திரிந்து மேய்ந்து, ஆய்ச்சியர்
ஆடைகளை ஒளித்து, நப்பின்னையை ஆட
விட்டுக் காதற் குறும்புகள் செய்து கோயில்
மாடாய்க் காவலின்றித் திரிந்த கண்ணனை ஆண்டாள்,

"பட்டி மேய்ந்ததோர் காரேறு (கருங்காளை)
பலதேவர்க்குக் கீழ்க்கன்றாய்"[26] (தம்பியாய்)

என்று பட்டி மாட்டுக் கன்றாய்ப் பாடினாள்.

மகளைப் போன்றே ஆண்டாளின் தந்தையாகிய பெரியாழ்வாரும் கண்ணனைக் காவலில்லாத குறும்புக் காரனாக

"புட்டியிற் சேறும் புழுதியும் கொண்டுவந்து
அட்டி அழுக்கி, அகம்புக்கு அறியாமே
கட்டித் தயிரும், தடாவினில் வெண்ணெயும் உண்ட
பட்டிக் கன்றே கொட்டாய் சப்பாணி!
பத்மநாபா! கொட்டாய் சப்பாணி"[27]

என்று பட்டி மாட்டுக் கன்றாகவே பாடினார்.

அண்மைக் காலத்தவரான கந்தப்பதேசிகர் என்பார் தாம் எழுதிய தணிகை உலாவில் தினைக்காவலில் நின்ற வள்ளிக் குறத்தி வாய்காவாது, வேடனாக வந்த முருக னிடம் பட்டி அடித்தாள். அவளையும் அவள் தொடர்பில் முருகனையும்".

## பட்டி வள்ளி

கைவளையல் ஏற்றிஇரு காலில் வளைத்தேற்றி
மைவளையும் நெஞ்ச மயலேற்றி - வெய்ய
இருட்டு விடியாமுன் இனத்தவர் காணாமல்
திருட்டு வியாபாரம் செய் செட்டி"[28]

என்று வள்ளியைப் பட்டியாகப் பாடினார். திருட்டு வியாபாரம் செய்த முருகனைச் 'செட்டி' என்றாலும் அஃதும் பட்டி என்றே குறிப்பால் பொருள்படும்.

## பட்டி - மக்கள்

காமவெறிக் குறும்பில் தேறிய ஒருவனை ஒரு பரத்தையின் தாய்க் கிளவி

## பட்டிமகன்

"மோகினி மந்திரம் முழுதறிவான்"[29]

என்று பகடி பேசியதை விறலிவிடுதூது கூறுகின்றது.

## பட்டி மன்

திருஞானசம்பந்தர் சமணரை வாதில் வெல்ல முன்வந்தபோது அவ்வாது பாண்டியன் திருமுன் நிகழ இருக்கும் நிலையில் பாண்டிய மன்னனை,

"பண்டிமன் தென்னவன் பாண்டியனுக் காகவே"[30]

என்று பாடினார். இப் 'பண்டிமன்' என்றது முன் மூன்று அடிகளில் அமைந்த "எண்டிசை - அண்டனே - குண்டராம் எனும் சொற்களின் எதுகை கருதிய பண்டி, இது 'பட்டி' என்பதன் எதுகை கருதிய மெலித்தல் விகாரம். அன்றிப் 'பண்டி' என்று கொண்டு பொருள் கொள்தல் தாழ்வாகும். எனவே, 'பட்டிமன்' என்பதே உரியசொல்.

நிகழ உள்ள வாதமாம் பட்டிமன்றத்துக்கு தலைமையேற்கும் மன்னன் என்பதே குறிப்பு. இவ்வாறு 'பட்டிமன்' என்றொரு சொல்லமைப்பு நேர்ந்தது.

## பட்டி மாக்கள்

பெருங் கதையில்,

"பட்டி மாக்கள் கட்டுரை பகரும்"[31] என்று பட்டி மண்டபத்தில் வாதாடுவோர் "பட்டி மாக்கள்" என்று குறிக்கப்பட்டனர். இது பட்டிமண்டபத்தில் வெட்டியும் ஒட்டியும் வாதிட்டுப் பேசுவோரைக் குறித்தது ஆகும்.

## பட்டி புத்திரர்

தொல்காப்பியத்தில் உயர்திணைப் பெயர்கள் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று

"கூடிவரு வழக்கின் ஆடியற் பெயர்"[32] இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர்,

"இளந்துணை மகார் தம்மிற்கூடி விளையாடல் குறித்துப் பொழுதைக்குப் படைத்திட்டுக் கொண்ட பெயர்; அவை, பட்டி புத்திரர், கங்கை மாத்திரர் என்றதனாலும் விளங்கும்"

என்று விளக்கினார். அஃதாவது துணைசேர்ந்து விளையாடும் சிறுவர் விளையாட்டு நேரத்திற்குத் தமக்குப் பெயர் சூட்டிக்கொள்வர். அவை புனைபெயர்கள்போல் படைத்துக் கொள்பவை. அதற்குச் சான்றாக, 'பட்டி புத்திரர், கங்கை மாத்திரர்' என்பவை காட்டப்பட்டன.

சேனாவரையரும் இப்பெயர்களைக் காட்டியுள்ளார். இவ்வகையில் 'பட்டி புத்திரர்' என்பார் குறிக்கப்பட்டனர்.

இப் பட்டி புத்திரர் என்னும் பெயருக்கும் நம் பட்டிமண்டப நிகழ்ச்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. 'பட்டி' என்னும் சொல்லமைப்பு கொண்டே இங்குக் காணவேண்டியுள்ளது.

கூட்டுச்சேரும் சிறார் தம் கூட்டிற்கு ஒரு குறியீட்டுப் பெயர் வைத்துக்கொண்டு 'நான் வேண்டுமா? இவன் வேண்டுமா கூட்டிற்கு?' என்று விளையாட்டில் கேட்டுக் கொள்வர். அவ்வகையில் திறமையுள்ள பெயர்களாக 'வீரன் வேண்டுமா? தீரன் வேண்டுமா?' என்று பெயர் குறித்துக்கொள்வர். இவ்வாறு திறமைச் சிறப்பைக் குறிக்க 'பட்டி புத்திரர்' என்றும் 'கங்கை மாத்திரர்' என்றும்

இளம்பூரணர் குறித்தபடி 'சங்கிராமத்தார்' என்றும் கூட்டிற்குப் பெயர் கொண்டனர்.

இவருள் 'கங்கை மாத்திரர்' என்பது (மாத்திரை - அளவு; மாத்திரர் - அளப்பவர்) அக்காலத்தில் அளக்க முடியாத கங்கையை அளந்தார் போன்ற திறமையுடையவர் என்னும் கருத்தைக் கொண்டது.

'பட்டி புத்திரர்' என்பது விக்ரமாதித்தன் கதையில் அவனுக்கு அமைச்சனாக இருந்து பல திறமைகளில் சிறந்த 'பட்டி' என்பான் போன்ற புத்திரர் என்னும் கருத்தைக் கொண்டது.

எனவே, இங்கு 'பட்டி புத்திரர்' என்றது நம் பட்டிமண்டபத் தொடர்புடைய குறிப்பு அன்று. "பட்டி" தொடர்பில் இவ்வாறு ஒரு பெயர் வழங்கப்பட்டது என்று குறிக்கவே இங்கு காட்டப்பட்டது. இஃது இன்றியமையாக் காரணம் கருதிப் பின்னர் விளக்கப்பெறும்.

## பட்டிப் பசுக்கள்

சமய ஆன்மீகத்தில் இறைவன் தலைவன் - பதி; ஆன்மா - பசு; பற்று - பாசம் என மூன்று உண்டு. ஆன்மாக்களையும், உயிரிகளின் ஐம்புலன்களையும் பிற சமயத் தன்மைகளையும் பசுவில் அடக்கித் திருமூலர்,

"பட்டிப் பசுக்கள் இருபத்து நாலுள;
குட்டிப் பசுக்கள்ஓர் ஏழுள; ஐந்துள;

குட்டிப் பசுக்கள் குடப்பால் சொரியினும்
பட்டிப் பசுவே பனவற்கு வாய்த்ததே"[33]

என உருவகித்துப் 'பட்டிப் பசுக்க'ளாகப் பாடினார். சைவசமயத்தில் ஏணிப்படிகள் (சோபானங்கள்)[24]. அவற்றைப் பட்டிப் பசுக்கள் என்றார். ஏன் பட்டி என்றார்? அவரே இங்கே குறித்த ஐந்து பசுக்களை விளக்கியவர் மற்றொரு பாடலில்,

"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துள
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன"[34]

என்று காவலில்லாது திரிவதைக் குறித்தார். எனவே 'பட்டி' என்றார்.

ஆன்ம நெறியாக விதிக்கப்பட்டவற்றினின்று அகந்தையால் திரியும் கோட்பாடுகள் 'பட்டி' ஆயின.

மேலே காட்டிய பாடலும், அடிகளும் திருமந்திரத்தில் "சூன்யசம்பாசனை" -- 'மறைபொருளாகக் கூறல்' எனும் தலைப்பில் உள்ளவை. எனவே இவ்வகையிலும் கூறலாம். எவ்வாறாயினும் 'பட்டி' பட்டியே.

## பட்டிக் கடா

பட்டிப் பசு போல் அருணகிரிநாதர்
"பட்டிக்கடாவில் வரும் அந்தக் கரவுள்ளம்"[34]

என்று வஞ்சப்புகழ்ச்சியாகப் பாடியதில் 'பட்டிக் கடா!' வருகிறது.

இக்காலத்திலும் காவலில்லாது திரியும் மாடு 'பட்டி மாடு' என்று கூறப்படுகிறது. அது திருமூலர் பாடியதுபோல் "மேய்ப்பார் இன்றி"த் திரிவது . அடங்காமல் சிறுகுறும்பு செய்தவன் பட்டி எனப்பட்டது போன்று இது அமைந்தது.

காலப்போக்கில் 'பட்டி' எனும் சொல் இவ்வாறான பெருமதிப்பில்லாத பொருளைக் கொண்டது.

தொன்மைக் காலத்தில் இச்சொல் 'பாடல் பயில் இட'த்திற்கு அடைமொழியாகவும், அறிவுத் திறத்தால் கருத்துப்போரிடும் நிகழ்ச்சிக்கு உரியதாகவும், நல்ல பயனுள்ள முடிவுகளைக் கொள்ளும் செயற்பாட்டிற்கு உரியதாகவும் இருந்தது.

இவற்றை முன்னர் விரிவாகக் கண்டுள்ளோம். அத்தகு பெருந்தகவுச் சொல் குறைதகவுச் சொல்லாக மாறியமைக்குக் காரணம் 'பட்டி மண்டபம்' 'வாதக் கள'மாக மாற்றப் பட்டமையாகும்.

## ஈ) 'பட்டி' - சொல் வரலாறு

'பட்டி' என்னும் சொல் எவ்வாறு இப்பொருள்களைக் கொண்டது? இப்பொருள்கள் கொள்ளும் நிலையில் இச்சொல் எந்த மூலத்தில் அமைந்தது?

இதற்குச் சொல்லின் பகுதியும், அதன் அடித்தளமான மூலமும், அதன் அடியான வேர்ச்சொல்லும் காரணங் களாகும். சொல்லின் 'வேர்' ஆய்வு இதற்குத் துணை செய்யும்.

### படு - வினைப்பொருள் 2

'பட்டி' என்னும் சொல்லின் முதனிலை 'படு'. இவ் வினை ஆக்குவதையும் குறிக்கும்; அழிப்பதையும் குறிக்கும்.

'படு' என்பது துணைவினையாகவும் நின்று 'எனப் படும், எனப்படுவர், தலைப்படுவர், பழிப்படுவ செய்யார்' என்றெல்லாம் அவ்வவ்விடத்திற்கேற்ற பொருளைத் தரும்.

இவ்வாறன்றி 'படு' என்பது தானே வினையாக நின்று, ஆக்கல், அழித்தல் எனும் இரு முரண்பட்ட பொருள் களைத் தருவது இச்சொல்லிற்கமைந்த தனித்தன்மை.

இருவகைக்கும் தனித்தனியே சான்றுகள் :

ஆக்கப் பொருளில் சில :

"அதற்குப் படு (உண்டாகும்) பொருளின்
அதுவாகு கிளவி" (தொல் - பொருள் - 76)

"சோறு படுக்கும் (ஆக்கும்) தீயொடு" (புறம் 20 - 7)

"படு (உண்டாகும்) பொருள் வெஃகிப்
பழிப்படுவ (உண்டாவற்றை) செய்யார்"
(திருக்குறள் - 172)

அழிக்கும் பொருளில் சில :

"பட்ட (தோற்று அழிந்த) வேந்தனை
அட்ட வேந்தன்" (தொல் - பொருள் - 72)

"களிறு களம் படுத்த (அழித்த) (புறம் - 19 - 72)

"காதலன் தன் வீவும் காதலிநீ பட்டதூஉம்
(இறந்ததும்) (சிலம்பு - 29 - 7 - 2)

திருக்குறளில் 'படு' அழிக்கும் பொருளில் ஆளப்படவில்லை. ஆனால் இதனடியாக அமைந்த 'படர்' (கொடுக்கும் துன்பம்), 'படை' (அழிக்கும் போர்க்கு உரியது) என்னும் சொற்கள் அழிவுப் பொருளில் உள்ளன.

'அழிவாய்' என்னும் பொருளைத் தருவது 'படுவாய்' என்னும் சொல். இது வழக்கில் இறுதி கெட்டு 'படுவா' என்று வழங்கப்படுகின்றது. இஃது இழிவழக்காயிற்று.

இது போன்றே 'படுவி' என்பது கற்பு சிதைந்தவளைக் குறித்தது.

இந்தப் 'படு' அமைந்த ஒரே சொல் இருபொருளையும் தந்தமையும் இங்குக் காணத்தக்கது :

"எல்பட (ஞாயிறு தோன்றின காலத்தே) மலர்ந்த காமரு சுனை மலர்"[36]

என்று தோன்றும் பொருளிலும் அதே சொல்,

"படுபுள் ஓப்பி எல்பட (ஞாயிறு மறைய) வருதியர்"[37]

என்று மறைவுப் பொருளிலும் வந்தது.

இப்'படு' என்பது 'பட்டி' க்கு முதல் நிலையாக அமைந்து இரு பொருளையும் தருவதாயிற்று.

## படு - பெயர்ப்பொருள்

'படு' என்பது வினைப்பொருளைத் தருவது போன்று பெயர்ப் பொருளையும் தரும்.

"மரத்தின் குலையும் நீர்நிலையும் மதுவும்
முகரிமைப் பெயரும் படு என மொழிப"[38]

என்று பிங்கல நிகண்டு 'படு'வைப் பெயராக வைத்து நான்கு பொருள்களையும் பெயர்ப் பொருள்களாகக் காட்டியது. இந்நான்கு பெயர்களில் 'முகரிமைப் பெயர்' என்றால் என்ன? இதற்குப் 'பேரறிவு' என்று பொருள் காட்டினர். இப்பெயர் நம் பட்டிமண்டபப் பாங்கிற்குத் துணை செய்வதால் இதன் பொருள் விரிவைக் காணவேண்டும்.

பிங்கலம் காட்டிய 'முகரிமைப் பெயர்' என்பதற்குப் பொருள் கூறுவது போன்று சூடாமணி நிகண்டு.

"படு, மரக்குலையே கள்ளுப் பரவுநீர் நன்மைப்பேர்"[39] என்று 'முகரிமைப் பெய'ருக்கு 'நன்மைப் பெயர்' என்று கூறியது.

இவற்றிற்கு இலக்கியமாகக் கந்தபுராணம்,

"முகரிமை படைத்தவன் தோல் முகத்தவன்"[40]

என்று பாடியது. இங்கு 'தலைமைத் தன்மை கொண்டவன்' என்று பொருள்.

எனவே 'படு' என்பது பெயர்ச் சொல்லாக 'முகரிமை' என்னும் பெயரில் நின்று 'பேரறிவு', 'நன்மை', 'தலைமை' எனும் மூன்று சிறந்த பொருள்களைத் தருவதாகின்றது.

இப் பெருமைப் பொருள்களுடன் 'படு' வைக் காணும் போது பட்டிமண்டபம் சங்கப் பாங்கில் பெருமையோடு திகழ்ந்தமைக்குச் சான்றாகிறது.

இத் தொடர்பால் 'முகரிமை' ஒரு தாழ்வுப் பொருளிலும் திருஞானசம்பந்தரால் பாடப்பட்டுள்ளது. 'முகரிமை' என்னும் பண்புப் பெயரை 'முகரி' என்னும் உயர்திணைப் பெயராக வைத்து

"பஞ்சேந்திரிய வஞ்ச முகரிகாள்"[41]

என்று பாடினார் . கண்டபடி பாய்ந்து சிலநேரம் வஞ்சம் செய்யும் ஐந்து பொறிகளை இவ்வாறு தாழ்த்திப் பாடினார்.

இப்பொருளில் பட்டி மண்டபத்தை நோக்கினால் அது பின்னர் எழுந்த சமய காலப் பட்டிமன்ற நிகழ்ச்சிகளுக்குப் பொருந்துகின்றது.

நிகண்டுகள் 'படு' என்னும் பெயர்ச் சொல்லுக்கு 'நீர்நிலை' என்னும் பொருளையும் அறிவித்தன.

இதற்கு இலக்கியமாக முன்கூட்டியே சிறுபாணாற் றுப்படை ஓர் அடியை அமைத்துள்ளது.

"பனிநீர்ப் படுவில் பட்டினம் படரினும்"[42]

எனும் அடி அது. இங்கு 'படு' நீர்நிலையாகிய குளத்தைக் குறித்ததாகும். இதற்கு உரை விளக்கிய நச்சினார்க்கினியர்,

"குளிர்ச்சியையுடைய, நீரையுடைய
குளத்தை உடையதாகிய"

என்று குளமாகக் காட்டினார் . தொடர்ந்து படு - "மடுவும் ஆகும்" என்றும் குறித்தார்.

இவ்வாறாகப் 'படு' என்பது மேற்கண்ட பொருள் களைத் தருகிறது . இப்பொருள்களும் 'படு + இ - பட்டி' ஆகும்போது சங்கப் பாங்கையும், சமயப் பங்கையும் காட்டுகின்றது.

இவ்வாறெல்லாம் பொருள்கள் விரியினும் 'படு', அதன் முதற்பொருளில் வளர்ந்த பட்டி என்பது விளை யாட்டாகக் குறும்பு செய்யும் பொருளையும் வினையாகச் சொல்லாடும் பொருளையும் தந்து நிற்கின்றது . இப் பொருள்கள் 'பட்டி' என்னும் சொல்லுக்கு எவ்வாறு பொருந்தின? இதற்கு விடைகாண 'படு' என்னும் முத னிலைக்கு அடித்தளமான வேர்ச்சொல்லைக் காண வேண்டும்.

## படுவின் வேர்

'படு' என்பதற்கு வேர்ச்சொல் 'பள்' என்பது . இது 'பன்', 'பண்' ஆகும். ளகரம் ணகரமாகத் திரியும். புணர்ச்சி யிலும் இதனைக் காணலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| உள் | - | உண் | - | உண்மை |
| ஒள் | - | ஒண் | - | ஒண்மை |
| வெள் | - | வெண் | - | வெண்மை |
| விள் | - | விண்டான் | | |
| கொள் | - | கொண்டான் என்பன போன்று, | | |

பள் - பண் - பண்ணை ஆயிற்று . இஃது ஒரு வழி வளர்ச்சி . ஒரு வேர்ச்சொல்லிலிருந்து பல வழிச்சொற்கள் தோன்றும் :

பள் - பண் - பாண் - பாணி - பாணன்;
பள் - பண் - பாண் - பாடு - பாட்டு;
பள் - பண் - பண்ணு - பண்டம்;
நள் - நண் - நண்பன் - நட்டோன்
நள் - நண் - நடு - நடுவண் என்றெல்லாம்
வளர்வது போன்று

பள் - பண் - படு - பாடு (பண்பாடு)
பள் - பண் - படு - (படு + இ) - பட்டி

இவ்வாறு பண் - பட்டி என்றாவதை

திண் - திடு - திட்டு - திட்டி (மேலிடத்தை உடையது)

என்றாவது கொண்டும் உணரலாம்.

'படு' என்னும் முதனிலை 'இ' என்னும் வினை முதல் விகுதி சேர்ந்து படு + இ = பட்டி என்றாகியது.

தடு - தட்டி (தடுக்கவைப்பது)
தொடு - தொட்டி (தோண்டிய பள்ளம் போன்று கொள்கலமானது)
அடு - அட்டி (அடுதொழிலாம் சமையலைச் செய்பவன்)
ஒடு - ஒட்டி (ஒட்டிக்கொள்ளும் பொருள்)

கொல்லும் வினையைச் செய்வது 'கொல்லி' என்றும், வெட்டும் வினையைச் செய்பவன் 'வெட்டி' (வெட்டியான்)

என்றும் ஆவன போன்று 'படு' வினையைச் செய்து 'பட்டி' ஆகியது.

*திருக்குறள்*

*அகத்தில் (உள்ளே) படுபவனை (சிக்கிக்கொள் பவனை)*

"அகப்பட்டி ஆவாரைக் காணின்" *(குறள் 1074)*

என்றது. 'படு' - 'பட்டி' ஆனதற்கு நல்ல சான்று இது.

அகப்படு + இ = அகப்பட்டியானதைத்

தொல்காப்பியரும்,

"இடைநிலைப் பாட்டே தரவு அகப்பட்ட
மரபின என்ப" என்று அமைத்தார்.

## பண்ணை

இவ்வாறு பள், பண் ஆகி, படு ஆகி, பட்டி ஆனது. இந்த வேர்ச்சொல் 'பள்' - பண் ஆகி மற்றொரு வளர்ச்சி பெறும். அது :

பள் - பண் - (பண் + ஐ) பண்ணை, என்பது. 'பண்ணை' என்னும் சொல்லாக்கத்திற்குப் பல பொருள்கள் விரிந்தன.

"விலங்கு துயிலிடமும் மகளிர் விளையாட்டும்
கூட்டமும் அவையும் பண்ணை"[43]

என்றது பிங்கல நிகண்டு. இங்குள்ள நான்கு பொருள்களில் விலங்கு துயிலிடம் 'தொழுவம்' என்றும், 'பட்டி' என்றும் கூறப்படும். அடுத்துள்ள 'கூட்டம்', 'குழு' என்றும், ஒன்று கூடுவது என்றும் பொருள்தரும். அடுத்துள்ள 'அவை'யைக் காண்கின்றோம். கூட்டம், அவையாகிய இரண்டும் பண்ணையைப்போல் பட்டி என்பதற்கும் வேண்டற்பாலன. இவ்வகையில் இரண்டும் (பண்ணை, பட்டி) ஒருவழியில் பொருந்துகின்றன.

பிங்கல விளக்கத்தில் மூன்றாவதாக 'நீர் விளையாட்டு' உள்ளது. முன்னரே தொல்காப்பியர்,

"கெடவரல் பண்ணை ஆயிரண்டும்
விளையாட்டு"[44]

என்று விதித்தார். இவ்விளையாட்டில் மகளிர் நீர் விளையாட்டும் ஒன்று:

"ஒண்ணுதல் அரிவை பண்ணை பாய்ந்தென"[45]

என்று ஐங்குறுநூறு 'பண்ணை பாய்ந்தென' என்று நீரில் பாய்ந்து விளையாடுவதைக் குறித்தது.

## பண்ணும் படுவும்

'பண்ணை' நீர்நிலையைக் குறிப்பது போல் 'படு' என்பதும்

"பனிநீர்ப் படுவிற் பட்டினம்" என்பதில் 'படு', நீர்ப்பண்ணையாம் குளத்தைக் குறித்தது.

எனவே, 'பண்' என்னும் மூலத்தில் வளர்ந்த 'படு'வும் 'பண்ணை'யும் பொருளில் ஒன்றுகின்றன.

## விளையாட்டு

'பட்டிகுறித்தல்' என்பது ஒரு விளையாட்டு. இதற்குக் 'கட்டுக்கடந்து போதல்' என்று பொருள். இப்பொருளும் வாய்காவாது பேசும் பட்டிக்கும் துணையாகும்.

இனி 'விளையாடல்' என்பதன் பொருள் பொதிவைக் கண்டால் அஃதும் 'படு', 'பண்ணை' இரண்டையும் ஒத்து நிற்க வைப்பதை அறியலாம்.

'விளையாடல்' என்றால் என்ன?

இத்தொடர் விளை - (ஆள்தல்) ஆடல் என்று பிரி பட்டு ஒரு வினைவை உண்டாக்கவோ பெறவோ செயலைக் கையாளுதல் என்று பொருள் விரியும். செயலைப் பண்ணு தல் ஆகும். இவ்வகையில் 'பண்'ணும் 'பண்ணை'யும், 'படு' என்பதும் ஒன்றாகின்றன.

இங்கு விளையாடல் என்பதற்கு இக்காலத்துச் சிறுவர் விளையாட்டை நினைவிற் கொள்ளக்கூடாது. விளை யாடல் என்பதன் தோற்றத்துப் பொருளுடன் பார்த்தால் பண்ணையும் விளையாட்டு; பட்டியும் விளையாட்டு. சொல்லளவில் பொருந்தப் பார்க்கும் போது பட்டிக்கு விளையாட்டு என்பது நிறைவாகப் பொருந்துவதாகத் தெரியவில்லை.

நிறைவுகொள்ள ஓர் இலக்கிய ஆட்சி துணைக்கு நிற்கின்றது. அஃது பண்ணை - நீர்ப்பண்ணை தொடர்பில் உள்ளது. முன்னர் கண்ட, எயிற்பட்டினம் என்னும் நகரை வண்ணிக்கும் சிறுபாணாற்றுப்படை

"பனிநீர்ப் படுவிற் பட்டினம் படரினும்"

என்று பாடியது. இதில் 'படு' குளத்தை நீர்நிலையைக் குறிப்பது என்று கண்டோம். இதனை நச்சினார்க்கினியர் தந்த உரையாலும் அறிந்தோம். எனவே 'படு' முதனிலையில் தோன்றிய 'பட்டி'யும் 'படு'வை உடையது. அஃதாவது 'நீர்நிலையை உடையது' என்னும் பொருள்தரும் பட்டி ஆயிற்று.

இவற்றால் விளையாட்டு என்னும் பொருள் இயை பின் 'பட்டி'யும் 'பண்ணை'யும் இணையாகின்றன. கலித் தொகைக் குமரியின் பேச்சில் வந்தவன் விளையாட்டாக அதிலும் குறும்பு விளையாட்டாக மணல்வீட்டைச் சிதைத்தான். கூந்தலைப் பிடித்து இழுத்தான். பந்தை எடுத்துக்கொண்டு ஓடினான். இவ்வகையிலும் பட்டி ஒரு விளையாட்டு. இது விளையாட்டான பட்டி. இவ்வாறு பொருள் இயைபில் பட்டியையும் பண்ணையையும் பொருத்தியது. இரண்டும் பள் - பண் என்னும் மூலத்தில் பிறந்து பொருளிலும் ஒன்றி நின்றன என்று காட்டுதற்கே. இதுபோன்று வினையான பட்டிதான் சொற்போர்ப் பட்டிமண்டப நிகழ்ச்சி. விளையாட்டு குறும்புப்போர்;

வினை சொற்போர்; இது நிற்க, இனிப் பட்டி என்றும் சொல்லால் நேர்ந்த பொருள் கொண்ட சொற்கள் விரிந்ததைக் காணவேண்டும்.

## பட்டி - விரிவாக்கம்

'பட்டி' என்பது இடம் என்னும் பொருள் கொண்டதைக் கண்டோம். அதன்படி இடத்தைக் குறிக்கவும் நின்றது.

## பட்டி தொட்டி

"ஊரெல்லாம் பட்டி தொட்டி" என்னும் கம்பர் தனிப்பாடலில் அதனைக் காண்கின்றோம். இன்றும் நேமத்தான்பட்டி, நற்சாந்துப்பட்டி, வேந்தன்பட்டி, எனப் பல பட்டிப்பெயர் பெற்ற ஊர்கள் உள்ளன. இப்பட்டி 'இடம்' என்னும் பொருளில் அமைந்தது. எனினும் எவ்வகை இடம் என்று காண வேண்டும். கட்டுக்கடங்காது திரியும் மாடுகளை அடைக்கும் மாட்டுப்பட்டி இடம்பெற்ற ஊர் ஒன்றிரண்டு பெயர் பெற்றுப் பின்னர் பட்டி என்னும் பொதுப்பொருளில் பல ஊர்ப் பெயர்கள் அமைந்தன. மொழிஞாயிறு பாவாணர் அவர்கள் "கால்நடைத் தொழுவம் உள்ள சிற்றூர்" என்றார். அதிகம் கால்நடையாம் ஆக்கள், ஆடுகள், எருமைகள், எருதுகள் உள்ள ஊர்கள் பட்டி ஆயின. இவ்வாறு பல கால்நடைகள் குழுமி அமைவதை 'மாட்டுப் பண்ணை' என்று சொல்வதும் பட்டி - பண்ணைக்குப் பொருந்துவதாகும்.

## பட்டிகர்

பட்டி, மாட்டிற்கு ஆனது போன்று காவலை மீறியும் கடந்தும் களவு செய்யும் திருடர்களைப் பிங்கல நிகண்டு 'பட்டிகர்' என்றே குறிக்கின்றது.

அவ்வாறென்றால் 'பட்டி மண்டபத்தில் ஈடுபட்டோர் மாடு போன்ற பட்டிகளா(?)' என்று வினவிடத் தோன்றும். அத்துடன் 'குறும்புப் பேச்சு பேசியவர்களா' என்றும் வினவலாம். இவையிரண்டும் அல்ல.

இதற்கு முன்னர் சங்கப்பாங்கிற்கும் சமயப் பங்கிற்கும் அமைந்த வேறுபாடும், சமயப்பங்கு பெருந்தண்மை யிலிருந்து நழுவியதையும் குறித்துள்ளமை கொண்டு அமைதியுறலாம். சங்கப் பாங்கில் பெருமை, பெருந்தன்மை, கருத்து நோக்கம், பண்பாடு இருந்தன. சமயப்பங்கில் இவையனைத்தும் குறைந்தன; மறைந்தன.

இதுகொண்டு பண்டைச் சான்றோர் பங்குகொண்ட பட்டி மண்டபப் பட்டி தகவானது. அது வாய்காவாது எழுந்ததன்று. 'பட்டி' என்னும் சொல் ஆய்வில் 'படு' முதனிலையாக நின்று ஆக்கல், சிதைத்தல் என்னும் இரு பொருளையும் தந்ததை நினைவுகூர்ந்தால் பண்டையப் பட்டிமண்டபம் ஆக்கல் உள்ளீடு கொண்டது. வரவர மாறிய பின்காலப்'பட்டி' சிதைத்தல் உள்ளீடு கொண்டதாயிற்று.

இதனை வாய்ச்சொல், வாய்மொழி என்று பெருமைக்குரியதாய் அடைந்து காலப்போக்கில் வாயாடி, வாய்ப்பட்டி என்று சிறுமைக்குரியதாய் ஆனமை கொண்டும் உணரலாம்.

## பட்டிமை

'பட்டிமை' என்னும் சொல் கிளைத்தது . இது 'பட்டித்தன்மை' என்று பொருள் தரும் . மிக அடக்கமாக வளர்ந்து வாழ்ந்தவள் கண்ணகி. அவள் அடக்கத்தின் சின்னம்; அருங்கற்பின் திருவுருவம். நாவடக்கமும், சொற்கட்டும் உடையவள்; தற்புகழ்ச்சியில் ஊமை; புகழ் வார் புகழ்ச்சிக்கும் நாணுபவள் . தீயன பயிலாத நாவினள்; உரக்கப் பேசியறியா வாயினள்'. இவ்வாறுதான் இளங்கோ வடிகள் கண்ணகியைக் காட்டியுள்ளார் . அத்தகையவள் தன் கணவனுக்கு ஏற்பட்ட பழியால் குமுறிக் கொத்தளித்து எழுந்தாள் . எழுந்து அரசவையில் வழக்காடினாள்; பெருமன்னன் முன் எதிர்த்துப் பேசி வழக்காடினாள். "தேராமன்னா, நற்றிறம் படராக் கொற்கை வேந்தே" என்றெல்லாம் குறைகூறும் சொற்றொடர்களையும் சொன் னாள் . வழக்காடி வென்றாள் . வெற்றியால் பாண்டியன் இறந்தான் . கோப்பெருந்தேவியும் மயங்கி வீழ்ந்து கிடந் தாள் . இருவர் அழிவிற்குப் பின்னும் அவள் சினக் கொப் பளிப்பு தீரவில்லை. இறந்துகிடக்கும் பாண்டிமாதேவியை விளித்து உணர்ச்சி வெள்ளத்தால் சூள் உரைத்தாள் . சூள்

உரைத்தது பட்டித்தன்மை கொண்டது . அது 'பட்டித் தன்மை' என்பதை கண்ணகி வாயால் உரைக்க வைத்தார் இளங்கோவடிகள் . அவள் 'நான் உரைத்த சூள்கள் நடக்கக் காண்பாய்' என்பவள்,

"என் பட்டிமையும் காண்குறுவாய்"[46]

என்று தன் வாயாலேயே தன் பட்டித் தன்மையைக் குறித்தாள் .

சிலம்புக் காலத்திலேயே 'பட்டிமை' என்னும் சொல் அமைந்தது . தொடர்ந்து "கழகம் பட்டிமம் கல்வி பயில் களம்" என்றது பிங்கலம் (706) .

"ஏந்தல் தோழன் பட்டிமை உரைத்தது ஓரான்"[47] என்று திருத்தக்கதேவர் பாடினார் . 'ஏந்தல் தோழன் பட்டிமை'க்குப் பொருள் எழுதிய நச்சினார்க்கினியர்,

"சீவகன் தோழன் புத்திசேனன் மறைந்திருந்து உரைத்தது" என்றார் . "மறைந்திருந்து உரைத்தது" என்பது வஞ்சமாகப் பேசியதைக் குறித்ததாகும் . 'பட்டிமை' வஞ்சனைப் பொருளும் படும் . பிங்கலர்,

"கூடம் புள்ளுவம் குத்திரம் கஞ்சம்
மாயை யொடு பட்டிமை வஞ்சனை யாகும்"[48]

என்று பட்டிமையை வஞ்சனைச் சொற்களோடு பட்டிய லிட்டார் .

## பட்டிகை

'பட்டிகை' என்றொரு சொல் எழுந்தது. சுந்தரரின் திருமணத்தைத் தடுக்க வஞ்சமாக அந்தணன் உருவில் வந்த சிவபெருமான் கொண்டு வந்த ஓலையைச் சேக்கிழார் 'பட்டிகை' என்னும் சொல்லால் குறித்தார். இதிலும் பட்டிப்பொருள் உள்ளது. கொங்குவேளிர் இதனை 'அரசுமுறை' என்னும் பொருளில் பாடினார். இடுப்பில் கட்டிய ஆடையின் கட்டு நெகிழ்ந்து சரியாதிருக்கச் சுற்றிக் கட்டி அணியும் அணி 'பட்டிகை' எனப்படும்.

## பட்டினம்

பட்டினம் என்னும் சொல்லும் பட்டியுடன் தொடர்புடையது. பட்டியின் முதல்நிலையாகிய 'படு' நீர்நிலை என்னும் பொருள் கொண்டதைக் கண்டோம். அந்தப் 'படு', இனம் என்னும் சொல்லுடன் இணைந்து 'பட்டினம்' ஆயிற்று. ஆகி நீர்நிலையாம் கடலின் கரையில் உள்ள நகரைக் குறிக்கலாயிற்று.

## பட்டி நியமம்

பெருங்கதை பட்டி அரங்கு நிகழும் இடத்தைப் 'பட்டி நியமம்' என்னும் சொல்லால்,

"பட்டிநியமம் பதிமுறை நிறீஇ"[49]

என்றது. இதில் 'நியமம்' வடசொல். நியமிக்கப்பட்ட இடம் - அஃதாவது விதிக்கப்பட்ட, அமைக்கப்பட்ட இடம் என்று பொருள்.

பெருவழக்காகப் 'பட்டி மண்டபம்' என்னும் சொல்லே இடம் பெற்றுள்ளது. சிலப்பதிகாரக் காலம் முதல் இன்று வரை 'பட்டி மண்டபம்' இலக்கிய ஆட்சி யிலும் வழக்கிலும் உள்ளது. அக்கால வழக்கையும் கொண்டே பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலியோர் தம் உரைகளில் கையாண்டனர்.

# உ) சொல் - சொற்போர்

## சொல்

வாயில் தொடங்கி வாய்ச்சொல் வழியாக 'வாய்ப் பட்டி' வரை 'பட்டி' விளக்கிப் பார்க்கப்பட்டது. வாய் வளர்ச்சி அவ்வாறமைய வாயுடன் சேர்ந்த 'சொல்' (வாய்ச் சொல்) இப்பட்டி நிகழ்ச்சிக்கு எவ்வாறு விரிந்தது(?), எவ்வாறு பயன்பட்டது (?) என்பனவும் அறியத்தக்கன.

பொதுவில் சொல் என்பதற்குச் சொல்லப்படுவது என்பது பொருள். இதனை விரித்தால் எழுத்துக் கூட்டல் களாக ஒலிக்கப்படுவது; அத்துடன் பொருள் தருவது என்றாகும். இது உல - உல - உலவு என்று வளர்ந்து நா முதலிய வாய் உறுப்புக்கள் உலவுவதால் - அசைவு முதலிய இயக்கத்தால் ஒலியாக உருவாவது. உலவு, 'சொலவு' ஆகிச் 'சொல்' ஆயிற்று. "எல்லாச் சொல்லும் பொருள் குறித் தனவே"[50] என்றபடி பொருள் குறித்து வருவதே 'சொல்' என்றும், அப்பொருளும் காரணப் பொருளாகும் என்றும் தொல்காப்பியம் விளக்கிற்று.

எழுத்துக் கூட்டல்களாகப் பொருளுடன் எழும் ஒலிக்குச் 'சொல்' என்பது போன்று பல சொற்கள் உருவாயின. தமிழில் இவ்வகையில் 102 சொற்கள் உள்ளன. அத்துணையும் பொருள்தரும் எழுத்துக் கூட்டல்களைக்

குறிப்பனவாயினும் ஒவ்வொன்றும் தனித்தனிப் பொருட் குறிப்பை உடையது.

'சொல்தல்' என்றால் 'சொல்லை ஒலித்தல்' என்று பொருள். 'மொழிதல்' தனக்கென அமைந்த இயல்பில் சொல்லல். 'கிளத்தல்' எடுத்துச் சொல்லல். 'கூறல்' கூறு படச் சொல்லல். 'அறைதல்' உறுதியாகச் சொல்லல். 'உரைத்தல்' விளக்கி உரை கூறுதல். இவ்வாறு பேசுதல் என்னும் கருத்தைக் குறிக்கப் பல்வேறு வடிவில் சொற்கள் உள்ளன. இவையாவும் தத்தம் பொருள் வேறுபாட்டுடன் இக்காலத்தில் வழங்கப்படவில்லை. இடைக்கால இலக் கியங்களில் மாறிப் போயின. முற்கால இலக்கியங்களில் பெரும்பான்மையாக உள்ளன. உரிய பொருட்குறிப்பு மாறியதற்கு இலக்கண அமைதியும் ஏற்பட்டது.

"எண்ணத்தின் தோல் சொல்" என்றார் ஆல்மிசு என்னும் மேனாட்டறிஞர். தமிழன் வகுத்துக்கொண்ட துறைகளும் எண்ணத்தின் மெருகுத் தோல்களாகவே விளங்கின. அத்துறைகளைத் தமிழ்ச் சொற்களும் தொடர் களும் அடுக்கி அடுக்கி அடையாளங் காட்டுகின்றன.

மாந்தன் தன் உள்ளத்து உணர்வைச் சொல்லாக்கி மற்றவர்க்கு உணர்த்தி வாழவேண்டியவன். "எண்ணங்களை ஓவியமாகத் தீட்டிக் காட்டுவதே பேச்சு" என்றார் பாஃச்கல். வாயிருந்தும் இதனைச் செய்யாதவன் ஊமை மட்டும் அல்லன்; விலங்கும் ஆவான்.

## உரை

சொல்வதே பேசுதல். இப்பேச்சு உரைத்தல் ஆகும். நூல்களைப் படிக்கின்றோம்; செய்யுள்களைக் கற்கின்றோம். கற்ற செய்யுளின் நயப்பொருள் உள்ளத்தில் இனிப்பை ஏற்றுகின்றது. ஆழ்பொருள் அறிவைப் பட்டை தீட்டுகின்றது. அந்த இனிப்பை தீட்டிய வைரத்தை மற்றவரும் சுவைக்கவும் அணியவும் எடுத்து உரைத்தல் வேண்டும்.

கொத்தாகச் சிரித்த முல்லை மணம் விரிக்காது நின்றால் அது முல்லையாகாது; வெள்ளை மலர் தான். அது போன்றே செய்யுளைக் கற்றவன் தன் உள்ளத்தில் மலர்ந்த அதன் பொருளை மற்றவர்க்கு விளங்க விரித்து உரைத்தல் வேண்டும். உரைக்க இயலாதவன் கற்றவன் ஆகான்; அற்றவனே ஆவான். இதனைத் திருவள்ளுவர்,

> "இணர் ஊழ்த்தும் (மலர்ந்தும்) நாறா மலரனையர் கற்றது
> உணர விரித்துஉரையா தார்"[51] என்றார்.

இக்குறளில் "உரையாதார்" என்றதற்குச் சொல்லாதவர் என்பது பொருள் அன்று. 'உரைத்தல்' என்றால் செய்யுளுக்குப் பொருள் உரைத்தல். செய்யுளுக்குப் பொருளை விரித்தல் 'உரை' எனப்படும். செய்யுள் நூல்களுக்குப் பொருள் உரைத்தோர் 'உரையாசிரியர்' எனப்பெற்றதும் இதனால் தான்.

"உரைகோளாளர்க்கு உரைப்பது நூலே"52 என்றதிலும் இப்பொருள் உள்ளது. உரையைக் கேட்பவன் 'உரைகோளாளன்'. உரைப்பவன் 'உரையாளன்' - உரையாசிரியன்.

இவ்வாறு பொருள் விரித்து உரைப்பதை உரைத்தாலும், எழுதினாலும் அது 'உரைநடை' எனப்பட்டது.

ஆனால் இப்பொருட்கருத்தில் 'உரைத்தல்' என்னும் சொல் வழக்கில் வழங்கப்படுவதில்லை. சொல்லுதல் என்னும் பொதுப்பொருளிலேயே இலக்கியங்களும் இச்சொல்லை மிகுதியாக ஆள்கின்றன. 'விரித்து உரையாதார்' என்று வழங்கிய திருக்குறளே 'சொல்' என்னும் பொதுப் பொருளில் பல இடங்களில் சொல்கின்றது. வேறு பல பொருள்களிலும் இலக்கியங்கள் ஆண்டுள்ளன.

"உரை முடிவு காணான் இளமையோன்"[53]

என்று கரிகாலன் சொல்லப் பெற்றதில் 'உரை' என்றது வழக்கைக் குறிக்கின்றது.

"ஒற்றும் உரைசான்ற நூலும்"54 என்ற உரைசான்ற என்றதற்குப் புகழ் பொருந்திய என்று 'புகழ்' என்னும் பொருளே கண்டனர். இவ்வாறெல்லாம் 'உரை' என்பதற்கு அதன் உள்ளீட்டுப் பொருள் அன்றி வெவ்வேறு பொருள்கள் கிளைத்தன.

## உரையாடல்

செய்யுளுக்குரிய பொருளை உரையாசிரியன் மாணவனுக்கு உரைக்கும்போது மாணவன் ஐயங்களைக் கேட்பான். "நன்று சொன்னாய்" என்று ஏற்றும், "அறியாது கடாயினாய்" என்று மறுத்தும் ஆசிரியன் உரை பற்றிப் பேசுவான். இவ்வாறு அமையும் உரை பற்றிய இருவர் பேச்சு 'உரை (ஆள்தல்) ஆடல்' எனப்பட்டது. தொடர்ந்து 'உரை' என்ற கருத்தில் மட்டும் 'உரையாடல்' என்னும் தொடர் அமையவில்லை. பொருள் உரைக்கும் உரையில் வேறு சில கருத்துகளும் இடம் பெற்றன. தொடர்ந்து பிற கருத்துகள் மிகுதியாக இடம் பெறலாயின. இவ்வாறு இடம் பிடித்த வேறு பேச்சுகளும் இந்த 'உரையாடல்' என்னும் தொடரைத் தமக்கு ஆக்கிக் கொண்டன. தம் உரிமையாகவே தங்க வைத்துக் கொண்டன. இதனால் ஒருவருடன் ஒருவர் பேசிக்கொள்வதைக் குறிக்கவே 'உரையாடல்' என்பது நிலையாகப் பயன்படலாயிற்று.

"மெல்லிய இனிய கூறலின் இனியான் அஃது
ஒல்லேன் போல உரையா டுவலே"[55]

என்று ஒரு நற்றிணைத் தலைவி உரையாடுகின்றாள்.

"உரையாட்டு இல்லை உறுதவத்தீர்"[57]

என்று கோவலன் கவுந்தியடிகளிடம் உரையாடினான்.

"சற்று நீங்கித் தொழுது உரையாடி"[57]

என்று தண்டமிழாசான் சாத்தனாரும் நம்முடன் உரையாடுகின்றார்.

எனவே, மக்கள் தம் எண்ணத்தை மற்றவருக்கு வெளியிட்டுப் பேசிக்கொள்வதே 'உரையாடல்' ஆயிற்று.

## உரை வித்தகம்

இயல்பாகப் பேசப்படும் உரையாடலும் உரையாட்டும் மாறுபட்டுப் பேசுவதாக, அஃதாவது வினா விடையாகவோ, தடை விடையாகவோ மறுப்பு நிறுப்பாகவோ நிகழின் அஃது "உரை வித்தகம்" (நாலடி 315) எனப்பட்டது . இவ்வுரை வித்தகம் கருத்துப்போராம் பட்டிமண்டபத்தில் நிகழ்வதைக் குறிப்பதாகும் . இவ்வாறு 'உரை' பட்டி மண்டபப் பாங்காயிற்று.

## பட்டி உரை

இவ்வுரை வித்தகம் (திறமை) பட்டிமண்டப உரையாக

"படிறும் பயனிலவும் பட்டி
உரையும்" என்று ஆசாரக் கோவை (52) பாடியது.

## சொல்லாடல்

உரையாடல் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளும் பேச்சு . இஃது ஒரு முனை . அப்பேச்சு சொற்சோர்வு இன்றித் துணிவாகவும், சோடையின்றி முறையாகவும் பேசப்

படுதல் அடுத்த முனை. இதற்கு அறிவுத் தெளிவு வேண்டும். இடம், காலமறிந்து உரிய சொற்களைத் தேர்ந்து பெய்து சொல்ல வேண்டும். இது சொல்வன்மை எனப்பட்டது. அதனையே மேலும் உறுதியுடனும், திறமையுடனும் சொல்லுதல் 'சொற்றிறன்' எனப்பட்டது. இவ்வாறெல்லாம் சொல்லை ஆளுதல் 'சொல்லாடல்' எனப்பட்டது.

சொல் வன்மையுடன் திறமையாக உரையாடிப் பேசுபவன் "சொலல் வல்லன்" எனப்பட்டான். அவ்வாறு பேசும் பெண் "சொல்லாட்டி" எனப்பட்டாள். சொல் லாடுதலில் வல்லவளான ஒரு காதல் தலைவியோடு உரையாடிய ஒரு காதல் தலைவன், அவளோடு சொல்லாட முடியாமையை,

"சொல்லாட்டி நின்னொடு
சொல்லாற்ற கிற்பார் யார்?"[58]

என்றான். அவளைச் 'சொல்லாட்டி' என்றான். அவளுடன் சொல்லாடி நிற்க எவரும் இல்லை என்றும் அவன் "சொல்லாற்றகிற்பார்" என்று 'சொல்லாற்றுதல்' என்றொரு சொல்லாக்கமும் தந்தான். இஃது ஒரு சொல்லாடுதலுக்குச் சொல்லாற்றுதல் வேண்டும் என்பதைக் குறித்தாயிற்று.

மற்றொரு கலித்தொகைத் தலைவன் தன் காதல் தலைவியின் இசைவுக் கருத்தைப் பெறத் தன் சொல்லாற்று தலைப் பயன்படுத்த எண்ணி,

"இவளைச் சொல்லாடிக் காண்பேன் தகைத்து"[59]

என்று தன் சொல்திறத்தை நம்பிப் பேசினான்.

"கரப்பவர்க்கு யாங்கொளிக்குஞ் சொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்"[60]

என்னும் திருக்குறள் எளியவன் ஒருவன் தன் வறுமையைப் புலப்படுத்தற்கு உரிய தாழ்வு காட்டும் சொற்களை எல்லாம் தேர்ந்து பல்லைக்காட்டிப் பணிந்து பேசும் ஒருவகைத் திறத்தைச் 'சொல்லாடல்' என்னும் சொல்லால் காட்டியுள்ளது.

இவ்வெளியவனைப் போன்று அறிவில்லா எளியவனான மடையனும் கண்ட சொற்களைச் சேர்த்து ஆரவாரமாகச் சொல்லாடுவதை,

"கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்"[61]

என்னும் குறளில் 'வெறும் ஆரவாரப் பேச்சின் தகுதி, சோர்வைத்தான் பெறும்' என்பதால் 'வெற்றுச் சொல் லாட'லும் உண்டு என்பதைக் காட்டுகின்றது.

இதுபோன்றே எடுத்த செயலைக் கெடுப்பவனுடன் திறமையான சொற்களால் சொல்லாடுவதில் பயனில்லை. அவனிடம் சொல்லாடாமல் நட்பை விடுதல் நலம். "ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை சொல்லாடார் சோர

விடல்"62 என்று விளக்குகின்றது . இது பயனிலாச் சொல்லாடல்.

ஓர் ஆயர்குலச் சிறுமி ஊர்க்குள் மோர் விற்றபோது கோவலன் வெட்டுண்ட செய்தி கேட்டாள். ஆயர் சேரியில் தங்கியிருந்த கண்ணகியிடம் சொல்ல ஓடோடி வந்தாள் சிறுமி . கொடிய செய்தி! எப்படிச் சொல்வாள்? வாய் குளறிற்று; சொல்லே வரவில்லை.

"சொல்லாடாள் சொல்லாடாள் நின்றாள்" அவள் நிலையை உணர்ந்த கண்ணகி ஏதோ தீங்கு நிகழ்ந்து விட்டது என்று உணர்ந்தவளாய் அவளிடம் செய்தியைப் பெறத் தகுதியான சொற்களைக் கொண்டு,

"அந்நங்கைக்குச்
சொல்லாடும் சொல்லாடும் தான்"[63]

என்று இளங்கோவடிகள் சொல்லாடலை அடுக்கிக் கூறச் செய்தார்.

இவ்வாறெல்லாம் 'சொல்லாடல்' என்னும் தொடர் இலக்கியங்களில் பேச்சு மிடுக்கைப் பேசி நிற்கின்றது.

உரையாடலின் வளர்ச்சி சொல் வன்மை, சொற் றிறன், சொல்லாடல், சொலல்வல்லன், சொல்லாட்டி, சொல்லாற்றுதல் என்றெல்லாம் அமைந்தது.

உரையாடல், சொல்லாடலின் அடுத்த முனையாகச் 'சொற்பொழிவு' அமைந்தது.

## சொற்பொழிவு

சொற்பொழிவு, சொற்பெருக்கு என்னும் சொல்லமைப்புக்கள் பிற்காலத்தில் உருவானவை . மழை பொழிவது போன்று தடையின்றிச் சொல்லைப் பொழிதல் சொற்பொழிவு . அது தனியே நின்று கொண்டு பொழிவது அன்று . இருவர்க்குள் உரையாடிக் கொள்வதும் அன்று . ஓர் அவை; ஒரு தலைவர், ஒரு சொற்பொழிவாளர், ஒரு கருத்து, கேட்போர் இவற்றுடன் முறையும் நெறியும், நயமும், சுவையும், கருத்தும் பொருத்தமும் கொண்டதாக அமைய வேண்டும் . மழைப்பொழிவதால் வளம் விளைவது போன்று கேட்போருக்குப் பயன் விளைய வேண்டும் . சில காலம் மழை பொழியாமல் அடித்துக்கொட்டி அழிப்பதுண்டு . அது போன்று கேட்டைத் தூண்டிவிடும் பேச்சுகளில் சொற்கள் பொழியப்பட்டாலும் அது சொற்பொழிவாகாது . அது சொல்லாட்டமாகும்.

சொற்பொழிவு என்னும் சொற்றொடர் முற்காலத்தில் தமிழில் இல்லாததால் 'தமிழகத்தில் சொற்பொழிவே நிகழ்ந்ததில்லை; சொற்பொழிவு என்றொரு துறை இல்லை' - என்று கூறக்கூடாது .

> "தமிழ்நாட்டில் பழைய காலத்தில் சொற்பொழி
> வாற்றுவது உண்டா? பேச்சு வன்மை உண்டா?
> என்று பலர் கேட்கிறார்கள் . ஏதோ பேச் -
> செல்லாம் கப்பலேறி ஆங்கிலத்தோடு ஆங் -
> கிலமாக வந்ததாக எண்ணம்" -

என மறைந்த தமிழ்ச்செல்வர் டி. கே. சிதம்பரநாதனார் 'எல்லாம் வெளிநாட்டுச் சரக்கு' என்று சொல்பவரைக் குறிப்பாக மறுத்துக் கூறினார். சொற்பொழிவு நம் நாட்டிற்கு இறக்குமதியானது என்பதற்கு மாறாகத் பழந் தமிழகத்தில் இத்துறை இருந்தது. இது நெறியும் முறையும் கொண்டதாக விளங்கியது. செம்மையும் செழிப்பும் உடையதாகத் துலங்கியது.

சொற்பொழிவைக் குறிப்பாகவும் சிறப்பாகவும் கொண்ட தமிழ் நூல்களிலிருந்து பலவற்றையும் காட்டினால் அஃது ஒரு தனி நூலாகவே ஆகும். எனவே, திருக்குறள் ஒன்று கொண்டே அறிதல் இங்கு நலமாகின்றது. திருக்குறளில் உள்ள 'அவையறிதல், அவையஞ்சாமை, சொல்வன்மை' என்னும் மூன்று அதிகாரக் குறட்பாக்கள் சொற்பொழிவின் இலக்கண விளக்கங்களாக உள்ளன. இக்கால மேல்நாட்டினர் பலர் சொற்பொழிவின் இலக்கணம் கூறுவது போன்று பல கருத்துக்களை வெளியிட்டனர். அவையெல்லாம் அன்னோர் திருக்குறளை அறிந்தோ அறியாமலோ வெளியிட்டவை. பெரும்பாலும் அறியாதார் என்றே கொள்ளவேண்டும்.

"கேட்டார்ப் பிணிக்கும் தகைஅவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"[64] -

என்னும் குறள் சொற்பொழிவு நெறிக்கு ஒரு நன்னெறி.

இக்குறளுக்கு விளக்கவுரை போன்று,

"சொற்பொழிவில் மூன்று தகுதிகள் இருக்க வேண்டும். ஒன்று, விளக்கமான கருத்துச் சொற்கள் (தகை - தக்கசொல்) : இரண்டு, கேட்கும் மக்களது மனத்தைத் தொட்டு இழுத்தல் (பிணித்தல்); மூன்று; மக்களுக்கு ஆர்வத்தை ஊட்டவேண்டும். (வேட்ப மொழிவது).

என்றான் ஒரு மேலைநாட்டறிஞன். அவன் தமிழ் நாட்டுப் பரிமேலழகன் அல்லன். மேடைப்பேச்சின் பிறப்பிடம் என கூறப்படும் கிரேக்க நாட்டுப் பேரறிஞன் ‘கியும்டிலியன்’ என்பது அவன் பெயர். "கேட்டார்ப் பிணிக்கும்" திருக்குறளை கியும்டிலியன் படித்து, அதனால் பிணிக்கப்பட்டு அதன் கருத்தையே இவ்வாறு கூறினானோ (?) என்றன்றோ எண்ணம் எழுகின்றது.

மற்றொரு கூட்டுச் சான்று :

"சிறிய சொற்றொடர்கள் அமைந்த எளிய நடையில், கருத்துக்களை விளக்கும் சொற்றொடர்களாக எளிமை, இனிமை, சுருக்கத்தோடு முறையாகச் சொல் . . . . . . . . . . . . ‘இவ்வாறு கூட்டத்தை நோக்கித் திறமையாகப் பேசு". இஃதொரு மேலைப் பொன்மொழி.

"எது செயலைத் தூண்டுகின்றதோ அது
சிறந்த பேச்சு"

- இஃதொரு மேலை பொன்மொழி.

"நாம் சொற்களால் மக்களை ஆள்கின்றோம்"

- இஃதும் மேலைப் பொன்மொழி.

மேலே காட்டப்பட்ட மூன்றும் முறையே இங்கிலாந்து நாட்டுச் சொற்பொழிவுத் துறையின் பொற்காலமாம் பிற்காலத்தில் வாழ்ந்த விளாப்ஃச்சன், சிபார்சு, டிசரலி ஆகிய மூவர் உதிர்த்த பொன்மொழிகள்.

இம் மூன்றையும் படித்து ஒன்று கூட்டி நோக்கினால்

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம், நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்"[65]

என்னும் குறள் விரைந்து நினைவிற்கு வருகின்றது. எங்கெங்கோ எவ்வெப்பொழுதோ கூறப்பட்ட பல கருத்துக்களின் மாணிக்கச் சுருக்கம் அன்றோ இக்குறளாக உள்ளது. இக்குறள் சொற்பொழிவுத் துறைக்கு வழங்கிய ஒளிக்கதிர்.

சொற்பொழிவிற்கு எவ்வெவ்வகைச் சொற்களைக் கொள்வது? திருக்குறள் பட்டியலிட்டுள்ளது.

"சொல்லின் தொகை, சொல்லின் வகை,
சொல்லின் நடை, சொல்லின் திறன்,
சொல்லின் நுணுக்கம், இன்சொல், பயனுடைய
சொல், செல்லுஞ்சொல், வெல்லுஞ் சொல்"

எனக் கூறப்பட்டவை கொள்ள வேண்டியவை.

'பயனில் சொல், பண்பில் சொல், பின்னோக்காச் சொல், சோர்வுச் சொல், புன்சொல், இன்னாச்சொல்,

தீச் சொல், எள்ளுஞ்சொல்' எனப்பட்ட இவை தள்ளவேண்டிய சொற்கள்.

இவ்வாறெல்லாம் பிற நூல்களும் ஆங்காங்கே காட்டியுள்ளன. ஒரே தொகுப்பாக ஒரு நூல் முற்காலத்தில் இல்லை.

இத்துணை வரையறைகள் சொல்லப்படும் சொற்பொழிவிற்கு முற்காலத்தில் ஒரு தொடர் இல்லையோ(?) எனலாம். ஒரு தொடர் இல்லை; வகைக்கொன்றாகப் பல தொடர்கள் இருந்தன.

இலக்கிய இலக்கணக் கருத்துக்களை விரித்து உரைக்கும் சொற்பொழிவு "விரிவுரை" எனப்பட்டது.

அறிவுரையாக வழங்கப்படும் சொற்பொழிவு "நல்லுரை" எனப்பட்டது.

அறிவுறுத்தலாகப் பொழியப்பட்டது "செவியறிவுறூஉ"

வாழ்த்துரையாக வழங்கப்படுவது "வாயுரை வாழ்த்து"

ஆன்மிகத் தொடர்பாக உரைக்கப்படுவது "புண்ணிய நல்லுரை";

இத்துணையும் தொகுத்துக் கூறும் ஒரு சொல் "கட்டுரை" என்பது.

தொன்மைக் காலத்தில் நிகழ்ந்த சொற் பெருக்கு களைக் குறிக்கும் சொல்லாகக் 'கட்டுரை' என்னும் சொல்லையே இலக்கியங்களில் காண்கின்றோம்.

'கட்டுரை' என்பதன் பொருள் 'பொருள் பொதிந்ததாக உரைக்கப்படுவது' என்பது . இவ்வாறே உரையாசிரியர் பலரும் எழுதினர்.

இக்காலத்தில் 'கட்டுரை' உரைக்கப்படுவதைக் குறிப் பதாக இல்லை . எழுதப்படுவதைக் குறிக்கின்றது . ஒரு கருத்தை விளக்கிக் கட்டுக்கோப்போடு எழுதப்படுவதைக் 'கட்டுரை' என்கின்றோம். இப்பொருள் உண்டானதற்கு மூலகாரணம் சிலப்பதிகாரத்தில் உள்ள "உரைபெறு கட்டுரை" என்பது . இத் தொடருக்குக் கொண்ட மாற்றுக் கருத்தால்தான் 'கட்டுரை' எழுதப்படுவதைக் குறிக்கலா யிற்று . 'உரைபெறு கட்டுரை' என்பது பாடல் அன்றி உரைநடை பெற்றுப் பொருள் பொதிந்ததாக உரைக்கப் படுவது என்னும் பொருள் கொண்டது. சிலப்பதிகாரத்தில் உள்ள அப்பகுதி எழுத்துருப் பெற்றுள்ளது என்னும் ஒரே வகைக் கருத்தால் எழுந்தது, காலப்போக்கில் எழுதப் படுவதைக் குறிக்கும் சொல்லாய்க் கட்டுரை பயன்படுவ தாயிற்று.

இச்சொல் மேடைப்பேச்சு அல்லாமல் உரையாற்று வதைக் குறிப்பது (உரையாடலை அன்று) என்பதை இச்சொல் அமைந்த இடங்களைக் கொண்டு அறிய

முடிகின்றது . இருவர் தத்தம் கருத்துக்களைப் பேசிக் கொள்வது உரையாடல் . மற்ற ஒருவரோ பலரோ அவர் பேசாமல் ஒருவர் மட்டும் பேசுவது உரையாற்றல். இந்த உரையாற்றல் சிலப்பதிகாரத்தில் 'கட்டுரை' என்னும் சொல்லில் அதிகமான இடங்களில் பயின்று வருகின்றது . எனவே, சிலப்பதிகாரத்திலிருந்து ஒன்றிரண்டு காணலாம்.

பள்ளியறையில் கோவலன் குலவி மெய்மறந்து கண்ணகியின் அழகைப் பாராட்டிப் பேசினான் . கண்ணகி பேசவில்லை; ஒரு சொல்லும் சொல்லவில்லை . எனவே, இது உரையாடல் அன்று . கோவலன் பேச்சு[43] அடிகளில் நீண்டுள்ளது . இவன் பேச்சில் உவமை, கதைக்குறிப்பு, கருத்து விளக்கம் உள்ளன . ஓரளவில் சிறு உரையாற்றல் எனலாம். இப்பேச்சு துவக்கப்படுவதைக்

"கோவலன் கூறுமோர் குறியாக் கட்டுரை"[66]

என்றும், முடிவில்;

"உலவாக் கட்டுரை", "குறியாக்கட்டுரை;" "உலவாக் கட்டுரை" என்றும் 'கட்டுரை' என்றே இளங்கோவடிகள் குறித்தார் . இது நிறைவான சொற்பொழிவு என்பதற்கில்லை. ஏனென்றால் அவை இல்லை.

சிலம்பில் 23 ஆம் காதை "கட்டுரை காதை" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது . இக்காதையில் மதுராபதித் தெய்வம் கண்ணகியிடம் உரையாற்றும் நீண்ட பேச்சு

உள்ளது . 200 அடிகளைக் கொண்ட இக்காதையில் மதுராபதி உரையாற்றல் 156 அடிகள்.

ஒரு சொற்பொழிவு என்பது முன்னுள்ளாரை விளித்தல், அறிமுகம் செய்து கொள்ளல், எடுத்த கருத்துக்கு முன்னுரை சொல்லல், சான்று, உவமை, குட்டிக்கதைகள், பழமொழி, வண்ணிப்பு, அடுக்கு மொழிதல், கருத்தை விளக்கல் - எடுத்த குறிக்கோளை நிறைவேற்றி முடிவுரை கூறி முடித்தல் எனும் அமைப்பில் இக்காலத்தும் விளங்குவதைக் கொண்டு நோக்கினால் மதுராபதி பேச்சில் இவை உள்ளன. பலர் கூடிய அவை மட்டும் இல்லை.

வடநாடு சென்று வென்று வந்த செங்குட்டுவன் அவையில் வீற்றிருந்தான். மாடலன் என்னும் மறையோன் வந்தான். அவன் வருகையின் நோக்கமே செங்குட்டுவன் மேலும் 'போர்க்கள வேள்வி செய்யாது அறக்கள வேள்வி' செய்யவேண்டும் என்னும் அறவுரை கூறுவதாகும்.

அறவுரை கூற அமர்ந்தவாறே கூறலாம்.

"குறையாக் கேள்வி மாடலன் எழுந்து"[67] நின்றான். எழுந்து நின்று உரையாற்றினான். எழுந்து,

"மன்னர் மன்னே" என்று விளித்தான்.

"அமைக நின் சீற்றம்", "இகழாது என்சொற்கேட்டல் வேண்டும்" என்றான். இது சொற்பொழிவின் நோக்கத்திற்கு அடிகோலல்.

"அறக்கள வேள்வி செய்யாது, யாங்கணும்
மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை"[68]

என்று சொற்பொழிவின் தலைப்பை அறிமுகம் செய்தான். இத்தலைப்பினைப் பலவாறாக விளக்கினான். செங்குட்டுவனை,

"............ காவலன் ஆயினும்,
............ விறவோன் ஆயினும்,
............ விடுத்தோன் ஆயினும்,
............ கொற்றவன் ஆயினும்,
............ புகுந்தோன் ஆயினும்,
............ அருந்திறல் ஆயினும்,
............ ஆடினோன் ஆயினும்,
............ வேட்டோன் ஆயினும்"[69]

என்றெல்லாம் அடுக்குமொழிகளாகக் கூறினான்.

நிலையாமைகளை விளக்கிக் கருத்து விளக்கம் தந்தான்.

இடையில் உவமைகள், குட்டிக்கதைகள் அமைந்தன. நிரந்தினிது சொல்லிய வல்லமையால் செங்குட்டுவன் விரைந்து தொழில் கேட்டு மறக்கள வேள்வியை விடுத்தான்.

இஃது ஒரு நிறைவான சொற்பொழிவா? ஆம்; மன்னன் அவைத் தலைவன் அமைச்சர், படைத்தலைவர், அனைவர்க்கும் நேரடியாகக் கூறப்பட்டதன்று. செங்குட்டு

வன் ஒருவனுக்கே ஆயினும் பொதுவான இவ்வுரை அனைவர்க்கும் பொருந்தும். இவ்வகையிலும் நிறைவான சொற்பொழிவாகும்.

இவைபோன்றே மணிமேகலையைத் தொடர்ந்து இன்றைய மனோன்மணீயம் வளர இவ்வகையாகச் சொற்பொழிவு அமைப்புகள் உள்ளன. எனவே, முற்காலத்திலும் சொற்பொழிவு நிகழ்ந்தது. அது 'விரிவுரை', 'நல்லுரை' என்னும் பெயரிலும் நிகழ்ந்துள்ளது.

## சொற்பொழிவு ஆற்றுப்படை

சொற்பொழிவின் நெறிகளை வகுக்கும் தனியொரு முழுநூலாக முற்காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. இருந்து மறைந்திருக்கலாம்.

இக்காலத்தில் சில நூல்கள் எழுந்துள்ளன. இவற்றுள் முதல் தோற்றமாக "சொற்பொழிவு ஆற்றுப்படை" என்னும் நூல் எழுந்துள்ளது.

இஃது ஒரு சிறு நூல் கையடக்க அளவானது. 56 பக்கங்களைக் கொண்டது. திருநெல்வேலி திரு. பால்வண்ண முதலியார் இதனை எழுதினார். சொற்பொழிவு செய்ய விரும்புவோரை ஆற்றுப்படுத்தும் (வழிப்படுத்தும்) நூல். உரைநடை நூல் 11 இயல்களைக் கொண்டது.

நான்காம் சங்கமாகிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் எட்டாம் ஆண்டு விழாவில் இந்நூல் அரங்கேற்றம்

பெற்றது . சேதுபதி மன்னர் திருமிகு . பாண்டித்துரைத் தேவர் தலைமையில் அரங்கேறியது.

தனித்தமிழில் எழுதப்பட்டமை குறிக்கத்தக்கது.

டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பேச்சுக் கலை பற்றி அரிய நூலை எழுதியுள்ளார் . தேர்ந்து தெளிந்த சொற்பொழிவு மன்னராகிய கலைஞர் நூல் . சொற்பொழிவுக்கு உயிரோட்டத்தைக் கூட்டுவது . பொழிவாற்ற விரும்புவோர்க்கு மட்டுமன்றிப் எப்பொழிவாளருக்கும் வழிகாட்டும் நூல் எனலாம்.

மேலும் சிறு சிறு நூல்கள் இரண்டு வெளிவந்துள்ளன.

பொதுவான சொற்பொழிவால் வன்மையும் வளர்ச்சியும் சொற்போருக்கு அடித்தளம் அமைத்தன.

## சொற்போர்

சொற்பொழிவின் அடுத்த வளர்ச்சியாகச் சொற்போர் தோன்றியது . சொற்பொழிவில் நேர்ந்த இடையீடே சொற்போர் . சொற்பொழிவில் கருத்துக்களைச் சொல்லும்போது அக்கருத்துக்களில் மாறுபட்டோர் இடையிட்டு மறுத்துக் கூறுவர்; ஐயங்களை வினவுவர் . மறுத்துக்கூறும்போது கருத்தை வைத்தவர் மாற்றம் கூற வேண்டும் . அம்மாற்றமும் ஒத்தது அன்று என்றால் மீண்டும் மறுப்பார் . இவ்வாறு நேரும் தடை விடைகளால் பேச்சு மறுப்பு, எதிர்ப்புப் பேச்சாகும். இவ்வாறு சொல்லாடலும் ஒரு போரே.

"பாலறி மரபின் பொருநர்க் கண்ணும்" என்னும் தொல்காப்பிய வாகைத்திணை நூற்பா கண்டோம். அதில் 'பொருநர்' என்பது போரிடுவோரைக் குறிக்கும். 'பொருதல்' என்றால் ஒருவர்க்கொருவர் மோதிக்கொள்ளல். அம் மோதல் செய்வோர் சமமான வல்லமை உடையவராக இருப்பர். 'பொருந்' என்றால் போல - சமமாக - ஒத்ததாக என்றும் பொருள். எனவே, 'பொருநர்' ஒத்த வலிமை உடையவராக மோதிக்கொள்ளுதல், போர் செய்தலாகும்.

அப்போர் உடல் வலிமைப் போராகலாம்; சொல் வலிமைப் போருமாகலாம். "சொல்லாலும் பாட்டாலும் ...... வேறலாம்" என்னும் உரையும் கண்டோம். இதன்படி சொல்லால் பொருதல் போரிடல் 'சொற்போர்' ஆயிற்று. அக்காலத்தில் 'சொற்போர்' என்னும் சொல்லமைப்பு இல்லை. என்றாலும் இந்தப் "பொருதல் - சொல்லால்" என்னும் இரண்டின் இணைப்புகளால் 'சொற்போர்' என்னும் சொல் உருவாகியிருக்கிறது.

இச்சொற்போர் நூல் அரங்கேற்ற அவையிலும் நிகழும்; விரிவுரை அவையிலும் அமையும்; சில வேளை களில் மன்னர் அவையிலும் அமையும். அச்சொற் போர் கருத்துக்காக நிகழும் கருத்துப்போர். ஆயினும் அதற்குச் சொல் வன்மையே பயன்படுவதால் சொல்லின் பெயரில் சொற்போரேயாகும். பாண்டியன் அவையில் கண்ணகிக் கும், நெடுஞ்செழியனுக்கும் நேர்ந்த வழக்காடல் உரையும் ஒரு சிறு சொற்போரே. இது போன்று பல இலக்கியங்

களிலும் உரையாடலை விடுத்து, மறுத்து மறுத்து உரையாடிய சொற்போர்கள் பல உள்ளன.

இலக்கியங்கள் வழியாகக் கால காலங்களில் நிகழ்ந்த சொற்போர்களை அறிகின்றோம். இக்காலத்திலோ சொற்போரே இலக்கியங்களைப் பேசுகின்றது; இலக்கியமாகவும் ஆகியுள்ளது.

சொற்போர் நல்ல கருத்தை நிலைநாட்ட வேண்டி நிகழின் அதனைக் 'கருத்துப்போர்' என்று குறிக்கலாம்.

சங்கக்காலப் பட்டிமண்டப நிகழ்ச்சிகள் கருத்துப் போர்களாகவே நிகழ்ந்தன. சொற்போரோ, கருத்துப் போரோ ஓர் அமைப்பாக அமையவேண்டுமாயின் ஒரு தலைவரை நடுவராகப் பெறவேண்டும். இருவர் மாறிமாறித் தடைவிடைகளால் சொல்லாட வேண்டும். தனியராகச் சொற்போரிடுவது போன்று இரண்டு குழுக்களாக அமைந்து சொற்போரிடலாம். கேட்போர் கூட்டத்தைக் கொண்ட 'மன்று' அமையவேண்டும். இவ்வாறு நிகழ்ந்ததை முற் காலத்தில் 'பட்டிமண்டபம்' என்னும் சொல்லால் குறித்தனர்.

இப்பட்டி மண்டப வளர்ச்சி பற்றி முன்னர் விளக்கப்பட்டது. 'பட்டி மண்டபம்' என்னும் பெயர் பற்றிய விளக்கம் ஒன்றையும் காணவேண்டும்.

முதற்பகுதியில் விளக்கியவாறு புலவர் அமர்ந்து 'பாடல் பயிலிடம் பட்டிமண்டபம்' எனப் பெயர்பெற்றது.

இங்கு, 'பட்டி' என்னும் சொல்லாய்வின்படி பட்டி நிகழ் விடம் 'பட்டி மண்டபம்' என்னும் பெயர் பெற்றது.

இடையில் பட்டி மண்டபம் பற்றி ஒரு சிலரால் இப்பெயர் வடபுலத்துப் பெயராகிப் பட்டிபுத்திரர் என் பதிலுள்ள 'பட்டி'யின் பெயரால் அமைந்தது என்றனர். எவர், இவ்வாறு தொடங்கினாரோ அறிய இயலவில்லை. சில உரைநடை நூல்களில் இக்கருத்து எழுதப்பட்டது.

இஃது ஒரு தவறான நோக்கில் எழுந்தது.

'பட்டிபுத்திரர்' பற்றி முன்னர் காணப்பட்டது. பட்டி என்பவன் ஒரு மிகத்திறமையான அமைச்சன்; புகழ்பெற்ற விக்கிரமாதித்த மன்னனின் அமைச்சன். அவன் திறமை கொண்டு தமிழ்நாட்டார் 'பட்டி' என்று கொண்டனர் என்பதே புதுக்கரடி.

இப்புதுக்கரடி உலவியதைக் கருதிய மொழிஞாயிறு பாவாணர்,

"பட்டி மண்டபம் சமயக் கணக்கர், எதிரிகள் கூற்றையடித்துத் தம் கருத்தை நிறுவும் மண்டபம், 'விக்கிரமாதித்தனின் மந்திரியாகிய 'பட்டி'யின் பெயரால் ஏற்பட்ட மண்டபம்' என்பது எள்ளி நகையாடத்தக்கது"[70] என்று எழுதினார்.

விக்கிரமாதித்தன் அமைச்சன் 'பட்டி' பற்றி அறிந்தால் இது எள்ளி நகையாடத்தக்கது என்பது உறுதியாகும்.

'பட்டி' என்பவன் விக்கிரமாதித்தன் அமைச்சன் என்பவன் வடமொழியில் எழுதப்பட்ட 'விக்கிரமாதித்தன் கதை'யில் வருபவன். இக்கதை கதைதான்; கற்பனையில் எழுந்தது. வரலாறு அன்று.

சோமதேவ பட்டர் என்பார் வடமொழியில் 'கதா சரித சாகரம்' என்றொரு நூல் எழுதினார். அதிலிருந்து எடுத்து வளர்க்கப்பட்ட கதை 'விக்கிரமாதித்தன் கதை'.

விக்கிரமாதித்தன் என்ற பெயரில் பெயர்பெற்ற மன்னர் அறுவர் குப்த மரபினர் தொடக்கமாகச் சாளுக்கிய மரபினர் வரை ஆண்டனர். அவருள் ஒருவரை வைத்துக் கற்பனை செய்யப்பட்டது விக்கிரமாதித்தன் கதை. பன்னிரண்டாம் நூற்றாண்டில் உருவானது.

இதில் நம்பத் தகாததும், அறிவிற்குப் பொருத்த மற்றதும், உண்மையை நெருங்காததுமாகிய பல செய்திகள் வருகின்றன. ஆனால், கவர்ச்சியும், சுவையும் நிறைந்தது.

இக்கதைப்படி சந்திர சன்மன் என்னும் ஒருவனுக்கு முறையே பார்ப்பன, அரச, வணிக, தாழ்ந்த குலத்து மகளிர் நால்வர் மனைவியர். அவருள் பார்ப்பன மனைவி மகன் விக்கிரமாதித்தன்; வணிக மனைவி மகன் பட்டி; விக்கிரமாதித்த மன்னனுக்குப் பட்டி அமைச்சன்; திறமைமிக்க அமைச்சன். இருவரும் இரண்டாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தனராம்.

வரலாற்றில் வந்த ஆறு விக்கிரமாதித்த மன்னர் வரலாற்றில் 'பட்டி' என்றொரு பெயரே இல்லை . எனவே 'பட்டி' முழுமையாகக் கற்பனைக் கதை உறுப்பினன்.

சுவையாலும், கவர்ச்சியாலும் பலமொழிகளில் (ஆங்கிலத்திலும் கூட) மொழிபெயர்க்கப்பட்டது . மக்க ளிடையே பரவி நிலைத்தது. கற்றோரும் மற்றோரும் அறிந்த ஒன்றாயிற்று . இதனால் திறமைமிக்கவர் என்னும் 'பட்டி புத்திரர்' தொடர் எழுந்தது.

இக்கதை எழுந்த அடுத்த நூற்றாண்டாகிய 13ஆம் நூற்றாண்டு, உரையாசிரியர் சேனாவரையர் காலம். இவருக்குப் பிற்பட்டவர் உரையாசிரியர் நச்சினார்க் கினியர்.

ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டுக்காலம் தமிழ் நாட்டிலும் பரவி நிலைத்துவிட்ட இக்கதைப்படி 'பட்டி பட்டிபுத்திரர்' வந்ததாகக் கருதினர்.

இங்குச் சொல்லாய்வில் கண்டபடியும், சங்க கால இலக்கியங்கள் தொடக்கமாகப் பிற்கால இலக்கியங்களி லும் 'பட்டி' என்னும் தமிழ்ச்சொல் உள்ளது.

எனவே, விக்கிரமாதித்தன் பட்டிக்கும் தமிழ்ச் சொல் பட்டிக்கும் முடிச்சுப் போட்டது எள்ளி நகையாடற் குரியதே.

மற்றொரு மொழியாய்வு வகையில் இதனை நோட்டமிடலாம்.

தமிழ்ச் சொற்கள் பல இந்திய வளாக மொழிகளிலும், வெளிநாட்டு மொழிகளிலும் இடம் பெற்றுள்ளன. இவ் வகையில் 'பட்டி' என்னும் தமிழ்ச்சொல் வடமொழியில் இடம் பெற்றிருக்கலாம்.

இவ்வாறு கருத ஒரு சான்று உள்ளது.

தமிழ்நாட்டு வடக்கெல்லைக்கு அண்மையில் உள்ள கிருட்டிணா ஆற்றங்கரையில் 'பட்டி புரோளு' என்றொரு சிற்றூர் உள்ளது. அங்குச் செய்த அகழாய்வில் அஃது ஒரு புத்தக்களம் எனக் காணப்பட்டது. அங்குக் கிடைத்த பேழைகளிலும் தூண்களிலும் காணப்படும் எழுத்து பிராமியிலும் வேறுபட்டதாய்த் தனிப்பெயராக 'பட்டி புரோளு எழுத்து' என்றே வழங்கப்படுகிறது. ஆயினும் அவ்வெழுத்துகள் திராவிட எழுத்து வடிவத்தை ஓரளவில் ஒத்துள்ளன என்பர்.

எனவே, தமிழுடன் நெருங்கிவரும் எழுத்துக்கள் அவை. தமிழ்நாட்டைப் போன்று அவ்வாற்றங்கரையில் ஒரு சிற்றூர் 'பட்டி' என்று பெயர் பெற்றிருந்திருக்கலாம். கிருட்டிணா ஆற்றங்கரையில் புகுந்த தமிழ்ப்பட்டிச் சொல் வடபுலத்திலும் புகுந்து விக்கிரமாதித்தன் கதையில் இடம் பெற்றிருக்கலாம்.

எனவே, எவ்வகையில் நோக்கிலும் விக்கிரமாதித்தன் பட்டி, பட்டி மண்டபத்திற்குப் பொருந்தாதது . இது 'பொருந்தாப் புளுகு' என்று தள்ளிவிடலாம்.

முடிவாக, 'பட்டி மண்டபம்' என்பது தமிழ்ப் பெயர்; தமிழ் இலக்கிய வழக்குகள் கொண்டது; இன்றும் வழக்கில் உள்ளது.

இக்காலத்தில் 'பட்டி மண்டபம்' என்றும், 'பட்டி மன்றம்' என்றும், 'பட்டி அரங்கம்' என்றும் வழங்கப் படுகின்றன . இவை வேறுபட்டனவா(?) ஒன்றன் பெயர்கள் தாமா(?) என்று காண்பது பெயர்க்கு ஒரு முடிவு கொள்வதாகும்.

## ஊ) பட்டி மண்டபம் (பெயர்)

பட்டி அரங்கம்
பட்டி மன்றம்
பட்டி மண்டபம்

இவை மூன்றும் சொற்போர் நிகழ்ச்சியைக் குறிக்க வழங்கப்படும் பெயர்கள். மூன்றில் எது பொருந்தும்? மூன்றும் வெவ்வேறு பொருளைக் கொண்டன. ஆயினும், ஒன்றிற்கொன்று தொடர்புடையது.

**அரங்கம்**

'அரங்கு' என்பது உயரமான களம். அஃதாவது பெருமளவில் மேடை. சிலப்பதிகார அரங்கேற்று காதையில் நாட்டிய அரங்குக்கு நீளம், அகலம், உயரம் கூறப்பட்டுள்ளது. இதுகொண்டும் மேடை என அறியலாம். பிங்கல நிகண்டு (662) நாட்டியமாடும் களத்தையும் சூதாடும் களத்தையும் 'அரங்கம்' என்கின்றது. சூடாமணி நிகண்டு, (இடப்பெயர் : 53) போர்ப் பயிற்சிக் களத்தையும் சேர்த்துக் கூறுகின்றது. சேந்தன் திவாகரம் என்னும் பழைய நிகண்டு, இவற்றுடன் புலவர் கூடும் அவைக்களத்தையும் சேர்த்து,

"போரின் இடமும் வட்டாடு இடமும்
ஆடல் இடமும் அவையும் அரங்கம்"[71] - என்கின்றது

நிகண்டுகள் வழங்கும் இக்கருத்துக்களுக்கு ஏற்ப இலக்கியங்களும் பேசுகின்றன.

வடநாட்டுப் பயணத்தினின்றும் வென்று மீண்ட சேரன் செங்குட்டுவன் தன் சேரமாதேவியுடன் கொலு வீற்றிருந்ததை,

"அணிமணி அரங்கம்
விங்குநீர் ஞாலம் ஆள்வோன் ஏறி"[72]

என்கின்றது சிலப்பதிகாரம். இதனில் ஆட்சிக் களம் அரங்கமாகக் கூறப்படுகின்றது. இவ்வடியில் 'ஏறி' என்னும் சொல்லும் உயரமான மேடை என்பதைச் சொல்லி நிற்கின்றது. இவ்வரச மேடை பொன் தகடுகளால் ஒப்பனை செய்யப்பட்டுப் "பொன்புனை அரங்கம்" எனப்பட்டது.

"பாடுவார் பாணிச் சீரும்;
ஆடுவார் அரங்கத் தாளமும்"[73]

என்னும் பரிபாடலிலும்,

"அவைபுகழ் அரங்கின்மேல் ஆடுவாள்"[74]

என்னும் கலித்தொகையிலும் நாட்டியக் களத்தை அரங்கமாகக் காண்கின்றோம். சிலப்பதிகார அரங்கேற்று காதை என்னும் காதைப் பெயரும்,

"ஆடல் புணர்க்கும் அரங்கு இயல் மகளிர்"[75]

என்னும் மணிமேகலை அடியும் நாட்டியக் களத்தை அரங்கமாகக் குறிக்கின்றன.

புது நூல் ஒன்றைப் படைக்கும் புலவர், அவை மேடையில் அமர்ந்து நூலைப் படித்து விளக்கங் கூறுவார். சான்றோர் அதனை ஏற்றுக்கொள்வர். அஃது 'அரங்கேற்றம்' எனப்பட்டது. இது புலமை அரங்கம்.

சூது - வட்டு ஆடும் களத்தை அரங்கமாக,

"அரங்கின்றி வட்டு ஆடியற்றே"[76]

என்று திருக்குறளும்,

"கட்டளை அன்ன வட்டு அரங்கு அமைத்துக்
கல்லாச் சிறுவர் நெல்லிவட்டு ஆடும்"[77]

என்று நற்றிணையும்,

"அரங்கினுள் வட்டுக்
கரையிருந்தார்க் கெளிய போர்"[78]

என்று பழமொழி நானூறும் பகர்கின்றன.

நம்மாழ்வார்,

"அரங்கின் மல்லரைக் கொன்று"[79]

- என்று பாடி மற்போர்க் களத்தை 'அரங்கு' என்று காட்டுகின்றார். ஆற்றின் நடுவே மணல்மேடு இடப்பட்ட மேடைத்திட்டு 'ஆற்றிடைக்குறை' ஆகும்.

"அரங்கமும் ஆற்றிடைக்குறையென அறைவர்"[80]

என்பது சேந்தன் திவாகரம். காவிரியின் இடையே மேடிட்ட திட்டு 'திருவரங்கம்' என்னும் ஊராகியது . சிலப்பதிகாரம் இதனை "ஆற்றுவீ அரங்கம்"[81] என்கின்றது . இவற்றால் மேடான திட்டையும் அரங்கமாகக் காண்கின்றோம்.

இவைமட்டும் அன்றி, 'அடுப்புப் புடை' என வழங்கப்படும் அடுப்பு மேடையும் அரங்கம் என்பதை,

"தீயில் அடுப்பின் அரங்கம் போல"[82]

என அகநானூறு பாடி அரங்கம் என்பது மேடான இடம் - மேடை என்பதற்கு முத்திரை இடுகின்றது.

எனவே,

ஆட்சி மேடை, புலமை மேடை, நாட்டிய மேடை சூதாடும் மேடை, போர்ப்பயிற்சி மேடை, மணல் மேடை அடுப்பு மேடை எனும் மேடான களம் 'அரங்கு' என பட்டதை அறியலாம்.

## மன்றம்

ஊர் மக்கள் வழக்குகளை உசாவித் தீர்க்கவும், பொது நலன்களைப் பேசி முடிவெடுக்கவும் பரந்த நிழல் தரும் ஆலமரத்து அடியில் ஊர்ப் பெரியோர் கூடுவர் . திருமுரு காற்றுப்படையில், "மன்றமும்" என்பதற்குப் பொருள் விரித்த நச்சினார்க்கினியர்,

"ஊருக்கு நடுவே எல்லாரும்
இருக்கும் மரத்தடி"[83]

- என்றார். எனவே, மரத்தடியில் கூடும் ஊர்ப்பொது அவை 'மன்றம்' எனப்பட்டது.

"பொதியில், மன்றம், பொது, சபை, அம்பலம்" [84]

என்று பிங்கல நிகண்டும் பிற நிகண்டுகளும் பேசுகின்றன.

"மன்றில் பழிப்பார் தொடர்பு" [85]

எனத் திருக்குறளும் வேறு பல இலக்கியங்களும் பகர்கின்றன. அம்மரத்தடியில் மாடுகள் கட்டப்படுவதால் மாடு கட்டும் இடமும் 'மன்றம்' எனப்பட்டது. 'மன்றம்' என்றாலே பொது இடம் என்னும் பொருள் கொண்டதாயிற்று. பொது இடத்தில் ஊர்க்குப் பொதுவான வளர்ந்த மரங்களும், "மன்றப் பலவு", "மன்றப் பெண்ணை", "மன்றப் புன்னை" என 'மன்று' என்னும் சொல் கொண்டு குறிக்கப்பட்டன.

இவ்வாறு மன்றம், மாடுகள் உறையும் இடமாகவும், பொதுநலம் பேசுவதற்குக் கூடுகின்ற அவையாகவும் சிறப்பாக வழக்கைத் தீர்க்கும் இடமாகவும் அமைந்தது. இதனால், 'மன்று' என்றால் 'வழக்கு' என்னும் பொருள் தருவதாயிற்று.

பிற்காலத்து அவ்வையாரும், வழக்காடு மன்றத்தில் வழக்காடிப் பிறர் பொருள் பறிப்பதைக் கடிந்து,

"மன்று பறித்து உண்ணேல்" [86] என்றார். வழக்கு

மன்றில் ஒரு சார்பாகத் தீர்ப்பளிப்பவருடைய மனை பாழாகும் என்பதை,

"மன்று ஓரம் சொன்னார் மனை"[87] - என்றார்.

பெரிய புராணத்தில் சுந்தரமூர்த்தி நாயனாரது திருமணத்தில் புகுந்து வம்பு வழக்குச் செய்த சிவபெருமானைச் சேக்கிழார் " பழைய மன்றாடி போலும்" என்று கூறவைத்தார்.

ஆலமரத்தின் அடியிடமாக இருந்த மன்றம் கட்டட வளர்ச்சியில் கூடத்திற்கு வந்தது.

எனவே,

'மன்றம்' என்பது வழக்கைத் தீர்க்கும் சான்றோரும் பொது மக்களும் அவையாகக் கூடும் கூடத்தைக் குறிப்பதாயிற்று.

## மண்டபம்

'மண்டபம்' என்பது கட்டி எழுப்பப்பட்ட கட்டடத்தைக் குறிக்கும். பண்டைக்கால மண்டபம் எளிய கட்டடம் அன்று. எழிலோடும் மெருகோடும் இயற்றப் பட்டது. தோற்றப் பொலிவும் ஏற்றத் திறனும் கொண்டது. பொன்னால் புனையப்பட்ட மண்டபம் "தமனிய மண்டபம்" எனப்பட்டது. மணியால் அணிபெற்ற மண்டபம் "மணி மண்டபம்" எனப்பட்டது. பளிங்கு பாவப் பட்ட மண்டபம் "பளிங்கு மண்டபம்" எனப்பட்டது.

'மண்டபம்' என்பது கட்டடச் சிறப்பை மட்டும் கொண்டது அன்று. இது கலைகள் தவழும் கவின்பெருங் கலைக்கோவிலாய்த் திகழ்ந்தது. இங்கு ஆட்சிக்கலை அமர்ந்திருக்கும்; புலமைக் கலை பூரிக்கும்; ஓவியக் கலை ஒளி வீசும்; சிற்பக் கலை சிரிக்கும்; இசை, நாட்டியக்கலைகள் இனிது வளரும்; பண்டைக்கால மண்டபத்தின் பாங்குகள் இவை.

இத்தகைய சீர் பெற்ற மண்டபம் அரசனது அரண்மனையிலும், இறைவனது திருக்கோவில்களிலும், இயற்கைச் சோலைகளிலும் எழுப்பப்பட்டது.

அரசன் அமர்ந்து ஆட்சிமுறை செலுத்தும் இடம் 'திருவோலக்க மண்டபம்' எனப்பட்டது. வடநாட்டினின்றும் மீண்ட சேரன் செங்குட்டுவன் மகிழுமாறு கூத்தச் சாக்கையன் 'கொடுகொட்டி' என்னும் கூத்தை ஆடினான். ஆடி, அவன் நீங்கியதும் மன்னன் ஆட்சி மண்டபத்தில் அமர்ந்தான். இவ்வாட்சி மண்டபம் சிலப்பதிகாரத்தில்[88] "வேந்தியல் மண்டபம்" எனப் பட்டது. வேந்தன் அமர்ந்து ஆட்சிமுறை செலுத்தும் மண்டபம் என்று பொருள் கொண்டது இது.

நெடுஞ்சேரலாதன் தன் மக்கள் செங்குட்டுவன், இளங்கோ ஆகிய இருவருடன் அமர்ந்திருந்த ஆட்சி அரங்கு கொண்ட மண்டபம் "மணி மண்டபம்" எனப்பட்டது. அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரப் பதிகத்தின் உரையில்,

"தென்னவர் செம்பியர் தன்னடி போற்றத்
தமனிய மண்டபத்து (தமனியம் - பொன்) வேந்தன்
இருந்துழி"[89]

என்று எழுதினார்.

சோழநாட்டு அரசனது ஆட்சி மண்டபம் "சித்திர மண்டப" மாக விளங்கியது. இதன் சிறப்பால் இது 'பெறுவதற்கு அருமையான மண்டபம்' என்னும் கருத்தில் "அரும்பெறல் மரபின் மண்டபம்" எனப்பட்டது. இதன் கலை நுணுக்கத்தைக் கண்டோர் இது மனிதனால் உருவாக்கப்பட்டதன்று; 'மயன் என்னும் தெய்வத் தச்சனால் ஆக்கப்பட்டது' என்று புகழ்ந்தனராம்.

இவை அரண்மனையில் அமைந்த அரசாட்சி மண்டபங்கள்.

திருப்பரங்குன்றத்து முருகன் கோவிலில் ஓர் அழகிய மண்டபம் எழுந்தது. அதில் ஓவியங்கள் ஒளிர்கின்றன; சிற்பங்கள் சிறந்திருக்கின்றன; பலவகைப் புராணக்கதைகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருக்கின்றன; சிற்பங்களாக வடிக்கப்பட்டிருக்கின்றன. இரதி, காமன் உருவம் தீட்டப் பட்டுள்ளது. இந்திரன் பூனையாக வந்து அகலிகையைக் கூடியதும், அஃதறிந்த கௌதமன் சினந்து அகலிகையைக் கல்லுருவாக்கியதுமான கதை தீட்டப்பட்டுள்ளது. இம் மண்டபத்தை "எழுத்துநிலை மண்டபம்"[90] என்று பரிபாடல் பாடுகின்றது. இங்கு எழுத்து ஓவியத்தைக் குறிக்கும்.

இது திருக்கோவிலில் அமைந்த கலை மண்டபம்.

சோழநாட்டு அரண்மனைச் சோலையில் மன்னன் பொழுதுபோக்கிடம் இருந்தது. அங்கு அரசன் அமர ஒரு மண்டபம் எழுப்பப்பட்டிருந்தது. அம்மண்டபத்தின் ஆக்கம் மிகச் சிறப்பாக வண்ணிக்கப்பட்டுள்ளது. அது எட்டு கோண வடிவில் அமைந்தது. அதன் திரண்ட தூண்கள் பவளம் பதிக்கப்பட்டவை. தூண்களின் மேல் அமைந்த போதிகைகள் மணிகள் கொண்டவை. மேற் கூரையாம் விதானம் சிறந்த வேலைப்பாடுகளுடன் பொன் தகடு வேயப்பட்டது. தரை சுண்ணாம்புச் சேற்றால் மெழுகப்படாமல் பொன்னால் தளம் போடப்பட்டதாம். இதனால் இம் மண்டபம் "பொன் மண்டபம்"[91] எனப் பட்டது. இதனை விளக்கும் மணிமேகலைக் காப்பியம் மற்றொரு மண்டபத்தையும் காட்டுகின்றது;

மணிமேகலை உதயகுமரனுக்கு அஞ்சி ஒளிந்து கொண்ட மண்டபம் ஒன்று உவவனத்தில் இருந்தது. அஃதும் பவளத்தூண், பொன்சுவர், முத்து மாலை, ஓவியக் கூரை கொண்டது. பளிங்குக் கண்ணாடி முகப்பைக் கொண்டது. இந்தப் பளிங்கு அறை "பளிங்கு செய் மண்டபம்" என்றும் "பளிக்கறை மண்டபம்" என்றும் புகழப்பட்டது.

கோவலன் கொலையுண்டதும் மணிமேகலையுடன் துறவை மேற்கொண்ட மாதவி புத்த மடத்தில் அமைந்தாள்.

அங்கு மலர் தொடுப்பதற்காக ஒரு மண்டபம் இருந்தது. அது "மலர் மண்டபம்" எனப்பட்டது.

இவை சோலைகளில் எழுந்த மண்டபங்கள். இச் சோலை மண்டபங்கள் நான்கு, ஆறு, எட்டு தூண்களைக் கொண்டனவாய் சிறிய அளவில் எழுப்பப்பட்டவை. இவை நற்காட்சிகளைக் கண்டு மகிழ அமைக்கப்பட்ட பார்வை மண்டபங்கள்.

## பட்டி மண்டபம்

இவ்வாறு எழுந்த மண்டபங்கள் யாவும் தத்தமது இயல்புக்கேற்ற அடைமொழி பெற்றமையைக் கண்டோம். கட்டம் எழுப்பப்பட்ட மதிப்பரிய பொருள்களால் பொன் மண்டபம், பளிங்கு மண்டபம், மணி மண்டபம் எனப்பட்டன. செய்யப்பட்ட கலை ஒப்பனைகளால் சித்திர மண்டபம், எழுத்துநிலை மண்டபம் எனப்பட்டன. நிகழ்ந்தநிகழ்ச்சியால் அடைமொழி பெற்றன. திருவோலக்க மண்டபம் வேத்தியல் மண்டபம் எனப்பட்டது. இவ் விரண்டு பெயரும் ஆட்சிக்கலை நிகழும் மண்டபத்தைக் குறிப்பன. இங்கு வேந்தன் கொலுவீற்றிருந்து ஆட்சி செலுத்தும் நிகழ்ச்சியும் நிகழும். வழக்குகளை உசாவித் தீர்ப்பளிக்கும் நிகழ்ச்சியும் நிகழும். இவ்விரண்டு நிகழ்ச்சி களுள் கொலுவீற்றிருக்கும் நிகழ்ச்சி அன்றாடம் நிகழும் பெரும்பான்மை நிகழ்ச்சியாகும்.

இஃதே போன்று, இவ் விரண்டு வகையிலும் புலமை ஆய்வு, புலமை வழக்கு என்னும் புலமைக்

கலை நிகழும் மண்டபம் "பட்டி மண்டபம்" எனப் பட்டது.

எனவே,

'பட்டி மண்டபம்' என்பது புலமை ஆய்வுக்கும், புலமை வழக்குக்கும் உரிய இடமாகும். இங்குப் பெருகிய நிகழ்ச்சியாக நாள்தோறும் 'புலமை ஆய்வு' நிகழும். அருகிய நிகழ்ச்சியாக வாய்ப்பு நேரும்போது புலமை வழக்காடு தலாம் சொற்போர் நிகழும். எனவே, புலமை ஆய்வுக்காக எழுந்த பட்டி மண்டபம் புலமை வழக்காடுதலுக்கும் இடமாகி அந்நிகழ்ச்சிக்கும் பெயராயிற்று.

புலமைக் கருத்தை வைத்து வழக்காடுவது போன்றதே மன்னன் முன்னர் குற்றம் வைத்து வழக்காடுவதும் ஆகும். எனவே, அவ்வாறான மண்டபமாம் திருவோலக்க மண்டபமும் வழக்கை உசாவி அறியுங்கால் பட்டி மண்டபமாகக் குறி பெற்றது.

முன்னே விரிவாகக் கண்டபடி :

அரங்கம் என்பது மேடை.
மன்றம் என்பது அவை கூடும் கூடம்.
மண்டபம் என்பது இவ்விரண்டையும் கொண்ட கட்டடம்.

இவற்றின் படி,

சொற்போர் புரிவோர் இருந்து சொற்போர் புரியும் களமாகிய அரங்கம்

பட்டி அரங்கம் எனப்பெயர் பெற்றது.

அந்த அரங்கத்துடன் நடுவரும் சான்றோரும் ஒன்றுகூடும் கூடமாகிய அவை

**பட்டி மன்றம்** - எனப் பெயர் பெற்றது.

பட்டி அரங்கையும் பட்டி மன்றத்தையும் கொண்ட கட்டடமாம் மண்டபம்

**பட்டி மண்டபம்** - எனப் பெயர் பெற்றது.

எனவே,

பட்டி அரங்கம்
பட்டி மன்றம்
பட்டி மண்டபம்

- என்னும் மூன்றும் சொற்போருக்குத் தொடர்புடைய பெயர்கள்.

ஆயினும், இலக்கியங்கள் பட்டி அரங்கையும், பட்டி மன்றத்தையும் கொண்டு திகழும் மண்டபப் பெயரிலே சொற்போர் நிகழ்ச்சியைப் "பட்டி மண்டபம்" என்றே குறிக்கின்றன. கொங்கு வேளிர் எழுதிய "பெருங்கதை" மட்டும் "பட்டி நியமம்" என்று குறிக்கின்றது. 'நியமம் என்பது நியமிக்கப்பட்ட இடம் என்னும் கருத்தில் மண்டபத்தையே குறிக்கும்.

சொற்போர் நிகழ்ச்சி 'பட்டி மண்டபம்' என்று மண்டபத்தால் பெயர் பெற்றதோடு, சொற்போர் மன்றத்

தாரும் "பட்டி மண்டபத்தார்" என்று அழைக்கப்பட்டனர். இதனை முன்னர் கண்டோம்.

## பட்டி மண்டப அமைப்பு

பட்டி மண்டபத்தின் கட்டட அமைப்பை நோக்குவோம். இம்மண்டபத்தின் நடுவே ஒரு சிறு தனி மண்டபம் அரங்க மேடையாக எழுப்பப்பட்டிருக்கும். இது 16 தூண்களைக் கொண்டதாகும். 4 தூண்களில் சிறு அரங்கமாகவும் அமையும். 16 தூண்களாயின் நடு நான்கு தூண்களின் இடைத்தளம் மேலும் சற்று உயர்ந்த மேடையாக உயர்த்திக் கட்டப்பட்டிருக்கும். 4 தூண்களாயின் அவற்றின் இடைத்தளம் இவ்வாறு மேடையாக்கப்பட்டிருக்கும். இந்த நடு மேடையில் சொற்போராளர் இருந்தோ நின்றோ சொற்போரிடுவர், இஃதே பட்டி அரங்கமாகும். இந்நடு மேடையைச் சுற்றியுள்ள சுற்று மேடையில் நடுவரும் பட்டி மண்டபத்தாரும் சான்றோரும் அமர்வர். இத்தூண்கள் மேல் கருங்கல் பாவப்பட்ட தனிக்கூரை அமைந்திருக்கும். இவ்வாறான அரங்கப் பகுதியே நூல்களை ஆராயும் அரங்கம் ஆகும். இவ்வரங்கமே நூல்கள் அரங்கேற்றப்படும் அரங்கமாகும். புலவர்களுக்குப் பெருஞ்சிறப்பும் பட்டமும் பரிசும் வழங்கும் மன்னவன் இவ்வரங்கிலேயே அச்சிறப்பான நிகழ்ச்சியை நிகழ்த்துவான். பட்டினப் பாலையை எழுதிய உருத்திரங்கண்ணனார்க்கு பரிசாகப் பொன்னை வழங்கிய சோழன் கரிகாலன் இத்தகைய 16 கால் மண்டபத்திலேயே அச்சிறப்பைச் செய்ததாகக் கல்வெட்டு ஒன்று அறிவிக்கின்றது.

இக்காலத்திலும் இத்தகைய 16 கால் மண்டபங்கள் தனித் தோற்றமாக திருக்கோவில்களின் உட்புறத்திலும், வெளிப்புறத்திலும், திருக்குளத்தின் மையத்திலும், ஊர்ப் புற எல்லையிலும் காட்சியளிப்பதைக் காண்கின்றோம். திருவிழாக் காலங்களில் கடவுளரின் திருவுருவங்களை ஒப்பனைகளுடன் இவ்வரங்கில் எழுந்தருளுவித்து மக்கள் கண்டு வணங்கச் செய்வதைக் காணலாம். இது கடவுள் திருவோலக்கக் காட்சி.

இவ்வாறான 16 கால் மேடை அரங்கத்தைச் சூழ அவையோர் கூடும் கூடம் அமைந்திருக்கும். அரங்கத்தையும் கூடத்தையும் கொண்ட பரந்த பட்டி மண்டபத்தின் மேற்கூரை முழுதும் மாட அமைப்பில் செங்கற் சாந்தால் மேல் வளைவு மேல் வளைவாக மூடப்பட்டிருக்கும். கருங் கற்களாலும் பாவப்பட்டிருக்கலாம். சுற்றிலும் சுவர்களால் அடைக்கப்பட்டு வாயில் கதவுகள் கொண்ட கட்டுக் கோப்பான மண்டபமாக அமைந்திருக்கும்.

கருத்துப் போருக்காக எழுந்த 'அறைகூவல் ஏற்கப் படும் வரை பட்டி மண்டபம் அடைக்கப்படும்' என்று மரபாலும், "தெற்கண் வாயில் திறவாத பட்டி மண்டபத்தார்" என வருவது கொண்டும் நான்கு புறத்துமோ, தெற்கு கிழக்கு என இரண்டு புறத்துமோ வாயில்களும் அவற்றிற்குக் கதவு களும் அமைந்திருந்தமை அறியப்படுகின்றது.

திருவிழாக் காலங்களில் இத்தகைய பட்டி மண்டபத்தில் சொற் போராளர் சொற்போர் நிகழ்த்த

அழைக்கப்படுவர் . மணிமேகலையில் இந்திர விழாவை அறிவிக்கும் அறிவிப்பில்,

"ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்"[92]

எனப் பட்டிமண்டபத்திற் பங்குகொள்ளுமாறு அழைக்கப் பட்டதை முன்னரும் அறிந்தோம் . இங்கு "பாங்கறிந்து ஏறுமின்" என்ற குறிப்பால் பட்டி மண்டபம் ஏறும் மேடை அமைப்பை (அதாவது) அரங்கைக் கொண்டது என்பதை யும் உணர முடிகின்றது .

இத்தகைய பட்டி மண்டபம் திருக்கோவில்களிலும் அமைந்திருந்தது . அங்கு சமயத்துறைச் சான்றோர் கூடிச் சமயத்துறை நூல்களைப் பயின்று ஆராய்ந்தனர் . அத் தகைய பட்டி மண்டபம் ஒன்றில் தாம் இடம்பெற்றதை மாணிக்கவாசகர் பாடினார் . அஃதும் இரண்டிடத்தில் அமைந்த அரங்க மேடைக்குப் படியில் ஏற்றியதையும், பதவியில் ஏற்றியதையும் அடுக்கிக் காட்டுகின்றது.

தஞ்சை மாமன்னன் இராசராசன் தான் எழுப்பிய தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் ஒரு மண்டபத்தில் இலக்கண, இலக்கிய ஆராய்ச்சி நிகழ ஏற்பாடு செய்து அதற்கோர் அறக்கட்டளையும் அமைத்ததை அவன் கல்வெட்டு காட்டுகின்றது . இஃதும் பட்டி மண்டப வரலாற்றில் ஒரு குறியாகும்.

இவ்வாறாக,

தமிழகத்தில் பழங்காலம் முதற்கொண்டே அரண் மனைகளிலும் திருக்கோவில்களிலும் பட்டி மண்டபம் எழுந்து திகழ்ந்ததைத் தமிழ் இலக்கியங்கள் பேசுகின்றன.

இதுவரை கண்ட சான்றுகளைக் கொண்டு :

பட்டி மண்டபம் என்பது புலமைக் கலை நிகழும் மண்டபம்;

அப்பட்டி மண்டபம் புலமை வழக்காம் சொற்போர் நிகழும் மண்டபமும் ஆயிற்று ;

காலப்போக்கில், புலமைக்கலை நிகழ்ச்சி அருகிச் சொற்போர் நிகழ்ச்சி பெருகியதால் பிற்காலத்தில் 'பட்டிமண்டபம்' என்பது சொற்போருக்குரியது ஆயிற்று.

இப்பட்டி மண்டபம், அரங்கும் மன்றமும் கூடிய கூட்டமாயினும் அங்கு நிகழும் சொற்போர் நிகழ்ச்சிக்கு ஆகுபெயராகியது.

## 2. பட்டி – சொல், பெயர் ஆய்வு கொண்டு காட்டி

| குறிப்பு எண் | ஆசிரியர் | நூல் + செய்யுள் எண் - அடியெண் : |
|---|---|---|
| 1. | திருவள்ளுவர் | : திரு - 641 |
| 2. | " | : " - 430 |
| 3. | " | : " - 959 |
| 4. | பரிமேலழகர் | : " - 959 உரை |
| 5. | திருவள்ளுவர் | : " - 419 |
| 6. | கபிலர் | : கலி - 46 - 16 |
| 7. | மருதன் இளநாகனார் | : " - 68 - 8, 9 |
| 8. | கபிலர் | : " - 37 - 17 |
| 9. | அவ்வையார் | : குறு - 15 - 34 |
| 10. | தொல்காப்பியர் | : தொல் - பொருள் - 380 - 1 |
| 11. | மாங்குடி மருதனார் | : மது . கா - 19, 20 |
| 12. | கபிலர் | : கலி - 65 - 15 |
| 13. | நல்லந்துவனார் | : பரி - 47 - 46 |
| 14. | " | : " - 20 - 75 |
| 15. | இளங்கோவடிகள் | : சிலம்பு - 29 - 221 |
| 16. | சாத்தனார் | : மணி - 30 - 247 - 249 |
| 17. | திருவள்ளுவர் | : திரு - 127 |
| 18. | ஆழியூர் அவதானி | : தனியார் பாடல் |
| 19. | உமாபதி தேவர் | : சே . புரா - 15 - 1 |
| 20. | அபிராமி பட்டர் | : அபி . அந் - 19. |
| 21. | ---- | : தனி. திர - 667 (பதிப்பு 1921) |
| 22. | வேதநாயகம் பிள்ளை | : பெண். மாலை - |
| 23. | கபிலர் | : கலி - 51 - 3 - 5 |
| 24. | " | : கலி - 84 - 20 |
| 25. | சுந்தரமூர்த்தி | : தேவா. ஆரூர்-பழம் பஞ்சரம் - 10 |

| | | | |
|---|---|---|---|
| 26. | ஆண்டாள் | : | நாச். திரு - தெள்ளி |
| 27. | பெரியாழ்வார் | : | பெரி - திரு - 79 |
| 28. | கந்தப்ப தேசிகர் | : | தணி. 2 - 12 |
| 29. | சுப்பிரதீபக் கவிராயர் | : | விறலி - |
| 30. | ஞானசம்பந்தர் | : | தேவா - ஆலவாய் - 5 - 10 |
| 31. | கொங்கு வேளிர் | : | பெருங் - உஞ்சை - 35 - 173 |
| 32. | தொல்காப்பியர் | : | தொல் - சொல் - 165 |
| 33, 34. | திருமூலர் | : | திருமந் - 2874, 2883 |
| 35. | அருணகிரிநாதர் | : | கந். அல - |
| 36. | நக்கீரர் | : | முருகு - 74, 75 |
| 37. | கபிலர் | : | குறிஞ்சி - 39 |
| 38. | பிங்கலர் | : | பிங் - 3758 |
| 39. | மண்டலபுருடர் | : | சூடா - ஒருசொல் - டகரம் 8 |
| 40. | கச்சியப்பர் | : | கந் . புரா - கயமுகன் - 49 |
| 41. | ஞானசம்பந்தர் | : | தேவா. |
| 42. | நல்லூர்நத்தத்தன் | : | சிறுபாண் - 153 |
| 43. | பிங்கலர் | : | பிங் - 3770 |
| 44. | தொல்காப்பியர் | : | தொல் - சொல் - 319 |
| 45. | ஓரம்போகியார் | : | ஐங் - 73 - 2 |
| 46. | இளங்கோவடிகள் | : | சிலம்பு - 21 - 38 |
| 47. | பிங்கலர் | : | பிங் - 1898 |
| 48. | திருத்தக்கத்தேவர் | : | சிந் - 2058 |
| 49. | கொங்குவேளிர் | : | பெருங் - வத்தவ - 2 - 73 |
| 50. | தொல்காப்பியர் | : | தொல் - சொல் - 157 |
| 51. | திருவள்ளுவர் | : | திரு - 650 |
| 52. | பவணந்தி | : | நன். பொதுப்பாயிரம் - 37 |
| 53. | மூன்றுறையரையர் | : | பழ - 21 |
| 54. | திருவள்ளுவர் | : | திரு - 581 |
| 55. | - - - - - | : | நற் - 134 - 10 |
| 56. | இளங்கோவடிகள் | : | சிலம்பு - 10 - 50 |

| | | | |
|---|---|---|---|
| 57. | சாத்தனார் | : | மணி - 16 - 62 |
| 58. | சோழன் நல்லுத்திரன் | : | கலி - 108 - 4 |
| 59. | கபிலர் | : | " - 56 - 13 |
| 60. | திருவள்ளுவர் | : | திரு - 1070 |
| 61. | திருவள்ளுவர் | : | திரு - 405 |
| 62. | " | : | " - 818 |
| 63. | இளங்கோவடிகள் | : | சிலம்பு - 18 - 9, 10 |
| 64/65. | திருவள்ளுவர் | : | திரு . 643, 648 |
| 66. | இளங்கோவடிகள் | : | சிலம்பு - 2 - 37 |
| 67,68,69 | - | : | " - 28 - 111,112; 131,132; 139-148 |
| 70. | தேவநேயன் ஞா . | : | வட. வர - பக். 389 |
| 71. | திவாகரர் | : | திவா - இடப்பெயர் - 163 |
| 72. | இளங்கோவடிகள் | : | சிலம்பு - 28 - 65, 66 |
| 73. | நல்லந்துவனார் | : | பரி - 8 - 109 |
| 74. | மருதன் இளநாகன் | : | கலி - 79 - 4 |
| 75. | சாத்தனார் | : | மணி - 43 |
| 76. | திருவள்ளுவர் | : | திரு - 401 |
| 77. | இளங்கீரனார் | : | நற் - 3 - 3, 4 |
| 78. | முன்றுறையரையர் | : | பழ - 177 |
| 79. | நம்மாழ்வார் | : | நா. தி. பி - திருவாய் - 8 - 4 - 1 |
| 80. | திவாகரர் | : | திவா - இடம் - 60 |
| 81. | இளங்கோவடிகள் | : | சிலம்பு - 10 - 156 |
| 82. | உறையூர் முதுகூத்தனார் | : | அகம் - 137 - 11 |
| 83. | நக்கீரர் | : | முருகு - 226 உரை |
| 84. | பிங்கலர் | : | பிங் - 651 |
| 85. | திருவள்ளுவர் | : | திரு - 820 |

# 3 . கால ஆட்சியில் பட்டி மண்டப விளைச்சல்

## அ) காலமும் விளைச்சலும்

### பொன்னும் உயிரும்

"காலம் பொன் போன்றது" - என்பது ஒரு பொன்மொழி . பொன்னின் மதிப்பு உயர்ந்து வருகிற இந் நாளில் காலத்தின் மதிப்பும் உயர்ந்து வருகிறது.

இப்பொன்மொழிக்கு ஈடாக ஓர் உயிர் மொழியை முத்தமிழ்க் காவலர் கி . ஆ . பெ . விசுவநாதனார் மொழிந் துள்ளார் . "காலம் உயிர் போன்றது" என்பதே அது . இவ் வுயிர்மொழிக்கு அவர் தந்த விளக்கம் "பொன் போனால் கிடைக்கலாம்; உயிர் போனால் வராது" என்பது.

### காலத்தின் ஆட்சி

மேற்கண்ட இரண்டு உவமைகளும் காலத்திற்குப் பொருத்தமானவை . போன பொன் கிடைக்காமலே போவ தில்லை . முயன்றால் அவ்வுருவத்தில் கிடைக்காமற் போனா லும் மாற்றுருவத்தில் கிடைக்கும்; அதன் மதிப்போடு கிடைக்கும். பொன்னின் பல மாற்றுருவ மதிப்பீடுகள்தாம்

நாட்டுப் பொருளியலின் உயிரோட்டமாக உள்ளன. பொன்னின் ஆட்சி என்றும் நிலைப்பானது. அவ்வாறே காலமும் தன் மதிப்புக் குறையாமல் என்றும் முக்காலமாய் ஆட்சி செய்து வருகிறது. போன கால நிகழ்ச்சி மீட்டும் அவ்வாறே நிகழ்வதும் உண்டு; மாற்றுருவில் நிகழ்வதும் உண்டு.

மற்றொன்றையும் காணவேண்டும். போன பொன் செம்பின் கலப்போடு கலப்படப் பொன்னாகவும் வரும்; மெருகு பிடித்த பொன்போல உலவுவதும் உண்டு. இவை போன்று கால நிகழ்ச்சியும் தன் உருவிலும் மாற்றுருவிலும் கலப்புருவிலும் ஆட்சி செய்வது வரலாறாகும்.

போன உயிர் திரும்பாது. ஆனாலும் அவ்வுயிர் கொண்டவரின் மேதகு செயல்கள் என்றும் கால ஆட்சியில் உலகில் நின்று மக்கள் மனத்தை ஆள்கின்றன. திருவள்ளுவர் உயிர் போயிற்று. அவர்தம் அறிவு வடிப்பான திருக்குறள் இன்றும் ஆட்சி செய்கின்றது. இவர் போன்ற சாக்ரடீசு, பெர்னாடு சா, தாகூர், காந்தியண்ணல், பெரியார் ஈ. வே. இரா. முதலியோரின் மேதகு பதிவுகள் உலகில் ஆங்காங்கு அவ்வப்போது தொடர்ந்து ஆட்சி செய்து வருகின்றன.

## கால விளைச்சலில் கதிரும் பதரும்

கால ஆட்சி மறையாதது; அழியாததும் ஆகும். அத்தகைய கால ஆட்சியில் பட்டி மண்டபமும் மறையா

மலும், அழியாமலும் இலக்கிய உலகிலும், அறிவுச் செயற்பாட்டிலும் ஆட்சி செய்து வருகின்றது.

அள்ளித் தெளித்தாற் போன்று, தன் உருவிலும், மாற்றுருவிலும், கலப்படஉருவிலும், மெருகுருவிலும் ஆட்சி செலுத்தி வருகின்றது. காலத்து ஆட்சியில் எத்துணையோ பயன்கள் விளைகின்றன. அவ்விளைச்சல்களில் பட்டி மண்டப விளைச்சலும் நேர்ந்து கொண்டே வரலாறு படைத்து வருகிறது.

பட்டி மண்டப விளைச்சலில் கதிர்மணிகளும், முற்றிய முத்துமணிகளும் தோன்றுகின்றன; இடையிடையே பதர்களும் சோடைகளும் நேராமல் இல்லை. இருப்பினும் விளைச்சல் விளைச்சலே.

# ஆ) பிற்கால விளைச்சல்

சங்க கால ஆட்சியில் பட்டி மண்டப விளைச்சல் மணிக்கதிர் அறுவடையாக இருந்தது. பெருந்தகவான அறிவு மணி உள்ளீடாக அமைந்தது. சற்றுக் கீறலும் கரும் புள்ளியும் ஒன்றிரண்டு பதர்களாக அமைந்தன.

சமயக் கால ஆட்சியில் சொற்போர் பயிராயிற்று. சமணப் பயிர்கள் சில வளப்பயிர்களாகவும் பல முடுகிய சூறைக்காற்றால் பகையும் பழியும், கலவரமும் நிலவரங் களாகவும் ஆயின; பதர் சூழ்ந்தது.

17, 18-ஆம் நூற்றாண்டுகளில் பட்டி மண்டப நிலை என்ன? மணிக்கதிரா? வெறும் பதரா? அல்லது மழை வெள்ளத்தால் அழுகலா?

## முச்சந்திப் பட்டி மண்டபம்

பதினேழாம் நூற்றாண்டளவில் தமிழ் மண்ணில் ஒரு பாட்டுப் பட்டி மண்டபம் தோன்றியது. அதற்கு 'இலாவணி' (லாவணி) என்று பெயர். அது நிகழும் விழாவைக் 'காமன் (பண்டிகை) விழா' என்பர். இதன் விரிவாகக் 'காமவேள் எரிந்த கட்சி, எரியாத கட்சி' என இரண்டு கட்சியினரின் பாடல் போர் நிகழும்.

இது சமயக் கதை கொண்டது.

சிவபெருமானின் தவத்தைக் கலைக்கக் காமவேள் அவர்மேல் மலர்க்கணை தொடுத்தான் . தவம் கலைந்து வெகுண்ட சிவபெருமான் நெற்றிக்கண்ணால் காமவேளைக் காணவே, காமவேள் எரிந்து கரிந்தான். இக்கதை கொண்டு காமவேள் எரிந்ததாக விழாக் காண்பதே காமன் விழா.

இவ்விழா ஓர் இசைப்பாடல் போராக நிகழும்.

இதற்கு மூன்று அல்லது நான்கு தெருக்கள் கூடும் சந்தியே களமாகும். ஆண்டுதோறும் மாசித்திங்களில் பிறை தோன்றும் நாள் தொடங்கி பைங்குனித்திங்கள் தேய்பிறை முடிய அமைவது இவ்விழாக்காலம்.

சந்திக் களத்தின் நடுவில் சிறு பந்தல் போல நான்கு குச்சிகள் நட்டு அவற்றில் வாழைக் கன்றுகளைக் கட்டுவர். தென்னங்குருத்தில் பின்னியவற்றைத் தோரணமாகச் சுற்றிக் கட்டுவர்.

நடுவில் பேய்க்கரும்பை நடுவர் . இது காமவேளின் வில்லாகிய கரும்பின் அறிகுறி . பேய்க்கரும்பைச் சுற்றி வைக்கோல் பிரியைச் சுற்றுவர் . இஃது எரிப்பதற்கு வாய்ப்பைக் கொள்வது. அதனுடன் ஆமணக்குக் கொம்பை யும் கட்டுவர் . இது காமவேள் மலர் அம்பின் குறி . ஒரு வரட்டியைக் (சாணத்தால் தட்டையாகத் தட்டிக் காய வைத்தது) கட்டித் தொங்கவிடுவர் . இது காமவேள் எரியப் போவதன் குறியீடு.

காமவேள் எரிக்கப்படப் போவதாக எரிந்த கட்சிப் பாடகர் அறைகூவலாகப் பாட அதனை மறுக்கும் எரியாத

கட்சிக்காரர் ஒரு பாடல் பாடுவார். கீழ்வரும் அப்பாடலின் மேலே கண்ட விழா ஒப்பனைகளைக் காணலாம் :

"காமன் பண் டிகையென் று வருடந் தோறும்
காணும்மா சிப்பிறைகண்ட வுடனே, நீங்கள்
ஆமணக்கு பேய்க்கரும்பு தட்டைக் கொண்டு
அருமையுடன் நட்டுவைக்கோல் பிரியைச் சுற்றிப்
பாமரர்கள் ராட்டி ஒன்றைத் தொங்கவிட்டுப்
பங்குனிமா தப்பருவம் மட்டும் அங்கே
நேமமதாய்க் கடலைமொச்சை தேங்காய் இட்டு
நெறியாகக் கொளுத்தச்சொன்ன புராணங் காட்டே"[1]

எரியாத கட்சிப் பாடகர் பகுத்தறிவாளக் கோட்பாடாகவே பாடுவார்.

பாடகர் இருவருக்கும் தனித்தனியே தம்பட்டம் என்னும் பறை (இதனை 'டேப்' என்பர்) அடிப்பவர் தாளத்துக்கேற்ப அடிப்பார். இருவருக்கும் தனித்தனியே ஒத்துப் பாடுபவர் அமைவர் . இவ்வகையில் இரண்டு குழுக்களாக - அணியாக பாட்டுப் போர் நிகழ்த்துவர் . ஒரு வர் பாட மற்றவர் மறுக்க மாறி மாறிப் பாடுவர். இரவில் இப் பாட்டுப் பட்டிமண்டபம் தொடங்கி விடிய விடிய நிகழும்.

"சல்லாப மானதேன் பழைய பாட்டைச்
சபையிலெடுத் தோதுவர்க்கு
வெல்லாமல் போகாதேன் கைபாணத்தால்
(தம்பட்டம்) விடியுமட்டும்
சரமாரி பொழிவேன் மாதோ" (எ . க. பக்.7)

என்னும் பாடலும் விவரம் தருகிறது . இவ்வகையில் இது இசைப் பாடல் பட்டி மண்டபமாக அமையும் . பாடல் போரிடுவோர்க்கு இத்துணைகளுடன் இன்றியமையாதது 'சொல் விளம்பி'. 'சொல் விளம்பி' என்னும் சொல் ஒரு குழுவினர் தமக்குள் மறைவாகப் பேசிக் கொள்ளும் "குழூஉக் குறிச் சொல்".

"வேடர் கள்ளைச் ' சொல் விளம்பி '
என்று வழங்கும் இவை குழூஉக்குறி"[2]

என்றது நன்னூல் காண்டிகையுரை . ஆம், 'கள்' உள்ளே போனால் சொல்லை வெளியே தள்ளும் . இக்காலத்திலும் 'சிறந்த கவிஞர்கள் சிலருக்கு 'தண்ணி உள்ளே போனால் தான் பாட்டு வெளியே வரும்' என்பர்.

கள்ளிற்குப் பல சொற்களை அடுக்கும் பிங்கலம்,
"குந்தி, சொல்விளம்பி, அருப்பம், களியே
நாற்றம், வடிகறை, மதுகரம், கள்ளே"[3]

எனக் கள்ளைச் "சொல்விளம்பி" என்றது.

சொல்விளம்பி உள்ளே போகாமல் காமன் விழா இல்லை எனலாம் .

இதனை அன்னோர் பாடும்,

"கவண்ட முழிபோல் கள்குடித் தெந்தனெதிர்
கஜகரணம் காட்டாதே ஓய்"

(எரிந்த கட்சி லாவணி - பக் .9)

என்னும் பாட்டும் காட்டுகின்றது.

பண்டிகை இன்னதெனவே கண்டுரை சபைதனிலே

பாட்டுக்குப் பாட்டாகப் பாடத் தானா?
பலேசபாசு கானா!
கலகம்செய்யத் தானா?
வேண்டாம்,

பாதிமதியைத் தரித்த ,ஆதிசிவன் மன்மதனைப்
பஸ்பமாகச் சொல்லும் புராணம் வீணா?

(எ . க. பா . பக். 10)

இவ்வாறு பாட்டுக்குப் பாட்டாக இரு கட்சியாரும் மாறி மாறிப் பாடுவர் . இது முன்னர் காணப்பட்ட தொல்காப் பியத்தின் உரையின்படி "பாட்டானும் கூத்தானும் வேறல்" என்றதில் பாட்டால் வெற்றிபெறும் பட்டி மண்டப வழி யாகும்.

இரண்டு கட்சித் தலைவருக்கும் அடியாள் கூட்டம் வந்து அமர்ந்திருக்கும் . இக் கூட்டத்தார்தாம் அவையோர் . தெரு ஓரத்தில் நின்றவாறே வேடிக்கை பார்ப்போரும், வர அஞ்சி வீட்டிற்குள்ளே இருந்து சுவைப்போரும் அவை யோர் பங்கினர் ஆவர் . பாடுகின்ற இரு கட்சிக்காரரும் ஒரு நாட்டாண்மைக்காரரையோ தெருப் பெரியவரையோ நடுவர் நிலையில் தலைவராக அமர்த்துவர் . இவர் பெரும் பாலும் உடல் வன்மையும் பழக்கத்தில் வன்கணமும் உள்ளவராக இருப்பர்.

மணிமேகலைக் காப்பியம். குறித்தமைபோன்று "பற்றா மாக்கள் தம்முடன்" செற்றம்கொண்டு கலவரம் மூட்டுவதற்கு நேரம் பார்த்துக் காத்திருப்பர் பலர் பாடுவோர் சொற்களில் சூடு பிடிக்கும். அந்தந்த இடத்திற் கேற்பப் பாட்டைக் 'கட்டி'ப் பாடுவர். சூடு சூட்டுக் கோலாகிக் கலவரமாகிக் கைகலப்பு நேரும். அடிதடியாக வளர்ந்து குத்து வெட்டிலும் முடியும். (என் பதினோராம் அகவையில் மன்னார்குடி நகரிலுள்ள உடையார் தெருவில் நிகழ்ந்த ஒரு காமன் விழாவில் மூண்ட கலவரத்தில் ஒருவர் வெட்டுண்டு இறந்ததைக் கண்டுள்ளேன்.) கலவரம் நேராத காமன் விழா அந்த நாளில் சிறப்போடு நிகழ்ந்ததாகக் கருதப்படமாட்டாது.

இக்கலவரத்தின் ஊடே வைக்கோல் சுற்றி வரட்டி கட்டிய பேய்க்கரும்பு கொளுத்தப்பட்டு எரிக்கப்படும். மன்மதன் எரிக்கப்பட்டதாகப் பொருள். இதுதான் தீர்ப்பு. நடுவர் சொல்லாத வன்முறைத் தீர்ப்பு.

எரித்த இடத்தில் மறுநாள் காமனுக்குப் பால்தெளி நீர்க்கடன் நிகழும். இதன் முன்னறிவிப்பாகத்தான் கடலை யும் மொச்சையும் தேங்காயும் படைக்கப்பட்டதைப் பாட்டில் கண்டோம்.

"கூறு உன்னாலே சாயுமோசொல் போகமின்றிச் சீவவிர்த்தி
கூட்டுக்கேகின தென்றீரே வாது - வாது!
குதற்க வாதம் பேசவந்தாய் தற்க சாத்திர மல்லாமல்
குட்டிப் புலவர்களே என் மீது - மீது!"

இவ்வாறெல்லாம் இடையிடையே வாது, தருக்கம், குதர்க்கம் என்னும் சொற்கள் அமையும். இஃதும் பட்டி மண்டப அடையாளமாகும்.

தத்தம் கொள்கைகளுக்கு மேற்கோள் காட்டியும், சான்று கூறியும் பாடிக் கொள்வர். எரிந்த கட்சிக்காரர்.

"சோதனைக்கு ஓதி வைத்தாநே
வாதிலேகேள் சட்டைமுனி,
சுடுசாம்பல் மாரன் எனக்கூறி"

என்று 'சட்டை முனிவன் சான்று' என்று காட்டுவார். எரியாதகட்சிப் பகுத்தறிவாளர்,

"வள்ளுவர் சொன்னதொரு ஜல்லிபுராணக் கொள்கைதனை
அறையாதே அறைகுவன் பகுத்து"

என்று திருக்குறளைச் சல்லி (சல்லிக்காசு மதிப்புள்ள புராணம்) என்று பழித்தும் பாடுவர்.

இரண்டு கட்சியார்க்கும் பாட்டு நூல்களும் வெளி வந்தன. அவற்றையும் தத்தம் ஆசிரியர் சொன்னவற்றையும் எழுதிக்கொண்டு வந்த குறிப்பேட்டையும் எதிரே வைத்துக் கொண்டு பாடுவர். எரித்த கட்சிப் பாடல் நூல்களாக, திருச்சி துரைசாமி நாவலர், புதுப்பேட்டை வடிவேலுப் பிள்ளை, தியாகராய செட்டியார் முதலியோர் எழுதிய பாட்டுக்கள் அச்சேறி 1927-இல் வெளிவந்தன.

எரியாத கட்சிப் பாடல்களில் தஞ்சாவூர் முத்தமிழ் வித்தவான் பாப்புதாசர் பாடல்கள் அக்காலத்தில் புகழ் பெற்றவை.

"டேப்பு குமாரதாசு" என்பார் இப்பாடல்களைப் பாடுவதில் வல்லவர் . பாப்புதாசு பாடல்கள் அமைந்த 'எரிந்தகட்சி வினா விடை' என்னும் நூலில் இருகட்சிக் கருத்துக்களும் காணப்படும்.

எரியாத கட்சிக்காரர்,

"அந்தக் கணபதிக்குத் தொந்தி பெருத்த விதம்
அறியச்சொல் என் தன் முன்னே, முன்னே" என்றுவினவ
எரிந்த கட்சிக்காரர் நேரான விடை சொல்ல இயலாமல்,
"அந்தக் கணபதிக்குத் தொந்தி பெருத்தவிதம்

கொழுக்கட்டை தின்னதினால் அண்ணே, அண்ணே" என்பார் . இரு கட்சிக்காரருக்கும் இலாவணிப் பயிற்சி தரும் ஆசிரியர்கள் இருந்தனர் . அவர்தம் வழிவழியினராக இலாவணி பாடுவோர் இப்போதும் ஆங்காங்கு வாழ் கின்றனர் . ஓர் ஊதியத்தொகை பேசிக்கொண்டு பைங்குனித் திங்களில் நிகழ்ச்சிக்குப் போவது வழக்கமாக உள்ளது இஃது ஒரு தொழில் ஆகியது.

இப்போதும் அரசியலில் ஒவ்வொன்றிற்கும் மாறி மாறிப் போட்டியாக விடை சொல்வதை விரும்பாதோர், 'நான் லாவணி பாட விரும்பவில்லை' என்பதை அறிவோம்.

எனவே, இந்த இலாவணி, 'தெருப்பட்டி மண்டப' மாக - அதிலும் முச்சந்தி, நாற்சந்திப் பட்டிமண்டபமாக நிகழ்ந்தது. பட்டி மண்டப வரலாற்றில் இதற்கும் ஓர் இடம் உண்டு.

மேலே கண்ட பாடல்களை நோக்கினால் அவற்றில் விருத்தப்பாக்களைக் காணலாம். எனவே. தொடக்கக் காலத்தில் புலவர்களால் யாக்கப்பெற்ற பாடல்களைக் கொண்டு சமயக் கருத்துப் பட்டி மண்டபமாக இருந்து, பின்னர் மாறியதாகக் கொள்ளவேண்டும். கால விளைச்சலில் இவ்வாறு தடம் புரண்டது.

இதில் பாடப்படும் பாடலை இலாவணிப் (லாவணி) பாடல் என்பர். இப்பெயர் எவ்வாறு வந்தது?

> "லாவணி என்பது மராத்திய மொழியில் இசைப் பாடல் வகை"[4] என்கிறது

சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி. அறிஞர் வையாபுரிப்பிள்ளையவர்களின் கருத்தும் இஃதே.

ஆனால், இப்பாடல் போக்கு, தமிழ் மக்களின் தென்பாங்கு வகையில் இசைப்பு கொண்டது. காமன் விழா நிகழ்ச்சி மராத்திய மண்ணில் தோன்றி, தமிழ் மண்ணில் புகுந்து மராத்திய மொழியின் பாடற்பெயரைப் பெற்றிருக்கவேண்டும்.

எவ்வாறாயினும் இப்போர், பட்டி மண்டபத்திற்குரிய களம், அறைகூவல், இசைப்பாட்டால் போரிடுவோர்,

போரிடும் இரண்டு அணியினர், அவையோர் (?) செயல் முறைத் தீர்ப்பு, குத்துவெட்டு ஒறுத்தல் என அமைந்தது.

இக்காலத்திலும் சிற்றூர்ப் பகுதிகளில் இந்தக் காமன் விழாப் பாடல் போர் நிகழ்கின்றது . பாடுவோர் கருத்து நோக்கிலன்றி ஊதிய நோக்கில் பங்கு கொள்வர். இருவகைக் கட்சியையுமே ஒருவர் பாடும் பணியை மேற்கொள்வர். பாடுவோர் வழி வழிக் குடும்பத்தினராகவும் உள்ளனர். ஊதியம் பேசி ஒத்துக்கொண்டு நிகழ்ச்சிக்குச் சென்று வருகின்றனர். இஃது ஒரு தொழிலாகியது.

இஃதும் ஒரு திறமையின் வெளிப்பாடு என்பதாலும், பட்டி மண்டப வடிவங் கொண்டது என்பதாலும் இங்குச் சற்று விரிவாகக் காணவேண்டியதாயிற்று . இது கலைப் பாங்குடன் வளர்க்கப்படலாம். இஃது ஒருவகைப் பொழுது போக்கு நிகழ்ச்சி தானேயன்றி ஏதும் கருத்துப்பயனோ, குமுகாயப் பயனோ கொண்டதன்று.

பிற்காலப் பட்டி மண்டபம் பற்றி நோட்டமிடும் இப்பகுதியில் இக்காமன் விழா கி . பி . 16, 17 ஆம் நூற்றாண்டளவில் செல்வுதால் பிற்காலப்பட்டி மண்டபங்களில் முந்தியதாக நோட்டமிடப்பெற்றது.

அடுத்து, புலமை வித்தகத்தால் நிகழ்ந்தவை காணத் தக்கவை.

# இ) கருத்து விளைச்சல்

## நூல் அரங்கேற்றத்தில்

மணிமேகலைக் காப்பியக் கால அளவில் பெருகிய சமயப் பட்டி மண்டபம் பையப் பைய அருகியது. ஆனால், சமய நூல்களின் அரங்கேற்றத்தில் நேர்ந்த தடைவிடைகளால் பட்டி மண்டபம் நிழலாடிக் கொண்டிருந்தது.

கந்தபுராண நூல் அரங்கேற்றத்திலும், அருணகிரியாரின் கந்தரலங்கார நூல் அரங்கேற்றத்திலும் இவ்வாறு நிகழ்ந்தமை காணப்பட்டன. நாகபட்டினத்தில் திருநாகைக் காரோணப் புராண அரங்கேற்றம் முத்து மண்டபத்தில் நிகழ்ந்தபோது தடைவிடை நேர்ந்தது. நூலாசிரியர் புலவர் பெருமகன் சி. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தம் புலமைத் திறங்கொண்டு வீறுற்றார். ஆங்காங்கு அவ்வப் போது இவ்வாறு நேர்ந்தது.

## இராமநாதபுரம் அரசர் அவையில்

இராமநாதபுர அரசர் மாண்பமை பாஃச்கரசேதுபதி (1888 - 1903) அவர்கள் தமிழ் உணர்வினர்; புலமையர்; சைவ சித்தாந்த ஆர்வலர். புலவர்களைக் கூட்டி அளவளாவுபவர். 'வ்வளாவலில் பட்டி மண்டபக் காற்றும் வீசியது.

கி . பி . 1900 ஆண்டில் தம் அவையில் சைவ, திருமாலிய, நான்மறைக் கோட்பாட்டிய, இசுலாமிய, கிறித்துவப் பெருமக்களைக் கூட்டினார் . சிறப்பாகச் சைவத் திரு சோமசுந்தர நாயகர் அழைக்கப்பட்டிருந்தார் . அவையில் சேதுபதி அவர்கள், 'வந்துள்ள சமய அறிஞர்கள் தம்தம் சமயக் கோட்பாடுகளை அவையில் வைக்கலாம்; தடை விடைகளால் கருத்துப் போரிடலாம்; இறுதியில் காணப் படும் முடிவு தீர்ப்பாகும்; வென்றவர் பொன்னாடை போர்த்திப் பாராட்டப்படுவார்; பரிசாக இரு கைகளுக்குத் தங்கத் தோடா அணிவிக்கப்பெறுவார்; உருவா 5000/- கொண்ட பொற்கிழி வழங்கப்பெறுவார்' என்று அறிவித்தார் . எவரும் தாமாக முன்வரவில்லை . சேதுபதி அவர்கள் சைவத் திருவாளர் நாயகர் அவர்களைச் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளைக் கூறுமாறு வேண்ட அவரும் நீண்ட சொற்பொழிவாற்றினார் . சொற்பொழிவாயினும் பிறன்கோள் மறுத்தல், தன்கோள் நிறுத்தல் முதலியவற்றால் தாமே கருத்து மாற்றங்களைக் கூறினார் .

மீண்டும் சேதுபதி அவர்கள் நாயகரின் சைவ சித்தாந்தக் கருத்துக்களை அவையிலுள்ளோர் எவரும் மறுக்கலாம் என்று அழைத்தார் . எவரும் முன்வராத நிலையில் சைவ சித்தாந்தமே வென்றதாக அறிவித்தார் . இஃது ஒருதலைத் தீர்ப்பாகவே அறிவிக்கப்பட்டது. நாயகரவர்கட்கு பாராட்டையும் பரிசுகளையும் வழங்கி "வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம்" என்னும் பட்டத்தையும் வழங்கினார் .

இது முழு நிறைவான பட்டி மண்டபம் அன்று. ஒருதலைக் கருத்துப் போராக அமைந்தது. எதிர்ப்போர் இல்லாத கருத்து விளக்கத்தில் நடுவர் தீர்ப்பு அமைந்தது. அஃதும் நடுவரது தனி ஆர்வக் கருத்தாக அமைந்தது. வந்தமைந்த அவையோர் அரசர் கருத்தறிந்து தம் கருத்தை வைப்பது வீணாகுமோ என்று ஐயங்கொண்டும் வாளா இருந்திருப்பர். இது சமயம் சார்ந்த பட்டி மண்டபத்தின் ஒருமுனை நிகழ்ச்சி.

## அருட்பா -மருட்பா கருத்துப்போர்

வள்ளலார் இராமலிங்க அடிகள் பாடிய தெய்வப் போற்றிப் பாடல்கள் 'அருட்பா' என்று சிறப்புப்பெயர் சூட்டப்பெற்று நூலாகவும் வெளிவந்தன. 'தேவார மூவரும், மணிவாசகருமே சிவனருள் பெற்றுப் பாடியவர்கள். எனவே, அவையே அருட்பாக்கள். மற்றவை பாடல்களே' என்றும், குறிப்பாக 'வள்ளலார் மருளியே பாடியுள்ளார்; எனவே, மருட்பாவே' என்ற தடைக் கருத்து என்றும் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்களால் எழுப்பப் பட்டது. அவர்தம் மாணவராம் புலமைத்திரு கதிரைவேற் பிள்ளையவர்கள் தம் ஆசிரியர் ஆணையை ஏற்றுத் தமிழ் நாட்டில் நகர் நகராக அருட்பாவை எதிர்த்துச் சொற்பொழி வாற்றினார்.

இதனை விரும்பாத பலர் திரு. வி. க. அவர்கள் துணையுடன் மறைமலையடிகளாரை அணுகினர்.

வள்ளலார் அருட்பாவின்பால் ஈடுபாடு கொண்டிருந்த அடிகளார் ஏற்றார். இதனைத் தீர்த்துக்கொள்ள ஒரு பட்டி மண்டபம் ஏற்பாடாகியது.

20 . 9 . 1903 இல் சிந்தாதிரிப் பேட்டையில் ஓர் அறமன்ற நடுவர் தலைமையில் கருத்துப்போர் நிகழ்ந்தது. மறைமலையடிகளாரும் கதிரைவேற்பிள்ளையும் மாறி மாறிப் பேசினர். அடிகளார் உரையும், காட்டிய சான்றுகளும் பிள்ளையவர்களால் மறுக்க முடியாத நிலையில் பிள்ளையவர்கள் தடம் புரண்டு வேறு சில பேசினார். இடையில் எழுந்து அவையை விட்டுப் போனார். நடுவர் அருட்பா சார்பில் பேசினார். ஆயினும், வழக்கை முன் வைத்தவர் அவையில் இல்லாமையால் தீர்ப்பாக முடிவு சொல்லாது ஒற்றிவைத்தார்.

மீண்டும் 27. 9. 1903 இல் இதே அமைப்பு ஏற்பாடாயிற்று. இசைந்திருந்த பிள்ளையவர்கள் வரவில்லை. அடிகளார் தம் விளக்க உரையுடன் கூட்டம் கலைந்தது.

மூன்றாவது முறையாக 18 . 10 . 1903 இல் சென்னை வேணுகோபால் சென்டிரல் கூடத்தில் வழக்குரை ஏற்பாடாயிற்று. பிள்ளையவர்கள் வரவில்லை. மூன்றாவதாகையால். நடுவரால் "வள்ளலார் பாடல்கள் அருட்பாக்களே" என்று தீர்ப்பு வழங்கப்பெற்றது.

இது பட்டி மண்டபப் பாங்கேயாயிற்று. இந்நிகழ்ச்சி ஞானசம்பந்தர் பொருள்வாதம், அனல் வாதம், புனல் வாதம்

என்று மும்முறை நிகழ்ந்ததையும் மூன்றாம் முறை வெற்றி நிலைத்ததையும் நினைவுறுத்துகிறது. பாணபத்திரன் மனைவி - இலங்கைப் பாடினி இசை வாது நிகழ்ச்சியும் மூன்றாம் முறையில் தீர்ப்பானதும் இங்கு இணைத்துப் பார்க்கத்தக்கது.

## நேர்ந்த வாய்ப்பும், தேர்ந்த பதிவும்

சேதுபதி அரசர் வழியில் மாண்புமை பாண்டித் துரைத் தேவர் ஆட்சி பெற்றார். தேவரவர்கள் தேர்ந்த புலமையர். தமிழின் உணர்வும், தமிழ் ஆய்வும் கொண்டவர். தம் ஆட்சியில் மதுரையில் ஒரு தமிழ்ச் சங்கத்தை நிறுவி னார். இது கடைச்சங்கத்திற்குப் பின் தோன்றிய நான்காம் தமிழ்ச் சங்கமாகக் கருதப்பட்டது. அவ்வப்போது தமிழாய்ந் தோரை அழைத்து அளவளாவுவதும், பொழிவு நிகழ்த்து வதும் இவர்தம் வாழ்வியலாக அமைந்தன. சங்க வெளி யீடாகச் 'செந்தமிழ்' என்னும் இதழையும் தொடங்கி இயக்கினார்.

ஆண்டுதோறும் தமிழ்ச் சங்க ஆண்டுவிழாவைச் சிறப் புற நிகழ்த்தினார். நான்காம் ஆண்டு விழா ஒரு பட்டி மண்டபத்திற்கு வழிவகுத்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த தமிழறிஞர் திரு. வி. கனகசபைப்பிள்ளை சென்னையில் தலைமை அஞ்சல் அலுவலகத்தில் பொறுப்புள்ள பணியிலமைந் தவர். மரபு வழியான தமிழ்ப் புலமையினர். "1800 ஆண்டுகளுக்கு முன் தமிழர்" என்னும் நூலை எழுதிப் பெயர்

பெற்றவர். இவர் மதுரைத் தமிழ்சங்க நான்காம் ஆண்டுவிழாத் தலைவராக அமர்த்துப் பெற்றார். சிறப்புச் சொற்பொழிவாளராக நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகள் அமைந்தார்.

அக்காலத் தமிழ்ப்புலமைச் செம்மலரான திரு நாராயண ஐயங்கார் (செந்தமிழ் இதழாசிரியர்) இரா. இராகவ ஐயங்கார், மு. இராகவ ஐயங்கார், இராசகோபால இராசாளியார், உ. வே. சாமிநாத ஐயர் முதலிய பெரும் புலவர்கள் அவையை அணிசெய்தனர்.

இஃது, ஆண்டு விழாச் சொற்பொழிவுக் கூட்டமாகத் தான் துவங்கியது. ஆனால், தலைவரின் முன்னுரைப் பொழிவு பட்டி மண்டப நிகழ்ச்சியாக மாற வாய்ப்பு தந்தது.

தலைவரவர்கள் 'அகத்தியர், தொல்காப்பியர், திருவள்ளுவர் முதலிய சான்றோர் அனைவரும் ஆரிய இனத்தவர். அவர்கள் வழங்கிய நூல்களே தமிழை வாழ வைக்கின்றன. எனவே, ஆரியர்க்குத் தமிழர் கடமைப் பட்டவர்' என்று பேசினார். அக்காலத் தமிழ்ப் புலவர் கூட்டங்களில் இக்கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன வாக இருந்தன.

இந்த அவையில் தமிழ் ஆய்வும், தோய்வும், வடமொழித் தெளிவும் நெளிவும் ஆங்கில அறிவும் செறிவும் நிறைந்த தனித்தமிழ்ப் பெருமகன் மறைமலையடிகளார் பொழிவு, புரட்சிக் கருத்துக்களை நிரப்பியது.

"அகத்தியர் முதலாகப் பெரும்புலவர்கள் தமிழர்களே. அவர் யாத்த நூல்கள் தமிழர்தம் மரபுகளே . வந்த ஆரியர் தமிழக் கருத்துக்களைத் தாம் கொண்டனர்"

என்று தமிழ் நூல்கள், நான்மறை முதலிய பல்வகைச் சான்றுகள் காட்டிப் பேசினார்.

இடையிடையே தலைவர் சிறுசிறு மறுப்பு சொன்னார் . அவை நொறுக்கப்பட்டன . கூட்டத்தில் அமர்ந்த தமிழ் உணர்வுடையோர் அடிகளார் கருத்தை ஏற்றுக் கையொலி செய்து பாராட்டினர் . அவை சுவையொடு சூடு கொண்டது . அவையை இயக்கிய தேவரவர்கள் நடுவரானார் . தலைவர் உரையையும், பொழிவாளர் உரையையும் சீர்தூக்கி, "தமிழர் தனிப் பெருமை உடையவரே" என்று தீர்ப்பளித்தார்.

மறுநாள் இத்தீர்ப்பின் விளக்கமாக அடிகளார் "பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்" என்னும் பொருளில் பல்வகைச் சான்றுகளுடன் பேருரையாற்றினார் . இப் பொழிவு "பண்டைத் தமிழரும் ஆரியரும்" என்னும் நூலாகப் பின்னர் வெளிவந்தது . இப்பதிப்பு மதுரைத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாக் கருத்துப் போர்த் தீர்ப்பின் பதிவு முத்திரையாயிற்று.

சங்க கால ஆட்சிப் பட்டி மண்டப நோக்கமான கருத்து நிறைவேறி அது சங்கப் புலவர்களால் ஏற்கப்பட்டுச் சங்கத்தில் பதிவான பாங்கை இப்பட்டிமண்டபப் பதிவு நினைவுறுத்துகின்றது.

மறைமலையடிகளார் பதிவாக்கிய இப்பட்டி மண்டபம் தமிழர்க்கொரு பெருமை எனலாம்.

## தீர்ப்பில் விளைந்த 'தீ பரவட்டும்'

இலக்கியங்கள் மக்கள் வாழ்க்கையின் பதிவுகள்; அவை மக்கள் வாழ்வின் இயக்கத்திற்கு அவர்களை இயங்க வைக்க வேண்டும் : அவ்வாறு இயங்க வழிகாட்டாதவை இலக்கியங்கள் அல்ல; மாறாகக் கலக்கும் இயங்கள் - கலக்கி யங்கள்.

பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ. வே. இராமசாமி அவர்கள் தமிழ் இலக்கியங்களில் நேர்ந்த கலக்கியங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். அனைத்துப் புராணங் களும் அவற்றுள் அடங்கும். ஆயினும், இரண்டு நூல்களை அவற்றின் அறிகுறிகளாகக் கண்டு அவற்றைக் கண்டனம் செய்தார். அக்கண்டனத்திற்குரியவையாகக் கம்பராமா யணமும், பெரியபுராணமும் அறிவிக்கப்பட்டன.

'தமிழ் இனத்தவரை அரக்கர் என்றும் குரங்குகள் என்றும் இழிவுபடுத்தி, இராமன் என்னும் வடபுலத்து ஆரிய அரசகுமாரனைக் கடவுள் அவதாரமாகக் காட்டித் தமிழர்களை வணங்கவைத்துத் தாழ்த்தியது கம்பராமா யணம் என்றும், நம்பத்தகாதனவும் அறிவிற்குப் பொருந் தாதனவும் ஆகியவற்றைக் கடவுள் அருள் என்னும் கவர்ச் சிப் போர் வைக்குள் வைத்துத் தமிழரைத் தாழ்த்தியது பெரியபுராணம் என்றும், பெரியார் அறிவித்தார்.

இவற்றைக் கண்டிக்கும் அறிகுறியாக 'இவ்விரண்டு நூல்களையும் தீயிட்டுக் கொளுத்தவேண்டும்' என்றார்.

பெரியாரின் கொள்கைகளை அடியொற்றி எழுதியும் பேசியும் பின்பற்றியும் நின்ற அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தீயிட்டுக் கொளுத்தவேண்டியதன் கரணியத்தை எழுதினார்; பேசினார்; முழங்கினார். 'கம்பரசம்' என்றொரு நூலையும் வெளியிட்டார்.

தீயிட வேண்டும் என்னும் கருத்தைக் கம்பர் ஆர்வலரும், காப்பியச்சுவையில் அழுந்தியோரும் சைவப் பெருமக்களும் எதிர்த்தனர். இதற்கென ஒரு பட்டி மண்டப நிகழ்ச்சி ஏற்பாடாயிற்று.

சென்னைச் சட்டக் கல்லூரி மண்டபம் பட்டி மண்டபக் களமாயிற்று.

9. 2. 1943 செவ்வாய் மாலை மணி 4.30 இல் நிகழ்ச்சி தொடங்கிற்று.

நடுவராக இந்து சமய மேற்பார்வைத் தலைவர் திருமிகு இராமச்சந்திரஞ் செட்டியார் அமர்ந்தார். இவர் சட்டம் பயின்றவர். தமிழறிவும் சைவப்பற்றும் கொண் டவர்.

"கம்பராமாயணமும் பெரியபுராணமும்
தீயிடப்படவேண்டும்;
தீயிடப்படக்கூடாது"

என்பது பட்டிமண்டபப் பொருள்.

கம்பராமாயண ஆர்வலர், சைவப்பெருமக்கள் புலவர்கள், பகுத்தறிவுக் கொள்கையர் கூடிய பேரவையாக அது அமைந்தது.

'தீயிட வேண்டும்' என்னும் அணித்தலைவராக அறிஞர் பெருந்தகை சி. என். அண்ணாதுரை அவர்களும், ஒத்துக் கருத்துப்போரிடுபவராக திரு ஈழத்து அடிகளும் அமர்ந்தனர்.

'தீயிடக்கூடாது' என்னும் அணித்தலைவராகச் சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளையவர்களும், ஒத்து உரைப்போராகச் சட்டக் கல்லூரி மாணவர் திருவளர் சீனிவாசனும் அமர்ந்தனர். பிள்ளையவர்கள் சட்டம் பயின்றவர்; சென்னைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்த்துறைத் தலைவர்.

'தீயிடவேண்டும்' என்பதை விளக்கி அறிஞர் அண்ணா கருத்துச் செறிவுடன் நயம்பட ஒன்றரை மணி நேரம் கருத்துரையாற்றினார்.

'தீயிடக்கூடாது' என்பதை வலியுறுத்திப் பிள்ளை யவர்கள் பேசினார். பதினைந்து மணித்துளிகளே பேசித் தமக்கு உடல்நிலை நலமாயில்லை என்று கூறி மேடை யினின்றும் விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

அடுத்து, 'தீயிடவேண்டும்' என்று திருஈழத்து அடிகள் உரையாற்ற 'தீயிடக்கூடாது என்று திருவளர் சீனிவாசன்

உரையாற்றினார். அவர் தொடக்கத்திலேயே 'ஆரியர், திராவிடர் என்று பிரிவு இல்லை' என்றதை எதிர்த்துக் கூட்டத்தினர் ஆரவாரம் செய்தமையால் அரைகுறையாகத் தம் பேச்சை முடித்தார்.

பிள்ளையவர்கள் கருத்தை மறுத்து அறிஞர் அண்ணா அவர்கள் உரையாற்றினார். ஆணியறைந்தாற் போன்று அழகு தமிழில் நயம்பட உரையாற்றினார்.

நடுவரவர்கள், தீயிடக்கூடாது என்று உரையாற்றிய பிள்ளையவர்கள் மறுமுறை பேசலாம் என்று சொன்னதை வைத்து 'இப்போது என் கருத்தைத் தீர்ப்பாகச் சொல்லு வதற்கில்லை: பின்னொரு நிகழ்ச்சியில் சொல்வேன்' என்று தீர்ப்பை ஒற்றிவைத்தார்.

பட்டி மண்டபம் அன்றளவில் முடிந்தது.

பாங்குடன் பட்டிமண்டபம் நிகழ்ந்தது. தமிழ்ச்சுவை யும், பெருந்தகவும் இருசாராரிடமும் அமைந்தன. தீர்ப்பு தான் அமையவில்லை என்றாலும் அறிஞர் அண்ணாவின் கருத்தே மேவிநின்றது.

கால ஆட்சியின் பட்டி மண்டப வரலாற்றில் இப் பட்டி மண்டபம் ஒரு புரட்சி விளைச்சல்.

நடுவர் அறிவிப்பின்படி இப்பட்டி மண்டபம் தொடரவில்லை. வேறு நிகழ்ச்சியாகத் தொடர்ந்தது.

இதற்குக் களமாக, சேலம் செவ்வாய்ப்பேட்டைத் தேவாங்கர் பாடசாலை மண்டபம் அமைந்தது.

சேலம் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ஏ. இராமசாமிக் கவுண்டர் நடுவரானார். திருமாலிய சமயப் பற்றாளரான இவர் நாளும் நெற்றியில் சிவப்புக் கோட்டுத் திருமண் இட்டுக்கொள்பவர்.

கருத்து முன்னதே.

அறைகூவியவரும் அறிஞர் அண்ணா அவர்களே. நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் மறுத்து உரையாடினார். நாவலர் திறனுள்ள புலமையர்; சட்ட அறிஞர்; தன்மானக் கருத்துள்ளவர்.

பாங்காகவும் பெருமளவில் ஒத்ததறிந்த முறையிலும் வழக்குரை நிகழ்ந்தது. பலவகையில் தமிழரைத் தாழ்த்தும் கருத்து கம்பராமாயணத்திலும், அறிவுக் கொவ்வாத நிகழ்ச்சிகள் பெரியபுராணத்திலும் அமைக்கப்பட்டிருப்பதாக நாவலர் அவர்கள் ஏற்றாலும் 'தீயிடல்' கூடாது என்று வலியுறுத்தினார். அறிஞர் தீயிடும் நோக்கத்தை விளக்கினார். நாவலரவர்கள் சிறிதளவே உரையாடி ஊர் செல்ல வண்டிக்கு நேரமாகிய கரணியம் சொல்லி இடையில் விடைபெற்றார்.

அறிஞர் அண்ணா மறுத்துரையாற்றினார். அவையோர் அறிஞர் அண்ணாவையே ஒத்து நின்றனர்.

நடுவர் இரண்டு கட்சிக் கருத்துக்களையும் சுருக்கமாக எடுத்து மொழிந்தார். உரையாற்றிய இருவருக்கும் அதிக அளவில் கருத்து மாற்றம் இல்லாததைக் குறித்தார்.

தீர்ப்புரையாக,

"நூலைக் கொளுத்துவது பயன் தரத்தான் செய்யும். வேற்றார் ஆடைகளைக் கொளுத்தினது எப்படி அன்னிய நாட்டுப் பொருள்களை உபயோகிப்பதைக் கண்டிக்க ஓர் முறையாக இருந்ததோ அதுபோல அன்னியக் கலையைக் கண்டிக்க அந்த ஏடுகளைக் கொளுத்துவது ஒரு வழி. ஆனால், அந்த ஏடுகளை உடனே கொளுத்திவிடாமல் 'இதோ கொளுத்துகிறோம், கொளுத்தப்போகிறோம்' என்று இன்னும் சில நாள்கள் இது போன்ற விசய விளக்கமாற்றும் காரியத்தைச் செய்யவேண்டும் என்பது என் அபிப்பிராயம்" என்று 'தீயிடும்' கருத்துக்குச் சார்பாகவும் இதன் நடை முறையால் மாறுபாடுகள் வலுக்காதிருக்க அமைதியாகவும் தீர்ப்பைக் கூறினார்.

இத்தீர்ப்பு மக்களிடையே பரவிப் பதிவாகும் வகையில் இரண்டு நிகழ்ச்சிகளின் கருத்துக்களும் 'தீ பரவட்டும்' என்னும் நூலாக வெளிவந்தது. பட்டி மண்டபங்கள் இரண்டும் நிகழ்ந்த அதே ஏப்ரல் திங்களில் வெளிவந்தது. தொடர்ந்து அடுத்தடுத்து நான்கு பதிப்புகள் பதிப்பானவை ஒரு சிறப்பாயிற்று.

இது தீர்ப்பினால் விளைந்த 'தீ பரவட்டும்'.

ஒரு நூலைக் கண்டிக்கக் கொளுத்துவது என்பது ஒரு கடுமையோ, கொடுமையோ அன்று. மாறாக 'நன்மை உண்டு'

என்று பொதுவாகச் சான்று பாடினார் கவிமாமன்னர் பாரதியார் . தாம் எழுதிய கண்ணன் பாட்டுத் தொடரில் 'கண்ணன் என் தந்தை' என்னும் தலைப்பில் தந்தையாம் கண்ணன் கூற்றாக வைத்துப் பின்வரும் பாடலாகப் பதிந்தார்.

"மேலவர் கீழவர் என்றே - வெறும்
வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை எல்லாம் - இன்று
பொசுக்கி விட்டால் எவர்க்கும் நன்மை உண்டு"[6]

இப்பாடலில் உள்ள ஒவ்வொரு சொல்லும் இக்கம்ப ராமாயண, பெரியபுராணப் பொசுக்கும் கொள்கைக்குப் பொருந்தும்.

இப்பட்டி மண்டபப் பாங்கில் களம், அவையோர், நடுவர், வழக்கிடுவோர், மாறிமாறிப் பேசுதல், அணியாகப் பேசுதல், ஒற்றி வைத்தல், இடமாற்றம், தீர்ப்பை ஒற்றி வைத்தல், இரண்டாம் நிகழ்ச்சியில் தீர்ப்பு, தீர்ப்பின் பதிவு என்பன நிறைந்தமையால் இஃது ஒரு நிறைவும் பாங்கும் உள்ள பிற்காலப் பட்டிமண்டபம் ஆகின்றது.

மற்றொரு வகையிலும் இப்பட்டிமண்டபத்தை நோட்டமிட வேண்டும். இப்பட்டி மண்டபம் நிகழ்ந்த கால ஆட்சி எத்தகையது (?) மக்கள் உணர்வுச் சூழல் எத்தகையது (?) என்பன கருதத்தக்கவை.

இஃது இருபதாம் நூற்றாண்டுக் கால ஆட்சி. பெரியார் அவர்களின் தன்மான உரிமைக் கருத்தால் தமிழரிடை ஒரு புதுமலர்ச்சி தோன்றிவந்த காலம். இம் மலர்ச்சிக்குத் தம்மை ஈடுபடுத்தி மக்கள் தன்மான உணர்வில் விழித்தெழுந்த காலம். இக்காலச் சூழல் தீயிடும் கருத்திற்குச் சார்பாயிற்று. கருத்துப் போராடிய அறிஞர் அண்ணா அவர்கள் வியப்பும், நயப்பும் வழங்கும் சிறந்த சொற்பொழிவாளர். 'நிரந்தினிது சொல்லி விரைந்து தொழில் கேட்ப'ச் சொல்பவர். இஃதும் வலிமை வாய்ந்த துணையாயிற்று. இவ்விரண்டு நிகழ்ச்சிகளிலும் கூடிய அவையோர் பெரும்பாலோர் தன்மானப் பகுத்தறிவு இயக்கச் சார்பினர். இடையிடையே அன்னார் அறிஞர் அண்ணா உரையைக் கையொலியாலும், ஆரவாரத்தாலும் வரவேற்று வலிமை சேர்த்தனர். இக்கூட்ட அவையினர் ஆர்வக்கொப்பளிப்பே எதிர்த்துப் பேசிய இருவரையும் இடையிலேயே வெளியேற வைத்தது எனலாம். இவை ஒரு பட்டிமண்டபத்திற்கு ஒரு குறை என்றாலும் மணிமேகலை குறித்த "பற்றா மாக்கள் தம்முடனாயினும் செற்றமும் கலமும் செய்யாது அகலுமின்" என்னும் கருத்து கால வளர்ச்சியில் பெருகியதால், 'தீயிடும்' பட்டி மண்டப விளைச்சல் நேர்ந்தது எனலாம்.

மேலுமொரு குறிப்பைக் கொள்ளவேண்டும். முதல் நிகழ்ச்சியாம் வழக்குரைத்து வாதிட்டமை சட்டக் கல்லூரி யில் நிகழ்ந்தது. அதன் முதல் நடுவரும், முதல் மாற்றுரை யாளரும், இரண்டாவது நிகழ்ச்சியின் மாற்றுரையாளரும்,

ஒத்துப் பேசிய ஒரு மாணவரும் சட்டம் பயின்றவர்கள். சட்டச் சார்பில் இப்பட்டி மன்றம் நிகழ்ந்தது குறிக்கத் தக்கது. வழக்காடிய நாவலர் சோமசுந்தர பாரதியார் தம் உரையின் தொடக்கத்தில்

> "எதிர்க்கட்சிக் காரர் என்னென்ன காரணம் கூறுவார் என்பதை யோசித்துப் பார்த்து அதற்குச் சமாதானம் தேடிக்கொண்டு, பிறகே என் கட்சிக்கான ஆதாரம் தேடுவது வழக்கம்"[7]

என்று தம் வழக்கறிஞர் தொழிலின் முன்னேற்பாட்டைக் கூறினார்.

இதனைத் தொல்காப்பியம்

"மறுதலைக் கடாஅ மாற்றமும் உடைத்தாய்"[8]

என்றது.

'மாற்றுக் கருத்துடையவர் வினாவை அறிந்து அதற்கு மாற்றமான விடையையும் முன்னரே கருதிப் பார்த்துக் கொள்ளுதல்' என்பது இதன் கருத்து. தொல்காப்பிய வல்லுநரான பாரதியார் அவர்கட்கு இம்முறை இயல்பில் அமைந்திருந்ததை அறியலாம். இஃதும் ஒரு பட்டி மண்டபக் குறிப்பாகின்றது.

அறிஞர் அண்ணா அவர்கள் முதற்பட்டி மண்டப நிகழ்ச்சியின்போது தம் உரையில். ஓர் உத்தியைக் கை யாண்டார்.

"ஒரு சைவப் பெரியார் கூறியதைக் கேளுங்கள்" - என்று குறித்து சைவப் பெரியார் கூறிய கோயில் அவலங்களைச் சொன்னார். அவர் சொன்னபடியே அடுக்கடுக்காகச் சொன்னார். வழிபடச் செல்வோரை இவ் அவலங்கள் எவ்வாறு திசை திருப்புகின்றன என்று சைவப்பெரியார் காட்டியதையும் எடுத்து மொழிந்தார்.

மொழிந்து,

"இது இன்று நமது கூட்டத்திற்குத்
தலைமை வகித்துள்ளவர் மைலத்தில்
ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி"[9]

என்றார். கூட்டத்து அவையோர்க்கு இது வியப்பையும் நயப்பையும் விளைத்தது. நடுவரையே தம் கருத்துக்குச் சான்றாகக் காட்டிய உத்தி இது.

"வேட்பத் தாம் சொல்"லும் திறன் படைத்த அறிஞர் அவர்கள் "பிறர் சொற் பயன் கோடல்" என்னும் உத்தியை இவ்வாறு கையாண்டமை ஒரு புதுமையாயிற்று. இப் புதுமை தொடர்ந்து இக்காலத்துப் பலராலும் கையாளப் படுகின்றது.

இப்பட்டி மண்டபத் 'தீ பரவட்டும்' தீர்ப்பால் ஏதும் பயன் விளைந்ததா? விளைந்தது. இலக்கியப் பார்வையில் ஒரு புரட்சி ஏற்பட்டது. கலை என்று சொல்லி அதனையே வலையாக விரித்து மக்களைத் தன்மானமற்றவர்களாக

ஒடுக்கும் செயல் வெளிப்படுத்தப்பட்டது. இலக்கியத்தில் பகுத்தறிவு புகுந்து நலம் பயக்கும் கருத்துக்கள் விரிந்தன. இது தீர்ப்பின் பதிவால் ஏற்பட்ட பயன். இத்துடன் கம்பராமாயண ஆர்வலர் ஒரு முனைப்பு கொண்டு கம்பரைப் பரப்பவேண்டும் என்று எழுந்த பயனும் மாற்றுப் பயனாக விளைந்தது. இந்த மாற்றுப் பயனும் 'தீ பரவட்டும்' குறிக்கோளுக்குச் சார்பாக முடிந்தது என்பதைப் பின் காண்போம்.

கம்பராமாயணத்தைத் தாக்கும் நோக்கில் பட்டி மண்டபமும் இடம் பெற்றமை போன்று கம்பராமாயணத்தைப் பரப்பும் நோக்கில் பட்டிமண்டபம் இடம் பெற்றதையும் இதனைத் தொடர்ந்து நோக்கவேண்டும்.

## கம்பன் கழகக் கதிர்மணி விளைச்சல்

பிற்காலப் பட்டி மண்டப வரலாற்றில் ஒரு வைர முத்திரை காரைக்குடி கம்பன் கழகப் பட்டி மண்டபம்.

இதன் முழுப்பெருமையும் காரைக்குடி திரு. சா. கணேசன் அவர்களையே சாரும். அவர் காந்தியக் கொள்கையர். அதற்குச் சமமான கம்பனின் கன்னித் தமிழ்க் கொள்கையர். கம்பன் பால் உணர்வும் உயிரும், ஆழ்ந்த ஈடுபாடும் கொண்டவர். தம்மைக் 'கம்பன் அடிப்பொடி' என்பதில் பூரித்தவர். காரைக்குடியில் கம்பன் கழகத்தை நிறுவினார். தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கனார், இரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் முதலிய கம்பச்

சான்றோர்களின் வாழ்த்துடனும் வளத்துடனும் அக் கழகத்தைச் செம்மையாக இயக்கினார்.

இப்போது அக்கழகம் தனக்கென ஒரு மணி மண்டபம் பெற்று விளங்குகின்றது. காரைக்குடியிலேயே நிகழ்ச்சிகள் நிகழ்ந்தாலும் தமிழ் நாடெங்கிலும் புகழ் கொண்டதாயிற்று. அதனைப் பேணி வளர்த்த கம்பனடிப் பொடியார் ஆண்டு தோறும் கம்பன் விழாவை மூன்று, நான்கு நாள்கள் நிகழ்த்திக் கம்பன் புகழ் பரப்பினார். "கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்" என்பதை முழக்கமாகப் பரப்பினார்.

அவர் கம்பன் கழகத்தில் நிகழ்த்திய பட்டி மண்டப நிகழ்ச்சி கருத்தொடு கண்ணியமும், முறையொடு நெறியும் சுவையோடு புகழும் கொண்டது.

ஆண்டுதோறும் நான்கு நாள் நிகழ்ச்சியில் ஒரு நாள் பட்டி மண்டபம் வைரப் பளிச்சிட்டு விளங்கியது. இது தான் பட்டி மண்டபக் களம் என்ற நிலைப்பான பதிவைப் பெற்றது.

கம்பராமாயணக் கதை உறுப்பினரில் எவரும் அங்கு அலசப்பெற்றனர்; ஆராயப்பட்டனர். ஒரு கருத்தை நிலை நாட்டுவது நோக்கம் என்னும் அடித்தளம் இல்லாது போயினும் இப்பட்டி மண்டபம் கெட்டி மண்டபமே.

## மும்முனைப் பட்டிமண்டபம்

இருமுனைக் கருத்தன்றி மும்முனைக் கருத்துப் பட்டி மண்டபமாகவும் நிகழ்ந்தது. கம்பராமாயணத்தில்

தொடாத இடம் இல்லை என்னும்படி கருத்துப் போராடல் இடம்பெற்றது.

தகவும், தமிழும் வாய்ந்த நடுவர்களே அமைந்தனர். பரிவும் செறிவும் வாய்ந்தோரே சொற்போராளராக்கப் பட்டனர்.

கம்பன் விழாவை ஆவலுடன் எதிர்பார்த்து வெளியூர்ச் சுவைஞர்களும், புலவர்களும், அறிஞர்களும் வருகை தந்து அமையும் அவை அமைந்தது.

தொடக்கவுரை, அறிமுகம், நடுவர் முன்னுரை மூன்று அணியினர் கருத்து மோதல், முதற்சுற்று என்று அணியினர் பேச்சுக்கள் முடிய அணித்தலைவர்கள் நிறைத்துப் பேசும் இறுதியுரைகள், நடுவர் தீர்ப்பு என்று அனைத்து உறுப்புகளும் நிறைந்த பட்டி மண்டபமாக அது திகழ்ந்தது.

கம்பனடிப்பொடி இல்லாது போயினும் இன்றும் அவர் வகுத்த வழியில் நடைபோட்டு வருகின்றது.

மும்முனைப் பட்டி மண்டபத்தில் அவையோரால் ஓர் அணி விலக்கப்படும். பின் இரண்டு அணித்தலைவ்ர்கள் சொற்போரிடுவர். பின்னர் நடுவர் தீர்ப்பு அமையும். தீர்ப்பு அனைவராலும் பாராட்டிப் போற்றப்படும். கம்பன் திறம் பரப்பும் நோக்கத்தில் இப்பட்டி மண்டப நிகழ்ச்சி தலை தூக்கி நின்று வெற்றி பெற்றது எனலாம்.

## மேல் முறையீட்டு மன்றம்

மேலும், ஒரு புது அமைப்பு தோன்றியது. பட்டி மண்டபத்தில் தோற்ற அணித்தலைவர் கழகத்தார்பால்

மேல் முறையீடு செய்யலாம். அதற்கென மேல் முறையீட்டு மன்றம் அமையும். அதில் அணித்தலைவர்கள் மட்டும் சொற் போரிடுவர். இதற்கென வேறொரு நடுவர் அமர்ந்து உரிய தீர்ப்பைச் சொல்வார். இவ்வாறு ஒரு பட்டி மண்டப வளர்ச்சி உண்டாயிற்று.

## வழக்காடு மன்றம்

இதன் அடிப்படையில் 'வழக்காடு மன்றம்' தோன்றியது. ஒரு நடுவர் தலைமையில் திறனமைந்த பொழிவாளர் இருவர் வழக்காடுபவராக அமைவர்.

"வாலியை இராமன் மறைந்திருந்து
கொன்றது குற்றமே"

என்று ஒருவர் குற்றம் சாற்றி வழக்கைத் தொடங்குவார். குற்றங்களை அடுக்குவார். குற்றங்களை மறுப்பவர் ஒவ்வொன்றும் தவறென்பார். இவ்வழக்கை நடுவர் ஏற்காமல் தள்ளுபடி செய்ய வேண்டும் என்பார்.

நடுவர் கூறப்பட்ட குற்றங்களில் சான்று அற்றது - அற்றவை என்று ஒன்றிரண்டைத் தள்ளுபடி செய்வதும் உண்டு. வழக்கைத் தொடர்ந்தவர் ஒவ்வொரு குற்றமாகச் சான்றுடன் நிறுவ முனைவார். மறுப்பவர் சான்றுடன் ஒவ்வொன்றாக மறுப்பார்.

நடுவர் இறுதியில் அலசி ஆராய்ந்து உரையாற்றித் தீர்ப்பளிப்பார்.

'எம வாதம்'

வழக்காடு மன்றம் பட்டி மண்டப வளர்ச்சிதான். என்றாலும் நாட்டு நடைமுறையில் சமுதாயவியலிலும், குற்றவியலிலும் வழக்குகள் அறமன்றங்களில் நிகழ்ந்து வந்தன. அவற்றில் சட்டம் பயின்ற வழக்கறிஞர் வாதிக்காகவும், பிரதிவாதிக்காகவும் வாதாடினர்.

இம்முறையில் ஒரு சமய வழக்காடு மன்ற நூல் 1927 இல் வெளிவந்துள்ளது. நூலின் பெயர் 'எம வாதம்' இதன் ஆசிரியர் நாகப்பட்டினத்தில் வாழ்ந்த திரு எசு. கே. இராமசாமி நாடார்.

சமயத்துறையில் மார்க்கண்டேயன் கதையை அறிவோம். அதில் எமன் கொல்லப்பட்டு உயிர் அருளப் பெற்றான். அவன் தான் கடமையாற்றும் போது சிவபெருமான் தன்னைத் தடுத்துக் கொன்றது குற்றம் என்று வழக்குத் தொடுக்கிறான். வழக்காடு மன்றத்தில் வழக்கு. நடுவர் சதாசிவனார். வாதிக்காக வழக்காடுபவர் துருவாச முனிவர். சிவபெருமானும் மார்க்கண்டேயனும் குற்றம் சாற்றப் பட்டவர்கள். இருவர்க்கும் முறையே வேதவியாசரும், வசிட்டரும் வாதிட்டனர். இந்நிகழ்ச்சியின் காலமாச துவாபரயுகம் 2017 ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 30ஆம நாள் இந்நூலில் குறிக்கப்பட்டுள்ளது.

தீர்ப்பு சிவபெருமான் சார்பாகத் தள்ளுபடி செய்யப் பட்டதாயிற்று.

இஃதொரு புதுமையான வழக்காடு மன்ற நூல். பட்டி மண்டப வரலாற்றில் இஃதும் இணைந்து கொள்கிறது. இஃதொரு எழுத்து வழக்காடு மன்றம்.

இவ்வாறு வழக்காடு மன்றம் தோன்றி வளர்ந்து பரவியது. இது சூடு மிக்கதாகவே நிகழ்ந்தது; சுவையும் கூடும்.

## பட்டி மண்டபச் செம்மல்கள்

கம்பன் கழகப் பட்டி மண்டபத்தில் நடுவராக அமர்ந்தோர் அறமன்ற நடுவர், புலமை வித்தகர், சொற் பொழிவுச் சித்தர், துறவுச் சான்றோர் எனச் சிறப்பிற்கும் பெருமைக்கும் உரியவராகவே இடம் பெற்றனர்.

சொற்போரிடுவோரும் சொல் வல்லுநராகவும், கருத்துக் கருத்தாளராகவும், நயமும் சுவையும் தழுவிய சொற் சிலம்பராகவும் இடம் பெற்றனர். இம்மண்டபத்தால் வளர்ந்தனர்; புகழ் பெற்றனர். பட்டி மண்டபச் செம்மல் களாயினர். அனைத்து வகையிலும் காரைக்குடிக் கம்பன் கழகப் பட்டி மண்டபம், பட்டி மண்டப வரலாற்றின் பதி வில் வைர முத்திரை; விளைச்சலில் கதிர்மணி விளைச்சல்.

இவ்விளைச்சலின் பயன்பாடு என்ன?
உண்மையாகவே கம்பன் புகழ் பரப்பப்பட்டது;
உடன் பெருமளவில் கன்னித் தமிழும் வளர்க்கப் பட்டது.

ஆனால், கம்பர் விளைக்க விரும்பிய இரண்டில் ...ாறுதான் விளைந்தது. தம் நூலில் அவையடக்கம் பாடிய ...பர் தாம் இதனை இயற்றும் நோக்கமாக "இயம்புவது ...து" என்று வினவிப் பின்வருமாறு விடையும் பாடினார்.

"பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே"[11].

இதில் இரண்டு நோக்கம் வைத்தார்.

ஒன்று, 'பலர் புகன்ற தெய்வ மாட்சி' தெரிப்பது.
இரண்டு, 'கவிதை மாட்சி' தெரிப்பது.

தெய்வ மாட்சி - இராமபிரானின் மாண்பு
கவிதை மாட்சி - (தமிழ்க்) கவிதையின் மாண்பு

கம்பன் கழகப் பட்டி மண்டபத்தால் இவ்விரண்டில் எது விளைந்தது? இரண்டுமா? இல்லை ஒன்றுதான்! அது கவிதை மாட்சி. இப்பட்டிமண்டபத்தைக் கேட்டோர் 'இராமஇராம' என்று ஓதவில்லை; நெற்றியில் பளிச் சென்று திருநாமம் தீட்டத் தொடங்கவில்லை. இராமர் கோயில் எழவில்லை.

கம்பர் தம் படைப்பிற்கு இராம அவதாரம் - இராமாவதாரம் என்று கடவுட் பிறப்பாகத்தான் பெயரிட்டார். அஃதே இராம அயணம் - இராமாயணம் (அயணம் - வரலாறு) என்று வரலாறாகத்தான் பெயர் விளங்கிற்று. கம்பன் கழகப் பட்டிமண்டபத்தால் கம்பனின் கவிதை நயமும், செறிவும், தமிழ்ச்சுவையும், சூழலும் தாம் வெளிப்பட்டன.

கம்பனடிப்பொடியாரே 'இராமன் புகழ்பாடி இராம மந்திரம் வளர்ப்போம்' என்பதை முழக்கமாகக் வைக்க

வில்லை. "கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்" என்றே முழங்கச் செய்தார். கம்பன் கழக விழா மேடையில் இராமர் படத்தைப் போற்றவில்லை. கம்பர் படந்தான் போற்றப்பட்டது. 'இராமஇராம' மந்திரம் ஓதப்பட வில்லை. கன்னித் தமிழ் வணக்கந்தான் சிறந்தது. கம்பன் புகழ் முழங்கப்பட்டது; கன்னித்தமிழ் வளர்க்கப்பட்டது. இவை தாம் உண்மையில் விளைச்சல் தந்த பயன்கள்.

இப்பயன்கள் விளைவதில் கம்பராமாயணத்தினைத் "தீயிடும்" நோக்கினர்க்கு மறுப்பில்லை; மாற்றும் இல்லை. 'தீயிடும்' பட்டி மண்டபத்திலும் அறிஞர் அண்ணா அவர்கள்,

> "கம்பரின் கவித்திறமையைக் கண்டு நாங்களும் வியக்கிறோம். அந்தத் திறமை ஆரியத்தை ஆதரிக்கும் தன்மையாயிற்றே என்பது கண்டு திகைக்கிறோம். அவரது கவிதையின் விளைவாகத் தமிழ் இனம் தாழ்ச்சியுற, ஆரியத்திடம் அடிமைப்படும் விளைவு நேரிட்டதைக் கண்டு நாங்கள் வேதனைப்படு கிறோம். நாங்கள் கண்டிப்பது கம்பனின் கவித்திற னையல்ல; அதன் தன்மையை, விளைவை"[12] என்றார்.

கம்பன் கழக நிகழ்ச்சிகளுக்குப் பின் அறிஞர் அண்ணா திர்பார்த்தது போன்று கவிதை பாராட்டப்பட்டது. மிழ்ச்சுவை வளர்க்கப்பட்டது. எனவே, காரைக்குடி, ம்பன் கழகப் பட்டி மண்டபத்தின் விளைச்சல் அறிஞர் அண்ணா 'தீயிடும்' நோக்கம் எழுப்பிய புரட்சி விளைச்சலுக்கே சார்பாயிற்று.

அறிஞர் அண்ணாவின் நெறிகொண்ட கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முதல்வராக இருந்தபோது இக்கம்பன் கழகத்திற்கு மணிமண்டபம் எழ உதவினார்; நிறைவேறியதும் திறந்து வைத்தார். அறிஞர் அண்ணாவின் கம்பக் கொள்கையின், தன்மான இயக்கத் தந்தையின் எழுச்சிக் கோட்பாட்டின் வெற்றிச் சின்னமாகக் கம்பன் மணி மண்டபம் எழுந்து நிற்கின்றது. கலைஞர் இதில் ஈடுபாடு கொண்டதும் பொருத்தமாகியது.

மாறுபட்டன போலத் தோன்றிய இரண்டும் விளைச்சலால் ஒத்த பயன் தந்தன. இது பட்டி மண்டப வரலாற்றில் ஒரு புதுப்பதிவாகும்.

## சென்னையில் பட்டி மண்டபம்

பட்டி மன்றம் என்னும் பெயரில் சென்னையில் ஓர் அமைப்பு தோன்றியது. சென்னை பாரிமுனையில் கிறித்துவ இளைஞர் சங்கம் (Y.M.C.A.) உள்ளது. இரண்டு மாடிகள் அமைந்த பெருங்கட்டடம் அதற்குள்ளது. அதில் பலவகைத் தமிழ் ஆர்வலர் கூடி "பட்டி மன்றம்" நிறுவினர். தமிழ்ப் பேராசிரியர் பலர் கருத்துரையில் 'பட்டி மன்றம்' என்ற பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டது. இப்பெயர் தேர்ந்தெடுக்கப்பட்ட போது கருத்துப் போரிடும் பட்டி மண்டபக் கருத்து மேலோங்கி நிற்கவில்லை.

"கல்வி பயில்களம் பட்டி மண்டபம்"

"கழகம் பட்டிமம் கல்வி பயில் களம்" என்பவற்றின் முற்கால நடைமுறைகளைக் கருத்திற்கொண்டு நூல்களை ஆய்ந்தறிந்த புலமையரின் - அறிஞரின் கருத்துரைகளைப் பொழியக் கேட்கும் மன்றமாகவே தொடங்கப்பட்டது. காலப்போக்கில் அருகிய நிகழ்ச்சிகளாகப் பட்டி மண்டப நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியை இங்குக் காண்பது சிறப்பாகும்.

1959 இல் ஒரு பட்டி மண்டப நிகழ்ச்சி நிகழ்ந்தது. எடுத்துக்கொண்ட கருத்து

"வடமொழிக் கலப்பால் தமிழ் கெடுமா?
வளருமா?" என்பது

நடுவராகச் செந்தமிழ்ப் பேராசிரியர் முனைவர் அ. சிதம்பர நாதன் செட்டியார் அமர்ந்தார். 'வடமொழிக்கலப்பால் தமிழ் வளரும்' என்னும் அணித்தலைவராக, பெயர்பெற்ற பகுத்தறிவாளரும், பெரியார் பாசறையிலிருந்து பெரியார் வரலாற்றை முதன் முதலில் எழுதியவருமாகிய அறிவர் சாமி. சிதம்பரனாரும் அணியினராக திரு பார்த்தசாரதி அவர்களும் திரு சீனிவாசன் அவர்களும் அமாந்தனர்.

'வடமொழிக் கலப்பால் தமிழ் கெடும்' என்னும் அணித்தலைவராக இதனை எழுதுபவரும், அணியினராகப் புலவர் மா. பிள்ளையார், திரு ஊ. செயராமன் ஆகிய

இருவரும் அமைந்தனர் . "தமிழ் கெடும்" என்னும் அணியின் மூவருமே எதிர்கட்சித் தலைவர்பால் பெருமதிப்பு வைத்த வர்கள் . எனவே, மிகப் பணிவுடன், பண்பாகவும், கருத்துடன் கண்ணியமாகவும் சொற்போர் அமைந்தது.

நூற்கருத்துக்கள், நடைமுறை இடையூறுகள், நிகழ்ந்த கெடுதிகள், மறைந்த அரிய தமிழ்ச்சொற்கள், வடமொழி யால் தமிழ் மரபும் பண்பாடும் வாழ்வியலும் சிதைந்தமை எனக் கெடுதிக்குக் காட்டப்பட்டன.

நூற்கருத்துக்கள், நூல்கள் பெருகிய நடைமுறை எளிய நடை உருவானமை, வடமொழிக் கலப்பில்லாத நூல் இல்லை, வடவர் வாழ்வியல் தமிழர் வாழ்வியலைக் கெடுக் காமை, தமிழில் இல்லாத கலைகளைத் தமிழ் பெற்றமை என வளர்ச்சிக்குக் காட்டப்பட்டன.

சொற்போர் கருத்துப் போராகவே நிகழ்ந்தது . சூடு இல்லை; ஆனால் சப்பென்றில்லை . சுவையாக இருந்தது; கவைக்குதவும் கருத்துக்கள் வெளியாயின.

நடுவர் அவர்கள் இடையிடையே நயம் ஊட்டி னார்கள் . முடிவுரையில் பல சான்றுகளைக் காட்டியும் ஓரிடத்தில் உணர்ச்சி வயப்பட்டும் சில இடங்களில் கவன்றும், கடிந்தும் கருத்துரைத்து "வடமொழிக் கலப்பால் தமிழ் கெடும்" என்று தீர்ப்புரைத்தார்கள்.

இத்தீர்ப்புக் கருத்து பட்டிமன்றப் பதிவேட்டில் பதியப்பட்டு அணியினராலும் நடுவராலும் அவைச் சான்றோர் சிலராலும் கைச்சான்றிடப்பட்டது.

இதனை ஒரு பயனுள்ள பட்டி மண்டபம் எனலாம். தமிழகத்தில் பட்டி அடைமொழியுடன் அமைந்த மன்றம் இஃதொன்றே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அந்நாளைய இதழ்கள் சில இந்நிகழ்ச்சியைப் பாராட்டி எழுதின. அம்மன்ற உறுப்பினர் ஆர்வலரிடையே தமிழ் உணர்வைத் தூண்டிய பயன் விளைந்தது. அப்போது அதன் செயலர் திரு. கெ. பக்தவத்சலம் என்பார்.

## மரபுவழிப் பட்டி மண்டபம்

பழமையைக் காட்சிப்படுத்திக் கருத்துரைக்கும் புதுமை நிகழ்ச்சியாக நாகபட்டினத்தில் ஒரு பட்டி மண்டபம் நிகழ்ந்தது.

நாகையில் உருவான நாகைத் தமிழ்ச் சங்கம் பல் வகைத் தமிழ்ப்பணிகளுடன், கல்விப்பணியும் குறிப்பாக இலக்கியப் பொதுக்கூட்டப் பணியையும் செய்தது. அவற்றில் ஒன்று 'மரபு வழிப் பட்டி மன்றம்' என்று அறிவித்து நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

பட்டி மண்டப வரலாற்றில் அமைந்த நிகழ்ச்சிகளில் முற்கால இடைக்கால நடைமுறைகளை அறிமுகம் செய்து கருத்துப் போரிடுவதாக இது அமைந்தது. பண்டை மரபுப்படி இது நடைமுறைப்பட்டதால் 'மரபுவழிப் பட்டி மன்றம் என்று அறிவிக்கப்பட்டது. தீர்ப்பிற்கு வாக்களிக்கும் முறை சோழர்காலக் குடவோலை முறைப்படி அமைந்தமை இதன் சிறப்பு நிகழ்ச்சியாக அமைந்தது. அவையோர் தீர்ப்பும் தனியே நிகழ்ந்தமை மற்றொரு சிறப்பு.

களம் : நாகபட்டினக் குமரன் திருமண மண்டபம்

கருத்து : "தமிழால் சமயம் வளர்ந்ததா?
சமயத்தால் தமிழ் வளர்ந்ததா?"

இயக்குநர் : இதனை எழுதும் அந்நாள் நாகைத் தமிழ்ச் சங்க அமைச்சர் (பொதுச் செயலாளர்)

நடுவர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

அணியினர் : 'தமிழ்' - புலவர் அ. அறிவொளி (தலைவர்)
புலவர் இரா. இராசு
புலவர் இர. சண்முகவடிவேலு
'சமயம்' - புலவர் இரா. செல்வக்கணபதி
புலவர் சீனி. சண்முகம்
புலவர் அரங்கராமானுசம்

பேரவை : 1. நகரத்துப் பெருமக்கள்

அவை : 2. சிறப்பவை - புலவர், தமிழ் அறிஞர், ஆர்வலர், வணிகர், வழக்கறிஞர், மருத்துவர், பொறியாளர், ஆசிரியர், மகளிர், இளைஞர், சைவ - திருமாலிய - கிறித்துவ இசுலாமியச் சமய அன்பர், அரசியல் துறையர், தொழிலாளர், ஊர்தி ஓட்டுநர், ஊர்தி இழுப்பவர், காவல் துறையினர், அரசு அலுவலர், கோயில் குருக்கள் எனப் பல்வகையினர் தேர்ந்து கொள்ளப் பெற்ற நூறு பேரைக் கொண்டது.

இவர்கட்கு முன்னரே அடையாள இதழ் வழங்கப்பட்டது. இன்னோர் அவைக்கூடத்தில் தனிப்பகுதியில் அமர்த்தப்பெற்றனர். இன்னோர் கருத்துரைகளைச் செவிமடுத்து ஒரு கருத்திற்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப் பெற்றவர்கள்.

இயல்பான தொடக்க நிகழ்ச்சிகளாக இயக்குநர் அறிவிக்க, குலுக்கு முறையில் தேர்ந்தெடுத்தபடி முதலில் தமிழ் வாழ்த்தும், அடுத்துப் பொதுச் சமய வாழ்த்தும் இசைக்கப் பட்டன.

இரு அணியினர் அமரும் இரு பகுதிகளிலும் முறையே 'தமிழால் சமயம் வளர்ந்தது' என்று எழுதப்பெற்ற கொடியும் 'சமயத்தால் தமிழ் வளர்ந்தது' என்று எழுதப் பெற்ற கொடியும் நாட்டப்பட்டிருந்தன.

இயக்குநர் அழைப்பின்படி 'தமிழால் சமயம் வளர்ந்தது' என்னும் அணித்தலைவர் மேடைக்கு வந்து ஒரு நாவல் கொம்பை நிலத்தில் ஊன்றிப் பிடித்து, கருத்தை முன் வைத்து அறை கூவினார். எதிர் அணித்தலைவர் மேடைக்கு வந்து நாவல் கொம்பைப் பிடித்தவர் கையிலிருந்து வாங்கிக் கீழே வைத்தார். அறைகூவல் ஏற்றதாயிற்று. இதனை அறிவித்த இயக்குநர் வரவேற்புரை கூறிப் பணிவுடன் அழைக்க தவத்திரு குன்றக்குடி அடிகளார் மேடையில் ஏறினார்கள். அப்போது அவையினர் எழுந்து நின்று

வணங்கி நடுவர் அமர்ந்ததும் அமர்ந்தனர். நடுவரை ஏற்கும் இசைவாக இக்குறிப்பு அமைந்தது.

நடுவர் அடிகளார் தம் தனித்தன்மை வாய்ந்த முறையில் முன்னுரை நிகழ்த்தி இரு தலைப்புகளையும் விளக்கினார். அணியினர் அமர, கருத்துப்போர் துவங்கியது. முறையாகவும், நெறியாகவும் அணித் தலைவர்களும் தக்க சான்றுகள் காட்டி வழக்குரைத்தனர். அணித்தலைவர் இருவரும் சொல்லாற்றலும், புலமைத் தெளிவும் உடையவர்கள். எனவே, மிகக் கண்ணியமுள்ள கருத்துரைகளாக அமைந்தன. இரண்டு அணியினரும் உரையாற்றி அமர்ந்தனர். நடுவர் அடிகளார் இதனை முதற் சுற்றுக் கருத்துப்போர் என்று அறிவித்து அடுத்து முதலில் அறைகூவித் தொடங்கிய அணித்தலைவருக்கு இறுதியில் தொகுத்துரைக்கும் வாய்ப்பளித்து உரையாற்றக் கூறினார். இருவரும் தொகுப்புரையும் கருத்துரையும் கூற நடுவர் கருத்துரையாற்றத் துவங்கினார்.

இந்நேரத்தில் சிறப்பு அவையினர் தம் கருத்தை வாக்கு மூலம் தரும் குடவோலை முறை அமைதியாக நிகழ்ந்தது. வண்ணக் கோலத்துடன் ஒப்பனை செய்யப்பட்ட குடம் ஒன்றை ஒருவர் பிடித்து அவையோர் முன் கவிழ்த்து உள்ளே கைவிட்டுத் துழாவிக் காட்டினார். ஒருவர் வாக்குச் சீட்டுக்களைக் கொண்டு குடத்திற்கு முன்னே சென்று வாக்குச் சீட்டு ஒன்றை அவை உறுப்பினர்க்கு வழங்கினார். அதில் 'சமயத்தால் தமிழ் வளர்ந்தது' என்று ஒரு வரியும் 'தமிழால் சமயம் வளர்ந்தது' என்று மறுவரியும்

அச்சேறி இருந்தன . இடையில் பிரிக்குமாறு இழிதுளை இடம் பெற்றிருந்தது . சிறப்பவை உறுப்பினர் அதனைப் பெற்று இரண்டாகப் பிரித்து அவர் விரும்பும் தீர்ப்பு ஒன்றைக் குடத்திலிட்டார் . மற்றொன்றை குடத்தாரின் பின்னே வந்த கூடையாரின் கூடையில் இட்டார்.

அடிகளாார் கருத்துரை நிகழ்ந்து கொண்டே இருந்தது.

வாக்கிடப்படாத சீட்டுக்களைக் கொண்ட கூடை மேடையில் வைக்கப்பட்டது . ஒரு புறம் பின்னே குட வோலைச் சீட்டுகள் பிரித்து எண்ணப்பட்டன.

அடிகளாார் கருத்துரை நிகழ்ந்து கொண்டே இருந்தது.

எண்ணப்பெற்ற வாக்குகள் தாளில் எண்ணிக்கை யுடன் பதியப்பட்டு இரண்டு கட்டுகளுடன் இயக்குநர் கையில் கொண்டு நடுவர் பின்னே நின்றார்.

நடுவர் தவத்திரு அடிகளாார்

"சமயத்தால் தமிழ் வளர்ந்தது" என்று தீர்ப்பைக் கூறினார்.

சிறப்பவையினர் வாக்குத் தீர்ப்பு பதிந்த தாளையும், சீட்டுக் கட்டுக்களையும் இயக்குநர் நடுவரிடம் கொடுத்தார். அதன் தீர்ப்பை நடுவர் படித்து "தமிழால் சமயம் வளர்ந்தது" என்றார். அவையில் தனியொரு ஆரவாரம் நிகழ்ந்தது.

அவையோர் தீர்ப்பும், நடுவர் தீர்ப்பும் மாறு பாடாயின.

நடுவரவர்கள் இதன் நோட்டவுரையாக,

"என் கருத்தளவிலும், வாதிட்டோர் வைத்த கருத்தளவிலும் 'சமயந்தான் தமிழை வளர்த்தது' என்பது என் முடிவாயினும் சிறப்பவையின் கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்று பெருந்தகவுடன் அறிவித்தார்கள். எதிர் அணித்தலைவரும் இவ்வாறே ஏற்றார். 'தமிழால் சமயம் வளர்ந்தது' என்னும் கொடி மட்டும் நாட்டப் பட்டது. தீர்ப்புக் கருத்து நாகைத் தமிழ்ச்சங்கப் பதிவேட்டில் பதியப்பட்டு நடுவர், இரண்டு அணியினர் இயக்குநர் கைச்சான்றுகளுடன் சிறப்புப் பேரவை நூற்றவரின் கைச்சான்றுகளும் இடப்பட்டன.

இந்நிகழ்ச்சியாம் பட்டி மண்டபம் நாடகப் பாங்கில் நிகழ்ந்தது. இதனால் முற்காலப் பட்டி மண்டப நடைமுறைகள் மக்கள் முன் வைக்கப் பெற்று பயன் விளைந்தது; கருத்துப் பதிவு அமைந்தது. உண்மையாகவே நாகைப் பெருமக்கள் நல்ல கருத்துரைகளைப் பெற்றனர். 'சமயம் தமிழால் வளர்ந்தது' என்பது மேவி நின்ற பயன் தெரிந்தது.

பட்டி மண்டப வரலாற்றின் இஃதொரு பொன்னான பதிவு விளைச்சலாயிற்று.

இஃதொரு புதுமையானதும், நல்ல பயன் தந்த நிகழ்ச்சியுமாதலால் சற்று விரிவாகக் காணப்பட்டது.

# ஈ) பிற்காலத்தின் பொற்காலம்

## பட்டி மண்டபம்
## பல்கிய விளைச்சல்

கம்பன் கழகப் பட்டி மண்டபத்தால் தமிழ் நாட்டில் பரவலாகப் பட்டி மண்டபங்கள் நிகழலாயின. பெருமளவு தகுதியில் பரவத் தொடங்கியது. தகுதிவாய்ந்த அறிஞர் பங்கு பெற்றனர். இதனால் பலர் பயிற்சியும் பெற்றனர்.

ஆண்டுதோறும் நிகழும் விழாக்கள் சிறப்பு இலக்கிய நிகழ்ச்சிகளில் பட்டிமண்டபம் சுவையான நிகழ்ச்சியாக அமைக்கப்பட்டது. மெல்ல மெல்லக் கவர்ச்சி நிகழ்ச்சி யாயிற்று. நூற்றுவர் அளவில் அவையோரைக் கொண்ட நிகழ்ச்சியாக இருந்தமை, ஆயிரவர் பல்லாயிரவர், நூறாயிர வரைக் கொண்ட நிகழ்ச்சியாகப் பெருத்தது.

மதுரை அரசரடிப் பிள்ளையார் விழாப் பட்டி மண்டபம் ஆண்டுதோறும் தவத்திரு அடிகளார் தலைமை யில் குறிக்கத் தக்கதாக நிகழ்ந்தது. தவத்திரு அடிகளார் பறம்பு மலையில் நிகழ்த்திய பாரிவிழாக்களின் இலக்கியப் பட்டிமண்டபங்களும், திருப்பத்தூர்த் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்த்திய சைவ சமயக் கருத்துப் பட்டிமண்டபங்களும் சிறப்பிடம் பெற்றன.

பறம்புமலைப் பாரிவிழாப் பட்டி மண்டபம் அந் நாளைய முதல்வர் டாக்டர் கலைஞர் வருகையுடன்

நிகழ்ந்ததாலும், தவத்திரு அடிகளார் தம் பொறுப்பில் நிகழ்த்தித் தாமே நடுவராயமைந்ததாலும் பல்லாயிரவர் திரண்ட அவையைக் கொண்டதாக அமைந்தது.

பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக்கூடத் திறப்பு விழாவில் நிகழ்ந்த மும்முனைப் பட்டி மண்டபம் அந்நாள் முதல்வர் டாக்டர் கலைஞர் முன்னிலையில் அந்நாள் அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை நடுவராகக் கொண்டு நிகழ்ந்தது.

"சிலப்பதிகாரத்தில் இன்றியமையாச் சிறப்புடையது
புகார்க் காண்டமா?
மதுரைக் காண்டமா?
வஞ்சிக் காண்டமா?"

என மும்முனைப் பொருளாயிற்று. புகார்க் காண்ட அணித்தலைவராக இதனை எழுது பவரும், மதுரை காண்டத்திற்குக் கவியரசு பொன்னி வளவன் அவர்களு வஞ்சிக் காண்டத்திற்கு பேராசிரியர் முனைவர் மெ. சுந்தர அவர்களும் அணித்தலைவராக அமைக்கப்பட்டுக் கருத்து போரிட்டனர்.

அந்நாளைய அமைச்சர் பெருமக்கள், அரசு ஆட் அலுவலர்கள், தமிழ்ப் புலமையர், அரசியல் இயக்கத்தார் பொதுமக்கள் என நூறாயிரவரைக் கொண்டதாக அவை அமைந்தது.

'மதுரைக் காண்டமே இன்றியமையாச் சிறப் புடையது' என்பது தீர்ப்பாயிற்று.

பொதுமக்கள்பால் அவருள்ளும் எளியவர்பால் சிலப்பதிகாரம் அறிமுகமாயிற்று; கருத்துக்கள் அறியப் பட்டன. கண்ணகி, மாதவி, கோவலன் வாழ்ந்த மண்ணில் இது நிகழ்ந்தமை ஒரு சிறப்பு. இவர்கள் பெயரையும் கேளா தோராக வாழ்ந்த அப்பகுதி மக்கள் பலரை மண்ணின் பெருமக்களை உணரவைக்கும் பயனாக இது அமைந்தது.

இது போன்று உலகத் தமிழ் மாநாடுகள் தமிழகத்தில் நிகழ்ந்தபோது அவற்றின் பொது மாநாட்டு நிகழ்ச்சிகளில் பட்டி மண்டபம் இடம் பெற்றது. புகழ்பெற்ற பட்டி மண்டபச் செம்மல்கள் பங்கு பெற்றனர். பல நூறாயிரக் கணக்கில் அவையோர் செவி மடுத்தனர்; சுவைத்தனர்; பெருமளவில் சுவை நிகழ்ச்சியாகவும், நயப்பொழுது போக் காகவும் இவை அமைந்தன. கருத்து வழங்கலும் நேர்ந்தது. பலர் செவிமடுத்தனர் என்பதன்றிப் பெரும் பயன் விளைந்த தாகப் பதிய இயலவில்லை. வெளிநாட்டவர் செவி மடுத் தமை ஒரு பயன் எனலாம்.

சைவ சமயத் திருமடங்களிலும் பட்டி மண்டபம் இடம் பெற்றமை குறிக்கத்தக்கது.

தருமபுரம் சைவத் திருமடத்தில் சைவக்குருமணி வீற்றிருக்க இன்றைய மடத்துத் தலைவராக வீற்றுள்ள தவத் திரு சோமசுந்தர அடிகள் அன்று கட்டளைத் தம்பிரானாக இருந்து ஒரு பட்டி மண்டபத்தை இயக்கினார்கள்.

பெரும்புலவர் கி. வா. சகந்நாதனாரும் சைவப் பெரும்புலவர்களும் தமிழ் அறிஞர் பெருமக்களும் சைவப்

பெருமக்களும் கூடியிருந்த பேரவையாக அது அமைந்தது. திருக்குறளார் வீ. முனிசாமி அவர்கள் நடுவராக அமைய புலவர் கீரன் அவர்கள் 'மனநலமே சிறந்தது' என்னும் அணிக்குத் தலைவராகவும், 'இனநலமே சிறந்தது' என்னும் அணிக்கு இதனை எழுதுபவர் தலைவராகவும் கருத்துப் போரிட்டனர். 'மனநலமே' சிறந்தது என்பது தீர்ப் பாயிற்று.

தமிழ்நாட்டில் இலக்கிய விழா என்றால் 'பட்டி மண்டபம் உண்டா' என்று மக்கள் வினவும் அளவில் பெருகியது.

## வெளி மாநிலங்களில் விளைச்சல்

தமிழ்நாட்டைச் சூழ்ந்துள்ள வெளிமாநிலங்களிலும் தமிழ் விழாக்களில் பட்டிமண்டபம் தோன்றிற்று. கன்னட நாட்டுப் பெங்களூரில் தமிழ் இலக்கிய மன்றம், பெங்களூர்த் தமிழ்ச் சங்கம் ஆண்டு விழாக்களிலும், மலையாள நாட்டு செங்கணான்சேரி திருவள்ளுவர் மன்ற விழாக்களிலும், பம்பாய் திருவள்ளுவர் மன்றம், தமிழ்ச் சங்கத்திலும் பட்டி மண்டபம் இடம் பெற்றது. அண்மையில் அந்தமான் தீவிலும் பட்டி மண்டபம் புகுந்தது.

இவ்வாறு தகுதியுள்ள மன்றங்கள், சங்கங்கள், நிறுவனங்கள், மாநாடுகள், கல்லூரிகள் பொது நிகழ்ச்சி களில் பட்டி மண்டபம் நிகழ்ந்தமை ஏறத்தாழ 1960 வரை

சீராக நிகழ்ந்தது என்று பதியலாம். கம்பன் கழகம் முதல் 1960 வரை தமிழகத்தில் பட்டி மண்டபம் ஒரு பொற் காலத்தைக் கண்டது. இஃது உண்மை என்று பதியலாம்.

## கவிதைப் பட்டி மண்டபம் (சிவகங்கையில்)

சமயப் பங்கில் இசைப்பட்டி மண்டபமும் கூத்துப் பட்டி மண்டபமும் இடம் கொண்டமை போன்று பிற்காலப் பட்டிமண்டப விளைச்சலில் கவிதைப் பட்டி மண்டபமும், எழுத்துப் பட்டி மண்டபமும் நிகழ்ந்தமை குறிப்பிடத்தக்கவை.

சிவகங்கை மன்னர் துரைசிங்கம் நினைவுக்கல்லூரி வெள்ளிவிழா 11 . 3. 1973 இல் நிகழ்ந்தது. இதில் நிகழ்ந்த கவிதைப் பட்டிமண்டபம், முதன் முதல் நிகழ்ந்ததாகும்.

"தமிழர் வாழ்வில் சிறந்து நிற்பது காதலே!
வீரமே!

என்பன பாடுபொருள்கள். நடுவர் முனைவர் தமிழண்ணல்

'காதலே' அணியில் கவிஞர் சொ. செ. மீ. சுந்தரம் (தலைவர்) கவிஞர் சி. சுந்தரேசன், கவிஞர் தி. கு. நடராசன்

'வீரமே' அணியில் கவிஞர் முருகு சுந்தரம், (தலைவர்) கவிஞர் சிங்காரவடிவேலன், கவிஞர் தமிழ்க்குடிமகன் (பின்னர் சட்டப்பேரவைத் தலைவர்)

அகவல், விருத்தம், சந்தப்பாக்கள், இடையில் வெண்பா, கண்ணி, தாழிசைகளில் கருத்துப் போர் நிகழ்ந்தது. எழுதிக்கொண்டு வந்து படித்ததுடன் அவ்வப்போது வாய்மொழியாகவே பாடல்கள் பிறந்தன. சுந்தரர் இருவரும் தேர்ந்த கவிஞர்கள். சொ. செ. மீ. சுந்தரம் நயம்படப் பாடுவதில் வல்லவர். முருகு சுந்தரம் மெருகுபடப் பாடுவார். மற்றையோரும் குறிப்பிடத்தக்கவர்கள். கவிஞர் தமிழ்க் குடிமகன் பாடல் கருத்தாழமானது.

நடுவர் தமிழண்ணல் தம் இயல்பான கவிதைத் திறத்தால் தீர்ப்பளித்தார். தீர்ப்பு 'காதலே' என்பது.

## திருவாரூரில்

திருவாரூரில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. மார்பளவு வெண்கலச் சிலைநாட்டுவிழா நிகழ்ந்த போது சிலையைத் திறந்து வைத்து அந்நாள் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பொழிவாற்றியமையால் பல்லாயிரவர் கலந்துகொண்ட பெருங்கூட்டமாக அமைந்தது.

அவையில் தவத்திரு குன்றக்குடி அடிகளார், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதனார், பல்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், அந்நாள் உணவு - கூட்டுறவுத்துறை அமைச்சர் மன்னை நாராயணசாமி, எழுத்தாளர் நாரண துரைக்கண்ணன், பேராசிரியை இராசேசுவரி அமர்ந்திருந்தனர். இப்

பட்டியல் தமிழ்ப் பேராளரின் பொற்பட்டியலன்றோ? இவ்வகையில் இதற்கொரு தனிச்சிறப்பு அமைந்தது.

இது 'பாப் பட்டி மன்றம்' எனப்பட்டது. நடுவராக, 'தென்மொழி' யாசிரியர் பாவலர் ஏறு பெருஞ்சித்திரனார் அமர்ந்தார்.

பொருள் :

"திரு வி . க . வாழ்வின் பெரும்பங்கு மொழித் தொண்டே! பொதுத்தொண்டே!" என்பது.

'மொழித்தொண்டே' அணியில் கவிஞர்கோ . கோவை. இளஞ்சேரன் (அணித்தலைவர்) 'வலம்புரி' இதழாசிரியர் புலவர் இறைக்குருவன், தஞ்சைப் பாப்புலவர் தொல்காப்பியன் அமர்ந்தனர். (காட்டப்பட்ட பட்டி மண்டப நிகழ்ச்சிகளில் இதனை எழுதியவர் பங்கு கொண்டமை இடம் பெற்றிருப்பது எழுதுபவர் நேரில் கண்டபடி விவரம் தரும் நோக்கம் கொண்டது.)

'பொதுத்தொண்டே' அணியில்,

புலவர் ஏறு ச. பாலசுந்தரம் (அணித்தலைவர்) கவிஞர் தரங்கை பன்னீர்ச்செல்வம், பாவலர் கு . சிவஞானம் (பின்னர் தமிழ் வளர்ச்சி இயக்க இயக்குநர்) அமர்ந்தனர்.

இரு அணிக் கவிஞர்களும் விருத்தம், கலிவெண்பா, அகவல், வெண்பா தாழிசை எனப் பல்வகைப் பாக்களைத் நாடகத்தில் படித்தனர். இடையிடையே கவிதைகள்

பொழிந்தனர். 'மொழித்தொண்டே' அணித்தலைவர் தாம் பங்குகொள்ளும் பாட்டரங்குகளில் எழுதிப் படிக்காமல் பொழிவதையே கொண்டமையால் முழுமையும் பாடல்களாகப் பொழிந்தார்.

வீரம் அணித்தலைவர் பின் மறுப்புரையிலும், தொகுப்புரையிலும் பாப் பொழிவே இயற்றினார்.

நடுவர் பாவலர் ஏறு பெருஞ்சித்திரனார் தம் வீறார்ந்த பாத்திறம் பெய்து 'மொழித்தொண்டே' என்று தீர்ப்பளித்தார்.

விழாத் தலைமையாலும் அவைப் பெருமையாலும், கவிஞர்களாலும் இது சிறப்புக்குரிய நல் விளைச்சல் ஆயிற்று.

சிலைநிறுவ, தாமொருவராய் முனைந்து நிறைவேற்றிய திருவாரூர் புலவர் சரவணத்தமிழன் அவர்கள் பாராட்டுக்குரியவரானார். இவர் தனித்தமிழ்ச் செயலினர்.

## எழுத்துப் பட்டி மண்டபம்

சொற்பொழிவு, உரையாடல் மூலம் நிகழும் பட்டி மண்டபம் போன்று சிறு சிறு கட்டுரைகளாக எழுதிக் கருத்துப் போரிடும் பட்டி மண்டபம் ஒன்றும் நிகழ்ந்தது.

நாகைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நாகபட்டினத்தில் நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார் முழுஉருவ வெண்கலச் சிலை நாட்டப்பெற்றது.

*19.6.1969* இல் நிகழ்ந்த இச்சிலைத் திறப்பு விழாவில் 'மறைமலை அடிகள் நினைவு மலர்' மலர்ந்தது. அந்நாளைய முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் சிலையைத் திறந்து வைத்தார்கள். காலையிலும் மாலையிலுமாகக் கூடிய அவையில் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதனார், நாவலர் இரா. நெடுஞ்செழியன், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், அறிவியல் அறிஞர் கோவை. கோ. து. நாயுடு, பெரும்புலவர் அவ்வை துரைசாமிபிள்ளை பேருந்து நிறுவன உரிமையாளர் வீ. பார்த்தசாரதி முதலிய பெருமக்கள் அமர்ந்தனர். இப்பேரவையில் இம்மலர் மலர்ந்து காலையிலும் மாலையிலும் மணம் பரப்பியது.

இம்மலரில் எழுத்துரைகளாக ஒரு பட்டி மண்டபம் 'ஒரு குறள் பட்டியரங்கு' என்னும் எழுத்துப்பொருளைக் கொண்டு தொகுக்கப் பெற்றது.

பட்டி அரங்கக் குறள்

"அறத்தா றிதுவென வேண்டா, சிவிகை
பொறுத்தா னோடூர்ந்தா னிடை"

என்பது. நடுவராக அந்நாள் சட்டப் பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தனார் அமைந்தார்.

"சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தானிடை
அறத்தாறு"

'இது என வேண்டா' என்பது ஒரு கருத்து

'காட்சியளவையான் உணரப்படும்' என்பது மறு கருத்து.

'இது என வேண்டா' என்னும் அணியில் புலவர் சீனி. சண்முகம், புலவர் அ. மு அ. காதிர், புலவர் இரா. அரங்கராமானுசம், புலவர் சீனி. கோவிந்தன், புலவர் க. இரா. நாகராசன், புலவர் இர. சண்முகவடிவேலு என ஐவர் பங்கேற்றனர்.

'காட்சியளவையான் உணரப்படும்' என்னும் அணியில் புலவர் மருத்துவர் ப. மு. சொக்கலிங்கனார், புலவர் நா. இராசசேகரன், புலவர் நா. நவநீதகிருட்டிணன், புலவர் ச. சொ. மாணிக்கம், புலவர் ம. இராசமாணிக்கம் என ஐவர் பங்கேற்றனர். இதில் அணித்தலைவர் இல்லை. முதல் அணியின் முதல் பெயரினரிடம் ஒரு பக்க அளவில் அவர் பொருளில் சிறு கட்டுரை பெறப்பட்டது. அது மறு அணியின் முதற்பெயரினர்க்கு அனுப்பப்பட்டது. அவ ரிடம் மாற்றம் பெற்று முதல் அணி இரண்டாமவர்க்கு அனுப்பப்பெற்று மாற்றம் பெறப்பட்டு இவ்வாறே முந்திய கட்டுரைகளைத் தொடர்ந்து அனுப்பிக் கட்டுரைகள் பெறப்பட்டன. பதினோராவது புலவர் நிறைவேற்றி எழுதி னார். அனைத்தும் நடுவர்க்கு அனுப்பப்பட்டு அவர்தம் தீர்ப்பைப் பெற்று மலரில் பதிப்பிக்கப்பட்டன.

நடுவர் அவர்கள் தம் தீர்ப்பாக, பரிமேலழகர் உரையைச் சான்றாகக் கொண்டு "காட்சியளவையான் உணரப்படும்" என்று தீர்ப்பளித்தார்.

எழுத்துப் பட்டி மண்டபமாகிய இஃது ஒரு புது விளைச்சல் (இக்காலத்தில் சில இதழ்கள் எழுத்துப் பட்டி மண்டபக் கருத்தை வெளியிடுகின்றன.)

மேலே காணப்பட்ட கவிதைப்பட்டி மண்டபங்களும் எழுத்துப் பட்டி மண்டபமும் முன்னே பொற்காலம் என்று குறிக்கப்பெற்ற கால எல்லையாகிய 1960 இற்குப் பின்னர் நிகழ்ந்தவை. ஆயினும், இவற்றின் புதுமைப் பாங்கும், தகவுப் பங்கும் நோக்க, பட்டி மண்டபப் பொற்காலத்து அணிகலன்களாகின்றன.

## உ) பொற்காலப் படைப்பாளர்

### இயக்குநர்

பட்டி மண்டப நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அமைத்து நெறியாக இயக்கியோர் படைப்பாளரில் மூலவர். பல்வகையினர் இவ்வாறு செயலாற்றியுள்ளனர் . சிறப்பாகவும் தனிக்குறிப்பாகவும் திரு சா. கணேசன் அவர்களே அவருள் முதன்மையானவரும் முதல்வரும் ஆவார்.

### நடுவர்

அடுத்து நடுவராக அமர்ந்தோர் குறிக்கத்தக்க படைப்பாளர் . பட்டி மண்டப நடுவர் என்றவுடன் நினைவில் நிற்பவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்தாம்.

பட்டி மண்டபப் பொருளை ஆய்ந்து முன்கூட்டியே நூல்களைப் பார்த்துக் கருத்துக்களைத் தொகுத்து முறைப் படுத்தி நடுவர் தன்மையை உணர்ந்து செயற்பட்டவர் அடிகளார் . நடுவர்க்கென வகைப்படுத்துப்பெற்ற அச் சிதழையும் உருவாக்கிக் கையில் கொண்டு பதியச் செய்து திறனொடு அவற்றைத் தேர்ந்து சீர்தூக்குவதில் வல்லவர் அடிகளார் . தம் இயல்பான கருத்து ஊறும், அறிவால் பொருத்தமான இடத்தில் திருத்தமான நயங்களையும் ஆழ் கருத்துக்களையும் சுவையுடனும் வெளிப்படுத்தும் பாங்

குடைய நடுவர். அவையோரும் போரிட்டோரும் ஏற்றுக் கொள்ளும் அளவில் தீர்ப்பு வழங்கி நடுவர் தகுதிக்கு முடிசூட்டியவர் அடிகளார்.

அடிகளார் போன்றே சென்னை உயர் அறமன்றத் தலைமை நடுவராக அமர்ந்து சிறப்புற்ற திரு மு. மு. முகம்மது இசுமாயில் அவர்கள் ஆழ்ந்த கருத்துடன் தீர்ப்பளித்துச் சிறந்த நடுவர்.

பிற்காலப் பட்டி மண்டபத் தொடக்கக் காலங்களில் திருச்சி தேசியக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்த முனைவர் இராதாகிருட்டிணன் அவர்கள் தலை தூக்கிச் சிறந்த நடுவராக விளங்கியவர். நயம்பட உரைப்பது சொற்சிலம்பங்கள் இன்றிச் சொற்பொதிவு களால் கருத்தை வழங்கியவர். அவர் வழி அடியொற்றிப் பட்டிமன்றப் பேச்சாளரானோர் பலர். அவருள் முதன்மை யானவர் திருச்சி உருமு தனலட்சுமி கல்லூரி முதல்வ ராயிருந்த முனைவர் சத்தியசீலன் அவர்கள்.

முனைவர் சத்தியசீலன் அவர்கள் இன்றளவும் நடுவர் தகுதியைத் தம் உரிமையாகக் கொண்டுள்ளவர். பொழிவு ஆற்றலுள்ள இவர் 'நாவுக்கரசர்' என்று போற்றப்படுபவர். சுவையாக உரைப்பது மட்டுமன்றிச் சுவையாகப் போரா ளர் உரைக்க வழி வகுப்பவருமானவர். எண்ணிக்கையற்ற பட்டி மண்டபங்களை நடுவராக அமர்ந்து அணிசெய்து வருபவர். வழக்காடு மன்றங்கள் இவரால் சுவையிலும் சூட்டிலும் நிற்கும்.

மதுரை தியாகராசர் கல்லூரி முதல்வரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவருமாயிருந்த முனைவர் நா . பாலுசாமி அவர்கள் பல பட்டிமண்டபங்களில் நடுவராக அமர்ந்து இலக்கிய மெருகுடன் அழுத்தமுட்டிய கருத்துடன் பட்டி மண்டபப் பாங்கை ஊன்றியவர் . சட்டமும், பயின்ற அடையாளம் அவர் தீர்ப்பிலும் சொற்போரிலும் பளிச்சிட்டதுண்டு.

பேராசிரியர் முனைவர் நமசிவாயம் அவர்கள் சிறந்த நடுவர் . பட்டி மண்டபங்களில் மட்டுமல்லாமல் வழக்காடு மன்றங்களில் தன் முத்திரை பதித்தவர் . தன்பேச்சில் தனியொரு பாங்கு கொண்டு சிறந்தவர் . மிகு எண்ணிக்கையில் நடுவராக அமையாது போயினும் நடுவர் தகுதியேற்று அதற்கு உயர்வு தந்தோர் பலர்.

திருக்குறளார் முனிசாமி அவர்கள் திருக்குறள் பொழிவின் சுனையூற்று . நகைச்சுவையில் சுளைச்சாறு . அவர்கள் நடுவர் பணி வாழ்க்கை நடைமுறைச் செய்திகளை நகைச்சுவையுடன் இழையோடச் செய்தது . போரிடுவோரைப் பாராட்டுவதும், நயமாகப் பகடி செய்வதும் இவர்களுக்குக் கைவந்தகலை.

பெரும்புலவராகவும் தேர்ந்த எழுத்தாளராகவும், தெளிந்த பொழிவாளராகவும் திகழ்ந்த திரு கி . வா . சகந்நாதன் அவர்கள் இருபொருள்பட நயங்கூறுவதில் இணையற்றவர் . அவர்தம் தீர்ப்பு பல சான்றுகளைக் காட்டுவது . கருத்து நழுவாத செம்பாகமான மொழிநடை கொண்டது .

அவர்தம் தீர்ப்புதான் தீர்ப்பு என்று பதியும் அளவு திறனுடையது.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் இன்றியமையாத வேண்டுகோளுக்காக நடுவராவார். அவருக்கென அமைந்த பொழிவுப் பாங்கிலேயே தீர்ப்பும் அமையும்.

முனைவர் மா. நன்னன் அவர்கள் பெரும்பகுதி தி.மு.க. பட்டி மண்டபங்களில் நடுவராக அமைவார். கருத்தில் நாட்டமுள்ள இவர் எளிய நடையில் உரையாற்றி அரிய கருத்துக்களைத் தீர்ப்பிற்குத் துணையாக்கி முடிவு சொல்பவர்.

முனைவர் அவ்வை நடராசன் அவர்கள் இப்போது தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தராக அமர்ந்துள்ளவர். சொற்பொழிவுச் செம்மல் என்னத் தக்கவர். இவர் தம் நடுவர் பணி தனியொரு பாங்காகக் குறிக்கத்தக்கது. போரிட்டோர் கருத்துக்களைத் தொட்டுக் காட்டி அவற்றிற்கு உரமூட்டுவதாகவும், தொய்வைத் தெளிவிப்பதாகவும் தெளிந்த கருத்துக்களை அவையில் வைத்துத் தீர்ப்பளிப்பவர்.

முனைவர் தமிழ்க்குடிமகனார் உலக வழக்கறிந்த சொல்லாண்மையர். எளிய ஆனால் மரபு வழுவாத மொழி நடை கொண்டவர். பல்வகைப் பட்டிமண்டபங்களில் அவையோர் ஏற்குமளவில் தீர்ப்பை வடிப்பவர்.

முனைவர் இரா. செல்வக்கணபதி அவர்கள் பட்டி மண்டபங்களில் நடுவராக அமைந்து சிறப்புற்றிருப்பவர்.

தக்க சான்றுகளுடன் நடைமுறைக் கருத்துகளால் தீர்ப்பை வலுவாக்குபவர். வழக்காடு மன்றக் கலையில் கைவந்தவர்.

முனைவர் சாலமோன் பாப்பையா, பேராசிரியர் சிற்பசபை முதலிய சிலர் நடுவராகப் பளிச்சிடுகின்றனர்.

அவ்வப்போது நேரும் வேண்டுதலுக்கேற்பப் பேரறிஞர்களும் நடுவராக அமர்ந்து சிறப்பித்துள்ளனர். இங்கு மிகுதியாக அறிமுகமாகிப் புகழ்பெற்றுள்ளோரைக் குறிக்க நேர்ந்தது.

நடுவரால் பட்டிமண்டபம் நற்படைப்பாயிற்று என்று துணிந்து குறிப்பிடலாம்.

## சொற்போராளர்

பட்டி மண்டப நிகழ்ச்சியில் கருத்தை முன்வைத்துச் சொற்போரைத் தொடங்குபவரும், அதனை மறுத்தும் மாறிமாறியும் சொற்போரிடுபவரும் சொற்போராளர் ஆவர்.

மேலே நடுவர்களாகக் காணப்பட்டவர்களில் பலர் தொடக்கத்தில் சொற்போராளராகச் சிறந்தவர்கள்.

தொடர்ந்து பல ஆண்டுகளாக இன்றுவரை இக் களத்தில் இருப்போரும், தமிழ்நாடெங்கும் பரவலாகப் பட்டி மண்டபச் சொற்போராளராக அறிமுகமாகிப் பெயரெடுத்துள்ளவர்களுமே இங்குக் குறிக்கப்படுகின்றனர்.

முனைவர் அ. அறிவொளி என்றாலே பட்டி மண்டபமும், வழக்காடு மன்றமும் நினைவிற்கு வரும் அளவு பெயர் பெற்றுள்ளார். புகுந்தவற்றிலெல்லாம் புகழ் பெற்றுள்ள இவர் பட்டி மண்டபத்திற்குப் புகழ் சேர்த்து வருபவர்.

முகத்தில் மீசையை வளர்க்காத நாள் முதலாக இன்று தாடி செறிந்துள்ளது வரை பட்டி மண்டப வழக்காடு மன்றமே அவரது பெயர் பரப்பிய பணி. நகைச்சுவையால் பட்டி மண்டபத்திற்குப் புதுமெருகு ஊட்டுபவர். 'நகைச்சுவை அரசு' என்று பெயர் பெற்றுள்ளவர். இவரது சொற்போர் முறை தனித்தன்மையது. எதிர்ப்பேச்சாளரை உயர்த்துவதுபோன்று தாக்குவதும், அவர் கருத்தை ஏற்றுக் கொள்வது போல் தட்டுவதும் இவர் கலைத்திறன். இவற்றிற்கெல்லாம் மேலாக சொற்றொடர்ப் பின்னலால் அவையோரைக் குழப்பி நகைச்சுவை மீன் பிடித்துக் குபீர் சிரிப்பை ஏற்படுத்துவது இக்காலத்தில் இவர்தம் தனிக் கலை. இவருடன் இணைந்தும் கலந்தும் இவர்தம் எதிர்ப் போராளியாகத் திகழும் முனைவர் அ. வா. இராச கோபாலன் அவர்கள் குறிப்பிடத்தக்கவர். கருத்துக்களை நயமாக்கிக் குரலாலும் சொல்லாலும் அழுத்தம் கொடுப்பது இவர்தம் சொற்போர்க்கலை. பட்டி மண்டபத்தில் 'அவரா!' என்னும் எதிர்நோக்கை ஏற்படுத்தியவர்.

முனைவர் இரா. செல்வக்கணபதி தெளிந்து தேர்ந்த ஒரு பேராளர். சமயத்துறை இலக்கியத்துறை வல்ல இவர் எளிய கருத்தைப்போலத் தொடங்கி ஆணிப் பாய்வாக

மாற்றிப் போரிடுபவர். இப்போது நடுவர் அமர்விலும் சிறப்பவர்.

புலவர் கோ. சாரங்கப்பாணி உரத்த குரலில் கருத்தை முடுக்கி விடுபவர். வழக்கறிஞர் சுகி. சிவம் அமைதிப் பாங்கிலே வலிமை கூட்டுபவர். முனைவர் தி. இராச கோபாலன் ஆற்றொழுக்கிலேயே அருவி காட்டுபவர். முனைவர் செகந்நாதன் ஒரே சீரான முனைப்புக் குரலில் கருத்தை முடுக்கிவிடுபவர். பேராசிரியர் சாமி. தியாக ராசன் அமைதிக்கு மெருகு தந்து அருங்கருத்துக்களை அதிரடி இல்லாமல் வெற்றிக்கு வழிகாண்பவர்; இரட்டை யர்களான நாகூர்ப் புலவர் இர. சண்முகவடிவேலு, புலவர் சீனி. சண்முகம் ஆகியோர் எளிய நிகழ்ச்சிகளை நகைச்சுவை களாக உதிர்ப்பவர்கள். முனைவர் தெ. ஞானசுந்தரம் ஆழமான கருத்தை நயத்தில் தோய்த்து வழங்குபவர். முனைவர் சேகரும் முனைவர் சுப்பிரமணியமும் வழக்காடு மன்றப் புலிகள். மேலும் அகர முதல்வன் முனைவர் சங்கரவடிவேல் மக்கள் கவிஞர் அரு. நாகப்பன் முதலி யோர் களத்தில் தலை தூக்கி நின்று சிறப்பவர்கள். ஏறத்தாழ 100 என்று எட்டும் அளவில் தமிழ்மண்ணில் சொற்போராளர் பெருகியுள்ளனர். ஒருவகையில் பட்டி மண்டபப் பரவலுக்கு உரமூட்டுபவர்கள் இன்னோர்.

## மகளிர் பங்கு

ஒன்றைத் தனிச்சிறப்பாகப் பதியவேண்டும். அது மகளிர் பங்கு. எதிலும் முகம் கொடுத்துப் புகுந்தவற்றிற்கு

மெருகேற்றிச் சிறப்பித்துவரும் மகளிர், பட்டிமண்டப அரசியராகவும் திகழ்கின்றனர்.

திருமதி காந்திமதி, முனைவர் சரசுவதி இராமநாதன் எதிரும் புதிருமான இரட்டையர். அறுபதுகளில் களத்தை ஆட்கொண்டவர்கள். இவர்கள் கண்ணகியின் வீர வழக்காடலையும் மாதவியின் யாழ்ப்போரையும் கொண்டவர்கள். அவையோர் ஆரவாரத்தோடு சுவைக்கத் தூண்டுபவர்கள். இடையிடையே இசையின் மெருகால் மேவும்போது முனைவர் சரசுவதி இராமநாதனை வெட்டொன்று துண்டிரண்டாய் வினாவை ஏவி அவையோரைத் திசை திருப்பும் வல்லமை படைத்தவர் திருமதி காந்திமதி.

தொடர்ந்து திருமதி உமையாள்முத்து, திருமதி சொல் விளங்கும் பெருமாள், செல்வியாகத் திகழ்ந்த அருண்மொழி, இக்காலத்தில் இளம்பிறை, முனைவர் சாரதா நம்பியாரூரன், நாகைப்புலவர் மணிமேகலை என்று பட்டியல் நீண்டு வருகிறது. பட்டி மண்டபக் களத்தை இல்லத்தரசியார் ஆட்கொண்டு வருகின்றனர்.

## பொற்காலப் பயன்கள்

பொற்காலம் என்று சிறப்பிக்கப்பட்ட கால விளைச்சலில் பயன்கள் பல. அரிய கருத்துகள் வெளிப்பட்டன. ஆய்வுக் கருத்துகள் முடிவு காணப்பட்டன. புதிய கருத்துகள் மலர்ந்தன. புதிய கருத்துகள், அனைத்து வாழ்வியல், அரசியல், அலுவலியல், உளவியல் முதலியவற்றிற்கு வழிகாட்டி அரண்கோலின. ஒன்றைச் சுட்டலாம் சான்றாக :

"ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்; மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"[13]

என்பது அருங்கருத்துள்ள குறள். அருங்கருத்தின் உள்ளீட்டைத் தவத்திரு அடிகளார் வெளிப்படுத்திய திறம் கருதத்தக்கது மட்டுமன்று; கடைப்பிடிக்கவும் தக்கது.

குறளின் "ஒத்தது அறிவான்" என்பதை அடிகளார் இவ்வாறு விளக்கினார் :

'மாறுபடும் இருவர் கருத்துக்களில் பெருமளவோ ஓரளவோ ஒத்த கருத்துக்கள் இருக்கலாம். அவற்றைக் கூர்ந்து அறிந்து இணைந்துபோவது நல்ல இயல்பு. அணுவளவு 'ஒத்தது' இருப்பினும் அறியவேண்டும். இதனைத் திருவள்ளுவர் 'உயிர்வாழும் முறை' என்றார். அறியாதவனைச் "செத்தாருள் வைக்கப் படும்" என்று கடுமையாக குறித்தார். எனவே, வாழ்வை உயிரோட்டமுள்ளதாக ஆக்கிக்கொள்ள 'ஒத்தது' அறியவேண்டும்'

இவ்விளக்கம் பட்டி மண்டபத்திற்கே ஓர் உயிரோட்டந்தந்த கருத்தாக அமைந்தது.

இஃது ஒரு சான்று. நடுவராயமைந்த அறிஞர்கள் இது போன்று அரிய கருத்துக்களை வழங்கி நெறிப்படுத்தியுள்ளனர். இலக்கியக் கருத்துள்ள பட்டிமண்டபங்களால் வாழ்வியலுக்குரிய, நட்பு, ஈகை, பெருந்தன்மை, பண்பு,

அருள் முதலிய குணங்கள் அழுத்தம் பெற்றன . சமுதாயக் கருத்துள்ள நிகழ்ச்சிகள் மக்களால் நயத்துடன் ஏற்கப் பட்டுள்ளன . வாழ்க்கையில் இதனால் நன்னெறி கொண்ட தாகவும், புதுப் பாதைகொண்டதாகவும் பலர் அறிவித்தனர். இவை அனைத்துப் பாங்கமைந்த பட்டி மண்டபங்களால் விளைந்தவை.

## குழப்பத்தில் குபீர் சிரிப்பு

சுவைகளில் நகைச்சுவை, பட்டி மண்டபத்தில் ஏறிப் புகுந்து காலூன்றி நின்று மகிழ்வித்தது . இது வளர்ந்து பெருகியது. சிறு நிகழ்ச்சிகளும், கதைகளும் இதற்காக இடம் பெற்றன; கற்பனையில் உதிர்ந்தன . நேருக்குநேர் தாக்கிக் கொள்வதிலும் பளிச்சிட்டன . நகைச்சுவைகளும் மிகுந்து வருகின்றன.

இத்துறையில் எடுத்துக்காட்டாக ஒன்றிரண்டைக் காட்ட வேண்டும்.

பட்டி மண்டப நகைச்சுவை அரசாகப் பெயர் பெற்றவர் முனைவர் அ. அறிவொளி. இவர் நகைச்சுவையில் புதிய உத்தியை உருவாக்கினார் . மாறுபட்ட பின்னலான கருத்துக்களைச் சுற்றலான சொற்றொடர்களால் கூறுவார். அவையோர் 'என்ன சொல்கிறார்' என்று விழிப்பர். இப்படி ஒரு குழப்பத்தை எழுப்புவார் . ஒரு கூர்முனையில் அப் புதிரை விடுவித்து அவையில் 'குபீர்' சிரிப்பை வரவழைப்பார் . இஃது அமையாத பட்டி மண்டபமோ,

வழக்காடு மன்றமோ சப்பென்று பேசப்படும் அளவு இடம் கொள்ளும். இதற்கு நடுவர் இணைந்து தூண்டுவதும் ஒரு பங்காகும்.

"சின்னவையெல்லாம் சின்னவை அல்ல;
பெரியவை எல்லாம் பெரியவையும் அல்ல;
சின்னது பெரியதாகலாம்
பெரியது சின்னதாகலாம்"

என்பார். இது குழப்பம் எழுப்புவதற்குச் சான்று.

இது போல்,

"நம்ப வேண்டியதை நம்புவதில்லை;
நம்ப முடியாததை நம்புவது;
நம்பாதது உண்மையாவதும்
நம்பியது தவறாவதும் உண்டு" என்பார்.

நடுவர் (முனைவர் சொ. சத்தியசீலன்) அது எப்படி? என்று தூண்டுவார்.

வழக்காடு மன்றத்தில் இவர்கள் உரையாடல் தொடரும்:

அறி : 'தங்கள் முகத்தில் கரிய புள்ளி இருக்கிறது' என்று நான் சொன்னால் என்ன செய்வீர்கள்?

சத் : கண்ணாடியைப் பார்ப்பேன்.

அறி : பார்த்தீர்களா? பார்த்தீர்களா? இத்தனை ஆண்டுகள் பழகிய என் பேச்சை நம்பாமல் உயிரற்ற கண்ணாடியை நம்புகிறீர்கள்.

சத் : கண்ணாடி அடுத்தது காட்டும் பளிங்கு அல்லவா?

அறி : அது சரியில்லை. அது நம்ப முடியாதது.

சத் : எப்படி?

அறி : தாங்கள் எந்தக் கையால் சாப்பிடுவீர்கள்?

சத் : வலக்கையால் தான்.

அறி : கண்ணாடிக்கு முன் அமர்ந்து சாப்பிடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். கண்ணாடி எந்தக் கையால் சாப்பிடுவதாகக் காட்டும்!

அவை குபீர் சிரிப்பை நிரப்பும்.

## நகைச்சுவைக் கதைப்பு

இவர் போன்று மற்றையோரும் வேறு சில நிகழ்ச்சிகளைச் சொல்லி, கற்பனையாகவும் சொல்வர்.

ஒன்று

'நாகூர் அண்ணன் தம்பி இருவர் வீட்டில் மாட்ட ஒரு படம் வாங்கி வந்தனர். தம்பி படத்தை மாட்டச் சுவரில் ஆணி அடித்தான். ஆணி இறங்கவில்லை.

ஓங்கி ஓங்கி அடித்தான்; இறங்கவேயில்லை. அண்ணன் பார்த்தான்; 'தும்பி கூர் பக்கத்தைச் சுவரில் வைக்காமல், முட்டாளே! கொண்டைப் பக்கத்தைச் சுவரில் வைத்து அடித்தால் எப்படியடா பதியும்(?) என்று தம்பியின் மடமையை எடுத்துக் காட்டினான். அண்ணன் தொடர்ந்தான் : 'முட்டாப்பயலே! இந்த ஆணி எதிர்ச் சுவரில் அடிக்கவேண்டிய ஆணியடா - கூரை எந்தப் பக்கம் வைத்தாய்?'

என்று அவையில் வெடிச் சிரிப்புடன் தன் அறியாமையையும் காட்டினான் அண்ணன்'' என்று பேச்சாளர் சொல்லி 'அந்த அண்ணன்தான் எதிர்க்கட்சிக்காரர்' என்பார். எதிர்க்கட்சிக்காரர், 'ஆமாம், தம்பி சொல்வது சரிதான்' என்பார். அவையோருக்குச் சுவைதர இருவரும் தம்மை முட்டாள்களாக நடித்துக் கொள்வர்'.

இது நாகூர் இரட்டையர் புலவர் சீனி. சண்முகம் புலவர் இர. சண்முகவடிவேலு ஆகிய இருவரது கதைப்பு.

பட்டி மண்டப நிகழ்ச்சி பரவலாகப் பெருக்கு நிலையில் அதில் ஒரு வளர்ச்சியாக மேல்முறையீடு தோன்றி, அதற்கு மேலும் சூடுபிடிக்க வழக்காடு மன்றம் தோன்றி வளர்ந்தது. இப்போதைய நிலையில் வழக்காடு மன்றமே சிறப்புற்றுள்ளது.

## ஒப்பனையில் சொற்போர்

இதற்கு மேலும் ஒரு கவர்ச்சி மண்டபம் தோன்றிற்று. குற்றம் சாற்றப்படுவோரும் குற்றத்திற்கு மாற்று கூறுவோரு

மாக அமையும் கம்பர், திருவள்ளுவர் முதலியோர் போல வழக்காடுவோர் ஒப்பனை செய்துகொண்டு மேடையில் அமைந்து சொற்போரிடும் நிகழ்ச்சி எழுந்தது . சில நிகழ்ச்சியளவில் அது மறைந்தது.

## பட்டி தொட்டிகளில் பரவல்

பரவலான பட்டி மண்டபம் நகரோடு ஊரில் நடந்து, ஊரோடு பட்டி தொட்டிகளுக்கும் ஓடிற்று . இலக்கிய, சமுதாய, வாழ்வியல், அரசியல் நிகழ்ச்சியில் இடம் கொண்டது.

இந்நிலையில் மக்கள் ஆர்வமறிந்த வானொலி நிலையங்கள் ஆங்காங்கு நிகழ்ந்த பட்டி மண்டப நிகழ்ச்சி களைச் சுருக்கி ஒலிபரப்பத் தொடங்கின . சிற்றளவில் வானொலி நிலைய நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

இதுபோன்றே தொலைக்காட்சியும் ஈடுபாட்டுடன் ஒளிபரப்புகிறது. 'முத்தமிழ் மன்றம்' என்னும் ஒளிபரப்பில் பட்டி மண்டப நிகழ்ச்சியாக நடந்தவை இடம் பெற்றன; பெறுகின்றன.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், மாணவர்கள் பங்குபெறும் பட்டிமண்டபம் நிகழ்ந்தது. வானொலியிலும் சிறுவர் பட்டி மண்டபம் ஒலி பரப்பப்பட்டது.

எழுத்தறிவைப் பரப்ப முனைந்து செயற்பட்டுவரும் அறிவொளி இயக்கத்தினரும் பட்டி மண்டபம்

நிகழ்த்துகின்றனர் . அண்மையில் திருவையாற்று அரசர் கல்லூரி மாணவர் தொண்டு புரிந்து நிறைவான மூன்று நாள் விழாக்களிலும் பட்டிமண்டபங்களும், வழக்காடு மன்றமும் நிகழ்த்தப்பட்டன.

விழா மேடையில் பட்டிமண்டபம் போன்று பயணஞ் செய்யும் தொடர் வண்டியில் ஒன்றிரண்டு நிகழ்ந்தன. தரையில், ஊர்தியில் நிகழ்ந்தால் கடற்பயணத்தில் நிகழ வேண்டாமா? கப்பலில் நிகழ்ந்தது . வானவூர்தி இதனை எதிர்பார்த்துக் கொண்டுள்ளது எனலாம்.

விளைச்சல் மிகுதியானால் நலமாகும் . அளவுக்கு மீறினால் பொருள் அங்காடியில் மலியும் . இந்த இயற்கை பட்டி மண்டபத்தையும் தழுவியது.

கருத்துக்குப் போர்தோன்றி மறைந்து, சமயப் பிணக்கிற்காக, அஃதும் அருகி, கவர்ச்சிக்கு ஆட்பட்ட பட்டி மண்டபம் மலிந்து போய்த் தன் தகுதியை இழக்கத் தொடங்கியுள்ளது .

## ஊ) கதிர் விளைச்சலில் பதர் கிளைத்தது

பட்டி மண்டபப் பொருள்கள் இலக்கியத்தில் தொடர்ந்தபோது சில புதுக்கருத்துக்கள் வெளிப்பட்டன. சமயத்தில் தொடர்ந்தபோது அவ்வச் சமயத்தார் தாமாகவே தம் சமயக் கருத்தை வெளிப்படுத்திக்கொண்டனர். சமயப் பட்டிமண்டபங்களிலும் சமயக் கோட்பாடுகள் அன்றிப் பொதுக் கருத்துக்கள் இடம் பெற்றன . அண்மையில் கோவையில் நடந்த இசுலாமியப் பட்டி மண்டபப்பொருள் இசுலாமிய வளர்ச்சிக்கு முதியோர் தொண்டு சிறந்ததா? இளைஞர் தொண்டு சிறந்ததா என்று அமைந்தமை ஒரு சான்று . கருத்துப் பொருள்கள் சமுதாய வாழ்வியலைக் கொண்ட போது மக்கள் அறிவிற்கும் நினைவிற்கும் தீனி கிடைத்தது.

### "வார்த்தை கத்தும் வாதியர்"

கருத்து மேடை, கவர்ச்சி மேடையானபின் கேட் போரை மட்டுமன்றிப் பேசுவோரையும் தூண்டியது. பேசும் ஆற்றலுள்ளோர், நூல்களைக் கற்றோர், பட்டறிவுள்ளோர், கருத முனைவோர் முதலிய இன்னோர் அல்லாமல் மேடைக் காதல் கொண்டோர் பட்டி மண்டபத்தைக் கவ்வினர் . இன்னோர்க்குத் தகுதி 'உரத்த குரல்' ஒன்றாகவே முடிந்தது.

மனோன்மணீய ஆசிரியர் பேராசிரியர் பெ. சுந்தரனார் இதை முன்கூட்டியே உணர்ந்துமிருக்கலாம். அவர் காலத்தில் காணப்பட்டும் இருக்கலாம்.

அதனால்,

"வார்த்தை கத்தும் வாதியர்"[14]

என்று எழுதினார். மேடையில் வெடிக்குரலில் தெருச் சண்டை இடுபவர் போன்று வார்த்தைகளால் கத்தும் பேச்சாளர் மேடை ஏறினர். பேச்சு மேடை 'சடுகுடு' மேடையும் ஆயிற்று. இதனை எழுதுபவர் நடுவராக அமைந்த ஒரு மேடையில் வழக்காடிய இருவர் மற்றவர் முன் பாய்ந்தும், கையை உயர்த்தி அறைகூவியும் மூச்சு விடாமல் பேசியும் 'சடுகுடு' ஆடினார். நடுவர் நகைச்சுவையாக 'இரண்டு வழக்காடுவோருக்கும் மேடை இடம் போதாதிருப்பதால் நடுவரும் பிறரும் மேடையை விட்டிறங்கி முழு மேடையையும் 'சடுகுடு' ஆடக் கொடுத்து விடலாம் என்று நினைக்கிறேன்' என்று அறிவிக்க நேர்ந்தது.

சில வழக்காடுவோர் நிலை இவ்வாறு ஆனது போன்று நடுவர் சிலர் மலிவான கைதட்டல் கருதி 'வாய்க்கோணல்', தலைத்திருக்கல், கைப்பின்னல், நாக்குச் சுழற்சி, பார்வைப் பெருக்கம் முதலிய உறுப்புச் சிலம்பங்களாடுகின்றனர். அந்த நேரம் பாராட்டாகக் கிடைத்தால் போதுமென்று இவ்வாறெல்லாம் நடித்துக் கேட்போரை மலிவு நிலைக்கு விரட்டுகின்றனர்.

இவ்வாறு கதிர்மணியுடன் பதர் நுனியும் இடம் பெற்றமை பகடிக்குரியதாகியுள்ளது.

மேடைச் 'சடுகுடு', பகடிச் சிலம்பம், எதிர்ப்போரை ஏளனம், அவர்தம் குணங்களைக் குத்திக்காட்டுதல், அவர்தம் வாழ்க்கைச் செய்திகளைத் தோலுரித்துக் காட்டுதல் முதலிய பலவும் பட்டி மண்டபப் பதர்களே.

இவற்றால் பட்டி மண்டபம் ஒரு சார்பில் மலிவுப் பொழுது போக்காகி வருவது தமிழ் மரபாளரைக் கவல வைத்துள்ளது. உயர்ந்தபட்டிமண்டபத்தை "அங்கணத்துள் உய்த்த அமுதமாக்கி" வருகிறது.

## பட்டி மண்டபப் படியிறக்கம்

இந்நிலை குபீரென்று தோன்றியதன்று. பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே விதைக்கப்பெற்றுச் சமய நீருற்றப் பெற்று, பிணக்கு உரமிடப்பெற்றது. காழ்ப்பு முளைவிட்டு, தாக்கத் தளிர்தோன்றி பகடி தழைத்து, ஏளனம் அரும்பி, பண்பின்மை மலர்ந்தது. பயனின்மை காய்த்துக் கனிந்த நிலையை அடைந்துள்ளது.

பட்டி மண்டப வரலாற்றில் இந்தப் படியிறக்கம் கால ஆட்சியில் அவ்வப்போது படிப்படியாகவே விளைந்தது.

இவ்வாறு விளைந்தமைக்குப் பழங்காலம் முதல் சான்றோர்தம் நூல்கள் சான்றுகளை வைத்துள்ளன. அவற்றைக் கால வாரியாகக் காண்பது வரலாற்றுப் படியிறக்கத்தை வெளிப்படுத்தும்.

## வாது ஒரு தீது

"வேந்தன் ஓடுவதற்கு வாரம் படினும்", என்று தொன்மை அவிநயம் குறித்ததையும், செற்றமும் சினமும்; கலாமும் தோன்றிய நிலையை மணிமேகலை காட்டியதையும் கண்டோம்.

தொடர்ந்து பதினெண்கீழ்க்கணக்கு நூலாம் ஏலாதி,

வாதமிடுவதைச் சூதாடுவதோடு சேர்த்துப் பாடியது. மகரதோரண வாயிலையுடைய மாளிகையில் வாழும் பெருமைத் தகுதியுடையவன்,

> "சூது உவவான்; பேரான் (தன்னிலையில் பெயர மாட்டான்); சுலா (பிறர்மனத்தைக் கலக்குதல்) உரையான்; சினம் சேரான்" என்று அடுக்கி அடுத்து "வாது உவவான்"[15]

என்று 'வாது செய்தலை விரும்பமாட்டான்' என்றது.

ஆசாரக்கோவை,

> "படிறும் பயனிலவும் பட்டி உரையும்
> வசையும் புறனும் உரையாரே என்றும்
> அசையறு உள்ளத் தவர்"[16]

என்று வஞ்சம், பயனின்மை முதலிய தீமைகளுடன் சேர்த்துப் பட்டி உரையையும், அசையும் உள்ளத்தவர் செயலாக்கியது.

'வாது வேண்டாத ஒன்று' என்று திருஞானசம்பந்தர் தயங்கினார்.

"வாதாடி என்ன பயன் வாய்க்கும்?" என்று அலமந்தார் தாயுமானவர்[17]

"சூதும் வாதும் வேதனை செய்யும்"[18] - கொன்றை வேந்தன்

"வாதாடி வழக்கழிவு செய்ய வேண்டாம்"[19]

உலகநீதி இவை ஒரு சில. பல நூல்களிலும் 'வாது' தாழ்த்தி ஒதுக்கிப் பேசப்பட்டது. முடிவாக வாதம் என்னும் சொல்லே. 'துன்பம்' என்னும் பொருளுக்கும் அமைந்தது; நோய்க்கும் அமைந்தது.

## மீன் விற்பவள் போர்

நம் காலத்துக் கவிமாமன்னன் பாரதியும் பாஞ்சாலி சபதத்தில் அத்தினபுரத்தை வண்ணித்தவர்,

"மந்திர கீதங்களாம் - தர்க்க
வாதங்களாம்"[20]

என்று சிறந்த ஒன்றாகக் குறித்தார். மேலும்

"வீரர்தம் போரின் அரியநற்
சாத்திர வாதங்கள் - பல
விப்பிரர் தம்முன் விளைத்திட
உண்மைகள் வீசவே"[21]

என்று சிறப்பாகப் பழம்பெரும் நிலைகொண்டு குறித்தார். ஆனால், இதற்கு உரைவிளக்கம் தந்த பாரதியார்,

"வீரர்தம் போரின் அரிய நற்சாத்திர
வாதங்கள் ஆயுதங்களுடன் செய்யப்படும்
உடற்போரினைக் காட்டிலும் பண்டிதர் செய்யும்
சாத்திர வாதங்கள் அருமை உடையன என்பது"

என்று அருமை கூறியவர்; அடுத்து, இதன் கருத்தை விளக்கத் தொடங்கி,

"கருத்து; அதாவது உண்மையுடன் இவ்வாதங்கள் நடைபெறுமிடத்து என்க! உண்மையறியாதார், உண்மை வேண்டாதார் செய்யும் வாதங்கள் சந்தையில் மீன் விற்கும் ஸ்திரீகளின் போராட்டத்திற்கு நேராகும்"[22] என்றார்.

முன் சிறப்பித்தது பழைமை நிலையை, பின் மீன் விற்போர் அங்காடி வாயாடியை ஒப்பிட்டது அவர் காலத்துப் பட்டி மண்டப நிலையாகவும் அமையும்.

'மனோன்மணியம்' ஆசிரியர்

"வார்த்தை கத்தும் வாதியர்கள் மன்றனைத்தும் வறிதே" என்று சிவகாமி தன் காதலனைத் தேடிய இடங்களைக் குறிக்கப் பாடப்பட்டது. 'வார்த்தைகத்தும் வாதியர்' உள்ள பட்டி மண்டபமும் தன் காதலனைக் காணமுடியாது

'வறிது' ஆயிற்று என்றார். இஃது இன்று 'வார்த்தை கத்தும் வாதியர்'களால் இன்றையப் பட்டி மண்டபமும் கருத்து வறிதாகியுள்ளதையும் குறிக்கிறது.

'வறிது' ஆகாத வகையிலும், நெறியிலும் தவத்திரு அடிகளார் தொடக்கமாகக் கருத்தில் மனம்பதித்த நடுவர் பெருமக்கள் காத்து வருகின்றனர். வழக்கிடும் போராளரும் பேணி வருகின்றனர். கத்தும் மேடைகளாகப் பல இருப்பினும் 'சடுகுடு' மேடைகளாகச் சிலவே உள்ளன. ஒப்பனையில்லாத நடிகர் களங்களாகவும் சில நேர்ந்து வருகின்றன. இவை மாறிச் செப்பம் பெறவேண்டும்.

பட்டி மண்டபத்தைப் பொற்காலத்தில் வீற்றிருக்குமாறு அமைத்த பெருமக்களும், அதற்குப் பொன்னணிகளாக விளங்கும் திருமக்களும் பாராட்டி, வாழ்த்தி, நன்றி கூறத் தக்கவர்கள். இவ்வாய்வு வழியும் பாராட்டு; வாழ்த்து; நன்றி.

## எ) பட்டி மண்டப வரலாற்றுப் பதிவுகள்

### தமிழில் அளவை நூல்

தமிழில் தருக்க நெறி நூல் 'அளவை நூல்' எனப்பட்டது. தமிழில் அளவை நூல்கள் இருந்தன. அனலுக்கும் புனலுக்கும் அந்துக்கும் செல்லுக்கும் உணவானவற்றில் அளவை நூலும் சிற்றுண்டியாயிற்று. "ஆற்றின் அளவு அறிந்து கற்க" என்று குறள் காட்டும் குறிப்பில் அளவை நூல் பெயரை அறிந்தோம். மணி மேகலை "வைதிக மார்க்கத்து அளவை வாதியை" என்று அளவையை நினைவுபடுத்துகிறது. 'அளவை நூல்' என்னும் பெயரில் ஒரு தமிழ் நூல் இருந்ததை உரையாசிரியர்கள் குறித்தனர். இந்நூல் 'கட்டளைக் கலித்துறை' என்னும் யாப்பில் அமைந்ததாகப் பதிப்புச் சான்றோர் உ. வே. சா. அவர்கள் குறித்தார்கள்.[23] 'கட்டளைக் கலித்துறை இடைக்காலத்தில் கிளைத்த யாப்பு. எனவே, இந்த 'அளவை நூல்' இடைக்காலத்தில் எழுந்ததாகும். எவ்வாறாயினும் தொல்காலம் முதல் இடையிட்டு இடையிட்டு 'அளவை நூல்' தமிழில் இருந்ததை அறிகிறோம்.

### பிற மொழி அளவை

தமிழ் மொழியின் அளவையியலும் நூல்களும் இருந் தமை போன்று தொன்மை மொழிகளான வடமொழியாம்

ஆரியம், எபிரேயம், சீனம், கிரீக்கு, இலத்தீன் மொழி களிலும் அளவை நூல்கள் அவ்வம்மொழிப் பெயரில் இருக்கின்றன . சிறப்பாக வடமொழியில் முற்காலத்தில் வைதிக நெறிகளாகிய நியாயமும் வைசேடிகளும் தருக்க நெறிகளைக் கொண்டவை . மணிமேகலையும் 'வைதிக மார்க்கத்து அளவை" என்று வைதிகமாக அடை மொழி தந்தது .

கௌதமர், கணாதர் என்னும் வேத மொழிச் சான்றோர் ஆரியத்தில் தருக்க சாத்திரங்களை எழுதினர் . அவர்வழி 17ஆம் நூற்றாண்டில் தோன்றிய அன்னம்பட்டர் என்பார் 'தருக்க சங்கிரகம்' எனும் நூலை வடமொழியில் எழுதினார் . (தமிழ்ச் சிவஞான முனிவர் அதனைத் தமிழில் மொழிபெயர்த்தார்) வடமொழியில் தருக்க சாத்திரம் விரிவாக உள்ளது.

## தருக்கமுறைப் புலக்கொள்கை

உலக மொழியாகத் திகழும் ஆங்கிலத்தில் 'Logic' என்று தருக்கக் கலை உள்ளது . இக்கலையின் ஒரு தோற்றமாக அகஃச்டெகாம்டி (1798 - 1857) என்பார் தருக்க முறைப் புலக்கொள்கையை வகுத்தார் . பின்னர் வலிவிழந்த இக்கொள்கை இந்நூற்றாண்டின் முதற்பகுதியில் மீட்கப் பட்டது . இஃதொரு கொள்கை என்றவளவில் இங்கு ஒப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

இக்கொள்கை 'மொழி' என்பதைக் கீழ்வருமாறு விளக்குகிறது :

"மொழி என்பது அண்டம் பற்றியுள்ள

நிகழ்வுகளாகக் கூறும் சொற்றொடர்களின் முழுத் தொகுப்பு"[23அ] என்னும் இவ்விளக்கம் நிகழ்வை - உண்மை நடப்பை அடித்தளமாக மொழிக்குக் கொள்கிறது. மொழியாம் சொற்றொடரை இரண்டு வகையாகப் பிரிக்கிறது. ஒன்று 'பொருளுள்ள சொற்றொடர்'; இரண்டு 'பொருளற்ற சொற்றொடர்', மெய்ப்பிக்கக் கூடாதவை பொருளற்ற சொற்றொடர். 'கடவுள் உண்டு' என்பதை மெய்ப்பிக்க முடியாதாகையால் இதனைப் 'பொருளற்ற சொற்றொடர்' என்கிறது. இப்புலக்கொள்கை.

தமிழ், ஆரிய அளவை நூல்கள் அளவையைப் பத்தாக வகுத்துள்ளன. அவை :

1. காண்டல் 2. கருதல் 3. உவமம் 4. உரையளவை (ஆகமம்) 5. பொருள் அளவை (அருந்தாபத்தி) 6. இயல்பு 7. மரபு 8. இன்மை (அபாவம்), 9. மீட்சியொழிவறிவு 10. நிகழ்ச்சி (சம்பவம்)[24]

எனப்படும். இவற்றில் காண்டல், இயல்பு, நிகழ்ச்சி என்னும் மூன்றையும் மேல்எடுத்துக் கொண்ட தருக்கமுறைப் புலக் கொள்கையுடன் ஒப்பீடுசெய்யலாம்.

## புலக்கொள்கையும் தமிழ் இலக்கணமும்

இப்புலக் கொள்கை சில தமிழ் இலக்கணத்திற்குச் சற்றுப் பொருந்துவதாகத் தோன்றுகிறது.

தொல்காப்பியம் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"[25] என்று பொருளற்ற சொல் இல்லை என்கிறது. என்றாலும், "தெரிபு வேறு நிலையில், குறிப்பில் தோன்றல்" என்று சொல், சொற்றொடர்ப் பொருளை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் கொள்ளலாம் என்றது. இதனை நன்னூலார் "வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே"[27] என்றார். இவற்றில் குறிப்புச் சொல்லைவிட வெளிப்படைச் சொல்லே உண்மையாக எடுத்துக் கொள்ளப்படும். குறிப்புச் சொல் அத்துணைச் சிறப்பன்று.

## பட்டி மண்டப ஆய்வின் வரலாறு

எனவே, இங்குச் செய்யப்பட்ட பட்டி மண்டப வரலாற்று ஆய்வு இக்கால அறிவியல் தருக்க முறையை ஒட்டித் தமிழ்த் தொல்காப்பியத்தை முதன்மையாகவும், பிற இலக்கண இலக்கிய நூற்களை இன்றியமையாத் துணையாகவும் சான்றுகளாகவும் கொண்டு செய்யப்பட்டது.

இப்பட்டி மண்டப வரலாற்று ஆய்வு தமிழ் நிலத்தை எல்லையாகக் கொண்டது. எனவே, தமிழ் நூல்களே பெருஞ் சான்றுகளாகக் கொள்ளப்பட்டன. எழுபத்துமூன்று நூல்கள் சான்று நூல்களாகக் காணப்பட்டன. வடமொழியின் நான்மறை, மனுநூல், பகவத் கீதை உரிய இடத்துச் சான்றுகளாயின. ஆங்கில அறிஞர் தம் கருத்துக்களும், தருக்கமுறைப் புலக்கொள்கையும் துணையாயின.

· புதுமைப் 'புலக்கொள்கை', மொழியை அடித்தள மாகக் கொண்டது . இவ்வாய்வும் மொழிக்கூறுகளையும், தமிழ்மொழி வேர்ச்சொல், அதன் வழிச்சொல், பெயர் களையும் அடித்தளங்களாகக் கொண்டதாயிற்று.

தொல்காப்பியர் காட்டிய நூல்நெறியின்படி இவ் வாய்வுநூல் அடியொற்றியது . தொல்காப்பியர் சொல் லதிகாரத்தின் புறநடையாக, ஒரு நூற்பாவில் நூல் நெறியைக் கூறினார். அந்நூற்பா இது :

"செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்
மெய்பெறக் கிளந்த கிளவி எல்லாம்
பல்வேறு செய்தியின் நூல்நெறி பிழையாது
சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டர்"[28]

இதில் 'நூல் நெறி பிழையாது செய்வதற்குத் தமிழ்ச் சொல்லை வேறு வேறு வகைகளில் கண்டு அறிய வேண்டும்' என்றார்.

இதன்படியும், அவர் குறித்த செய்யுள் நூல் சொற்களும், வழக்குச் சொற்களும் இரண்டின் சொற் றொடர்களும் அவற்றின் பொருளின்படி சான்றாகக் கொள்ளப்பட்டன . அஃதாவது இலக்கண இலக்கிய நூல் கள் வழங்கிய சொற்களும் பொருள்களும் சான்றாகக் கொள்ளப்பட்டன.

இவ்வாறான செய்யுள்களுடன்

"உள்நின் றகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல்"

என்றபடி உரையாசிரியர் கருத்துகளும் சான்றுகளாகக் கொண்டு கருத்துகள் விளக்கப்பட்டன.

எனவே, தமிழ் நூல்நெறி கொண்டு உலகியலின் மரபுகளையும், பிற கருத்துகளையும் துணைகளாகக் கொண்டது இவ்வாய்வு.

இவ்வாய்வால் காணப்பட்ட உண்மைகளின் பதிவுகளைத் தொகுத்துக் கூறுவது இன்றியமையாத நிறைவாகும்; ஆய்வின் பயனுமாகும். ஆய்வு கண்டுள்ளவை உண்மைக் களத்தில் நிற்பவை; சான்று உறுதிப்பாடு உடையவை; பல்வகைத் தமிழ்ச் செய்திகளை நிறைவாகக் கொண்டவை. எழுதியவர்க்கு மனநிறைவை வழங்கிக் கொண்டிருப்பவை.

# 3 . 1 . கால ஆட்சியில் பட்டி மண்டப விளைச்சல் கொண்டு காட்டி

| ஆசிரியர் | | நூல் + செய்யுள் எண் : அடியெண் : |
|---|---|---|
| 1. குமாரதாசன் | : | லாவணி - பக் . 12 |
| 2. ஆறுமுக நாவலர் | : | நன். 267 உரை விளக்கம் |
| 3. பிங்கலர் | : | பிங் - 1146 |
| 4. வையாபுரிப் பிள்ளை (முதன்மைப் பதிப்பாசிரியர்) | : | பேர - பக் . 3440 |
| 5. இராமசாமிக் கவுண்டர் ஏ. | : | தீ பர - பக். 91, 92 |
| 6. சுப்பிரமணிய பாரதி சி . | : | பாரதி பாடல்கள் (த. ப. பதிப்பு) பாடல் தொடரெண் 1502 |
| 7. சோமசுந்தர பாரதி ச. | : | தீ பர - பக் . 69 |
| 8. தொல்காப்பியர் | : | தொல் - பொருள் - 650 |
| 9. அண்ணாதுரை சி . என் . | : | தீபர - பக் . 30 |
| 10. திருவள்ளுவர் | : | திரு - 646 |
| 11. கம்பர் | : | க. இரா - சிறப்புப்பாயிரம் - 6 |
| 12. அண்ணாதுரை சி . என் . | : | தீபர - பக் . 18, 19 |
| 13. திருவள்ளுவர் | : | திரு - 214 |
| 14. சுந்தரம்பிள்ளை . பெ. | : | மனோன் - சிவகாமி சரிதம் 41 |
| 15. கணிமேதையார் | : | ஏலாதி - 43 |
| 16. பெருவாயின் முள்ளியார் | : | ஆசா - 52 |
| 17. தாயுமானவர் | : | பரா - 171 |
| 18. அவ்வையார் | : | கொன்றை - 13 |
| 19. உலகநாத பண்டிதர் | : | உலக - 10 - 1 |

| | | |
|---|---|---|
| 20,21. | சுப்பிரமணிய பாரதியார் சி . | : பார. பா - பாஞ்சாலி சபதம் - 8; 45 வரி 5. |
| 22. | சுப்பிரமணிய பாரதியார் சி . | : பார . பா . பா . சபதம் பாட்டு 5 வரி 5 பொருள் விளக்கமும் குறிப்புரையும் |
| 23. | சாமிநாத ஐயர் உ. வே. | : சங். பிற் - 32 |
| 23 அ | சதீஷ் சந்திரசட்டர்ஜி | : கலைக்களஞ்சியம் - 5 பக். 525 |
| 24. | சாத்தனார் | : மணி - 27 - 9 - 12 |
| 25, 26. | தொல்காப்பியர் | : தொல் - சொல் . 155; 157 |
| 27. | பவணந்தி முனிவர் | : நன். 259 - 4 |
| 28,29. | தொல்காப்பியர் | : தொல் - சொல் - 463; பொருள் 468 |

# 4. ஆய்வுப் பதிவுகளின் தொகுப்பு

1. கருத்துப் போரிட அறைகூவலாகப் பொது இடத்தில் கருத்து பொறித்த கொடி பிடிக்கப்பட்டது.
2. புலமைச் சான்றோர் பாடல்களை ஆயவும், நூல்கள் எழுதவும், அரங்கேற்றவும் களமாகப் பட்டி மண்டபம் இருந்தது.
3. அரங்கேற்றத்தின்போது நேர்ந்த தடைவிடைகளால் கருத்துப்போர் எழுந்தமையால் கருத்துப்போர் பட்டி மண்டபமாயிற்று.
4. அறை கூவப்பட்டால் அது ஏற்கப்பெற்று நிகழ்ச்சியாகும் வரை பட்டிமண்டபத்தில் வேறு பணிகள் நிறுத்தப்படுவதன் அறிகுறியாகப் பட்டிமண்டப வாயில் அடைக்கப்பட்டது.
5. கருத்துப்போர் பாங்காக நிகழ்ந்து ஏற்கப்பட்ட முடிவு எதிர்த்தோரால் ஏற்கப்பட்டது.
6. கருத்துப்போர் தலைவராகவோ நடுவராகவோ அரசன் அமைந்ததும் உண்டு. அரசவையிலும் கருத்துப்போர்ப் பட்டிமண்டபம் இருந்தது.
7. நகர்ப் பொது விழாக்களில் பட்டி மண்டபத்தார் கருத்துப்போரிட அழைக்கப்பட்டனர்.
8. கருத்துப்போரில் தோற்றவரைக் கடுமையாக ஒறுக்கும் செயல் தோன்றியது.

9. சங்கப் பாடல்கள் காட்டிய உண்மைகளின் மூலத்தில் கற்பனைக் கதைகள் காட்டப்பட்டன.
10. இறைவன் கடவுள்; இறையனார் புலவர்.
11. பட்டி மண்டபத்தின் ஊற்றுக்கண்.
12. பட்டி மண்டபத்தின் தொன்மை கி. மு. 1500இற்கு முந்தியதாய் இன்றைக்கு 3500 ஆண்டு தொன்மை கொண்டது.
13. சங்ககாலப் பட்டி மண்டபம் பாங்குடன் நிகழ்ந்தது.
14. பட்டி மண்டப அவை நல்லவை, நெறியவை, நிறையவைகளாகும். புல்லவை, குறையவைகள் தகாதனவாக இருந்தன.
15. பட்டி மண்டப அவை நெறிகள் அறிவாண்மையும், பெருந்தன்மையும் கொண்டது.
16. சங்க காலத்தில் நடுவர், தலைவர் என்னும் சொற்கள் பட்டி மண்டபத்திற்கு இல்லை. சான்றோர், ஆன்றோர், அரசர் அந்நிலை கொண்டனர்.
17. 'வாதி, வாதம்' என்னும் வடசொற்கள் புகுந்தன.
18. வடசொல் நுழைவால் தமிழ் மரபுகள் சிதைந்தன.
19. கருத்துப்போரிடுவோர் மேடைப் பாங்கை அறியும் நெறிகள் பரவலாக நூல்களில் பொதிந்திருந்தன.
20. வாதத்தில் சமயப் பங்கு ஆட்சி பெற்றது.
21. அறைகூவலுக்குக் கொடி நடலுடன் நாவல் மரக்கொம்பை நடும் பழக்கம் எழுந்தது.
22. நாவல் அறைகூவலுக்கு ஆன மூலமும் விவரமும்.

23. சமய வாதத்திற்குப் பொருள்முறைகளும் வரன் முறைகளும் இருந்தன.
24. இசை, கூத்துப் பட்டி மண்டபங்கள் நிகழ்ந்தன.
25. சமயத்தாருள் சமணர் 'தருக்கச் சமணர்' ஆயினர்.
26. வாயின் தொடர்பில் சொற்றொடர்கள் தோன்றி 'வாய்ப்பட்டி' வரை வளர்ந்தது.
27. 'பட்டி' என்பது 'வாய்காவாத பேச்சு' எனும் பொருள் கொண்டு ஆட்சி பெற்றது.
28. சிறுகுறும்புப் பட்டிகள்
29. பட்டிபுத்திரர் என்பதற்கும் பட்டி மண்டபத்திற்கும் தொடர்பில்லை.
30. 'படு' என்னும் பகுதி தனித்தனியே ஆக்கல், அழித்தல் என்னும் இரண்டு வகைப்பொருள்கள் கொண்டது.
31. 'பள்' என்னும் வேர்ச்சொல்லிருந்து 'பட்டி' பிறந்தது.
32. 'பள்' என்னும் வேரில் உருவான 'பண்ணை'யும் 'பட்டி'யும் ஒருங்கிணைந்த பொருள்களைத் தந்தன.
33. பட்டி மண்டபப் பெயரின் பல வடிவங்கள்
34. சொற்பொழிவு - சொற்போர் வளர்ச்சி.
35. சொற்பொழிவைக் குறிக்கும் பழஞ்சொல் 'கட்டுரை' என்பது.
36. பட்டி அரங்கம், பட்டிமன்றம், பட்டிமண்டபம், வேறுபட்ட பொருள்களாயும் இடக் குறியீடுகளையும் கொண்டனவாக ஒன்றில் ஒன்று அடங்கிய ஓரிணைப்பாகும்.

37. பட்டி மண்டபம் கட்டிடப் பெயராயினும் ஆகுபெயராகக் கருத்துப்போர் நிகழ்ச்சிப்பெயர் 'பட்டி மண்டபம்' என்றே ஆளப்பட்டது.

38. 'மந்திரம்', 'தருக்கம்' தமிழ்ச் சொற்கள்

39. *17, 18* ஆம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த கருத்துறு பட்டி மண்டபங்கள் பயனுள்ளவை.

40. *19* - ஆம் நூற்றாண்டு பட்டி மண்டபத்தின் பொற்காலம்.

41. கம்பன் கழகப் பட்டி மண்டப விளைவு கம்பராமாயணத்தைத் தீயிடும் நோக்கத்தின் பயனுக்குச் சார்பாயிற்று.

42. கவிதைப் பட்டி மண்டபம், எழுத்துப் பட்டி மண்டபம், வழக்குரை நூல் தோன்றின.

43. பட்டி மண்டப விரிவாக்கம் (மேல்முறையீடு, வழக்காடு மன்றம், ஒப்பனையுடன் சொற்போர்).

44. பட்டி மண்டபக் கதிர்மணி விளைச்சலில் பதர்த் தோற்றம்.

45. கருத்து மேடை, கவர்ச்சி மேடையாகியமை.

46. "வார்த்தை கத்தும் வாதி"யரால் பட்டி மண்டப மேடை 'சடுகுடு' மேடையானமை.

47. 'வாது ஒரு தீது' - காலங்கால நூற்கருத்துக்கள்.

48. கதிர்மணிகளை விளைத்த பெருமக்கள் நன்றிக்குரியோர்.

49. இக்கால உளவியல் சார்ந்த ஆங்கிலத் தருக்கமுறையும், தொல்காப்பியமும்.

50. தொன்மை நூல் நெறியில் ஆய்வு நிறைவு.


# சான்று நூல்கள் – குறுக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அகநானூறு | : | அகம் |
| 2. | அபிராமி அந்தாதி | : | அபி . அந். |
| 3. | அவிநயம் | : | அவி . |
| 4. | ஆசிரிய மாலை | : | ஆசி. மா. |
| 5. | இராமானுச நூற்றந்தாதி | : | இரா. நூற். |
| 6. | இருசமய விளக்கம் | : | இரு. விள. |
| 7. | உதயணகுமார காவியம் | : | உத . கா. |
| 8. | உலக நீதி | : | உலக . |
| 9. | ஏலாதி | : | ஏலா . |
| 10. | ஐங்குறுநூறு | : | ஐங். |
| 11. | கந்தபுராணம் | : | கந் . புரா . |
| 12. | கம்ப இராமாயணம் | : | கம் . இரா . |
| 13. | கலித்தொகை | : | கலி . |
| 14. | குறிஞ்சிப்பாட்டு | : | குறிஞ்சி . |
| 15. | குறுந்தொகை | : | குறு . |
| 16. | சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும் | : | சங் . பிற் . |
| 17. | கொன்றைவேந்தன் | : | கொன்றை . |
| 18. | சங்கற்ப நிராகரணம் | : | சங். நிரா . |
| 19. | சிலப்பதிகாரம் | : | சிலம்பு . |
| 20. | சிறுபஞ்சமூலம் | : | சிறுபஞ் . |
| 21. | சீவக சிந்தாமணி | : | சீ . சிந். |
| 22. | சிறுபாணாற்றுப்படை | : | சிறுபாண் . |
| 23. | சூடாமணி நிகண்டு | : | சூடா . |
| 24. | செய்யுள் வகைமை | : | செய். வ. |

| | | | |
|---|---|---|---|
| 25. | சேக்கிழார் புராணம் | : | சே . புரா . |
| 26. | தணிகை உலா | : | தணி . உ . |
| 27. | தனிப்பாடல் திரட்டு | : | தனி . தி . |
| 28. | திரிகடுகம் | : | திரி . |
| 29. | திருக்குறள் | : | திரு . |
| 30. | திருத்தொண்டர் புராணம் | : | திரு . புரா . |
| 31. | திருப்புகழ் | : | திருப் . |
| 32. | திருமந்திரம் | : | திரும . |
| 33. | திருமுருகாற்றுப்படை | : | முருகு . |
| 34. | திருவருட்பா | : | திருவருள் . |
| 35. | திருவாதவூரர் புராணம் | : | திருவாத . புரா . |
| 36. | திரு - வாணி வாது | : | திரு . வா . வா . |
| 37. | திருவாய்மொழி | : | திருவாய் . |
| 38. | திருவிளையாடற் புராணம் | : | திருவிளை . |
| 39. | திவாகர நிகண்டு | : | திவா . |
| 40. | தீ பரவட்டும் | : | தீ பர . |
| 41. | தேவாரம் | : | தேவா . |
| 42. | தொல்காப்பியம் | : | தொல் . |
| 43. | நளவெண்பா | : | நள . |
| 44. | நற்றிணை | : | நற் . |
| 45. | நன்னூல் | : | நன் . |
| 46. | நாச்சியார் திருமொழி | : | நாச் . திரு . |
| 47. | நாலடியார் | : | நாலடி . |
| 48. | நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் | : | நாலா . தி . பி . |
| 49. | நீலகேசி | : | நீல . |
| 50. | நைடதம் | : | நைட . |

| | | |
|---|---|---|
| 51. | பகவத் கீதை | : பக. கீ . |
| 52. | பட்டினப் பாலை | : பட் . பா . |
| 53. | பராபரக் கண்ணி | : பரா . |
| 54. | பரிபாடல் | : பரி . |
| 55. | பழமொழி | : பழ . |
| 56. | பனம்பாரணம் | : பனம் . |
| 57. | பாரதிதாசன் கவிதைகள் | : பா. தா. கவி. |
| 58. | பாரதி பாடல்கள் | : பார . பா. |
| 59. | பிங்கல நிகண்டு | : பிங் . |
| 60. | புறப்பொருள் வெண்பா மாலை | : புற . வெ . மா . |
| 61. | பெண்மதி மாலை | : பெண் . மா . |
| 62. | பெரியாழ்வார் திருமொழி | : பெரி . திரு . |
| 63. | பெருங்கதை | : பெருங் . |
| 64. | மணிமேகலை | : மணி . |
| 65. | மதுரைக் காஞ்சி | : மது . கா . |
| 66. | மலைபடுகடாம் | : மலை . |
| 67. | மனுசுமிருதி | : மனு . |
| 68. | மனோன்மணீயம் | : மனோன் . |
| 69. | முத்தொள்ளாயிரம் | : முத் . |
| 70. | யாப்பருங்கல விருத்தி | : யாப் . விரு . |
| 71. | வடமொழி வரலாறு | : வட . வ . |
| 72. | விறலிவிடு தூது | : விறலி . |
| 73. | வெற்றிவேற்கை | : வெ .வே . |

# இந்நூலாசிரியர் . . .



தனிப்பாட ஆசிரியர் 1936

அச்சுத் தொழிலாளி 1937 - 1943

தமிழாசிரியன் 1947 - 1980

பதிப்புத் துறைத்
துணை இயக்குநர் 1983 - 1988
(தமிழ்ப் பல்கலைக்கழகம்)

தமிழ் வல்லுநன்
பாட நூலாக்கக் குழு 1990 ...
பாரதிதாசன் பல்கலைக்கழகம்

ஆசிரியத்தில்: "நல்லாசிரியர்"
(தமிழ்நாட்டரசு) 1972

கவிதையில் : "கவிஞர் கோ" 1971

பொழிவில் : "சிலம்புச் சேரனார்" 1983

பொதுவில் : "இளஞ்சேரன் நகர்"
புறநகர்ப் பெயர்,
நாகப்பட்டினம் 1973

நூற்படைப்பில் : பலதுறைகளில் 21 நூல்கள்

பிள்ளைப் பெயர் : கோ. வை. மெய்கண்டசிவம்

வழங்கு பெயர் : கோவை. இளஞ்சேரன்

பிறப்பு : ஆத்திகுடி அகல உரைகாரர்
கோ. வைத்தியலிங்கனார்
வை. மீனாட்சியம்மாள்
தி. ஆ. 1954 - மார்கழி -21
4 - 1 - 1923
கல்லல், பசும்பொன் மாவட்டம்